Vol III

T.D.R.C 208
RRN 589-III-1914

Q2: 414
N13
117696

# பக்தி விளக்கம்

# I VILAKKAM

*Edited and Published by*

. RADHAKRISHNA AIYAR

*Editor "Lokanukulan"*

KUMBAKONAM

MADRAS:

THE GUARDIAN PRESS

1914

# பக்திவிளக்கம்

.க்தி புகட்டும் உயர்ந்த தமிழ் நூல்

இது

கும்பகோணம்

லோகாநுகூலன் பத்திராதிபர்

C. S. இராதாகிருஷ்ண ஐயரவர்களால்

இயற்றப்பெற்று,

பப்ளிஷ் செய்யப்பெற்றது

சென்னை

கார்டியன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது

1913

*Copy Right Registered*]

[விலை அணா 10.

புத்தகங்கள் கீழ்க்கண்ட இடா
பெற்றுக்கொள்ளலாம்:—

1. S. இராதாகிருஷ்ண ஐயர்,
மங்களவிலாஸ புக் டெப்போ,
கும்பகோ

2. கார்டியன் பிரஸ்,
மவுண்ட் ரோடு,
மதராஸ்.

3. ஹிகின்போதம் & கோ,
புக்செல்லர்ஸ்,
மவுண்ட் ரோடு, மதராஸ்.

4. சுவதேசமித்திரன் ஆபீஸ்,
23, எம்பாலசெட்டி தெரு,
மதராஸ்.

5. S. மூர்த்தி & கோ,
கபாலி பிரஸ்,
705, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

6. P. R. இராமய்யர் & Co.,
பிராட்வே, மதராஸ்.

7. ஆநந்தா விபவம் பிரஸ்,
பேரன் ஸ்குவயர், மதராஸ்.

8. மானேஜர்,
"வைசியமித்திரன்" ஆபீஸ்,
தேவகோட்டை.

# INTRODUCTION

1. The author of this little book has, as the title itself will show, attempted to give a clear exposition of Bakthi or devotion. He deals with the necessity for Bakthi; this he has clear brought out in a logical manner by referring to the su e and individual souls, the nature and relation between them. He refers to the different schools of thought, and notwithstanding the essential points of difference among them, the author has tried to show that whatever school of thought one might belong to, the ultimate desire of one is to attain the highest good which in this Kaliyuga is possible only through Bakthi.

2. N the author treats how people by devotion to the differe attain the same end. For although there are differenc conceptions of the various deities apparently suggested, we find when we look into their intrinsic significance, that all of them have ultimately the same meaning.

3. Taking Vinayakar whose blessings are invoked for the success every auspicious undertaking among us, he explains th his representation is only a concrete form of the highe ilosophy contained in the symbol *oum.*

4. Next the author turns to Lord Subrahmanyam, the all powerful God, whose avataram has rid the Devas and others, of the troubles and miseries inflicted by Surapadma.

5. The significance of the ornaments and dress of Paramasivam and Natarajah is also given in a clear and lucid way, how Natarajah is the Lord of souls and how like a stage manager he controls the auctions of all beings, and that stag in his hand is the wand ering Manas which should be controlled, and the tiger the Ahankaram which should be conquerred by everyone as He himself has done.

6. A greater portion of the book is devoted to the life of Sri Rama, who, during his life in human form has practically taught the world their duties to parents, and brothers and dependents. He deals further how Lord Sri Krishna was bound over by the Pandavas by Bakthi in the form of Friendship, and how the Gopis who loved Him, Sisupalad who hated Him, and Kamsa who feared Him were all helped to attain eternal happiness.

7. Thus by clear analysis of the different details connected with the duties referred to above, the author has succeeded in showing how Bakthi directed through different channels takes all to the same haven.

8. Lastly the author gives a summary of the lives of great sages such as Hanuman, Valmiki, Narada, Druva, whose Bakthi and faith deified them.

9. The book I am sure will be appreciated by the public in as much as the author has done a useful service to his religion and country men, and I wish him all success in this undertaking.

TEACHERS' COLLEGE, SAIDAPET, 16th Oct. 1913. — S. PANCHAPAGESA SARMA B.A., L.T.

# நூன்முகம்

மணிகடற் குலவும் இமயமால்வரை உலகினில் நிறைபொருளும் ஆன்மாக்கட்கு உள்ளொளியா யுள்ள அமலன் அவ்வான்மாக்கட்குப் புறம்பாயும் நின்று அருள்பாலிக்கும் இயல்பினன். அவ்வமலன் கட்புலனாற் கதுவப்படாதாய் நிற்கின்றவன். அளவிறந்த வதிசய குணத்தன். சர்வ சக்திமான். ஆகையால் சர்வவியாபகனாய் நிற்கும் முதலோனை, யவன்றனருள் பிரதிபலித்த அன்பர்கள் மாட்டு அவனருட் செய்கையாற் காண்டலின்றி வேறு எவ்விதத்தினுங் காணமுடியாது. அத்தகைய வன்பர் மேற் சொல்லிய முழுமுதற்கடவுளுடைய அடியார்களே. இதற்குச்சான்றாக பாரதியாரின் அவதாரமாகும். ஔவைப் பிராட்டியும் ? " இறைவனோ தொண்டருள்ளத்தொடுக்கம். தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே " யென்றனர். ஆனதால், அத்தொண்டர்களுக் குறுதி காரணமாய் நின்றது அவ்விமலன் மாட்டு நிறைந்த மனதுடன், ஒன்றியுள்ள பக்தியே. இப்பக்தியானது சமுதியிற் றோன்றி மறையும் மின்னுப் போலாது என்றும் ஒரே நெறியாய் கணவனைக் கலந்த காரிகைபோல் அல்லும் பகலும் அன்னவன் விசித்திர குணத்தை நினைத்துக் கண்ணீருங் கம்பலையுமாய் நிற்றலே உண்மைப் பக்தியாம். இப்பக்தியுள்ளவர்கள் செய்கையாற் பக்தரெனப்படுவாரல்லர் என்பதை அன்றோர் போதிவினாலும் அறியலாம். அது செயற்கருமையான செய்கைகளைக் காண்டலினாலும், ஓடும் பொன்னுமொக்க நோக்குமியல்பினாலும் [illegible] வர்த்தமான்ம கோடிகட்கருள் சுரத்தலினாலும் தம் முத்திநெறியாலும் பிறர் கூறாமலே யமையும். இத்தகைய பக்திமான்களுக்கேதான் முதல்வன் சகல வின்பத்தையும் தருவான். இதனாலன்றோ, ஆளுடையவடிகளும் 'பத்திவலையிற் படுவோன் காண்க' என வருமையாய்த் திருவாய்மலர்ந்தனர். இத்தகைய வன்பு ஓர் சன்மத்திலேயே வருவது துர்லபம். இது சன்மங்கள்தோறுமியற்றிய தவப்பயனால் வருவதேயன்றி ஏகதேசத்தில் வரு

மிகுதியிற்றன்று. இத்தகைய வன்புவருதற்கு முக்கிய காரணம். ஆன்றோரியற்றிய முதல்வன் பெருமைகளை விளக்கும் நூல்களே. இது சரியை முதலான நான்கினுள் முதற்கண்வைக்கப்பட்ட சரியையின் கூறாம். இது முதல்வன் கருணைகளை நூல்வாயிலாலறிந்து அறிந்த வண்ணம் ஒழுகல். முதல்வன் கருணைகளை விளக்கும் நூல் பலவாய் விரிந்து கிடத்தல்பற்றி உலகோர்க்குப் பயன்படுமாறு என் சிற்றறிவுக் கெட்டியவரையில் பக்திவிளக்கம் எனப் பல நூல்களினின்றுந் திரட்டிச்சிறு புத்தகமாக வமைத்துளேன். நூலை நோக்குவோர் அருவருப் படையாவண்ணம் வேண்டியவரையிலெழுதியும் சரித்திரங்களைச் சுருக்கியுங் கூறினேன். இதனில் எவ்வகைப் பிராணிகட்கும் யானை தலைமையானது போலும், எவ்வகை அக்ஷரத்திற்கும் பிரணவம் தலைமையானது போலும், எவ்வகைத் தெய்வங்கட்கும் தலைமையா யுள்ள பிரணவமுக குஞ்சரன் சரிதம் பெருமை குணம் முதற்கண் வைக்கப்பட்டது. இரண்டாவது அசுரர் பகை யொழித்த அப்பனின், சமணவிருளிரிக்கி யுலகத்து வேதத்தை நிறுவிய கண் கடப்பந்தாரா னின் பெருமை முதலியன வைக்கப்பட்டன. மூன்றாவது மகாருத்திரா வதாரமான சிவபெருமான் சரித முதலானது வைக்கப்பட்டது. நான்காவது, பதஞ்சலி வியாக்கிரபாதர் என்ற முனிவர்கட்கு ஆனந் தத் தாண்டவஞ்செய்த சைவபூஷணமணியாய் ஐந்தொழிற்குங் கர்த்தா வெனச் சுருதிகள் கதறும் தாண்டவமணியின் சரிதம் வைக்கப்பட்டது. ஐந்தாவது உமை தக்ஷனுக்கு மகளாய்த் தோன்றினமையை வைக்கப் பட்டது. ஆறாவது இமயவரையின் அன்பிற்குகந்து மகளாய் வந்த பார்வதியின் சரிதம் வைக்கப்பட்டது. ஏழாவது உலகை அளந்தும் பசுந்துளப மாயோன் மாவிடைமரயில் வந்து தான் செய்துகாட்டினு லொழிய வுலகிற் றெரியாதென நடந்துகாட்டிய சரிதம், குணம், பெருமையடைந்தோர்க் கருள் சாத்தல் முதலியன வைக்கப்பட்டன. எட்டாவது அன்பர்கட் கருள்செய்யும் பெருமையும் அது செய்யாதார்க் கிடையூறும் எங்குந்தானாய் நிற்கும் பெருமைகளுடைய ஸ்ரீ கிருஷ்ண பெருமான் சரிதம் வைக்கப்பட்டது. ஒன்பதாவது முதல்வன் பக்தி மயமேயாய் நின்று அரிய பெரிய செய்கைகளை முடித்த அநுமான்



சரிதம் வைக்கப்பட்டது. பத்தாவது ஸ்ரீமந்நாமத்தினால் இகபரலோகத்து மடைந்த வான்மீகியின் சரிதம் வைக்கப்பட்டது. பதினொன்றாவது கானத்தால் முதல்வனருளைப்பெற்ற நாரதரின் சரிதம் வைக்கப் பட்டது. பன்னிரண்டாவது குருபக்தியிற் சிறந்த உபமன்யு ரிஷியின் சரிதம் வைக்கப்பட்டது. பதின்மூன்றாவது யோகவல்லபருடைய நாசிகேதுவின் சரிதம் வைக்கப்பட்டது. பின்னும் சுகப்பிரம்மரிஷி, சுக்ரன், பகீரதன், கயன், ஜயதேவர், தக்ஷிணாமூர்த்தி முதலியவர்கள் பிரபாவங்கள் சொல்லப்பட்டன. மேற்சொல்லிய சரித்திரங்கள் நூல் களினிருக்கினும், விரிந்து கிடக்கின்றமையால் உலகோர்க்குப் பத்தியா லாகாத செய்கையுமுண்டோவெனத் தெரிவித்தற்கே இந்நூல் வெளிப்படுத்தியது. இந்நூல் ஒவ்வொரு சரிதமும் பத்தியையே முக்கியமாகக் கூறப்படுவதால் பக்தி விளக்கம் எனப் பெயரிடப்பட்டது. இது நாஸ்திகம் பேசி நாத்தழும்பேறும் பேதைமாந்தரை நலியச்செய் வது. ஆஸ்திகர்க்கணிகலனாயுள்ளது. எச்சமயங்களுக்கும் பொதுநூலா யுள்ளது. சைவவைஷ்ணவ மாத்வமதங்களுக்குரிய நூலாயுள்ளது. இறைவனிடம் அன்புபூண்டோர் ஒவ்வொருவர் கரபூஷணமாக இருக்க வேண்டுமென்றே இச்சிறு நூலை யியற்றி வெளியிட்டேன். ஆதலால் இது ஆண்பாலார் பெண்பாலா ரனைவோர்க்கும் பயன் படுமென்றே எளிய செந்தமிழ் நடையாயுங் கூறிய நூலாயும் வெளியிட்டேன். ஆதலால் இதைக் கண்ணுறூஉம் பண்டித மணிகள் இதில் குற்றங் குறைகளிருக்கினும் பாலுண்ணுங் குருகார்போல் கொள்வது கடனும். நேரிலாவது கடிதவாயிலாவது குற்றங் குறைகளைத் தெரிவித்தால், சரிப்படுத்தி அடுத்த பதிப்பில் வெளிப்படுத்தி என் நன்றியறிதலையும் மறவாது நான் செலுத்துவேன். ஒன்றுக்கும் பற்றாச் சிறியேனும் இக்காரியத்திற் றலைப்பட்டது அறிவின் முதிர்ச்சியாலன்று; அன்பின் மிகுதியே முக்கிய காரணமாம். இந்நூல் இனிது நிறைவேறக் கருணை சுரந்த தோகைமயில்வாகனப் பெருமான் திருவடித்தாமரையை முப் போதும் வணங்குவேனாக. சுபம்.

இப்படிக்கு
இராதாகிருஷ்ண ஐயர்,
கும்பகோணம்.

# விக்ஞாபனம்

அடியில் கண்ட புதிய நூல்கள் விற்பனைக்கு தயாராயிருக்கின்றது.

## பக்திவிளக்கம்

இந்நூலில், ஈசுவரனது அவதார விசேஷங்கள் மூர்த்திகளின் மஹிமைகள் ஈசுவரனது அடியார்கள், குரு சிஷ்ய பக்தி, ரிஷிகளின் சரிதைகள் முதலானவைகள் அடங்கியுள்ளன. இது பக்தியை புகட்டக் கூடிய அருமையான நூல்.

விலை அணா 12.

## தத்துவஞான போதினி

இந்நூலில் வேதாந்த சாஸ்திரத்தின் தத்துவங்கள் ஆசார்ய பக்தி, ஈசுவர பக்தி முதலிய பல அரிய விஷயங்களை ஒருங்குசேர்த்து ஒருவாறு கோர்வைப்படுத்தி சுருக்கமாக பிரசுரிக்கப்பட்டுள்ள இனிமையான ஞான நூல்.

விலை அணா 8.

## மஹாத்மாக்கள்

இந்நூலில் ஈசுவர அம்சபூதர்களாய் கலியினில் தம் மஹிமையை எடுத்துக்காட்ட அவதரித்த சில மஹாத்மாக்களின் சரிதைகள் அடங்கியது.

விலை அணா 4



# சிறப்புரை

“ முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் ‘அச்சோவே’”—திருவாசகம்.

“பக்தி விளக்கம்” என்று இந்நூலுக்குப் பெயர் அமைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் யாது என்பதை அறிந்துகொள்வதற்குமுன், “பக்தி என்றால் என்ன?” “விளக்கம் என்பது யாது?” என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டுவது இன்றியமையாததாகின்றது.

முதலில் “பக்தி என்றால் என்ன?” என்பதைப்பற்றி விசாரிப்பாம். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளிடத்தில், அதாவது, பரமாத்மாவிடத்தில் எல்லாம் வல்லதன்றான ஜீவான்மா செலுத்தும் அன்பே பக்தி எனப்படும். “அன்பென்பது தன்னால் வேண்டப்பட்ட பொருளினிடத்துத் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி” என்றார் ஆசிரியர் நக்கீரனார். எனவே, எந்தப் பொருளை ஒருவன் அடைய வேண்டுமென்று விரும்புகின்றானோ, அந்தப் பொருளினிடத்தில் அவன் தன் உள்ளம் நெகிழும்படியான பற்றுதல் வைக்கவேண்டுவது அவசியம் என்பது பெறப்பட்டது. வனெனில், ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் சம்பந்தமுண்டாக வேண்டுமானால், அச்சம்பந்தம் இடையே தோன்றும் மூன்றாவதோர் பொருளா

லேசிய உண்டாகவேண்டும். ஒரு தலைமகளையும் ஒரு தலைமகனையும் சகஜுரிமையால் ஒன்றுபடுத்தற்கு, இடையே ஒரு பாங்கனோ அல்லது பாங்கியோ வேண்டுவது இன்றியமையாததாகின்றது. ஒருவன் பெரும் பணக்காரனு யிருக்கவேண்டுமென்று விரும்புகிறானென வைத்துக்கொள்வோம். இங்கே பணம் என்பது ஒரு பொருள்; அதனை அடையவேண்டுமென்று விரும்புகிறவன் மற்றொரு பொருள். அவனுக்கு விருப்பம் மாத்திரம் இருந்தால், அதனை அடைய முடியாது; அது தானாகவும் இவனிடம் வந்து சேராது. ஆனால், அதைப் பெறுவதற்கான உத்தியோக முயற்சி, வியாபார முயற்சி போன்ற தொழில்கள் இடையே தோன்றி அப்பணத்தை இவனிடம் சேர்ப்பிக்கின்றன. எனவே, ஒருவனால் விரும்பப்பட்ட பணத்தை அவன் அடைவதற்கு மூன்றாவதான தொழின் முயற்சி ஒன்று இடையே அவசியம் வேண்டப்படுகின்றது என்பது இனிது புலப்படுகிறதன்றோ? இவ்விதமேதான் ஒவ்வொன்றும் எனக் கொள்க. ஆகவே, பரமாத்மா என்னும் பேரின்பப் பிழம்பை அடைய விரும்பும் ஜீவான்மாவுக்கும், இடை நின்று உபகரிக்க மூன்றாவதோர் பொருள் வேண்டியிருக்கிறதென்பது யாம் சொல்லாமலே அமையும். அதுதான் பக்தியாம். இங்ஙனம் பக்தியானது, பிறப்பு இறப்பு என்னும் பெருஞ்சாகரத்தில் அகப்பட்டுழலும் ஆன்மாக்களை, அதனினின்றும் கரையேற்றிச் சிவானந்தப் பெரும்பேற்றை எய்துவிக்கும் சிறப்புடைத்தா யிருத்தலினாலன்றோ, ஆன்றோர் அதனைப் பாராட்டிப் பேசுகின்றனர். இப்பக்தி ஒன்றே ஜீவான்மாக்களைக் கடவுளிடம் சேர்ப்பிக்கும் ஆற்றல் வாய்ந்தது என்னும் உண்மை,



"பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க"

என்று ஸ்ரீமணிவாசகப் பெருமான் அருளிச்செய்த அருமைத் திருவாக்கால் அறியற்பாலதாம். ஏனெனில், இறைவன் முதிர்ந்த அன்பாகிய அருள்மயமாய் விளங்குகின்றாராதலின் அவரை நாம் அன்பினாலேயே அடையவேண்டும். முதிர்ந்த தரத்தினதான இப்பக்தி எவ்விதம் உண்டாகுமெனின், நாம் நம்முடைய பெண்டு, பிள்ளை, சுற்றத்தாரிடமும், நண்பர்களிடமும், பிறமக்களிடமும் பாராட்டி வரும் அன்புரிமையும், நம்மினுந் தாழ்ந்த ஜீவராசிகளிடம் நாம் காட்டும் ஜீவகாருண்ணியமும் நாளுக்கு நாள் முதிர்ந்து வருங்கால், "நம்மைப் போலவே பிறந்திறந்து உழன்றும், நோய் வாய்ப்பட்டு வருந்தியும், பசிப்பிணியால் துன்புற்றும் வரும் இவர்களிடம் நாம் அன்பு செலுத்துவதால் யாது பயன்? இவர்கள் நம்மை எவ்விதம் ஈடேற்ற வல்லவராவர்? ஆதலால் எல்லாம் வல்ல முழு முதற் கடவுள் ஒருவரே நம்மால் அன்பு செலுத்தப்படுதற்கு உரியவராவர். அவர் சர்வஞ்ஞராயும் எங்கும் நிறைந்தவராயும் இருத்தலால், அவர் ஒருவரிடம் நாம் உண்மைப் பக்தி செலுத்துவோமாயின் அப்பக்தி சர்வவியாபகத் தன்மையை அடையும். ஆகவே பிற ஜீவர்களிடத்தும் நாம் அன்பு செலுத்தியவர்களாவோம். ஆதலால், அந்த இன்பமயமான இறைவனிடம் பக்தி செலுத்தவேண்டும்" என்னும் உணர்ச்சி

தானகவே உண்டாகும். இவ்வுணர்ச்சியினால் முதிர்ச்சியடையும் அன்பே, பக்தி என்று சொல்லப்படும். இவ்வுண்மையினைப் புலப்படுத்தவன்றே,

"தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய்க் கோத்தும்பீ"

என்னும் திருவாசகத் திருப்பாட்டு எழுந்தது.

இனி, இப்பக்தியானது முதிர்முதிர ஆன்மா "நான், எனது" என்னும் அகங்கார மமகாரங்களை விட்டொழித்ததாய், மும்மலங்களும் கழலப்பெற்றதாய், இன்பதுன்ப அநுபவங்களுக்கு உட்படாத பெற்றி வாய்ந்ததாய்த் தன்னையும் மறந்து,

"நீரொத்தமேனி யுரோமஞ்சிலிர்த் துளநெக்குநெக்குச்
சேரக் கசிந்து கசிந்தே யுருகி நின் சீரடிக்கே
மாருத் தியானமுற் றுளைத்தமேற்கொண்டு மார்பிற் கண்ணீர்
ஆரப் பெருக்கி யிடப்பதென்றோ கயிலாயத்தானே"

என்று பட்டினத்தடிகள் இறைவனைக் குறையிரந்து வருந்தி நின்றதுபோல், கடவுளை அடையவேண்டும் என்னும் நினைவே பெரிதுடையதாய் அவரைப் பாடியும் பணிந்தும் பாவித்தும் துதித்தும் இன்புறுகிற்கும். அன்பருடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் பெருங்கருணை வாய்ந்த இறைவன், அப்போது அவர்களை ஆட்கொண்டு தம் திருவடி நீழலில் சேர்த்துக்கொள்ளுகின்றார். இங்ஙனம் முத்திபெற்ற பக்தர்கள் பலர் இருந்திருக்கின்றார்கள் என்பதை நம்முடைய புராணங்களால் நாம் அறிகின்றோம். "பக்திவிளக்கம்" என்னும் இப் புத்தகத்தில் காணப்படும் சுகப்பிரமரிஷி, சுக்கிரன், பகீரதன்,



நயன், முதலானோருடைய சரித்திரங்களும் முற்காலத்திலிருந்த மகான்கள் பக்தியினாலேயே முத்தியடைந்தார்கள் என்பதை இனிது புலப்படுத்துகின்றன.

இனி, "விளக்கம் என்றால் யாது?" எனப் பார்ப்போம். விளக்கம், விளக்கு, தீபம், ஆகிய இம்மொழிக ளெல்லாம் ஒரு பொருட் கருவிகளாம். சாதாரண விளக்கானது இவ்வுலகத்துப் புறவிருளை நீக்குவதோடு, அவ்விருள் இருந்த காலத்தில் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருந்த பொருள்களை விளங்கச் செய்யும் இயல்புடையதாயு மிருத்தல்போல, பக்தியானது ஆன்மாவைப் பொதிந்துகொண்டிருக்கும் ஆணவ இருளை நீக்குவதோடு, அவ்வான்மாவுக்கு அவ்வாணவ மறைப்பால் முன் புலப்படாதிருந்த சிவபரம்பொருளை இப்போது புலப்படும்படி செய்து அதனை அச்சிவத்துடன் சேர்க்கும் இயல்புடையதாயும் இருத்தலின் "பக்திவிளக்கம்" என்று இந் நூலுக்கு இவ்வாசிரியர் பெயர் தந்தனர்போலும். இப்புத்தகத்தின் 141-ஆம் பக்கத்தில் காணப்படும் "தக்ஷிணாமூர்த்தி" என்னும் மகுடம் புனைந்த வியாசமும், அதற்கு இந்நூலாசிரியர் விளக்கிக் காட்டியுள்ள தத்துவார்த்தங்களும் பெரிதும் பாராட்டற்பாலனவா யிருக்கின்றன.

இப்பக்தி நிகழ்தற்கு "ஞானம்" ஏதுவாயிருத்தலின், ஞானத்தைப் போதிக்கக்கூடிய "தத்துவ ஞான போதினி" என்னும் அரிய நூலையும், அறிந்த ஞானத்தின் வழிநின்று அநுபவிக்கும் நிலையினதாகிய பக்தியை விளக்கும் இயல்புடைய "பக்திவிளக்கம்" என்னும் இந்நூலையும் முறையே எம் நண்பர் ஸ்ரீமான் C. S. இராதாகிருஷ்ண ஐயரவர்கள் பிரகடனஞ் செய்ய முன்வந்ததானது பெரிதும் [illegible]

முடைத்தாம். ஏனெனில், இறைவனை அறியும் ஆராய்ச்சி அறிவே, “தத்துவ ஞானம்” எனப்படுமாதலானும், அறிந்த அவ்விறைவனை அனுபவித்து நிற்கும் நிலையே “பக்தி” யாகலானும், முன்னையதின்றிப் பின்னது கூடாதாதலானும் என்க.

இந்நூலையும் ஆஸ்திக சமயத்தினரான நம் தமிழ் மக்கள் வாங்கிப்படித்து இன்புற வேண்டுமென்றும், இம்மாதிரியான இன்னும் பல நூல்களை இவர்கள் அச்சிட்டு உலகுக்கு உபகரிக்க வேண்டுமென்றும் யாம் விரும்புகின்றோம்.

“அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு”

தேவகோட்டை 15-12-13 } நாகை-ஸி. கோபாலகிருஷ்ணன்,
தமிழ் நாவலிஸ்ட்.



# பக்தி விளக்கம்

## கடவுள்

எல்லா உலகங்களின், உள்ளிலும், புறம்பிலும், அப்பாலும், எங்கும் நிறைந்த வியாபகமாய், மனத்தாலுங் கண்டுபிடிக்கக் கூடாத அவ்வளவு சூக்ஷமமுமாய்த் தன்னுடைய சக்திகள் மாத்திரம் வெளியிற் காட்டியதால், அதனால் சக்திகளையுடையது ஒன்றுண்டென்று அறிவிப்பதாய், பொருளில்லாமற் பெயரில்லை பெயரில்லாமற் பொருளில்லை என்ற வசனத்தால் கடவுள் என்ற பெயர் வழங்குகிறபடியால், அப்பெயருள்ள பொருள் ஒன்றுண்டென்றும், கடவுள் என்ற பொதுப்பெயரைத் தவிர மற்றெந்தப் பெயர் வைத்தழைத்தாலும் அப்பெயர்கொண்டது தானாக நிற்கின்றதாய், எல்லாந்தானாய் நித்தியமாய், நிர்மலமாய், நிராமயமாய், எல்லாம் வல்லதாய், எங்கும் பரிபூரணமாக நிறைந்ததாய், அநித்திய வஸ்துக்களைத் தவிர்த்து பாக்கி நிற்கும் நித்தியப்பொருளாய், அரூபியாய், பக்திக்குமாத்திர மெட்டியதாய் விளங்குவது கடவுள்.

இக்கடவுளை முதலிற்றன்னுளறிந்து, பிறகு அவ்வழியாக எங்குமறிய வழிகளை முந்திய பாடங்களிற் சொன்னோம். எவன் அவ்விதமவனையறிந்து, அவனை மனப் பூர்ணமாக தியானித்துத் தானுமவனோடொன்றாகக் கலந்து நிற்கிறானோ, அவன் அவனேயாகிறான். அவன் மறுபடியும் உலகிற் பிறப்பெய்துவதில்லை. வியாதிகள் சிகிச்சைசெய்வதற்கு வேண்டிய ஆதாரங்கள் இதுவரையிலெடுத்துச் சொல்லப்பட்டன. இனிவரும் பாடங்களில் சிகிச்சை செய்யும் வழிகளைக் கூறுவாம். இதுவரையிலிவ்வளவு விஷயங்கள் சொல்லப்பட்டதின் தாத்பரியமென்னவென்றால், ஒருவன் தன்னில் நான் என்பவனை அ

க்கு, மனதை நான் என்பவனுக்கு வசப்படுத்தி, பஞ்சேந்திரியங்களை நான் என்பவனுலடக்கி, நல்லெண்ணங்கொண்டு மனோ வேகத்தால் மஹா மந்திரமாகிய பஞ்சாக்ஷரம் அல்லது எந்த மந்திரத்தை உச்சரித்தாலும், மனதில் நினைத்த காரியங்கள் சித்தியாகும், தீராத வியாதி தீரும்; இகத்தில் வேண்டுஞ் சித்திகளைப் பெறுவதுடன் பரத்தில் மோக்ஷத்தையு மடையலாம்.

## ஆன்மாவும் சரீரமும்

ஆன்மாக்கள் பரமான்மாவில் லயம் பெறுவதாக எழுதிய வேத வாக்கியங்களைப் பற்றியே, அதற்கு இப்பொழுது சமயம் நேர்ந்ததாதலால் அவற்றைப்பற்றி இங்கு விரிப்பாம். வேதங்களில் இருவகை வசனங்களுண்டு. அவன் அறிஞனாய் பிரமதேவனுடன் சகல கர்மங்களையும் பெறுவான். அவர் பிரமலோகத்தில் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து பிரமதேவன் வயது முடிவில் முக்தி பெறுவார்கள். இவனது பிராணங்கள் எக்காலத்திலும் வெளிப்படுவதில்லை. இங்கே பிரமத்தைப் பெறுவான் இங்கே பிரமத்தின் லயிப்பன் என்பன. இவற்றின் கருத்து யாதெனில் :—இத்தேசத்துச் சித்தாந்திகள் இருவகைப்பட்டவர். அவர்களுள் சைவர்களும் வேதாந்திகளும் ஓர் வழியிலும், மற்றவர் மற்றோர் வழியிலும் நிற்கின்றனர். வேதாந்திகளும் சைவர்களும் இங்கு பரம்பொருளிற் கலப்பது முத்தியென்பர். மற்றுஞ்சிலர் கிரமமாகப் பற்பல லோகங்களைக்கண்டு அதன் வழியே அப்பரம்பொருளின் திருமேனி குடிகொண்ட பரமண்டலத்தைப் பெற்று அத்திருநாட்டில் அவ்வேத நாதனுடன் ஒன்றுபட வாழ்ந்து அவருக்குத் தொண்டுபுரிந்து நிற்பதே பரமுத்தி என்பார்கள். இவர்களுக்குள்ள வேற்றுமைகளையும் கொண்ட வரலாற்றையும் சிறிது எடுத்து விளக்கிப் பிறகு அவ்விரு சித்தாந்தங்கள் ஒன்றுபடும் வழியைப்பற்றிப் பின் எழுதுவோம். கேவலாத்துவைதிகள் கூறுவது:—இவ்வுலக முதலிற்றோன்றுவனவெல்லாம் அநாதிமயக்கப் பொருளாய் இத்தன்மைத்தெனத் துணியப்படாத நிலைமையில் அநிர்வசனீயமாய் நின்று அம்மயக்க விலக்குக்கின்றியமையாத அப்பரம்பொரு



ளறிவே ஒன்று காரணமாகக்கொண்டு அம்மயக்க விலக்கே முக்தி எனப்படும். அவ்வத்துக்குள் அடங்கிய அறிவென்பது சிறிது சிறிதாகத் தனித்து நின்றதுபோலத் தோன்றினும் அது அப்பரம்பொருளின் வேறுபட்டதல்ல. ஆயினும் அவ்வறிவு இடத்தாலல்லது காலத்தால் அளவிடக்கூடாத குறிப்பற்ற பொருளேயாதலால் அதற்கு அநாதியபக்கம் விலக வேறு இடம் வேண்டுவதில்லை. அம்முக்தி என்பது இவர் கொள்கையில் அநாதிமயக்கப் பொருட்டிரிபென உபாதி யொழிதலன்றோ? இனி ஆன்மா என்னும் பொருளை ஆராயுங்கால் அது நித்தியமுத்தனே என்பது. இனிச் சுத்தாத்துவைதி என்னுஞ் சைவர்கள் பசு, பதி பாச என்னும் முப்பொருட்களும் உண்மையில் உள் பொருள்களெனவும் அவற்றுள் ஆன்மாக்களென்னும் பசுக்கள் பதிப்பொருளாவதில்லை எனவும் கூறுகிறார்கள். ஆயினும் இயற்கையில் ஆன்மாக்கள் சுத்தரும் பேரறிவு செல்வம் பெற்றவருமாய் தன் வண்ணமாய்த் தன்னுட் பிரதிபலிக்கும் குணங்களுடன் உலகத்தில் நிர்மலமாய்ப் படிகமணி போன்ற நன்மணிகள் பல நிறம்பெற்ற ஓர் துணிபு நிகழின், அந்நிறம் பெறுவதும் அந்நிறமில்லாவிடம் அது ஒழிந்து நிற்பதும் போலுமாவது அவாவியற்கை அவ்விதம் இவ்வான்மாவும் அநாதியிற் றன்னுடனிகழ்ந்த மலத்துடன் கலந்து சம்சாரியாய் இன்பதுன்பங்களைப் பெறுகின்றான். அவன் தீக்ஷை முதலிய நற்கிரியைகளால் மலபரிபாக மெய்தியபொழுது அம்மலமொழிய எங்கும் நிறைந்து ஓங்கிய பரசிவ பரஞ்சுடரொளியைத் தம்முட் பிரதிபலிக்கக் கண்டு தாமேயனுபவித்து நிற்கின்றான். கதிரவனொளியுங் கலந்த கண்ணொளிபோல இரண்டறக் கலந்து நிற்பான். அதுவே முக்தி ஆதலின் அவன் முக்திபெறவேண்டி மற்றைய உலகம் தேடவேண்டுவ தவசியமில்லை. அவன் மலபரிபாகம் பெறுமிடில் பற்பல புவனங்களைப் பற்றி அவற்றுள் சிறிதுகாலந்தங்கி நிற்பான். இவ்விருவகைச் சித்தாந்திகளுள் வேற்றுமையிருப்பினும் இருவரும் உள்ளவிடத்து முக்தி என்பதை ஒப்பினர். ஆதலால் இருவரையும் ஒரு சித்தாந்தியாக்கினோம். அவ்விதமே வேதாந்த வித்தையிலும் இவர் ஒற்றுமைபெற்ற வழி பின்னெழுதுவோம். மற்றவர் கன்ம வேற்றுமையால் ஆன்மாக்

கள் முறைமையே பற்பல லோகங்களை யடைந்து பேறுற்றேழும் சுழன்று உலகங்கட்கு மேலான சத்தியலோகஞ்சென்று அவ்விடத்தில் பிரம தேவனுடன் தத்துவ விசாரஞ்செய்து பெயராத பரம்பொருளுடன் இரண்டறக் கலப்பார் அல்லது பரலோகமெனலுறும் திருநாட்டை யடைந்து சுத்த சாத்துவீகத் திருமேனியுடன் எழுந்தருளி ஆன்மாக் களை ஆட்கொள்ளும் அவ்விராஜ கிருபாமூர்த்தியான அமலனது திரு வடித்தாமரை நிழலிற் குடிகொண்டு அவரது திருத்தொண்டு பூண் டொழுகுவார். அதே முக்தி. அக்காலத்தும் ஜீவர்களுக்குச் சரீரம் ஒழி வதில்லை. ஆயின் ஓர் விசேடமுண்டு. அதாவது, இக்காலத்தி லுள்ள சரீரங்களைப் போல் அத்திருநாட்டிலுள்ள சரீரங்களும் இன்ப துன்பங்களிரண்டிற்கு மிடமானவையல்ல மற்றின்பமே உருவெடுத்த தெனக்கொள்க. அவ்விடத்திலுள்ளவர்களெல்லோரும், பிரம்மானந் தம் பெற்றவர்களாயிருப்பார்கள். அவர் சரீரம் சுத்த சத்துவமயமாத லால் அதன் கண்ணுள்ள ஜீவச்சுடர் படிகமணிக் குடத்திற்குள்ளடங் கிய தீபம்போல் தன்னொளி தடையின்றி வெளிவர எப்பொருள்களை யுங் கவர்ந்து நிற்கும் என்பார்கள். இவ்வாதிகளுள் ஜீவர்கள் பர மான்மாவின் அம்சங்களெனவும் தனி முதல்களெனவும் கடவுளால் படைக்கப்பட்டவர்களெனவும், இன்னும் பற்பல உள் வேற்றுமை களும் உள. அவைகள் வேதாந்த வித்தையின் கண்ணே உதித்தன. அவ்விருவரும் கொள்ளவேண்டிய யுக்தி இது. யாம் முன்னரே ஆன் மாக்களினியற்கைப் பற்றி வரைந்தவிடத்து அவர்கள் இயற்கையில் தன்னறிவுபெற்றவர் சரீரவுறுப்புகளின் வேறாய் நின்றுளார் என்பதை மறவாதீர். அங்ஙனமே மறுபிறப்பைப்பற்றி எழுதுமிடத்து அவன் என்றும் சரீர அவர நிலை பெற்றவனென்றும், அவன் சரீரத்துடன் சேருதல் அயம் காந்தத்துடன் ஒட்டுதல் போலென்றும் அங்ஙனமே கடவுளைப்பற்றி எழுதியவிடத்தும் இவ்வகிலாண்ட சராசரங்களையும் இயக்கும் பேராற்றல் கடவுளுக்கோர் திருவுருவமென்பதும் தங்க ளுள்ளத்தை விட்டொழியாதிருக்க. இனி எக்காலம் வரையில் ஜீவன் சரீரத்திற்றடைப்பட்டானோ அக்காலம்வரையில் அவன் பரம்பொருளை நோக்கான். உலகத்தில் மரம் முதலியவை இப்பூமியினியக்கத்திலடங்



கிய வரையில் சூரியன் முதலியவற்றை நோக்கிச்செல்வதில்லை. இனி ஓர்சமயம் வெப்பப் பெருக்கத்தால் இப்பூமியானது இயக்க வலிமை கடந்து ஓர் வத்துவை நோக்கிச் செல்லுமாயின் அதைக் கதிரவன் தன் கவர்ச்சியால் கைக்கொள்ளுவான். சூரியன் தன் கவர்ச்சியினால் இப் பூமியை இயக்கினும் [illegible]ன் கண்ணமைந்த பொருட்களை இயக் கான். அங்ஙனம் சரீரமுதலிய பற்பலபொருட்களைத் தம்முட்கொண்ட அப்பேராற்றல் அதிலடங்கிய ஆன்மாவைத் தன்மை நோக்கி இயக்குவ தில்லை.

மேலும் காந்தமானது பற்பல இரும்புத்துண்டுகளுடன் கலந்து சிறிது சிறிது தனது சக்தி குன்றிநிற்பதுபோல் ஆன்மா பற்பல சரீரங்களைப் பெற்றுத் தனது வாசனை [illegible] யொழித்து தவத்தினாலும், பரமேசுவரனது திருவருட் பிரசாதத்தினாலும் சரீ ரத்தை விட்டகலுவானேல், அவ்வான்மா பரமான்மாவினது பேராற்ற லால் இயக்கப்பெற்று அவனுடன் சேர்ந்து அவனுடன் வேறாய் தோற் றம் மட்டும் மீண்டும் சரீரத்தை நோக்குவதில்லை. சூரியனது கவர்ச்சி வலிமையால் அச்சூரியனை நோக்கிச்செல்லும் ஓர்பொருள் மறுபடி இப்பூ மண்டலத்தைநோக்காதல்லவா? ஓர் சமயம் பூமிமுதலிய அண்டங்களின் உள்ளிருந்து அதனுட் கிடந்த கல் முதலிய சில பொருட்களை வேறு படுத்துமாயின் அதிவேகத்துடன் கிளம்பி மற்றைய அண்டங்களிற் சம்பந்தப்படுபோழ்து ஆன்மாவும் இச்சரீரத்தின் கன்தவமென்னும் பெரிய பேரொளியால் வாசனைகளை அகற்றி வெளிநோக்கு மிடத்து அவ்வத்துவை நோக்கிச் செல்லுகின்றது. அதுகொண்டே ஆன்றோர் அண்டம்போல் பிண்டமமைந்த [illegible] ன்மாவா னது பேராற்றல் ஒன்றை நோக்க ஒன்றிற் பெரிதாயினும் [illegible] சந்திரனை நோக்கப் பூமியிலும் பூமண்டலத்தை நோக்கச் சூரியனிலும் என்பதுபோல் ஓரிடம் சென்று முடிவு எய்துவதில்லை அது எங்கும் பரிபூரணமாய் நின்று சூரியமண்டல முதலிய ஒவ்வோர் அண்டங் களில் அஃதே உறுதியாகக்கொண்டு வெளிவரும். அதிலும் சிறிதாய் வினைய அண்டங்களை நோக்கிச்சென்று அதைக்கவரும், ஆதலாற்றான் தத்துவசாஸ்திரிகள் ஆராய்ந்தமட்டில் யாதேனும் ஓர் அண்டத்தின்

ஆற்றல் நிலைபெறுமிடத்துள்ள பொருட்கள் அவ்வள்ள விடத்திற்றுள் நிற்குமெனவும் அசையவொட்டாது நிறுத்துவது ஓர் போற்றலெனவுங் கொண்டனர்.

ஆனால் அதற்கு உண்மையான இயற்கை யாதெனில், அவ்வப் பொருட்களை அவ்வவ்விடத்து நிலை நிறுத்துவது ஆயின் அஃதில்லா விடமில்லை. அதில் கலந்த மற்றோர் சிறிய வாற்றல் பெற்ற பொருள் மீண்டும் மற்றொன்றில் கலப்பதில்லையென்று துணிதல் யாதுந் தடையின்றிக் கொள்ளற்பாலது. அக்காலத்து ஆன்மா இன்பமொன்றையே யனுபவிப்பான் என்பதும் கருவி காரணாதிகளை யொழித்து நிற்பானென்பதும் ஆன்மா மறுபிறப்பு முதலிய விஷயங்களைப்பற்றி எடுத்தோதிய விடத்திற்றானே [illegible] மாதலால், மீண்டும் அவ்விஷயத்தைப் பற்றி இங்கும் எடுத்து ஓதல் அவசியமாயிற்று. இனிக்கிரம முத்தியின் வரலாற்றைப்பற்றிச் சிறிது வரையலாம். உலகத்தில் குறைந்த சக்தியுள்ளதை நிறைந்த சக்தியுள்ள பொருள் இயக்குவது இயற்கையேயன்றி சக்தியற்ற பொருளை சக்தியுள்ள பொருள் இயக்குவதில்லை. அவ்விதம் வி[illegible] சிறிது குறைந்து உத்தமலோக வாசனையுடன் வெளிவரும் ஆன்மாக்கள் வாசனையுடன் சூரியாதி லோகங்களைப் பெறுகிறார்கள். அதுகொண்டே நம்முன்னோர் (இருவரே சூரியத்தைப் பெறுவார்கள்) யோக நிலைமையறிந்த சந்நியாசியும், படைகளின் முன்னின்று உயிரிழந்த சுத்த வீரனும் என்றார்கள். இதன் உண்மை யாதெனில் யோகங்களில் நன்கு அபிநயித்து அதன் வலியால் தேகத்திற்றவமென்னும் அக்கினியைக் கிளப்பி அதனால் வாசனை [illegible] மனமுதலிய உட்கருவிகளுடன் சரீரத்தினின்று ஆன்மாக்களை வெளிப்படுத்திச் சூரியமண்டலத்தை நோக்கிச் செல்வான்.

அவ்விதம் படைமுகத்தில் சரீரம் வாசனை யொழித்துத் தன் சடலத்தைத் துரும்பாகக் கருதி முன்னின்று உற்சாகங்கொண்ட வீரனுக்குச் சரீரத்தை விடும்படி நேரிடின் அக்காலம் அவன் வாசனையற்ற சுத்தரான் மாவாதனின் அவன் கொண்ட வைராக்கியமென்னும் பெருந் தவத்தால் அவன் சரீரத்தைவிட்டு வெளிவந்த ஆன்மசைதன்னியம்



வெகு விரைவாய்ப் புறப்பட்டு சூரியமண்டலத்தை நோக்கும். அதே படைமுகத்தில் சரீரத்திலுள்ள வாஞ்சையினால் அதை விட்டொழிக்க விருப்பமில்லாது பின்னோக்கிச் செல்பவனொருவன் உலக வாழ்க்கையில் விருப்பங்கொண்டு [illegible] முதலியவர்களை நினைத்து ஓடுகின்றானாதலால் வாசனையோடு கூடிய அசுத்தாத்துமாவாகிய அவன் ஓர்சமயம் உயிரைவிட நேர்ந்தால் அவன் மீண்டும் இப்பூமியிற்றானே சுழன்றுழலுவான். யோகத்திற் சிறிதும் பயிலாத சந்நியாசியும் அங்ஙனமேயாவான். ஆதலாற்றான் சந்திரமண்டலத்தினின்று பூமண்டலத்தில் விழுவதும் பூமண்டலத்திலிருந்து சூரியமண்டலத்திற்குச் செல்லுவதும் அங்கிருந்து அக்கினிலோகத்தை அடைவதும் இவ்விதம் பலவிடங்களைப் பெற்று முடிவில் நான்முகனுர் வசிக்கும் [illegible]த்தை பெறுவானென்பது சாஸ்திரங்களின் துணிபு.

அங்ஙனமன்றே கடவுள் தான் சிருட்டித்த பற்பல அண்டங்களுள் இவ்வொன்றில் மட்டில் மனிதர்களுக்கு இன்பதுன்பங்களைச் சிருட்டித்தாரெனவும் மற்றவிடத்து அங்ஙனம் சிருட்டித்தாரில்லையெனவும் கூறலை யாதென்பது. அங்கும் இத[illegible]னும் தாழ்ந்ததுமான பல போக்கிய வத்துக்களைச் சிருட்டித்திருக்கவேண்டுமாதலாலும் மனிதர்களினும் உயர்ந்த நிலைமையை விரும்பும் இயற்கையுள்ளவ ராதலாலும், அவ்வித வாசனையால் முறையே பற்பல அண்டங்களைப் பெறுவதும் அங்கிருந்த போக்கிய வத்துக்களை யனுபவிப்பதும் உசிதமே

அச்சத்தியலோகமென்னும் உலகத்திற்கு மேல் விரும்பத்தக்க பொருள் பரமானந்தமொன்றே யாதலால் அப்பிரம்மலோகத்தில் பிரமதேவனுடன் கலந்து வேதாந்த[illegible]விசாரித்து உண்மைப் பொருள் தெளிந்து அதனினும் வேறான லோகத்தில் அப்பிராகிருத திவ்ய சரீரம் பெற்றுத் தொண்டர்களை ஆட்கொள்ளும் பரமாத்மாவிடத்திலாவது அல்லது பாவத்துவிலாவது கலந்து பேரானந்தத்தைப் பெறுவார். இனி ஒரு சமயம் இப்பூமண்டலம் சூரியமண்டலத்திற் சென்று கலந்தால் அக்காலம் எல்லோரும் முத்தி பெறுவார்போலும்; என்று ஒரு ஆசங்கை நிகழின் அதை இங்ஙனங்கூறி மறுக்க. அக்காலத்தில் மிகுதியான உஷ்ணத்தால் பூமியில் வசிக்கும் ஆன்மாக்களின் சரீரங்களெல்லாம்

எரிந்து இருக்க வகையன்றிச் சரீரத்தை விட்டொழித்து தத்தம் சமவாசர்களுக்கேற்பட்ட பற்பல அண்டங்களை யடைந்து அங்குதானே பிரபுக்களைப்பற்றி நிற்குமேயன்றி வேறுவழி பெறுவதரிதாகையால் எக்காலத்தும் ஐமியிறங்கிய ஆன்மகோடிகளல்லாத மற்றையவைகள் முத்தி செய்வது பொருந்தாதென்க.

ஆயினும் இப்பூமண்டலத்தை விட்டு சூரியமண்டலம் செல்லும் வரையில் இடையிற் பற்பல உலகங்களையடைவது யாங்ஙனமெனவொரு வினா நிகழின் அதற்கு விடை இப்பூமண்டலத்திற்கும் சூரியமண்டலத்திற்கும் இடையே நிலைபெற்றுவரும் அண்டங்கள் பலவுள. அவைகளை நாம் காண்பதரிது. அவை சூரியனுக்கும் பூமிக்கும் நடுவில் சுழன்றுவருகின்றமையானும் அவைகளின் நிழல் முக்கோண வடிவமாக முறையேகுன்றி, ஈற்றில் முனைபோல் ஒழிந்துபோமாதலாலென்க. யாங்ஙனமெனின்? அமாவாசையன்று நமக்கு சந்திரமண்டலம் புலப்படுவதில்லை. அதற்குக் காரணம் சந்திரன் அக்காலம் பூமிக்கும் சூரியனுக்கும் நடுவே வருவதால் அச்சந்திரமண்டலத்தின் மேற்புரம் வெளியிற்படக் கீழ்புரம் முறையே தனது சாயலும் சாயல் ஒழியுமிடத்திற்கப்புரம் குடியிருப்பவர்களுக்கு அதேது முற்றிலும் புலப்படும். இனி அமாவாசையொழிந்த மற்றையதினத்தில் சந்திரகலை தெரிவதுபோல் ஏன் எமக்குப் புலப்படவில்லை? எனெனின், இவ்விதக்கேள்வியே பொருந்தாது. பகற்காலத்தில் சூரியகிரகணம் ஏற்பட்டால் மற்றைய நட்சத்திரங்களைப்போல் அவ்வண்டங்களையும் நமது ஊன் கண் கண்டறியாது. இரவிலோ சூக்குமங்களாயுள்ள அவ்வண்டங்கள் இவைகளெனக் குறித்தெடுக்கத்தக்க கருவியில்லை. அன்றியும் சில துருவநட்சத்திரம்போலத் தம்முட்டாமே சுழன்று நிற்குந்தன்மையுள்ள மற்றுஞ்சில அண்டங்கள் சூரியனைச் சுழன்று வரும் அண்டங்களின் நிழலைப்பற்றியே நின்று தபோமண்டலங்களெனப் படுகின்றன. அதுகொண்டே பாரதத்தில் அர்ச்சுனன் சுவர்க்கயாத்திரையில் அங்கு சூரியசந்திர கிரகணங்கள் படுவதில்லை என்று தபோமண்டலங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறது.

ஒளியற்று வேறோ இருளாக நிறைந்த சில அண்டங்களை நரகங்



ளெனவும் சொல்வதுண்டு. அவ்விதம் சூரியமண்டலத்திற்கும் பூமிக்கும் நடுவிலுள்ள உலகங்கள் அந்தரிட்சலோகமெனப்படும். ஆதலால் சூரியலோகத்தின் நடுவில் பல வுலகங்களுண்டெனக் கூறுவதும் உண்மையே. இதற்கதிகமான விஷயங்களை சுவர்க்க நரகங்களைப்பற்றிச் சொல்லுமிடத்துச் சொல்லுவோம். ஆதலாற்றான் இருவகை மூர்த்திகளைப்பற்றி வேதங்கள் கூறியது ஒவ்வுமெனக் கொள்க. அடியிற் குறிக்கப்பட்ட வாதிகளுக்குள் உள் வேற்றுமைகள் பலவுளவேனும் அவர்களெல்லோரும் முத்திகளைக் கொண்டவர்களேயன்றி வேறுவழிகளைப் பிடித்தவர்களல்ல.

ஆதலால் சுருதிகளைக்கண்டறிந்த நம்பூர்களே இதனுண்மையையறிந்தவர்கள். ஐயா நம்முன்னோர் உலகத்தில் நீண்டகாலம் உழன்று அதை வெறுத்து அதனுண்மையை மற்றவர் அறியவேண்டிப் பற்பல நூல்களை எழுதிவைத்திருக்க யாம் ஏன் எல்லோருக்கும் ஆரியர்கள் கண்டவழி நின்று ஆத்திகத்தைக் கைக்கொண்டு நாஸ்திகத்தையொழித்துப் பரமேசுவரனது திருவடித்தாமரைகளில் மெய்யன்புற்றுப் பரமானந்தப் பெருவெள்ளம்பெருகப் பரமுத்தியைப் பெறுவோமாக. உலகெலாங் கடந்த வுண்மைப்பொருளாய் பரமேசுவரன் எமக்கு என்றும் இன்பமளிப்பனாக.

## விநாயகமூர்த்தி

விநாயக மூர்த்தியானவர் முக்கியமான உபாஸநா மூர்த்திகளிலொருவர். விநாயகரது சரித்திரங்களைப் புராணங்களிற் பலவிதமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

மஹரிஷிகள் விநாயகரை ஓங்காரமென்கிற பிரணவ சுவரூபமாக பாவித்தார்கள். நமது மந்திரங்களனைத்திற்கும், காரண பூதமாயும் வேதத்தின் வாரமாயும், ஈசுவரனுக்கு இருப்பிடமாயும், பிரம்மா, விஷ்ணு, ருத்திரமென்னும் திரிமூர்த்திகளில் சுவரூபமாயும், விளங்குகிற ஓங்காரத்திற்கு, பிரதிகமாக கணபதியை உபாஸிக்கின்றோம். எங்ஙனமெனில் (ஓம்) என்னும் அக்ஷரமானது இந்தியர்களின் பாஷைகளில் அநேகமான ஜீரவடிவமாயிருக்கிறது. நாகர எழுத்திலும்

ஏறக்குறைய கிரந்த எழுத்திற்கு சமமாகவே யிருக்கிறது. இவ்வெழுத்தை யானைமுகத்திற்குச் சமமாகக் கூறலாம். இன்னும் யானையினுடைய வைகரி வாக்கானது, ஓங்கார சுவரத்தை யொட்டியே இருக்கிறது. யானை கனைக்குமாயின், நாதத்தொனிபோல் இருக்குமென்று யோகிகள் கூறுகின்றார்கள். பிர்மரந்திரத்தில் பிராணயாமத்தால் நாதானுஸந்தானம் செய்தவர்கள் கர்ஜனையே உபமானமாகக் கூறுவது வழக்கம். ஆனதினால் கஜத்தின் முகத்தை கணேசன் அடைந்ததற்கு தாத்பரியம் யாதெனில், தான் பிரணவசுவரூபமான முகத்தோடு கூடிக்கொண்டிருக்கிறேன் என்று பக்தர்கட்கு பிரகடனம் பண்ணுகிறார். முகத்தில் ஒற்றைக்கொம்பில்லாதது பிரணவத்தின் சுழிபோலிருக்கிறது.

வயிறு.—அவருக்கு பெரிய வயிறும் இருக்கிறது. இதற்குக் காரணம் யாதெனில், இவ்வுலகமனைத்தும், தன்னிடத்திலடங்கியிருக்கின்றன வென்பதைக் காட்டுகிறது. அங்ஙனஞ் சுருதியும் கூறுகிறது.

ஸம்யுக்தமேதத்க்ஷரம் க்ஷரஞ்சவ்யக்தா
வ்யக்தம் பரதேவிச்வமீச.

வியக்தமாயும் (வெளிப்படை) அவ்யக்தமாயும் (அடங்குதல்) க்ஷரா க்ஷரங்களாயுமிருக்கிற (க்ஷரம்நாசமுடையது அக்ஷரம் நாசமாற்றது) பிரபஞ்சத்தை ஈசன் தரிக்கிறார். என்றதால் எல்லாவற்றையும் தனது பெரிய வயிற்றில், வைத்துக்கொண்டிருக்கிறார். இச்சரா சராதி பிரபஞ்சங்களனைத்தும் அவருடைய வயிற்றிலோர் மூலையிலே இருக்கின்றன வென்பதைக் காட்டுகின்றது.

சக்கரம்.—அவருடைய கையிலிருக்கும் சக்கரம் இவரனாதி யென்பதைக் காட்டுகிறது. எப்படி யெனில் ஓர் சக்கரத்தை கையில் வைத்துக்கொண்டு இதற்கு எந்த இடம் ஆதி, (அதாவது இச்சக்கரம் எங்கு ஆரம்பித்தது எங்கு முடிந்தது என்று) ஒருவரைக்கேட்டால் அவர் சொல்வதற்கு யோஜிப்பார். ஜாமிட்ரி சாஸ்திரத்திலும் (A Circle is a plane figure contain by [illegible] line) சக்கரமென்



பது ஓர் கோட்டால் வளையப்பட்ட ஒரு ரூபமென்றிருப்பதாலும் அதைப் பார்ப்பின் அந்தக்கோடு எங்காரம்பித்து எங்குமுடிந்ததென அறிவது சாத்தியமில்லையானதாலும் கணபதியானவர் தனது கையில் வைத்திருக்கும் சக்கரத்தால் நான் எப்பொழுதும் ஏகமாயுள்ளவன் எனக்கு உற்பத்தி நாசமில்லை. எனது மகிமையை ஒருவராலும் அறிய முடியாது. நான் அனாதி, நான் அஸங்கன், நானே எல்லாவற்றையும் சக்கரம்போல் சூழ்ந்துகொண்டிருக்கிறேன் என்பதைக் காட்டுகிறார்.

சூலம்.—அவர் கையிலிருக்கும் சூலம் எதைக் காட்டுகிறதெனில், சூலமென்பது நுனியில் மூன்றாகப் பிரிந்தும் அடியில் ஒன்றாகவு மிருக்கிறது. அச்சூலத்தால் நாம் அறியக்கூடியது யாதெனில், கணபதியானவர் நான் ஒருவனே எப்பொழுதும் உள்ளவர். என்னிடத்திலேயே சத்வரஜஸ்தமோ குணமென்ற மூன்று குணத்தோடு கூடிய பிரகிருதியுண்டாயிற்றென்றும் என்னிடத்திலிருந்தே பிர்ம்மா விஷ்ணு ருத்திரர்களான திருமூர்த்திகளுண்டானார்களென்றும் நானொருவனே ஸ்தூல சூக்ஷ்மகாரண பிரபஞ்சங்களில் வியாபித்திருக்கிறேனென்றும் நானே ஸ்தூலசூக்ஷ்மகாரண சரீரங்களில் விசுவ தைஜஸ்பிராஞ்ஞனாய் விளங்குகிறேனென்றும் நானே ஜாக்கிரஸ்வப்ன ஸுஷுப்தியவஸ்தைகட்கு ஸாக்ஷியாக விளங்குகிறேனென்றும் நானே அகார, உகார, மகார தமதமான பிரணவசுவரூபமென்றும் நானே சிருஷ்டிஸ்திதி சம்ஹாரங்களைச் செய்கிறேனென்றும் காட்டுகிறாரெனத் தெரிந்து கொள்ளலாம்.

சங்கம்.—சங்கத்தை தலைகீழாக நிறுத்தினால் ஓங்காரத்தின் மாதிரியாகவே இருக்கிறது. அதை ஊதினால் ஓங்காரஸ்வரமே உண்டாகின்றது. ஆனதினால், [illegible]துவுமிதற்குப் பிரதீகமே. அதனால் என்னத்தை காட்டுகிறாரெனில் 'என்னை பிரணவசுவரூபமென அறிபவனே சம்சாரசமுத்திரத்தைத் தாண்டுவான், என்னை பிரம்மரந்திரத்தினடியில் பிராணயாமத்தால் நாதானுஸந்தானம் செய்கிற யோகியே அறியமுடியும். ஓங்காரமின்றியோர் சப்தமுமில்லை என்பதை காட்டுகிறார்.

பாசாங்குசம்.—பாசாங்குசத்தால் நாம் அறிந்துகொள்ளுவது யாதெனில், மாயையென்ற பாசத்தால் அஞ்ஞானிகளைக்கட்டி கரும பல

மென்ற அங்குசத்தால் சுகதுக்காதிகளைக்கொடுத்து மனுஷ்ய மிருகாதி ஜன்மங்களை எடுக்கச்செய்வேனெனக் காட்டுகிறார். இங்ஙனமே விக்கினேசுவரர் வல்லபகணபதி சொங்கண சக்திகணபதி முதலிய அநேக கணபதிகளின் கையிலுள்ள அநேக ஆயுதங்களில் சிலவற்றிற்கு இங்கு தாத்பரியமெழுதப்பட்டது. முக்கியமாக கணபதியின் தியானம்போக மோக்ஷப்பிரதமானதால் அநேக தியானங்களேற்பட்டிருக்கின்றன.

மூஷிகம் —அவருக்கு வாகனம் மூஷிகமாம். (மூஞ்சூறு) எங்காவது யானையை மூஞ்சூறு தாங்கி நிற்குமா? இவ்வாகனம் சம்பவமாகுமா ஆகாதே அதற்கு யாது பொருளெனில்,

(அணோரணீயாந் மஹதோ மஹீயாந்)

அணுவுக்கணுவாய் மஹத்திற்கும் மஹத்தாய் விளங்குகிறார் என்பதைக்காட்டுகிறது. சிறிய பிராணிகள் வரையில் நான் வியாபித்து ஆதாரமாயிருக்கிறேன் நான் விபு ஆகாசம்போல் ஸர்ப்பகதன் என்பதைக் காட்டுகிறார்.

மோதகம்.—அவருக்கு மோதகத்திற் பிரியம். அதற்குக் காரணம் யாதெனின், மோதகமென்பது ஆனந்தத்தைக் காட்டுகிறது. லோகத்திலே சந்தோஷ காலத்தில் தித்திப்பின பதார்த்தங்கள் உண்ணுகிறார்கள். அப்பொழுது அதை செய்தே தீரவேண்டுமென விதியுமிருக்கிறது. ஆனதால் நான் எப்பொழுதும் ஆனந்தகரமாயிருக்கிறேன். நானே ஆனந்தசுவரூபி, என்னுடைய லவலேசமான ஆனந்தத்தையே அந்நிய ஜீவர்கள் அனுபவிக்கிறார் என்பதைக் காட்டுகிறார்.

சைவன்னியம்.—அவரது ஸைன்னியங்கள் எறும்பு தேள் முதலிய சிறிய ஜந்துக்களும் பெரிய ஜந்துக்களும் இருக்கின்றன. அதனால் அறிவது யாதெனில், சர்வஜந்துக்களும் எனது ஆஞ்ஞையை சிரசிற்றாங்கிப் பிரவிர்த்தித்திருக்கிறார்கள், நானேசர்வத்திற்கும் சாஸ்தாவென்பதைத் தெரிவிக்கிறார்.

## சந்து பொந்துகளிலெல்லாம் கோவில்—

எங்கு கண்டாலும் அவரையே எல்லோரும் பார்க்கவேண்டும் என்பதை அக்கோயில்கள் காட்டுகின்றன. அன்றி, எல்லோரும் முத



லில் வணங்கவேண்டிய மூர்த்தி ... கட்டுளாதலால் பக்தாளுக் கிரஹார்த்தம் அங்காங்கு அநுக்கிரஹிக்கிறார் என்பதைக் காட்டுகிறது நிற்க;

அவரது தலையோ யானைத்தலை. உடம்பு மனுஷ்ய உடம்பு. வயிறோ பெரும்வயிறு வாகனமோ மூஞ்சூறு இவைகளனைத்தையும் யோசிக்குங்கால் இவரே எங்கும் வியாபித்த மூர்த்தியென்பதைக் காட்டுகிறது, சு எறும்பு எண்பத்திநான்கு லட்ச யோனிபேத ஜீவராசிகளுடைய ரூபமாகவும் இருப்பதாக அறிந்து கொள்ளலாம்; மற்றும் அவருடைய நாமத்தின் தாத்பரியத்தை விசாரிப்போம்.

விநாயகர்.—விநாயகரென்றால், வாதநாயகர் தனக்கு எஜமான் இல்லாதவர். அதாவது தானே எல்லாவற்றிற்கும் காரணம் என்றேற்படுகிறது.

கணபதி.—கணபதி யெனில், (கணாநாம்பதி) என்றபடி கணங்களான ஜீவரக்ஷகர்களனைவருக்கும் பதி. எல்லா ஜீவராசிகளுக்கும் பதியாய் சம்ரக்ஷிப்பவர்.


விக்நேஸ்வரர்.—விக்நேஸ்வரரெனில் (விக்நாநாம் ஈஸ்வர) சத்காரியங்களுக்கு நேருகிற விக்னங்களிலிருந்து இரக்ஷிப்பவர். அசத்காரியங்களுக்கு விக்னத்தை யுண்டாக்குபவர், அதாவது அசத்துக்களை சம்ஹரிப்பவர். அதனாலே நாம் எழுதும்பொழுது பிள்ளையார் சுழி போடுகிறோம். எக்காரியத்தைத் துடங்கினும் முதலில் விக்னேஸ்வரனைத் துதிக்கவேண்டும். துதித்தால் சர்வவிக்கினமு மொழிந்துவிடும். அங்ஙனமே சுருதியும் (ஹே பிரணவஸ்வரூபமே) உம்மை பிரம்மா தபசியற்றி வேதத்தின் ஸாரமாக கிரஹித்தனரன்றோ? அத்தகைய நீர் எனக்கு ஆத்மவிஷயமான மேதையைக்கொடும் ஹே தேவா நாசாஹிதமான ஆத்மசுவரூபத்தின் தாரணை எனக்கிருக்கட்டும், நான் ஆத்மாவை யறிவதற்கு சரீரத்தில் ரோகமில்லாமலிருக்கட்டும். எனது ஜிஹ்வையானது (நாக்கு) மதுவுக்கு சமமான ருசியோடிருக்கட்டும். அதாவது ருசியுள்ள வாக்கோடு கூடிக்கொண்டிருக்கவேண்டும். எனது காதுகள் தத்துவ விஷயங்களை ஏராளமாய் கேட்கவேண்டும். நீர் பிரம்ம சுவரூபத்திற்கு கோசபூதமாயிருக்கிறீர்; நான் உம்மைப்பார்க்க முடியவில்லை. ஆனதினால் உமது ஞானத்தை எமக்கு அருளிச்செய்யுமென தைத்திரீய உப

நிஷத்தின் சிக்ஷாவல்லியில் அவ்வுபநிஷத்து நிர்விக்னமாய் முடியும் பொருட்டும் வேதாகமத்தை உத்தேசித்தும் பிரார்த்தனுருபமாக ஓங்காரரூபமான கணபதியை பிரார்த்தித்திருக்கிறதென கணபதி வாதிகள் கூட கூறுகிறார்கள். ஆதலால் சர்வ விக்னத்தையு மொழி யொழிப்பவர். ஆனதால் விநாயக மூர்த்தியின் உபாசனை யானது ஸர்வ ஜனங்களும் செய்யவேண்டிய முக்கிய உபாசனை யாயிருக்கிறது. அதனாலேயே நம்மவர் எக்காரியம் தொடங்கினும் விநாயக பூஜையின்றிச் செய்வதில்லை. இவ்வுண்மைகளை யறியாமல் அநேகர் அம்மூர்த்தியை பரிகசிப்பார்கள். நமது பூர்வீகர்கள் எந்த விஷ யங்களைத் தொடங்கினும் விநாயகரை நமஸ்கரித்தே செய்வது வழக் கம். இப்போதும், சைவம், வைஷ்ணவம், சாக்தேசம், காணாபத்யம், ஸௌரமென்னும் ஐந்து மதஸ்தர்களும் மதபேதமாக வாதித்தாலும் எல்லோரும் விக்னேஸ்வர பூஜையை விடுவதில்லை. அவரவர்கள் தங் களது மூர்த்தியினது உபாசனை நிர்விக்னமாக முடியவேண்டுமென்று கருணாநிதியான கணபதியை நமஸ்கரித்தே துடங்குகிறார்கள். இப்பொ ழுது விஷ்ணு கோவில்களிலும் கணபதியைக் காணலாம். ஆனதால் கண பதியானவர் மதங்களனைத்தையும் நடத்த துரிய மூர்த்தியான பரப் பிரம்மமே அவரே பிரணவஸ்வரூபி என்று சித்தம். அங்ஙனமே கண பதியுபநிஷத்தும் கூறுகிறது.


ஓம்லம் நமஸ்தே கணபதயே துவமேவ பிரத்தியக்ஷம் தத்வமஸி துவமேவ கேவலம் கர்த்தாஸி என்று தொடங்கி துவம் பிரம்மதுவம் விஷ் ணுதுவம் ருத்திர என்று கூறுகிறது.

அதனது பொருள் நிரேதத்மஸி வாக்கியத்தால் பிரதி பாதிக்கப் பட்ட பிர்ம்ம சுவரூபமாய் இருக்கிறீர் நீரே பிர்மம விஷ்ணு சுவரூபமாய் இருக்கிறீரென்று வெளிவாக பிரதிபாதிக்கிறது. ஆனதினால் ஸர்வலோ கங்களையும் அந்தர்யாமியாய் பெருங்கருணைத் தடங்கடலாய் பேராகந் தாத்மாவாய் விளங்குகிற நமது கணபதியை முக்காலத்தும் தொழு தேத்துவோம்.

தருணமாதுமை முகத்தாமரைக்கெழு
மருணனே யெனவுதித்தடியார் பரி...



ஸ்ரீ சுப்பிரமணிய மூர்த்தி



ஸ்ரீ ஷண்முக மூர்த்தி



கருணைமா மதமெனகாட்டு மாமுகன்
சரண வாரிசமலர் தலையிற்கொள்ளுவாம்.

## ஸ்ரீ சுப்பிரமண்யர்

**பரமசிவன்** பார்வதியைத் திருமணம்புரிந்த பின்னரிருவருங் களித்துக் கைலயங்கிரிக்கு ஏகாந்தமாகச் சென்றார்கள். கைலாயத்தில் உமாதேவியாருடன் வீற்றிருக்கையில், சூரபத்மன் இம்சையினாற் றேவர்களனைவர்களாய்த் தங்களுக்குத் துன்பமிழைத்திடுஞ் சூரனைக் கொன்று இரக்ஷித்தருள வேண்டுமென்று நீலகண்டனை அடைக்கலம் புகுந்தார்கள். பரமசிவனுந் தேவர்கள்பாலருள் சுரந்து, நீவிர் சிந்தனை நீத்தார்ந்து சிதையாதீர்களெனத் தேற்றி' அவ்விதஞ் சூரபத்மனாலேற்பட்ட துன்பங்களை நிவர்த்திசெய்வோமென்று வாக்களித்து, அவர்களிருப்பிடமேக உத்தரவளித்தனர். அவர்கள் சென்றபின், பரமசிவனந்தப்புரஞ்சென்று, தேவ வருடத்தாலாயிர வருடந் தேவியுடன் சுகித்திருக்கையில் தேவர்களெல்லோருஞ் சிந்தாக்கிராந்தர்களாய் வடிவேலவரின்னும் பிறக்கவில்லை, பரமசிவனும் வெளிவரவில்லையே என்ற ஏக்கத்துடன், இவ்வித அதிசயத்திற்குக் காரணம் யாதென்று விசாரிப்ப அக்கினி பகவானை நியமித்து கைலயங்கிரிக்கு விடுத்தார்கள். அன்னவருமவ்விதமே ஆங்குச் சென்று, சற்றும் பயப்படாமல், பரமசிவனும் உமாதேவியாருஞ் சுகித்திருக்குந் தருவாயில் எதிரிற்போய் நின்றார். அக்கினிபகவானைக் கண்டவுடன் உமாதேவியாரும் வெட்கத்துடன் பீதாம்பரந்தரித்து அப்புறஞ் சென்று ஒளித்திருந்தார். தேவியார் மறைந்தபின், சாம்பமூர்த்திக்கு வீரியம் வெளிப்பட அவர் அதை அக்கினிதேவன் கரத்திலே தந்தார். அவருமதை நெடுங்காலம் தவம்புரிந்த வருணவப்ப பூர்ணகங்கையில் விடுத்தார். கங்கையும் அதைச் சரவணையிலொதுக்கிக் காப்பாற்றுவாளாயினள். நாணற்புதரான பொய்கையினடுவில் தள்ளிவிட்டபடியால், அது ஆறு குழிகளிற்றங்கி அக்கணத்தில் சரீராதி ஜீவனடைந்து அதிவீர கம்பீர தேஜஸுடன் ஆறுருவங்களாக விளங்கிற்று.'' இவ்வாறு குழந்தைகளும் பாலுண்ணற்கு வீறிட்டழுகின்ற தொனியைத் தேவர்கள்

கேட்டு, அவர்கள் நினைத்த மாத்திரத்தில் கிருத்திகாதேவிகள் ஓடி வந்து ஆறு குழந்தைகளையும் வாரியெடுத்து மார்போடணைத்து, பால் கொடுத்து வளர்த்து வந்தார்கள். தேவர்களும் கற்பகமலர்களை வருஷித்து பரமசிவன் புத்திரனைக் கண்டு மனங்களித்துத் தங்களுக்கேற்பட்ட மனக்கவலையை ஒழித்தார்கள். ஈதிங்ஙனமிருப்ப, அக்கினி பகவானிருப்பிடஞ் சென்றதும், உமாதேவியார் மனக்குறைவுடன் பெருமூச்சுவிட்டு கோடிகாலந் தவமிருந்து கைலாசநாதனைக் கூடியுந் தனக்குப் புத்திரனுண்டாகவில்லையே யென்று விசனித்துத் தேவர்வரவால் தன்னுடைய லீலை கெட்டுப்போனதை உத்தேசித்துத் தேவர்களுக்குப் புத்திரனில்லாமற் போகக்கடவதென்று அதிக கோபத்துடன் சபித்தாள். பிறகு தன் பர்த்தாவை திக்கரித்து, அவர் சமாதானஞ் சொல்லியுங் கேளாமல் அதிக கோபத்துடன் அந்தப்புரத்துட் செல்வாளாயினள். அவ்விதம் கோபத்தோடு பாதத்தைத் தூக்கிச் செல்லுகையில் இரத்தினச் சிலம்பிலிருந்து நவரத்தினங்கள் பளிச் சென்று பின்னுதிர்ந்து விழுந்தன. அவ்வொன்பது மணிகளிலிருந்து ஒன்பது ஸ்திரீகளும் உமையவளைப்போல சர்வாபரண பூஷிதர்களாய்ப் பரமசிவன் பக்கலில் வந்து வரிசையாக நின்றார்கள். சாம்பமூர்த்தியும் அவர்களைப் பார்த்து நமது வேலவமூர்த்திக்குச் சேனாபதிகளுண்டாகக் கடவதென்று பூரணதிருஷ்டியினால் நினைத்தமாத்திரத்தில், அத்தனைபேருங் கர்ப்பந்தரித்துப் பிரகாசத்துடனின்றார்கள். குதித்தோடிய உமாதேவியா ரவ்வதிசயங்கண்டு மீண்டும் பரமசிவனிடம் வந்து முதலில் அவ்வொன்பது பெண்களையும் பார்த்துத் தன் பர்த்தாவிடங் கூடிக் கர்ப்பம் சம்பாதித்த அவமானத்தை அவர்களுக்குப் பூட்டி, அவர்கள் வயிற்றுடன் அவர்கள் கர்ப்பமிருக்கக் கடவதென்று சாபந் தந்தருளினள். அக்கணமே இவ்வொன்பதின்மரும் திகிலடைய அதினால் தோன்றிய வியர்வையினின்று இலக்கம் வீரர்களுதித்தனர். அவர்களும் அங்ஙனேயானார்கள். பிறகு உமாதேவியார் பரமசிவனைக் கோபத்தாற்றகைந்து மறுபடியும் ஓடிப்போய்விட்டார். உமாதேவியாரின் சாபத்தால் பிள்ளை பிறவாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்த பெண்களைப் பரமசிவன் பார்த்துப் பரிதபித்து, அவர்களை



உமாதேவியாரிடமே சென்று அவளை அடைக்கலம்புக்கு சாபவிமோசனம் தந்தருளக் கேட்டுக்கொள்ளுமாறேவினர். அவர்களுடைய வேண்டுகோளுக்கிரங்கி, உமாதேவியாரும் பிள்ளைகள் பிறக்கக்கடவதென்று உத்திரவளித்தார். அந்நிறைக் கணத்தில் அவ்வொன்பது ஸ்திரீகளிடத்தும் நவவீரர்கள், உற்பவித்தார்கள். அவைகளைப் பார்த்தவுடனே உமாதேவியாருக்கு அதிக துயரமுண்டாகி, தனக்கு ஒரு குழந்தைகூட உண்டாகவில்லையே யென்று பரமசிவனுரை வெகுண்டு தான் இனி அவர் முகத்திற் றிருவிழி சாய்ப்பதில்லை யென்று சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தனள். பரமசிவன் அவ்வருத்தத்தைப் பார்க்கச் சகியாதவராய், அம்பிகையைக் கைகுவித்து மார்புடன் சேர்த்தணைத்து சிம்மாசனத்தில் வைத்துக்கொண்டு நடந்த விருத்தாந்தங்களைச் சவிஸ்தாரமாகச் சொல்வாராயினர். நீ அந்தப்புரத்தை நோக்கி கோபித்தோடுகையில் உன்னுடைய காலிலணியப்பட்ட சிலம்பிலிருந்து ஒன்பது மணிகள் சிதறிவிழுந்தன. அம்மணிகளொவ்வொன்றிலும் உன்னுடைய சாயையே விழ ஒன்பது ஸ்திரீகள் தோன்றினார்கள். உன்னுடைய பிள்ளை வடிவேலனுக்குபகாரமாக, ஒன்பது வீரர்களுண்டுபண்ண நான் அவர்களைக் கண்ணால் பார்த்தேனே தவிர வேறல்லவென்று சொல்லி, குமாரனைப் பார்க்கப் போவோம் வாவென்று மஞ்சத்தைவிட்டிறங்கினார். பார்வதி தேவியாரும் மனமகிழ்ந்து குழந்தையை நினைத்தமாத்திரத்தில் தன்னுடைய ஸ்தனங்களில் பால் பீறிட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, மலடிக்குப் பால் பெருகுமோவென்று சிந்தித்து, பரமசிவனாரைப் பார்த்து உள்ளதை விண்மினென்றாள். அப்பொழுது, பரமசிவன் அருளிச்செய்தார். தேவர்கள் சூரபத்மனின் இம்சை பொறுக்கமாட்டாமல் என்னைப் பணிய, அவ்வசுரனைச் சம்ஹரிக்க வடிவேலனை உன்னிடமுண்டாக்க ஆயிரங் காலம் நாம் தனித்திருந்த காலத்தில் வந்து விட்டார் அக்கினி பகவான். அவர் வந்ததும் நீ விலகிவிட்டாய். எனது வீரியம் வெளிவந்தது. அதைப் பகவான் கையிற் கொடுத்தேன். அவர் அதைக் கெங்கையில் விடுத்தார். அவளுமதைச் சரவணப்பொய்கையிலொதுக்கினள். நாணற்பயிரான திட்டினில் ஆறு குழந்தைகள் பிறந்து

உனக்காக வளர்ந்து வருகின்றனன். போய்ப்பார்ப்போம் வாவென்று உமாதேவியாரும் பரமசிவனும் இடபத்திலேறி, அவ்விடஞ் சென்றார்கள். உமாதேவியார் குமாரனைக் கண்டவுடன் பேரானந்தமடைந்து, ஆறுமுகம், பன்னிருகை, ஒரு தேகத்தாலாகிய அற்புதக் குழந்தையை வாரியெடுத்து மார்போடணைத்துப் பெருகு பக்கத்தணைத்து, சுந்தரமாகிய தனது தனத்திற் பெருகுகின்ற பாலையருளிப் பரமனைப் பணிவிக்க நம்மை இரட்சிக்கின்ற கந்தசுவாமியை யன்பாலெடுத்து பரமன் மார்பிலணைத்து, பார்வதிதேவியாரோடு விடையின்மீதிருத்திக் கார்த்திகைப் பெண்களுக் கருளைச்செய்து சுந்தரி மைந்தனாகிய குமாரக்கடவுளருந்திய முலைப்பாலிற் சிந்திய சிறு துளியை யத்தடாகத்தின் மீனுருவடைந்திருந்த பராசரகுமாரரறுவரு மருந்தி முன்னுருவெய்தி யம்மையப்பனுடனிருந்த சுப்பிரமணியனைத் துதித்து வணங்க, அக்கடவுளவர்களைத் திருப்பரங்குன்றிற் கேகுவீரென் றுவிடைகொடுத்தருளி, மற்றைய தேவர்களைத் தங்கடங்கள் பதவிகட்கேக விடுத்து அம்மூவரும் வெள்ளியங்கிரி யடைந்தார்கள். பிறகு, இலக்கவீரர்களோடு நவவீரர்கள் வந்து கந்தப்பெருமானை வணங்கவே, சுந்தரி குமாரனாகிய கந்தசுவாமியும் பரிசுத்தமாகிய திருவிளையாட்டை விளையாட ஆரம்பித்தார். எவ்விதமெனில், பூமியில் எங்கனும் உலாவும் ஆகாயத்திலும், அயன்பதமாகிய சத்தியலோகத்திலும், சிவமகாலோகத்திலும், பஞ்ச பூதங்களிலும் அண்டரண்டங்களிலும் வீணையையிசைத்து, இனிதாகிய ஆடல்பாடல்களைச் செய்துகொண்டு உலாவித்திரியும், மற்றொரு பக்கத்தில் வேறுருபத்தோடு சத்தசாகரங்களை ஒன்றுகச் சேர்க்கும், சக்கரவாளகிரியை பூமியின்கீழ் பாதாளத்திற் செல்லும்படியாய்த் தன்னொரு பாதத்தினால் மிதித்தழுத்தும், அட்டகுலாசலங்களை யட்டமாநாகங்களைப் பூட்டியிழுக்கும், ஆகாயத்தில் வசிக்கின்ற சூரிய சந்திரர்களை யொருவர் பதத்தில் மற்றொருவரை மாற்றிப்போடும், திக்குப்பாலகர்களின் பதங்களை வேரோடு பிடுங்கிப் பேதித்துப்போடும், ஆகாயத்தில் சஞ்சரிக்கிற கொண்டல்களிற் றோற்றுகிற இந்திர தனுவை வளைத்து, உயர்ந்த வடுக்களை யுண்டையாகப் பூட்டித் தேவர்களின் உரங்கள் சிரங்களினூடே செல்லும்படி தெறிக்கும்,



இவ்வாறாக வநேக திருவுருவங்களைக் கொண்டும் பலவிதமான திருவிளையாடல்களைச் செய்யுங்காலத்துத் தேவர்களும் கண்டு மருண்டு, இவ்விபரீதங்களைச் செய்தவ ரின்னாரென் றறியாதவர்களாய்த் தேவேந்திரன் முதலிய தேவர்களும் பிரமனிடம் தெரிவிக்க, மேருவினி...ம் எழுகின்ற காலையில், அம்மேருகிரியை ஒருமுகத்தோடே ...ன்றலைத்து, அங்கேயே யுலாவுகின்றதை அத்தேவர்கள் கண்ணுற்று, ...வாறு நமக்கிடர் விளைத்தவ னிவனென்றுயுகத்து மனங்கறுத்து இ...னோடு போர்புரியக் குறித்துத் தங்கடங்கள் கரங்களிலேந்திய அஸ்திர சஸ்திரங்களினால் சமர்விளைத்தபோது, இந்திரன் முதலிய தேவர்கள் செலுத்திய பாணங் கோடிகளியாவும், செவ்வேளின்மே... நெருக்கித் தமது திருவடிகளி லடியார்க ளர்ச்சிக்கின்ற மலர்களைப்போல் யாதொரு செயலற்றுப் பலபலவென் றுதிர்வதைக்கண்டு தேவர்கள் பயங்க, அக்காலத்தில் தண்மதிசூடியக் கன்னனுதல் பிள்ளையானவர், தன் மனதினினைத்தயாத்திரம் ஒருவில்லையுங் கணைகளையு முண்டாக்கிக்கொண்டு ஓரே கணையினாற் சுவேதவாரணத்தின் மத்தகத்தைப் பிளந்து இந்திரனை யெழுகணையினால் வசமுண்டாக்கியும், காலாம்பால் வருணனைத் தாக்கியும், ஐந்தாம்பா லியமனை வென்று மிருகோலா லக்கினிதேவனை வீட்டியும், மற்றையர்களரிய வோட்டியும் முன்னே நின்ற செருக்களத்திடை மிகு சிறப்புடன் வந்து நிற்க, இவற்றைக் கண்ணுற்ற நாரதமுனிவரானவரோடோடி வந்து குருபகவானிடந் தெரிவிக்க அது கேட்ட பிரகஸ்பதியானவர், திருமான் மருகன் சீரடி வணங்கி, யொருமால்கொண்ட வுயர்வானவரைத் தடிந்துயிர்கோளல் தகுதியதாமோ, மடிந்தவர் தம்மை வளம்பெற வெழுப்பித் தடமலர் நீபத்தொடை புனைந்தோயே, தருதல் வேண்டும் தயாபர மூர்த்தி, யெனக் குருபகவானைத் துதிபுகல அன்னதே செய்வமென் றண்டரை யெழுப்பினர்.

மன்னரியலண்டரும் வாடி மிக நடுங்கி, யஞ்சலி செய்தன்புடன் துதிக்க வஞ்சலீரென்ற பயமளித்துக் குஞ்சரமாமுதற் கிளையவன் கூறுவான், என்றனைச் சிறுவனென்றிகல்புரிந் திரினி வன்றிறல் காட்டுவேன் வகையுடனறிவீர், பல்லாயிரகோடி யண்டாண்டமுந் தொல்லுருவுகளிற் றோன்றிடுமாறு விச்சுவரூபமெடுத்துக் காட்டினரர்ச்சனை

புரிந்தமாருந் துதித்தனர். இவ்வாறிந்திரனுந் தேவர்குழாத்தொடுங் குகப்பெருமானை வேண்டித் தமது திருவிளையாடலினால் வேறுபட்டிருக்கின்ற வுலகங்களைச் சீர்பெறச் செய்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, அவ்வாறே நிலைபெறச்செய்து மற்றவர் வேண்டுகோளுக்கிரங்கி கந்தவெற்படைந்து தேவசேனாபதியெனப் பட்டந்தரித்து இலக்கநவ வீரர்களுடன் கூடி யாங்குறைந்திருந்தகால், நாரதர் செய்த யாகத்தினின்றுதித்த [illegible] மறியாட்டின் கொடுமையைத் தகர்த்து வீரவாகுதேவராற் பிடித்தீர்த்து வரச்செய்து அதன் வீறை யடக்கி, வாகனமாயூர்ந்தருளி நாரதற்கு யாகம் பூர்த்திசெய்யும்படி அனுக்கிரகித்துத் தானுமியல்பாகிய திருவிளையாடல்களைச் செய்துகொண்டு வசித்திருந்தனர்.

ஒரு காலத்தில் கைலையங்கிரிக்கு சிவபெருமானின் றரிசனத்தின் பொருட்டு வந்த பிரமன் நம் குமாரக்கடவுளைக் குழந்தையென வெண்ணி யவரை வணங்காது கர்வத்தோடு சென்ற பிரமனைப் பிரணவத்திற்குப் பொருள்வினவ, அவன் பொருளுரைக்க தெரியாது மயங்கினவனை சென்னியிற்புடைத்துச் சிறையில் வைத்துச் சில காலம் பிரமசிருட்டியைத் தாமே நடாத்தாநிற்கையில் பிரம்ம சிருட்டிக்கு மாறாய் இச்சிருட்டி யேற்பட்டிருப்பதையும், பிரமற்குண்டாய வடுக்கண்களையும் விண்டு முதலிய தேவர்கள் சிவபெருமானிட முறையிட சிவபெருமான், தம்மிடமுள்ள நந்திதேவரை விளித்து நீ குமாரக்கடவுளிடஞ் சென்று, பிரமனை விடுப்பாயென்ற ஆக்ஞை சிரமேற்கொண்டு ஏகிச்செல்ல, கந்தபெருமானின் கடுஞ்சினத்துக் காற்றாராய், நந்தியெம்பெருமானும், சிவபெருமானிடஞ் செல்ல, அக்குறிப்பறிந்த சிவபெருமான் தாமே குமரக்கடவுளிடஞ் சென்று வினவ, அதற்குச் செவியறிவுறுத்தி அகத்தியமுனிவர்க்கு உபதேசித்தருளினார். அம்முனிவரும் தம்மாணாக்கர்களில் சிறந்த முக்தியவாமிக்குடையோர்க்குச் செவியறிவுறுத்தினார். அவர்களும் அவ்வாறே சோபானமார்க்கமாய் ஜீவன் முக்தியை நாடும் ஒவ்வொரு பக்குவிகட்கும் பக்குவமறிந்தே யுபதேசித் துலகமெங்கும் மந்திரத்தைப் பிரகாசப்படுத்தினார்கள். ஒருகால் கெர்வித்திருந்த விந்தமாகிரியின் கர்வபங்கஞ்செய்து தூர்வாச



முனிவரின் புத்திரர்களாகிய வாதாவி வில்லுவலனின் வஞ்சனை விருந்துண்டவ்விருவர்களின் வஞ்சகத்தோடு அவர்களை நாசஞ்செய்து சிவபெருமானின் திருக்கலியாணகாலத்தில் வடகோடு தாழ, அக்காலருண்டு மயங்கிய தேவர்குழாம் முனிவர்குழா முதலியவர்களி னடுக்கந்தீர்ப்பான் [illegible] ளுடங்கி சிவபெருமானுக்ஞையால் தென்கோட்டின் பூபாரத்திற்கேகி பூபாரஞ் சமப்படுத்தினவரும் ஸ்ரீபூஜா துரந்தரரும் சுப்பிரமணியப் பெருமானையே ஞானகுருவாயடைந்தவருமாகிய அகத்திய மகாமுனிவற்கும் சக்தியுபாஸனையே முக்கிய யுபாஸனையாய்க்கொண்ட ஹயக்ரீவற்கும் உண்டான சம்வாதத்தில் லட்சத்து அறுபத்து நாலாயிரம் கிரந்தத்தால் குமார தந்திரமெனப் பெயரிந்து முழுமுதற்கடவுள் சுப்பிரமணியக் கடவுளேயென நிச்சயித்து சக்தியுபாஸகராகிய ஹயக்ரீவரையும் குமார தந்திர பாராயண மனனஞ்செய்ய யருள்புரிந்து தனக்கு அவரை சிஷ்யராக்கிக்கொண்டருளினர். மேலும், முந்தியே தன்னனுபவ ஞானப்பிரகாசப்பிழம்பாய் விளங்கும் சிவபெருமான், "யாழினிது குழலினிது என்பர் மழலைச்சொற்கேளாதவர்" என்ற செய்யுளுக்கிலக்காக ஜீவர்களுக்கு வத்ஸவாத்ஸல்ய முண்டாம் பொருட்டு லீலையாகக் குமாரக்கடவுளருளிய பிரணவார்த்தத்தை, தன்னையடுத்துச் சிரவணமனன நிதித்தியாசனமுதலிய பயிற்சியில் பழகித் தேர்ந்தவர்களாகிய ஸனகர் ஸநந்தனர் ஸநத்குமாரர் ஸநத்சுஜாதர் முதலியவர்கட்கும் கௌசிக முனிவரீருயுள்ள முனிகணங்கட்கும் தேவகணங்கட்கும் லட்சத்து அறுபத்து நாலாயிரங் கிரந்தங்களடங்கிய குமாரதந்திரப் பிரணவார்த்த தீபிகையென வோர் பிரபந்தமுண்டாக்கி ஜீவகோடிகள் உய்யும்பொருட்டு உதவி யருள்புரிந்திருக்கினார். அவ்வழியே பிபீலிகா நியாயமாயனுபவித்த என்னாசிரியர்களும், ஆரியஞான சூரியர்களுமாகியவர்களும் ஸ்ரீ சுவாமிநாதப்பெருமான், முருகர் ஞானஸ்கந்தர், ஸ்ரீ நாகேசர், சொற்பிரணவப் பொருளைப் பரமனுக்கருள்செய் சுப்பிரமணியப்பெருமான் குகப்பெருமானென்ற பெயருக்கிலக்காக அடக்கி யொளித்து தன்னகத்தே வைத்திருந்த இரகசியப் பொருளாம்.

இச்சுப்பிரமணியக் கடவுளே சூரபத்மனோடு போர்பொருதாங்

கவனைச் சங்கரித்துத் தேவர்களுடைய துயரத்தை நிவர்த்திசெய்தன ரென்று ஸ்காந்த புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யும் ஸ்கந்தன், சுப்பிரமணியன், முத்துக் குமரன், கார்த்திகேயன், ஷண்முகன், வேலவனெனப் பெயர் வாய்ந்த கடவுளைக் குருவாகக்கொண்டு, உள்ளன்புடனும் பக்தியோடு மிதிற் கூறிய மந்திரங்களை அனுஷ்டித்தால் அவைகள் கைகூடிவருமென்பதிற் சிறிதேனுஞ் சந்தேகமில்லை.

## பரமசிவன்

### லிங்கரூபம்

சிவத்தியானமே சிறந்த தியானம் என்று பெரியோர் கூறுகின்றனர். சிவ சிவ, சிவா சிவ, சங்கர சிவ, சந்திரசேகர சிவ, ஹரஹரவென்று ஸ்தோத்திரஞ்செய்யும் சிவநேயச் செல்வர்களின் பாக்கியமே பாக்கியம். மார்க்கண்டேயர் உபாக்கியானத்தைப் படித்தவர்கள் சிவலிங்கத்தின் மஹிமையை அறிவார்கள். ஸகல பிராணிகளின் உயிரையும் கொண்டுபோகும் எமதர்மராஜனை ஜயித்து, சிரஞ்சீவியானது சிவலிங்கத்தினாலன்றோ! ஆகையால் நாமனைவரும் பரப்பிரம்ம ஸ்வரூபமாகிய சிவலிங்கத்தை தியானிக்கவேண்டுவது அவசியம்.

புலன்களின்றி மனோவாக்குகளுக்கு எட்டாததாயும், அளவில்லா பேரொளியாயும், தனக்குமேல் நாயகமில்லாததாயும், அருவமாயும், நிர்மலமாயும், குணாதீதமாயும், அந்தக்குணமணியாய் வண்ணமற்றதாயும், நாசரஹிதமாயும், ஸர்வஜகத்துக்கும் ஏதுவாயுள்ளதும், அவ்யக்தமெனப் பழமறை பகர்வதாகியுள்ளது சுத்தசிவம். இவ்விலக்கணங்களுடைய பரமசிவன் ஆன்மாக்களின் தியானபாவனை நிமித்தம், நிஷ்கள சகள திருவுருக்கொண்ட நிலையே லிங்கமெனப்படும். இவ்விலிங்கத்தின் பிண்டிகையானது சக்தி ரூபமாயும், லிங்கம் சிவரூபமாயும் முள்ளது. எனவே கிரியாஞான சக்தி ஸ்வரூபம் லிங்கமெனப்படும். பரமசிவன் புறத்தே சிவலிங்க முதலிய திருமேனிகளும், குருவுஞ் சங்கமமும் ஆதாரமுமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும்,



வழிப்பாட்டைக் கொண்டருளுவர். ஆதலால் ஆன்மாக்கள் அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம். சிவத்துக்கு பெயராகிய லிங்கமென்னும் பதம், அச்சிவம் விளங்கப்பெறும் ஆதாரமாகிய சைவம் முதலியவற்றிற்கு வழங்கும். அவர் எங்கும் வியாபகர் என்றதற்கு அறிகுறியாகவே மிருகண்டு புத்திரர் மார்க்கண்டேயரை காக்கவெண்ணியே பரமசிவன் இவ்விலிங்கத்தினின்றே உற்பவித்து இயமனை உதைத்து மார்க்கண்டேயரைக் காப்பாற்றி என்றும் சிரஞ்சீவித்துவம் தந்தருளினர். சிவலிங்கம், பரார்த்தலிங்கம், இஷ்டலிங்கமென இருவகைப்படும். சிவபெருமான் சங்காரகாலம் வரை புஞ் சாந்நித்தியமாயிருந்து ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்கப்பெறும் லிங்கமாம். இது தாவர லிங்கமெனவுஞ் சொல்லுவது.

ஸ்வயம்பு லிங்கம், காணலிங்கம், தைவீகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் என ஐந்துவகைப்படும். இவைகளினுள்ளே ஸ்வயம்பு லிங்கமானது தானே தோன்றியது. காணலிங்கமானது, விநாயகர் ஸுப்பிரமண்யர் முதலிய கணர்களாலே ஸ்தாபிக்கப்பட்டது. தைவீக லிங்கமானது விஷ்ணு முதலிய தேவர்களாலே ஸ்தாபிக்கப்பட்டது. ஆரிட லிங்கமானது ரிஷிகளாலும் அஸுரர், இராக்ஷதர், முதலானவர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டது. மானுட லிங்கம் மனிதரால் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் மானுட லிங்கத்தின் உயர்ந்தது ஆரிடலிங்கமும், அதின் உயர்ந்தது ஸதீக லிங்கமும், அதனில் உயர்ந்தது காண லிங்கமும், அதனில் உயர்ந்தது சுயம்பு லிங்கமுமாம்.

பரமசிவன் தன் பராக்கிரமத்தில், லிங்கமூர்த்தியாகவும், லிங்கோற்பவ மூர்த்தியாகவும், முகலிங்க மூர்த்தியாகவும், சதாசிவ மூர்த்தியாகவும், மஹா சதாசிவ மூர்த்தியாகவும், உமாமஹேச்வர மூர்த்தியாகவும், சதர்சன மூர்த்தியாகவும், உமேச மூர்த்தியாகவும், ஸோமாஸ்கந்த மூர்த்தியாகவும், சந்திரசேகர மூர்த்தியாகவும், ரிஷபாரூட மூர்த்தியாகவும், ரிஷபாந்திக மூர்த்தியாகவும், புஜங்கலலித மூர்த்தியாகவும், புஜங்கத் ராஜ மூர்த்தியாகவும், சந்தியா நிருத்த மூர்த்தியாகவும், சதா நிருத்த மூர்த்தியாகவும், சண்டத் தாண்டவ மூர்த்தியாகவும், கங்காதர மூர்த்தியாகவும், சங்கா விஸர்ச்சன மூர்த்தியாகவும், திரிபுராந்தக

மூர்த்தியாகவும், கல்யாணசுந்தர மூர்த்தியாகவும், அர்த்தநாரீசுவர மூர்த்தியாகவும், கஜயுத்த மூர்த்தியாகவும், ஜ்வராபக்ந மூர்த்தியாகவும், சார்த்தூலஹர மூர்த்தியாகவும், பாசுபத மூர்த்தியாகவும், கங்காள மூர்த்தியாகவும், கேசவார்த்த மூர்த்தியாகவும், பிக்ஷாடந மூர்த்தியாகவும், ஸிம்ஹக்ந மூர்த்தியாகவும், சண்டேசாநுக்ரஹ மூர்த்தியாகவும், தக்ஷிணா மூர்த்தியாகவும், யோகதக்ஷிணா மூர்த்தியாகவும், வீணாதக்ஷிணா மூர்த்தியாகவும், காலாந்தக மூர்த்தியாகவும், காமதகன மூர்த்தியாகவும், லகுளேசுவர மூர்த்தியாகவும், பைரவ மூர்த்தியாகவும், ஆபத்தோத்தாரண மூர்த்தியாகவும், வடுக மூர்த்தியாகவும், க்ஷேத்திரபாலக மூர்த்தியாகவும், வீரபத்திர மூர்த்தியாகவும், அகோராஸ்திர மூர்த்தியாகவும், தக்ஷயஜ்ஞஹர மூர்த்தியாகவும், கிராத மூர்த்தியாகவும், குரு மூர்த்தியாகவும், அசுவாரூட மூர்த்தியாகவும், கஜாந்திக மூர்த்தியாகவும், ஜலந்தரவத மூர்த்தியாகவும், ஏகபாதத்ரி மூர்த்தியாகவும், த்ரிபாதத்ரி மூர்த்தியாகவும், ஏகபாத மூர்த்தியாகவும், கௌரிவரப்ரத மூர்த்தியாகவும், சக்ரதானஸ்வரூப மூர்த்தியாகவும், கௌரீலீலாசமன்வித மூர்த்தியாகவும், விஷாபஹரண மூர்த்தியாகவும், கருடாந்திக மூர்த்தியாகவும், ப்ரஹ்ம சிரச்சேத மூர்த்தியாகவும், கூர்ம ஸம்ஹார மூர்த்தியாகவும், மச்ச ஸம்ஹார மூர்த்தியாகவும், வராஹ ஸம்ஹார மூர்த்தியாகவும், ப்ரார்த்தனா மூர்த்தியாகவும், ரக்தபிக்ஷா ப்ரதான மூர்த்தியாகவும், சிஷ்ய பாவ மூர்த்தியாகவும், விளங்கியிருப்பதும், சிவனது திருவிளையாடல்களால் தெரியவருகிறது.

## நடராஜமூர்த்தி

நடராஜன் என்றால் நடனசபைக்கு அதிபதி யென்று அருத்தம். இவ்வுலகமே நடனமாடும் ஸ்தலம். நாடகத்தில் பற்பல வேஷங்கள் வருகின்றன. அதுபோல் இவ்வுலகத்தில் பற்பல ஜீவராசிகள் தோன்றி மறைந்துபோகின்றன. இப்படி இளைஞர், விருத்தர், ஆண், பெண், மனுஷன், மிருகம், புல், பூண்டு முதலிய பொம்மைகள் உலகமாகிய நாடகஸ்தலத்தில் தோன்றி ஆடுவதெல்லாம் ஆத்மா அல்லது கடவுளின் சக்தியாலேயன்றி வேறல்ல. பொம்மையை யாட்டினால் அது



ஆடாமலிருக்குமா? வீணையை மீட்டினால் அது பாடாமலிருக்குமா? அதுபோல் நம்மை யாட்டிவைக்கும் பரமாத்மாவுக்கே நடராஜன் என்று பெயர். அந்தராத்மா வொன்றில்லையானால் இவ்வுலகமெல்லாம் ஜடமாயன்றோ இருக்கும். மனுஷனுடைய மனதுக்கு ஆத்மாவே உண்மையான உபாத்தியாயர். ஆதலின் நடராஜனே நம்முடைய குரு. உலகத்தில் இரண்டுவிதமான ஆசாரியர்களுண்டு. பெயருக்கு ஆசாரியர் ஒருவர். முன்னூற் கூறப்பட்டவர் சிஷ்யனுக்கு எல்லாவற்றையும் கற்பித்து அவனைத் தன் வழியில் நடத்துகிறார். இப்படிச் செய்பவரைத்தான் நாம் குரு வென்கிறோம். ஆனால் உண்மையாகவே நாம் ஏற்றுக்கொண்ட விஷயங்களெல்லாம் நமக்குள்ளிருந்தே வந்தன. செடிகள் பூமியிலிருந்து தாமே உண்டாகின்றன. நாம் கொட்டும் தண்ணீரும், போடும் எருக்களும் அவை வளருவதற்கு அனுகூலமேயன்றி வேறல்ல. இம்மாதிரியே நமக்குள்ளிருக்கும் மனம் தானே விர்த்தியாகவேண்டும். அப்படியானால் நடராஜனே ரூபத்தோடு கூடிய உண்மையான குரு. குருவின் முக்கியமான கடமை யென்ன? பிறருக்குப் போதிப்பதைப்போல் தான் நடப்பது. அதாவது தான் நடந்து காட்டுவதால் பிறருக்குத் தான் போதிப்பதை விளக்குவது. நடராஜ மூர்த்தியின் வலதுகை யொன்றில் உடுக்கு என்ற ஓர் வாத்திய மிருக்கிறதே அதென்ன? அது இவ்வுலகத்துக்கு காரணத்தை குரு கொண்டிருக்கிறாரென்பதைக் குறிப்பிடுவதற்கு. சப்தத்தினாலே இவ்வுலகம் நிலைபெற்றது என்று சாஸ்திரம். சப்தத்தை யுண்டாக்கும் உடுக்கை நடராஜன் கையில் வைத்திருப்பதால், அவர் தம்முடைய இஷ்டப்படி உலகத்தை எப்படி வேண்டுமானாலும் ஆட்டலாமென் றேற்படுகிறது. ஞானிகளுக்கு வேண்டுமானால் இவ்வுலகமிருக்கும். வேண்டாவிட்டால் உலகமில்லை. நடராஜ மூர்த்தியின் ஓர் பக்கத்திலுள்ள மான் மனதைக் குறிக்கிறது. ஏனெனில் மானைப்போல் மனம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தாவுகிறதால், மானைப்போல் தாவும் மனதையுடைய மனிதர்களுக்கு ஆத்மாவின் தரிசனம் அகப்படுவதருமை. நடராஜன் தாம் கொன்ற புலியின் தோலை தரித்துக்கொண்டிருக்கிறார். அகங்காரம் தான் அப்புலி. அகங்காரமென்னும் புலி யாரைக்கண்டாலும் எதிர்க்கிறது. அதைக் கொல்லுவதற்கு

நடராஜ மூர்த்தியே தகுந்தவர். நடராஜன் தம் தலையில் கங்கையைத் தரித்துக்கொண்டிருக்கிறார். கங்கைதான் சித்சக்தி. அதுதான் ஞானம். வெகு குளிர்ச்சி பொருந்தியது. அவர் சிரசிலிருக்கும் சந்திரன் சீதளமாயும் பிரகாசமாயு மிருப்பதால் ஆத்மாவின் பிரகாசத்தைக் காட்டுகிறது. ஸ்ரீ நடராஜமூர்த்தி ஓர் காலின் அடியில் முயலகனைப் போட்டு மிதிக்கிறார். அந்த முயலகன்தான் மஹா மாயை. இந்த மாயையே பிறப்புக்கும் இறப்புக்கும் காரணம். மற்றொரு பாதத்தை மேலே தூக்கிக்கொண்டிருப்பது துரியத்தின் நிலைமையை யுணர்த்துகிறது. இது ஜாக்கிர ஸ்வப்ன ஸுஷுப்தியாகிய மூன்று அவஸ்தைகளையும் கடந்து அப்பாலுள்ள ஸ்திதி. இதற்குப் பின்னால் மனஸு, மாயை, உலகம் இவைகள் கிடக்கின்றன. மற்றொரு வலதுகை ஸமாதானத்தைக் காட்டுகிறது. அதாவது ஞானி அனுபவிக்கும் மௌனமாகிய ஆனந்தத்தைக் குறிக்கிறது. நடராஜனது இடதுகையொன்றில் இருக்கும் மழு அதாவது நெருப்பு அவர் ஆத்மாவின் ஸ்வரூபமாகிய ஜோதியை சிஷ்யர்களுக்கு நேரில் காட்டி யுபதேசிப்பதை யுணர்த்துகிறது. இவ்வாறு நடராஜன் நடனமாடும் ஸ்தலம் தில்லைவனம். மனுஷ்ய சரீரத்தையும் இப்பேருலகத்தையும் வனத்துக்கு உவமை யிடுவதுண்டு. வனத்தில் பற்பல மரங்களும் செடிகளும் விலங்குகளு மிருப்பது போல் மனுஷனுடைய சரீரத்திலும் அநேக வஸ்துக்களிருக்கின்றன. நாடகஸ்தலத்தின் உயர்ந்தமேடை ஸ்மசானம். இந்த ஸ்மசானத்தில் ஆசாபாசங்களும் நாமரூபங்களும் உலகமாகிய மாயையின் தோற்றமும் அழிந்து பஸ்மீகரமாகின்றன. மேற்கூறிய நடராஜ மூர்த்தியின் சில லக்ஷணங்களால் நாம் அறிந்துகொண்ட விஷயங்களாவன,—நடராஜன் என்னும் குரு மாயையைத் தொலைத்து, உலகத்தை நம்முளடக்கி, நாம் அதில் அகப்பட்டு விழிக்காமல், சலனமனதைப் பின்னால் தொலைத்து, அகங்காரத்தை யழித்து, எவ்வகையான ஆசையும் பாசமுமின்றி ஆத்மாவின் சொந்த ஸ்தானமாகிய சிதாகாசத்தை அடைந்து, பிரம்மானந்தத்தை யனுபவிக்கும்படி நமக்குப் போதிக்கிறார். இப்படிப்பட்ட நடராஜ விக்கிரகத்தைக் கேவலமாய் நினைக்கும் மாந்தர்கள் பிறவிக் குருடர்களன்றோ? இத்தகைய மூர்த்தியையும் அம்மூர்த்தி எழுந்தருளிய சிதம்பரத்தையும் தரிசிப்பது நமது கடமை.



## தாக்ஷாயணி

பிரம்மாவின் புத்திரனாகிய தக்ஷன் என்பவன், தமது மனைவியாகிய வேதவல்லியோடு கூடி வாழ்ந்துவரும் நாளில், தங்கையிடத்தில் ஓர் தினம், சிவபெருமானே பரம்பொருளெனத் தெரிந்து அருந்தவம் புரிய சிவபிரான் பிரத்தியக்ஷமாகி, உனக்கு யாது வரம் வேண்டுமென கேட்க, அதற்குத் தக்ஷன் தா[illegible]கிரின்று பிரசித்தமாய் செங்கோல் செலுத்தவும், உமையாரை நான் புத்திரியாக அடையவும், தாங்கள் அந்தண வேடம் பூண்டு எனக்கு மருமகனாக வந்து உமையாரை மணம்புரியவும், வேண்டுமென்ன விண்ணப்பிக்க, சாக்ஷாத் பரமசிவம் அவ்வாறே யாகுகவென வரமளித்து சென்றனர். பிறகு உமையார், யமுனை நதிக்கு அருகில் காளந்தி நதியில் ஓர் தாமரைமலரில், ஓர் சங்குவடிவமாய் அமர்ந்திருந்தனர். ஓர் காலத்தில் தக்ஷன் காளந்தி நதியில் ஸ்நானம் செய்து வருங்காலத்தில் அதைக் கண்டு எடுத்தும், அது மகா ஜோதிர்வடிவமாகிய ஓர் பெண் குழந்தையாக இருக்கக் கண்டு பேரானந்தங்கொண்டு எடுத்து அதைத் தன் மனைவியிடம் கொடுத்து வளர்த்து வந்தனர். குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் நாளில் குழந்தையின் ஐந்தாம் வயதில் தம் தகப்பனால் தவச்சாலையை எற்படுத்தச்செய்து அதில், பரம்பொருளையே ஸதா தியானத்திலிருத்தி தபஸ் புரிந்து வந்தனர். அக்காலத்தில் பரமசிவன் விருத்த வேதிய வடிவங்கொண்டு, தவச்சாலைக்கு எழுந்தருளி உமையாருக்கு காக்ஷி தந்தருளி, தக்ஷனுக்குத் தெரிவித்து திருமணம் புரிந்தனர். இதுவே தாக்ஷாயணியின் விருத்தாந்தம்.

## பார்வதி

ஓர் காலத்தில் உமையார் தக்ஷனுக்கு குமாரியான தோஷம் நிவர்த்தியாகுமாறு சிவபெருமானை ஸ்துதிக்க, அதற்கு சிவபெருமான் அவ்வண்ணமே பார்வதி தேவியாரை நோக்கி, உமையே நமது அன்பன், ஹிமவான் மேருகிரியில் தபஸ் செய்கின்றனர். அவனிடத்தில் அவதரிக்கக்கடவாய் என்றும் அங்கு வந்து மணம்புரிந்து வரு

வோம் என்றும் திருவாய் மலர்ந்தருள, சுவாமி நான் அவ்வண்ணம் அவதரிக்குங்கால், எனக்கு இவ்வுணர்ச்சி மாறாதிருக்கக் கிருபை பாலிக்க வேண்டுமென்று அஞ்சி வேண்ட, அவ்வாறே யாகுகவென கூற அவ்வாறே மேருமலையின் ஓர் சார்பிலுள்ள பொய்கையில், பி[illegible] தமக்கு புத்திரியாக அவதரிக்க வேண்டுமெனவும், பரமசிவன் வந்து மணந்து செல்லவும் வேண்டுமெனவும் அருந்தவம் புரிந்து வந்த, மலையரசனுக்கு முன்னே ஓர் தாமரை மலரில் ஓர் குழந்தை வடிவமாக பார்வதியார் வீற்றிருந்தனர். அதைக்கண்ட ஹிமவான் தமது அருந்தவமே தவமென ஆனந்தத்திலாழ்ந்து அக்குழந்தையை எடுத்து ஆடிப்பாடி அகிலகாரணியே அவதரித்ததற்கு என்று கொண்டாடி தமது மனைவியாகிய மேனையிடம் கொடுத்து சீராட்டி பாராட்டி வளர்த்து வந்தனர். அக்குழந்தையின் ஐந்தாம் வயதில் அக்குழந்தையின் ஆக்ஞா பிரகாரம் ஓர் தவச்சாலையும் ஏற்படுத்தப்பெற்று அம்மையார் அருந்தவஞ் செய்து வந்தனர். இந்த குழந்தையை ஹிமவானும், மேனையும், நித்திய விரதமாகப் பணிந்து துதித்துச் செல்வாராயினர்கள். அக்காலத்தில் மேருமலை யடைந்து விருத்த பிராம்மண உருவங்கொண்டு, யாது கருதி தவஞ் செய்கின்றாய் என, உமையார் நான் சங்கரனை மணஞ் செய்ய தவஞ் செய்கின்றேன் என, பெண்ணே என்னை மணஞ் செய்துகொள் என, தேவி கோபித்து, கொடியோனே அகன்றுபோ என்று கூற, ஈசுவரன், விருஷபாரூடராய் காக்ஷிதரவும், அம்பிகை அண்ணலைக் கண்டு அச்சத்துடன் கைகூப்பி, தேவரீரை யறியாமற் கூறிய அபசாரத்தை மன்னிக்க வேண்டுமென கேட்க ஈசுவரன் அதைத் துதித்தனவாகக் கொண்டோமென்று, பார்வதியை மணந்தனர்.

## ஸ்ரீராமர்

ராம, ராம, ராம என்ற தியானமே எங்கும் மிகுந்திருக்கின்றது. இதற்கு என்ன காரணம்? சகல ஜனங்களையும் ரமிக்கிறவன் (சந்தோஷப்படுத்துகிறவன்) என்றதால் 'ராமன்' என்ற திருநாமம் உண்டாயிற்று. இந்த ராமத்தியானத்தைச் செய்துதான் ஸ்ரீ வால்மீகி பதம் பெற்றார். அனுமார் காரியசித்தி அடைந்தார். பூர்வம் லங்கா



நகர்க்கு இறைவனாகிய இராவணன் தேவர்கள் யாவரும் பீதியோடு வெற்றொழில் புரியவும் அண்டர்கள் கண்டு நடுங்கவும் திருலோகாதிபத்தியங் கைக்கொண்டு 'இராவணேஸ்வரன்' என்று திருநாமம் புனைந்து தேவர்களைப் பற்பல துன்புறுத்தி தனக்கு யாவருமே நிகரில்லாமலும் எந்த பூதங்களினாலும் எவ்வித பயமில்லாமலிருக்க அரியதவம் புரிந்து பிரமதேவனிடம் வரம்பெற்றுக் கொடுங்கோல் அரசு புரிந்து வந்தனன். இராவணன் செய்துவரும் துன்பத்தை ஆற்றாத தேவர்கள் சத்தியலோகவாசியாகிய சதுர்முகனிடம் சென்று முறையிட, அதற்கு நான்முகன் தேவர்களுக்கு அபயஸ்தங்கூறி சகல தேவர்களுடன் க்ஷீராப்தியில் ஆதிசேஷன்மீது அறிதுயில் செய்யும் ஸ்ரீயப்பதியிடம் சென்று [illegible]ன் ஸமர்ப்பித்து வணங்கி, "ஓ அன்பர்தம் துயர் தீர்த்து [illegible]த்து ஆண்டருளும் பாண்டு எங்கள் ஆனையின் முறைகேட்டு அபயஸ்தம் தந்தருளிய ஆதிமூலமே ஓ அனாதரட்சகா ஆபத்பாந்தவா பன்னகசயனா பரந்தாமா பரமதயாளா சொர்க்கவாசியாகிய எங்கள் நகரை இராவணன் அபகரித்துக்கொண்டதுமன்றி எங்களையும் தனக்கேவற்றொழில் புரியச் செய்து, அடியேங்கள் சகிக்கவொண்ணாத துன்பங்கள் செய்து வருத்துகின்றான். தேவரீர் பாவியாகிய இராவணனை ஸம்கரித்து எங்களை இரக்ஷித்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தனர். இங்ஙனம் பன்னவர் யாவரும் விண்ணப்பஞ் செய்திடலைக் கேட்ட பன்னகபூஷணன் புன்னகை செய்து, "ஓ! தேவர்களே! நீவிர் யாவரும் கூறியவாறு யாம் இட்சுவாகு வம்சத்தில் தசரதன் மைந்தராக அவதரித்து, விரைவில் உங்கள் குறைகளைத் தீர்ப்போம்" என்றதைக் கேட்டு தேவர்கள் யாவரும் சந்தோஷமடைந்தவராய் ஆராவமுதனின் பாதாரவிந்தங்களில் பணிந்தெழுந்து, இந்திரலோகம் சென்று, சிந்தை வருந்தி அந்தி வண்ணனின் செந்தாமரைப்பாதத்தை நினைத்திருந்தனர்.

அயோத்தியாபுரியில் சூரியவம்சத்தில் தசரத சக்கிரவர்த்தி ராஜ்யபரிபாலனம் செய்துவந்தார். அவருக்கு கௌசல்யை, சுமத்திரை, கைகேயி என்ற மூன்று பாரியாள் உண்டு. இம்மூவர்களுக்கும் புத்திர சந்தானம் இன்றி, மிகவும் வருந்தினார்கள். பெரியோர்களின் ஆஞ்

ரூப்பிரகாரம், அச்சக்கிரவர்த்தி, புத்திரோற்பத்தியை அபேட்சித்து, வசிஷ்டர்முகமாக ரிஷ்யசிங்கர் என்ற மகாரிஷியை வரவழைத்து புத்திரகாமேஷ்டியாகத்தைச் செய்வித்தார். அந்த யாகத்தின் அக்னிகுண்டத்திலிருந்து ஓர் மகாபுருஷன் ஆவிர்ப்பவித்து ஓர் ஸ்வர்ணபாத்திரத்தில் பாயஸத்தைக் கொண்டுவந்து தசரத சக்கிரவர்த்தியிடம் கொடுத்து மறைந்தார். தசரதர் அப்பாயஸத்தைத் தன் மனைவிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தார். உடனே மூவரும் கர்ப்பந்தரித்து, கௌசல்யை இராமனையும், சுமித்திரை இலட்சுமணன் சத்துருக்கனனையும், கைகேயி பரதனையும் பெற்றெடுத்தார்கள். குழந்தைகளுக்கு மூன்றாவது வயதில் சௌளம் செய்வித்து, எட்டாவது வயதில் வித்தியாப்பியாசம் செய்வித்து, பாலர்களை சம்ரட்சித்துக்கொண்டு வருகையில், ஓர்நாள் விச்வாமித்திர மகாமுனி, தசரதமகாராஜனிடம் சென்று, "எங்களால் செய்யப்பட்ட யாகத்தை இராட்சதர்கள் விக்னம் செய்கின்றார்கள் மேற்படி யாகம் விக்னமின்றி நிறைவேற்ற வேண்டியதற்காக, இராமனையும் இலட்சுமணனையும் அனுப்பவேண்டுமென்றுரைக்க தசரதர் வெகுகாலமாக புத்திரனில்லாதிருந்து, இப்பொழுது பகவத்கடாட்சத்தால் ஜனித்த புத்திரரை மகரிஷி யக்ஞசம்ரட்சணார்த்தம் கேட்கின்றது சரியல்லவென்று மறுத்தனர். அதைக் கேட்ட முனிபுங்கவர் ஸ்ரீராகவனது மகிமையை தசரதனுக்கு உரைத்து, கோபத்துடன் திரும்புகையில், தான் இராமனை அனுப்பாவிடில் சபித்துவிடுவாரோவென்று தசரதர் துக்காக்ராந்தராயிருக்கையில், ராஜசபையிலிருந்த, குலகுருவாயும் ஸர்வவியாபகருமாகிய வசிஷ்டர், இராமனை அனுப்பும்படி சொல்லியதன் பேரில் விச்வாமித்திரருடன் இராம இலட்சுமணரையும் அனுப்பினார். இரண்டு பாலர்களையும், விச்வாமித்திரர் அழைத்துக்கொண்டு போகையில், குழந்தைகளுக்கு பசிதாகங்களின்றி இருக்க, பலை அதிபலை என்ற மந்திரங்களை உபதேசித்து அழைத்துப்போகையில், தாடகை என்ற இராட்சஸி எதிர்ப்பட்டு பாலர்களைப் பட்சிக்க ஆரம்பித்தாள். உடனே விச்வாமித்ரர் ஆக்ஞையின் பேரில் ஸ்ரீ இரகுநாதன் பாலனாக இருந்தபோதிலும், ஒரே பாணத்தால் தாடகையை வதைத்தார். பிறகு விச்வாமித்திரர் இராம இலட்சுமணர்களுடன் ஸித்தாச்சிரமத்தை



அடைந்து யாகத்தைச் செய்ய ஆரம்பித்தார்கள். விச்வாமித்திரர் செய்த யாகத்தைக் கெடுக்க வெண்ணி, மாரீசன், சுபாகு என்ற அரக்கர்கள் ரக்தமாம்ச முதலானவைகளை யாககுண்டத்தில் வர்ஷித்து வந்தார்கள். வந்த அந்த க்ஷணத்திலேயே இரகுநாதன் இரண்டு பாணங்களைப் பிரயோகம் செய்ய ஒரு பாணத்தால் மாரீசனை சமுத்திரத்தில் விழுத்தியும், சுபாகுவை மற்றொன்றால் வதைத்தனர். பிறகு யாகம் நிறைவேறிய பின்பு, விச்வாமித்திரர், பாலர்களுக்கு அஸ்திரவித்தைகளைச் சொல்லி வைத்தனர். பின்பு, மிதிலாபுரியில் ஜனக மகாராஜனால் விடுக்கப்பட்ட மண ஓலையைப் பார்த்து, மிதிலைக்குச் செல்லுகையில், கௌதமருடைய ஆச்ரமத்தில் கல்லாக இருந்த அகலிகை தாசரதியினுடைய சரண தூளி பட்டமாத்திரத்தில் சுயரூபம் கொண்டெழுந்தனள். அகலிகையும், இராமன் பரந்தாமன் என்றறிந்து, பிரதட்சணம் செய்து நமஸ்கரித்து எந்த பகவானுடைய சரணதூளியானது ருத்ராதி தேவர்களாலே அனேக கோடிகாலமாகத் தேடப்படுகிறதோ அப்பேர்ப்பட்ட சரணதூளியின் சம்பந்தத்தால் சாபத்தினின்றும் விடுபட்டு தன்னியையாக ஆனேன் என்று ஸ்தோத்திரம் செய்து ஆச்ரமம் சென்று தன் பதியான கௌதமரை அடைந்தனள். பிறகு மிதிலை சேர்ந்து, ஜனகமகாராஜாவால் இவர்களை எதிர்கொண்டழைத்து அதிதி பூஜை செய்வித்து சபாமண்டபத்தில் இராம இலக்குமணரை வீற்றிருக்கச் செய்து, 'ஓ! மகரிஷே! இவ்விரு ராஜகுமாரர்கள் யாவர்? இவர்களைப் பார்த்தால் த்வாதசாட்சரவித்யோபாஸ்யரான பகவானைப்போல் காணப்படுகிறார்களே இவர்கள் எந்த மகாராஜாவின் புத்திரர்கள்? எனக்குத் தெரியும்படி உரைக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, விச்வாமித்திரர் 'தசரத சக்கிரவர்த்தியின் குமாரர்கள். இவர்கள் இராமனென்றும் இலக்குமணன் என்றும் கூப்பிடப்படுவார். தன் யாகத்தை இரட்சிப்பதற்காக இவர்களை அழைத்து வந்தேன் என்று சொன்னார். பிறகு விவாகத்திற்காக பந்தயமாக வைக்கப்பட்டிருக்கும் சிவசாபத்தை இந்த பாலர்களுக்குக் காண்பிக்க வேண்டுமெனக் கேட்க, அதைக் கேட்ட ஜனகர், மிக சந்தோஷங்கொண்டு அச்சிவ சாபத்தைக் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தார். அதை ஆறு

யிரம் பேர்கள் வண்டியில் வைத்திழுத்து வந்தார்கள். பிறகு விச்வாமித்திரர் இந்த தனுசை பாலர்களுக்குக் காட்டவும், ஆகாயத்தில் தேவர்களெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க ஸ்ரீ இராமர் தனுசை அலட்சியமாக எடுத்து நிறுத்தி வலது கையால் கொஞ்சம் வளைக்கவும், சிவசாபம் முறிந்து அதினின்றும் பிரளய காலத்தில் உண்டாகிற சப்தகாள மேகத்தினுடைய சப்தத்தை ஒத்த தொனி உண்டாயிற்று. அதனால் தனுசு பங்கமாயிற்று. உடனே, தசரதர் முதலானவர்கள் வரவும், இராமனுக்கு சீதையையும், இலக்குமணனுக்கு ஊர்மிளையையும், பரதனுக்கு ஸ்ருதகீர்த்தியையும், சத்துருக்கனனுக்கு மாண்டவியையும் விவாகம் செய்துகொடுத்தனர். விவாக முடிந்தபிறகு, தசரதர், ஜனகரிடம் விடைபெற்று அயோத்திக்கு வரும்போது வழியில் பரசுராமன் எதிர்பட்டு, இராகவனைப் பார்த்து இரகு வம்சத்தில் பிறந்த ஏ க்ஷத்திரியனே! பழமையாயும் உளுத்ததாயும் இருக்கிற சிவதனுசை முறித்து கர்வங்கொண்டிருக்கிறாய். என்னிடமிருக்கும் இவ்விஷ்ணு சாபத்தை நாணேற்றி யுத்தம் செய்தாயானால் நீ சூரனென்று நான் உன்னுடன் போர்புரிவேன் என இராகவன் அந்த தனுசை வாங்கி நாணேற்றி அதில் பூட்டிய பாணத்திற்கு பரசுராமனால் அடையப்பட்ட சொர்க்காதி லோகத்தை இரையாகக் கொடுத்தார். பிறகு பரசுராமர் இராகவனை வணங்கி தபசு செய்ய சென்று விட்டனர். தசரதர் மக்களுடன் அயோத்தியாபுரி சென்றதும், கேகய தேசத்தரசனான யுதாஜித் என்பவர் உடன்பிறந்தோன் மகனான பரதனைச் சத்துருக்கனனுடன் அழைத்துக்கொண்டு தன் நகர் சென்றார். பிறகு, தசரத சக்கிரவர்த்தி பிரகஸ்பதி போன்ற பெரியோர்களை வரவழைத்து உங்களுடைய அபிப்பிராயத்தை அனுசரித்து என்னால் பிரஜைகளைப் பரிபாலிக்கப்பட்டது. தங்களால் எது ஒப்பக்கொள்ளப்படுகிறதோ அதையே பிரஜைகள் ஒப்புக்கொள்கிறார்கள். ஒருவிதத்தாலும் மாற்றப்படாத வயோதிகம் என்னை அடைந்துவிட்டது. சர்வக்ஷத்திரியாந்தகனான பரசுராமனுடைய கர்வத்தை பங்கம் செய்தவனும் பிரஜைகளிடத்தில் அன்புள்ளவனும் லோகபரிபாலனத்தில் சமர்த்தனுமிருக்கிற எனது இராகவனிடத்தில் இராஜ்ய



பாரத்தை ஒப்புவித்து சிந்தை யன்னியில் சிலகாலம் இருக்க நினைக்கிறேன். அதற்குத் தாங்கள் அனுமதி கொடுக்கவேண்டுமென்றுரைக்கவும் அதற்குப் பெரியோர்கள் யாவரும் அனுமதி கொடுத்து பட்டாபிஷேக சன்னித்தராய் இருந்தனர். இவைகளையெல்லாம் சபையில் பார்த்திருந்த மந்திரை யென்னும் கூனி, கைகேயியை அணுகி "ஏ இராஜபுத்ரி! தசரதர் உன் சக்களத்தி மைந்தனான இராமனுக்கு நாளை பட்டாபிஷேகம் செய்கிறதாக நிச்சயித்திருக்கிறார்" என்று சொன்னதைக் கேட்ட கைகேயி தம் கழுத்திலணிந்திருந்த முத்துஹாரம் ஒன்றைக் கழற்றி மந்தரையின் கழுத்தில் போட்டனள். அம்முத்துஹாரத்தை எடுத்தெறிந்து கைகேயியைப் பார்த்து நீ பின்வரும் கஷ்டத்தை யோசிக்கவில்லையே. இராகவனுக்குப் பட்டாபிஷேகம் ஆகிவிட்டால், கௌசல்யையின் வார்த்தையில் மதிப்புண்டாகுமே தவிர உனது வார்த்தைக்கு மதிப்புண்டாகவேமாட்டாது. நீ கௌசல்யைக்கும் பரதன் ஸ்ரீ இராகவனுக்கும் ஊழியஞ்செய்யவும் நேரிடும். இவைகளைக் கிஞ்சித்தேனும் யோசியாமல் எனக்குக் குதூஹலத்துடன் முத்துஹாரத்தைப் போட்டனையே என்று பலவிதமான வார்த்தைகளைச் சொல்லி, கைகேயியின் மனதைக் கலைத்துவிட்டாள். கைகேயியும் மந்தரை சொல்லும் விஷயம் உண்மை என நம்பி ஏ! மந்தரே இதற்கு என்ன உபாயம் செய்யலாமென்றுக் கேட்க ஏ கைகேயி நீ சம்பராசுர வத காலத்தில் தசரதனால் உனக்கு இரண்டு வரம் தருகிறதாக உரைத்தாரே. அதில் ஒன்று இராகவன் காட்டையடையவும், மற்றொன்று பரதனுக்கு இராஜ்யபட்டாபிஷேகம் செய்[illegible]வைக்கும்படியாயும் கேளென்று சொல்லிச் சென்றுவிட்டாள். கைகேயி இதுவே கவலையாகத் தானது ஆபரணங்களைக் கழற்றி யெறிந்து கோபத்துடன் கோபாக்கிரகத்துக்குப் போய்விட்டாள். இஃது இவ்வாறிருக்கையில் தசரதரது உத்திரவு பெற்ற உடனேயே நகர முழுமையும், நவரத்ன தோரணங்களால் அலங்கரித்து, வசிஷ்டர் ஆஞ்யாப்பிரகாரம் விப்ரோத்தமர்களைக் கொண்டு, ஸ்வர்ன குடத்தில் புண்யதீர்த்தங்கள் கொண்டுவரச் செய்து கட்டளையிட்டு இராகவனுடைய அரண்மனை சென்று நாளையதினம் உனக்கு இராஜ்யாபிஷேகம் செய்விப்பதாகச்

செய்திருக்கிறேன். நீ மங்கள ஸ்நானம் செய்துவிட்டு நம்முடைய குலகுருவாகிய வசிஷ்டரை வணங்கி வாவென்று சொல்லிவிட்டு, கைகேயினுடைய அரண்மனைக்கு தெசரதர் சென்றனர். அந்தப் புரத்தில் கைகேயியைக் காணாமல், கோபாக்கிரகத்திலிருக்கின்றதைத் தாதி மூலமாய்த் தெரிந்து அங்கு போய் அவள் அலங்கோலமாயிருப்பதைக் கண்டு திகைத்து, சமீபம் சென்று, 'ஹே பிரியே! நீ எதற்காக இவ்வலங்கோலங்களைக் கொண்டனை. எதற்காகத் துக்கிக்கின்றனை. நீ இந்த விதமாய் நீ இருப்பதைப் பார்த்தால் எனக்குச் சங்கடமுண்டாகுகின்றது. உனக்கேற்பட்ட கஷ்டத்தைத் தெரிவித்தாயானால் இராகவன் சாட்சியாக உன்னபீஷ்டப்பிரகாரம் செய்விக்கிறேன் என்றுரைக்கவும், கைகேயி எழுந்து 'ஏ! பிராணநாதா பூர்வம் சம்பராசுரவதை காலத்தில் தம்முடைய பிராணனை நான் ரட்சித்ததற்காக இரண்டு வரன்கள் அளித்தீர்கள் அல்லவா? அதில் என் மகன் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்க வேண்டியதொன்றும், இராகவனை ஜடாதாரியாய் பதினான்கு வருஷம் தெண்டகாரண்யத்துக்கு அனுப்ப வேண்டியது ஒன்றும் என்றுரைக்கக் கேட்டலக் கண்ட மகாராஜா மூர்ச்சித்துத் தரையில் விழுந்தார். மூர்ச்சை தெளிந்தவுடன் 'ஏ! கைகேயி உன்னிஷ்டப்பிரகாரம் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்கிறேன். இராமனை வனத்துக்கனுப்பாமல் அரண்மனையில் இருக்க உத்திரவு அளிக்கவேண்டுமென்று அவளது கால்களைப் பிடித்துக்கொண்டு மன்றாடினார்.

கைகேயி மிகுந்த கோபத்துடனே இராஜனது கைகளிரண்டையும் உதறித்தள்ளி இராஜனே! நாளைய தினம் காலமே இராகவன் வனத்திற்குப் போகாதவரையில் உன்னெதிரிலேயே பிராணத்யாகம் செய்துகொள்வது நிச்சயம் என்று உரைக்க, ஸத்யசந்தரான தசரதர் கைகேயினது இஷ்டப்படி வரமளித்து ராமா ராமா வென்று புலம்பிக்கொண்டே வஜ்ராயுதத்தால் சேதிக்கப்பட்ட பர்வதம்போல் மூர்ச்சிதராய் கீழே விழுந்துவிட்டார். விடியற்காலையில் சுமந்திரர் பட்டாபிஷேகத்திற்காகச் செய்யவேண்டிய யாவற்றையும் முடித்துக் கொண்டு ராஜனது தெரிசனத்தை விரும்பி அரண்மனையினுட் புகவும்



அரசன் அங்கில்லாமையைக் கண்டு கைகேயினது அரண்மனையை நாடிச்சென்று அரசனைத் தெரிசிக்க உட்செல்லுகையில் கைகேயி சுமந்திரரைப் பார்த்து நீர் இந்த க்ஷணமே ராமனை இங்கு அழைத்துக் கொண்டு வருக என்று அனுப்ப, அச்சமயம் ஸ்ரீ ராகவன் தம் பிதாவினது ஆக்ஞ்யாபிரகாரம் மங்கள ஸ்நானம் செய்துவிட்டு வசிஷ்டரால் செய்யப்பட்ட ரக்ஷாபந்தன முதலியவைகளைத் தரித்துக்கொண்டு தம் பிதாவை தெரிசிக்க வெண்ணி வெளியே வருகையில் சுமந்திரர் எதிர்பட்டு, சுமந்திரருடன் தம் பிதாவிருக்கும் கைகேயின் அரண்மனையை நாடிச்சென்றார். அங்கு சென்று தம் பிதாவையும் கைகேயியையும் நமஸ்கரித்து, நிற்கவும் தெசரதர் பரபரப்புடன் எழுந்து ஸ்ரீ ராகவனை ஆலிங்கனம் செய்து ஏ, ராகவா! நான் என்ன சொல்லுவேன் என்று பேச நாவெழாமல் மூர்ச்சிதராய் விழுந்தார். ராமன் பிதாவை எடுத்துப் படுக்கவைத்து ஆஸ்வாசப்படுத்திவிட்டு கைகேயியை நோக்கி அஞ்சலியஸ்தராய் நின்று அன்னையே! பிதா எதற்காகச் சோகிதராய் இருக்கிறார். அதைத் தெரிவித்தால் பிதாவின் சோகத்தை நிவர்த்தித்து தான் நான் போஜன முதலானதுகள் செய்வேன். இது சத்யம் என்றுரைக்கவும், ராமனைப்பார்த்து கைகேயி பாலா! நின் பூர்வம் சம்பராசுர யுத்த காலத்தில் உன் பிதாவை நான் காப்பாற்றியதற்காக எனக்கு இரண்டு வரம் கொடுத்திருந்தார். அதில் ஒன்று பரதனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்துவைக்கவேணுமென்பதும், மற்றொன்று நீ தண்டகாரண்யத்தில் பதினான்கு வருஷம் மரவுரி கிருஷ்ணாஜனத்தை தரித்து வாசம்செய்யவேண்டுமென்பதும்தான். இச்சமாசாரத்தை உன்னுடன் தெரிவிக்க யோசிக்கிறார் என்று சொன்ன கைகேயினது வார்த்தையைக் கேட்ட ரகுநாதன் புன்னகையுடன் அம்மணி உலகத்தைக் காக்கும் விஷயத்தில் பரதன் பயந்தானு, மகரிஷிகள் வசிக்கும் தண்டகாரண்யத்தில் வசிப்பதற்கு நான் பயந்தேனு, தெய்வலோகத்தில் செல்லும் கெங்காநதியைப் பாதாளத்துக்குக் கொண்டுபோய் பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்வித்த சகரவம்சஸ்தரான என் பிதா எதற்காக இதன்நிமித்தம் துக்கிக்கிறார். எங்கள் இருவர்களாலே அவரது எண்ணம் பூர்த்தியாகாதவரையில் அவர் எங்களைப் புத்திரனாக அடைந்த பயன் என்ன.

"மாதுர்வாக்யம், பிதுர்வாக்யம் செய்யவேண்டியது புத்திரர்களுக்குக் கடமையன்றோ." நான் பிதுருவினுடைய ஆக்ஞைப்படி வனத்திற்குச் செல்லத்தடையில்லை. நான் எனது மாதாவின் அனுமதியைப் பெற்று வனம் செல்லும்வரையில் இவ்விடமிருக்க அனுமதி தரவேண்டும் என்று சொல்லிவிட்டு கைகேயியின் அரண்மனைவிட்டு அகன்றார். உடன் ராமன் கௌசலையின் அரண்மனைச்சென்று சுமித்ரையுடன் கூடியிருக்கும் தன் தாயை நமஸ்கரித்து அம்மணி! சத்யசந்தரான என் பிதா கைகேயிக்கு அளித்த வரம் இரண்டில் ஒன்று பரதன் நாடாளவும் மற்றொன்று நான் தண்டகாரண்யம் செல்லவும் ஆக்ஞையிட்டிருக்கிறபடியால் நான் வனம்போக அனுமதி கொடுத்தால் சீக்கிரம் வந்து சேருகிறேன் என்று சொன்னதும், இவ்வசனத்தைக் கேட்ட கௌசலை மூர்ச்சிதையாய் விழுந்துவிட்டாள்.

கௌசலை பின்பு தேறுதலையடைந்து இராமனைக் காட்டுக்குப்போக அனுமதி தந்தருள சமீபத்திலிருந்த லெக்ஷ்மணர் மிகுந்த கோபங்கொண்டு, ஆர்யா! க்ஷத்ரியனுடைய என்று இருகரங்களிலுள்ள வில்பாணங்கள் அலங்கார பூஷணமாக ஏற்பட்டதல்ல. இவைகள் பகையாளிகளைக் கொல்வதற்கேயன்றி வேறல்ல. ஜனங்களால் நிந்திக்கப்பட்ட இந்தக் கைகேயியின் வார்த்தையைக்கேட்டு நம் பிதா தம்மை வனத்துக்குப் போகச்சொல்வது உசிதமல்ல. காட்டில் சஞ்சரிப்பதால் தம்முடைய காலில் உண்டாகும் சிகப்பான [illegible] கயிற்றை இழுத்துவிடுவதால் என் கையிலும் கைகேயியினிடம் மயக்கங்கொண்ட அரசனிடம் வாக்யத்திற்குண்டான தம்முடைய வணக்கம் என்னுடைய தனுசில் உண்டாகட்டும். நன்மை தீமை தெரியாதவனும் கர்விஷ்டனும் துன்மார்க்கத்தை அடைந்தவனுமிருந்த பிதாவைத் தண்டிக்கலாம் என்று ஸ்மிருதி இருக்கிறது. பராக்ரசாலியாகிய தாம் உடனே பட்டாபிஷேகம் செய்துகொள்ளும். அதற்கு விரோதிகளாய் வருகிறவர்களை இந்தத் தனுசுக்கு இரையாக்கிவிடுகிறேன் என்று கோபத்தோடு உரைத்த வார்த்தையைக் கேட்ட ஸ்ரீ ராகவன் லெட்சுமணனைப்பார்த்து லெட்சுமணா மரணத்தை அடைந்த மனிதன் காமக்குரோதாதிகளின்னியில் எவ்விதம் இருக்கிறானோ அவ்விதம் உயிருடன் இருப்பவனும் திரவியம்



இல்லாதவரும் எப்படி இருக்கிறாரோ பணமுள்ளவனிருந்தானேயாகில் அவனுக்கு மனவருத்தம் எந்தக் காரணத்தால் உண்டாகும். ஆனால் நம்முடைய செய்கையால் ராச்சியத்தைச் சம்பாதித்துவிடலாமென்று உரைத்தாயே. அவ்விஷயத்தில் நமக்குச் சுதந்தரமாகச் செய்துகொள்வதற்குச் சக்தியில்லை. இந்த ஜீவன் சுவாதீனமில்லாதது. இந்த ஜீவனைக் காலனென்பவன் தனக்கு இஷ்டமான இடத்தில் செல்லும்படி செய்கிறான். ஆகையால் இவ்விராஜ்யத்திலிருந்தபோதிலும் வனஞ்சென்றபோதிலும் ஆயுள் குறைகிறதே தவிர வேறில்லை. ஆகையால் உன்னுடைய மனதைப் பலவாறு தர்மத்தில் உபயோகப்படுத்துவாய். மற்றவைகளைக்குறித்து ஏன் துக்கிக்கிறாய். நமக்குப் பிதா தெய்வமாகையால் நாம் அவரது வார்த்தையை மீறி நடப்பது தகாது. ஆனதால் நான் வனம் செல்லுகின்றேன் என்று உரைக்க லெட்சுமணர் ஸ்ரீராகவனுடைய சரணத்தைப் பிடித்துக்கொண்டு இவ்விதமான உறுதியுடன் தாம் எவ்விடம் செல்லுகின்றீர்களோ அவ்விடம் நான் யோசியாமல் தம்மைப் பின்தொடர்ந்து வருகிறேனென்றுரைத்தனர். ராகவன் லெட்சுமணனுடன் கௌஸல்லையிடத்திலும் சுமித்திரையிடத்திலும் விடைபெற்று சீதையினுடைய அரண்மனைக்குச் செல்லவும் சீதை ஸ்ரீராகவனுக்கு அர்க்கிய பாத்தியாதிகளால் ஆராதித்து ஆஸனத்தில் வீற்றிருக்கச்செய்து பிராணநாதா சத்திர சாமர கஜ துரக பதாதிகள் வாத்திய கோஷங்கள் முதலான ராஜ சின்னங்களில்லாமல் கிரீடாதி யாபரணங்களைக் களைந்துவிட்டு பாதசாரியாய் தாம் நடந்துவந்த காரணம் யாதென வினவ, ராமன் மந்தஹாசத்துடன் பிரிய ஸகி! பிதா எனக்குத் தண்டகாரண்யத்தை ராஜ்யமாக அளித்திருக்கிறார். அதைப் பரிபாலிப்பதற்கே நான் வனஞ்செல்லுகின்றேன். நீயென் மாதாவிற்குப் பணிவிடை செய்துகொண்டிரு. இந்தப் பதினான்கு வருஷமும் பதினான்கு நாழிகையாகச் சென்றவுடன் அதிசீக்கிரமாக வந்துவிடுகின்றேன் எனச் சொல்லக்கேட்ட ஜானகி ரகுகுலோத்தமா! என்னைவிட்டு, வனத்திற்குத் தனிமையாகப் போவதும் உசிதமல்ல. நான் முந்தி வனஞ்செல்லுகின்றேன். பிந்தி தாம் வரலாமெனச் சொல்லவும், ஜானகி அநேக மிருகங்கள் நிறைந்த தண்டகாரண்யத்தில் மானிடர்களைப் பக்ஷிக்கிறவர்க

னாகிய, அநேக ராக்ஷஸர்களிருக்கிறார்கள். ஆதலால் உன்னை வனம் அழைத்துப்போவது சரியல்லவென்று சொல்லவும், ஜனகன்மகளி ராகவனைப்பார்த்து, புருஷோத்தமா, தங்களை, ஓர் புருஷனென்று எண்ணினேன். ஸ்திரியாக இப்பொழுது நான் நினைக்கவேண்டியிருக்கிறது. தாங்கள் வீர க்ஷத்திரியராக விருந்தால் தமக்குத் தர்மபத்தினியாயும் பதிவிரதையாயு மிருக்கும் என்னைவிட்டு வனத்திற்குச் செல்லவீரோ யாகில் தம் எதிரில் எப்படியாவது பிராணனை மாய்த்துக்கொள்ளுவேன் என பிரதிக்ஞை செய்யவும், அதற்கு ரகுநாதன் மனமிரங்கி ஸீதையை அழைத்துப்போக இசைந்து ரகுகுல திலகன் ஸீதையை அழைத்துக் கொண்டு லக்ஷ்மணருடன் பிதாவின் அரண்மனை சென்று பிதாவையும் கைகேயியையும் நமஸ்கரித்து, அவளால் கொடுக்கப்பட்ட மரவுரியை இராமலக்ஷ்மணர்கள் தரித்தார்கள். தரித்துக்கொள்ள தெரியாமலும் வருத்தமுற்றிருக்கும் ஸீதையின் கையிலிருந்த மரவுரியை இராமர் வாங்கி அவள் இடையிலிருக்கும் வஸ்திரத்தின்மேல் கட்டிவிடும் இராமனைப்பார்த்த வசிஷ்டர் கோபங்கொண்டு, கைகேயியைப்பார்த்து, ஏ துஷ்டே உன்னால் ஆக்ஞையிடப்பட்டு வனத்திற்குச் செல்லும் இராமனுடன் வனத்திற்குக்கூடச் செல்லும், ஸீதைக்கு மரவுரியேன் கொடுத்தாய் என்று சொல்லி ஜானகியின் இடையிலிருக்கும் மரவுரியை எடுத்து கைகேயியின் முன்பு எறிந்து ஸபாமண்டபஞ் சென்றார். பிறகு இராமர், ஸீதை, இலக்ஷ்மணர் மூவர்களும் தசரதரிடம் விடைபெற்று, சுமந்திரரால் கொண்டுவரப்பட்ட இரதத்திலேறிக் கொண்டு வனஞ்செல்லவும், நகரிலுள்ள பிரஜைகள்யாவும், இராமருடன் வனஞ்சென்றார்கள். நகரிற்கு இரண்டு யோஜனை தூரத்திலிருக்கும் தமஸாநதிக்கரையை யடையவும், கதிரவனும் மேற்கு திசையில் ஆழ்ந்தனர். பின்தொடர்ந்து, நடந்துவந்த சிரமத்தால் பிரஜைகள் யாவரும் அயர்ந்து காடாந்தகாரமாய் நித்திரை செய்தனர்கள். பின் இராமன், சுமந்திரரைப் பார்த்து, இப்பிரஜைகள் எம்மிடமுள்ள அன்பினால் பின்தொடர்ந்து வருகிறார்கள். நகரம்போகச் சொன்னாலும் போகமாட்டார்கள். ஆகையாலும், நாம் வேறுவழியாய் வனஞ்செல்வோமெனச் சொல்லவும் கேட்ட சுமந்திரர் அயோத்தியைக் காட்டி சிறிது தூரம் சென்று வேறு



மார்க்கமாக வனஞ்சென்றனர். கதிரவன் உதயமானதும், பிரஜைகள் எழுந்து இராகவனைக் காணாமலும், இரதம் திரும்பியிருப்பதையும் கண்டு, இராகவன் நகரஞ்சென்று விட்டார் என்று எண்ணி எல்லோரும் திரும்பி அயோத்திக்குச் சென்றுவிட்டார்கள். சுமந்திரரோ சூரியோதயத்திற்குள்ளாக சிருங்கிபேரபுரத்திற்கு அருகாமையில் கங்காநதிக் கரையிலிருக்கும் இங்குதி விருக்ஷத்தடியில் இரதத்தை நிறுத்த இரதத்தை விட்டிறங்கி, விருக்ஷத்தினடியில் வீற்றிருந்தார்.

சிருங்கிபேரபுரத்திற்கு அரசனான குகன், இராகவனது வருகையைக் கேள்விப்பட்டு, அவரிடஞ்சென்று வணங்கி ராகவா, இதுவும் என்னுடைய அரண்மனை, என்னால் செய்யப்பட்ட அதிதி பூஜையைப் பெற்று என்னை அநுக்கிரகித்து, தன்னியனாகச் செய்யவேண்டும் என்று பிரார்த்தித்த குகனைப்பார்த்து, ஏ மித்திரா உனது வார்த்தையினாலே திருப்தி யடைந்தேன். எனது பிதாவின் ஆக்ஞாபிரகாரம், பதினான்கு வருஷம் வரையில் நகரம் புகேன். பலாதிகளை யருந்தேன், என்று கூறி, இலக்ஷ்மணரால் கொண்டு வரப்பட்ட காய்கனிகளைப் புஜித்து அஸ்தமித்தபின் ஸீதையுடன் தர்ப்பாசனத்தில் சயனித்துக்கொண்டார்கள். குகனும், இலக்ஷ்மணருடன் தனுர்பாணிகளாய் அவர்களைப் பாதுகாத்தார்கள்.

பொழுது விடிந்தவுடன் இராகவன் ஸுமந்திரருக்கு விடை கொடுத்து அனுப்பி பின்பு ஸீதை இலக்ஷ்மணர் இருவர்களுடன் குகனால் கொண்டுவரப்பட்ட ஓடத்தில் ஏறி கங்காநதியைத் தாண்டி பரத்வாஜருடைய ஆச்ரமம் சென்று அவரால் செய்யப்பட்ட ஆதித்யத்தைப் பெற்று இராத்திரி அவ்விடம் இருந்து அருண உதயமானவுடன் பரத்வாஜரிடம் விடைபெற்று அவருடைய சிஷ்யர்களால் கட்டப்பட்ட தெப்பத்தில் ஏறி யமுநதியைக் கடந்து சித்திரகூட பர்வதத்திலிருக்கும் வால்மீகாச்ரமம் சென்று, அம்மகரிஷியை வணங்க வால்மீகி இராகவன் முதலானவர்களை அர்க்யாதிகளாலாராதித்து சித்திரகூட பர்வதத்தின் தாழ்வரையில் பர்ணசாலை கட்டுவித்து அதில் இராகவனை வஸிக்கும்படி பிரார்த்திக்க இரகுநாதன் வால்மீகியினிஷ்டப்படி வஸித்துக்கொண்டிருந்தார்.

இஃதிவ்வாறிருக்க நகரிற்குத் திரும்பிய ஸுமந்திரர் அன்றைய தினம் சாயந்திரம் நகரம் சென்று மகாராஜாவை வணங்கவும் தெசரதர் ஸுமந்திரரைப் பார்த்து ஹே மந்திரி! ஸீதையோடும் இலக்ஷ்மணனோடும் இராகவனை எவ்விடத்தில் விட்டுவந்தீர்; பாபியான என் விஷயமாக ஏதாகிலும் தம்மிடத்தில் உரைத்திருந்தால் அதைத் தெரிவியும் என்று கூறி ஹே இராகவா! என்று கதறிக்கொண்டு மூர்ச்சிதராய் விழுந்துவிட்டார். மந்திரியான ஸுமந்திரர் இராஜாவை ஆச்வாஸப்படுத்தி மூர்ச்சை தெளிந்தவுடன் ஹே இராஜன்! இராகவன் முதலானவர்களை சிருங்கிபேரபுரத்திற்குச் சமீபத்தில் கங்காநதிக் கரையிலிருக்கிற இங்குதி விருக்ஷத்தினடியில் இறக்கி இராகவனை விட்டுப்பிரிய மனமில்லாமல் அன்றைய தினம் முழுமையும் இரகுநாதருடன் அவ்விடமிருந்தேன். மறுதினங்காலமே இராமச்சந்திரன் கெங்காநதியைத் தாண்ட வேண்டியதற்காக குகனால் தள்ளப்பட்ட ஓடத்திலேறும்பொழுது என்னைப்பார்த்து ஆர்யா! நகரில் வஸிப்பதைக்காட்டிலும் பிதுராக்ஞா பிரகாரம் வனத்தில் வஸிப்பது மிகவும் சௌக்கியமாயிருக்கிறது. மாதாவான கௌஸல்யையை நான் நமஸ்கரித்ததாகத் தெரிவித்து என்னை பிதா வனத்திற்கு அனுப்பிவிட்டோமே என்கிற துக்கத்தால் புத்திரசோகத்தை அடைந்திருக்கும் பிதாவை அலக்ஷியம் செய்யாமல் ஸம்ரக்ஷிக்கசொன்னதாகத் தெரிவியும் என்றுரைத்து ஓடத்திலேறிச் சென்றார் என்பதாகத் தெரிவித்துக் கிரகம் சேர்ந்தார்.

ஸமீபத்திலிருந்த கௌசல்யை இராஜாவைப்பார்த்து பிராணநாதா! கைகேயியின் புத்திரனான பரதனுக்கு மகுடம் சூட்டாமல் வனத்திற்குப்போன இராமனை நினைத்து ஏன் துக்கிக்கிறீர்கள் என்று சொன்னதைக் கேட்ட தெசரதர் கௌசல்யையைப் பார்த்து பிரியசகி நான் இவ்விராஜ்யத்தை யடைந்து பிரஜைகளைப் பரிபாலிக்கையில் வனத்திலிருக்கும் மிருகங்கள் பயிர்களை அழித்துவிடுகின்றன என்று முறையிட்டார்கள் நான். அனேக வேடர்களுடன் வனம் சென்று வேட்டையாடுகையில் அவ்வனத்திலிருக்கும் நதியில் ஒரு ரிஷி ஜலம் மொண்டார். அச்சத்தம் தூரத்திலிருந்த என்காதில் புகவும் நான் கவனித்துப்பாராமல் மதங்கொண்ட யானை தண்ணீர் குடிக்கிறதென்று



எண்ணி பாணத்தைப் பிரயோகம் செய்தேன். அப்பாணத்தால் அத்தபஸ்வி அடிபட்டு ஹதனாகப்போய்விட்டேன்; என்று கதறிக்கொண்டு பூமியில் விழுந்துவிட்டார்; அந்த த்வனி என் செவியிலேறவும் யான் அவரிடம் சென்று மகரிஷே அறியாத்தன்மையால் மிருகமென்று நினைத்து மோசம்போன தெசரத சக்ரவர்த்தியான என்னைக் காப்பாற்றவேண்டும் என்று பிரார்த்தித்தபொழுது ஹே இராஜன்! நான் ஜாதியில் வைசியனாகையாலுன்னை பிரும்மஹத்தி தோஷம் பாதிக்கமாட்டாது. ஸமீபத்திலிருக்கும் பர்ணசாலையில் தாகத்தால் பீடிக்கப்பட்டு உதகத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் என் மாதாபிதாவுக்கு இக்குடத்திலிருக்கும் உதகத்தால் திருப்திசெய்து வைத்துப் பின்பு பாணத்தால் நான் அடிபட்டதாக தெரிவியும் என்று கூறி, மரணத்தை அடைந்தார். அந்த ரிஷியின் சொற்படி உதகத்தைக் கொடுத்துத் தாகத்தைத் தீர்த்தபிறகு இச்சமாசாரத்தைத் தெரிவித்தேன். இதைக்கேட்ட அம்முனியின் பிதா என்னைப்பார்த்து ஹே பாபி நீயும் என்னைப்போல புத்திரசோகத்தால் மரணத்தை யடைவாய் என்று சபித்துப் பொன்னுலகம் சென்றார். அச்சாபம் இப்பொழுது நினைவில் வந்தது என்று கூறி ஆ இராமா ஆ ஸீதே ஆ இலக்ஷ்மணா கைகேயியால் உங்களைப்பிரிந்து உயிரிழந்தேன் என்று கதறிக்கொண்டே விண்ணுலகமடைந்தார். ஸமீபத்திலிருந்த கௌஸல்யை முதலான ஸ்திரீகள் கதறவும் அரண்மனைக்கு வந்த வஸிஷ்டர் முதலிய மந்திரிகள் அரசனிறந்ததை யறிந்து, தசரதருக்கு உத்திரகிருத்தியம் செய்வதற்கு இராகவன் முதலானவர்களில்லாததால் அச்சரீரத்தை எண்ணெய்த்தோணியில் போட்டுக் காக்கும்படிச் செய்து, வனஞ்சென்ற இராகவன் பிதுராக்ஞையைத் தவறி திரும்பி நகரம் புகாதாகையால் கேகயதேசத்திலிருக்கும் பரதனுக்குப் பத்திரிகை அனுப்புவோம் என்பதாக மந்திரிகளுடன் யோசித்து வஸிஷ்டர் சீலாகுமென்ற தூதனிடமாக அம்மானுடைய கிரகத்திலிருக்கும் பரதனுக்குப் பத்திரிகை அனுப்புவித்தார். அப்பத்திரிகையைப் பரதன் வாங்கிப்பார்த்து அருகிலிருக்கும் சத்துருக்கனை நோக்கி சத்துருக்கனே! நம்முடைய மாதா பிதாக்களிருவரும் நம்மைப் பார்க்க இச்சித்து சமாசாரமனுப்பிவித்திருக்கிறார்களாகையால் நாம் அம்மானிடம்

உத்திரவுபெற்று நகரம் செல்வோம் என்றுரைத்து பாட்டனாகிய கேகய ராஜனிடத்திலும் அம்மானாகிய யுதாஜித்திடத்திலும் உத்திரவுபெற்றுத் தேரிலேறிக்கொண்டு அயோத்தியாநகரம் சென்று நகரம் சூன்யமாயிருப்பதைக்கண்டு சிந்தாக்கிராந்தராய் பிதாவினுடைய அரண்மனை நுழைந்து அவ்விடத்தில் பிதாவன்றியிலிருக்கும் கைகேயியைக் கண்டு நமஸ்கரிக்கவும் கைகேயி பரதனை எடுத்து மடியில் வைத்து வத்ஸா! என் தகப்பன் தாயார் தமையன் இவர்கள் க்ஷேமமா? என்னுடைய பாக்கியத்தினால் உன்னை க்ஷேமமாகப் பார்த்தேன் என்று கேட்டதற்குப் பதில் சொல்லாமல் தாயைப் பார்த்து, அம்மா அந்தப்புரத்திலிருக்கும்பொழுதெல்லாம் உன்னைவிட்டுப் பிரியாத என் தகப்பன் இப்பொழுது எவ்விடத்திலிருக்கிறார் சொல்லு. உன்னிடத்தில் தகப்பனை! பாராதது எனக்குப் பயமும் துக்கமும் உண்டாகிறது என்றுரைத்த பரதனைப் பார்த்து வத்ஸா! நீ துக்கப்படவேண்டியதென்ன இருக்கிறது. நீண்ட வயதுள்ள உன் பிதா ஆ இராமா ஆ ஸீதே ஆ இலக்ஷ்மணா என்று புலம்பிக்கொண்டே வானுலகம் சென்றார் என்பதாகச் சொன்ன கைகேயிவார்த்தையைக் கேட்டவுடன் வெட்டியமரம்போல பூமியில் விழுந்து; ஆ அண்ணா இராஜ்யத்தையும் என்னையும் இராகவனிடம் ஒப்பிவியாமல் துக்க ஸாகரத்தில் என்னைத் தள்ளிவிட்டு எங்குபோனீர் என்று கதறி எழுந்திருந்து கைகேயியைப் பார்த்து, அம்மா பிதா இறந்துபோகுங்காலத்தில் ஸீதையோடும் இலக்ஷ்மணனோடும் இரகுநாதன் எவ்விடம் சென்றார் அதைத் தெரிவி என்கிறதாகக்கேட்ட பரதனைப்பார்த்து, வத்ஸா! நீயில்லாமலிருக்குங் காலத்தில் உன் பிதா இராகவனுக்கு மகுடம்சூட்ட அவஸரப்பட்டார். அதை நான் தெரிந்து அக்காலத்தில் அவரால் அளிக்கப்பட்ட வரயிரண்டில் ஒன்றாலுனக்கு அரசாக்ஷியும் மற்றொன்றால் இராகவனுக்குப் பதினான்கு வருஷம் தண்டகாரண்யத்தில் வாசமும் கேட்டுக்கொண்டேன். அவ்விதமே உன் பிதா உத்திரவு கொடுக்கவும் பதிவிரதையான ஸீதையோடு இராமன் வனம் செல்ல லக்ஷ்மணனும் இராகவனைவிட்டுப் பிரிய மனமில்லாமல் பின்னேடு வனம் சென்றான். இவர்கள் வனம் சென்றவுடன் அரசன் இராமா இராமா என்று புலம்பிக்கொண்டு புத்திரசோகத்தால் பொன்



னுலகம் சென்றார். என்று கைகேயி உரைத்ததைக்கேட்டு, பரதன் மூர்ச்சிதராய் பூமியில் விழுந்து மூர்ச்சை தெளிந்தவுடன் கைகேயியைப் பார்த்து, ஹே பாபி! புருஷனைக்கொன்ற உன்னுடன் வார்த்தையாடேன். பாபியான உன் வயிற்றிலுதித்ததால் நானும் பாபமுள்ளவனாக ஆனேன். தகப்பனுக்கும் தமயனுக்கும் துன்பத்துக்குக் காரணமான யான் தீயினாலாவது விஷத்தினாலாவது என் சரீரத்தைப் போக்கிக் கொள்கிறேன். பர்த்தாவுக்கு மரணத்தை யுண்டுபண்ணின நீயும் கும்பீபாகம் என்னும் நரகத்தை யடைவாய் என்றுரைத்து, கௌஸல்யையினுடைய அரண்மனைசென்று கௌஸல்யையை நமஸ்கரிக்கவும் கௌஸல்யை மிகுந்த துயரத்துடன் பரதனைப்பார்த்து, ஏ குழந்தாய்! நீ கேகயதேசத்திலிருந்துகொண்டே கைகேயி மூலமாய் இராஜ்யத்தை சம்பாதித்துக்கொண்டாயா என்பதாகக் கேழ்க்க பரதன் கௌஸல்யையினுடைய சரணங்களைப் பிடித்துக்கொண்டு, அம்மா! இராகவனுக்கு பட்டாபிஷேகஞ் செய்யும் விஷயத்தில் கைகேயியால் எவ்விதமான விரோதம் நடத்தப்பட்டதோ அதை யான் அறியேன். கைகேயி என்னால் தூண்டப்பட்டு விரோதம் செய்திருப்பாளேயாகில் பிரும்மஹத்தி பண்ணினவனாக ஆவேன், என்று பிரதிக்ஞை செய்த பரதனை மடியில் வைத்து பாலகா! நீ குற்றமற்றவனென்பதாக அறிந்துகொண்டேன். பிதுர்கர்மத்தை முடித்து பிதாவாலளிக்கப்பட்ட இராஜ்யத்தையும் எங்களையும் பரிபாலித்து வரக்கடவாய் என்று சமாதானம் செய்துகொண்டிருக்கையில் வஸிஷ்டர் முதலிய மந்திரிவர்க்கங்கள் பரதன் வந்த சமாசாரத்தை யறிந்து பிதுர்சோகத்திலாழ்ந்திருக்கும் பரதனுக்கு அனேகவிதமாகத் தேறுதல் சொல்லி தசரதருக்கு உத்திரக் கிருத்தியம் செய்யும்படி செய்தார்கள். பிதுர்க்ருமம் முடிந்தபிறகு அனேக ரிஷிகளோடு வஸிஷ்டர் மகாநாடு கூடியிருக்கும் சபைக்குப் பரதனை அழைத்துவந்து, வத்ஸா! கைகேயியினுடைய வரனுக்காகப் பிதாவானுனக்களிக்கப்பட்ட இராஜ்யத்தை அனேக ரிஷிகளோடு மந்திர பூர்வகமாய் அபிஷேகம் செய்துவைக்கிறோம் என்றுரைத்ததைக் கேட்ட பரதன் வஸிஷ்டருடைய கால்களைப் பிடித்துக்கொண்டு, மகரிஷே! கைகேயியால் ஏற்படுத்தப்பட்ட இராகவனுடைய பட்டாபி

ஷேக விரோதமும் வனவாஸமும் தம்முடைய சரணசாக்ஷியாக நானறியேன். இராஜ்யத்தைப் பரிபாலிப்பதற்கு இராகவனிருக்கும்பொழுது யான் இராஜ்யத்தை அனுபவிக்க அருகனல்ல, ஆகையால் இராகவன் எவ்விதமாய் மரப்பட்டையையும் சடையையும் தரித்து லக்ஷ்மணருடன் வனம்சென்றாரோ அவ்விதமே யானும் சத்துருக்கனுடன் இராமனை அழைத்து வருவதற்கு நாளைய தினம் காலையில் வனம் செல்லுகிறேன்.

தங்களுக்கு வருவதற்கு அபிப்பிராயமிருந்தால் வாருங்கள் என்றுரைக்க வசிஷ்டர் முதலிய யாவரும் பரதன் வார்த்தையை சிலாகித்துத் தாங்களும் வனம் செல்லத் தயாரானார்கள். மறுதினம் காலையில் கைகேயி முதலிய தாய்மார்களோடும் வசிஷ்டர் முதலான மந்திரிகளோடும் நகரிலிருக்கும் பிரஜைகளோடும் படைகளோடும் வனம் செல்லும்போது சிருங்கிபேரபுரத்துக்கரசனான (குஹன்) படையோடு பரதன் வருவதைக் கேள்விப்பட்டு தன்னுடைய மந்திரிகளைப்பார்த்து ஹே! மந்திரிகளே இராகவன் சித்திரகூடபர்வதத்தில் வசித்துக்கொண்டிருந்தாரேயாகில் செலு சென்றவுடனே இராஜ்யத்திற்கு வந்துவிடுவார், நாம் நீடித்து பிரஜைகளைப் பரிபாலித்தாலும் சரிப்படமாட்டாதாகையால் நாம் அநேக சைன்னியத்தோடு சித்திரகூடம் சென்று இராக்ஷதர்கள் வசிக்கும் தண்டகாரண்ணியத்திற்குத் துரத்திவிடுவோமேயானால் இராகவனை அரக்கர்கள் பக்ஷித்துவிடுவார்கள். நாம் இராச்சியத்தை அனுபவிக்கலாம் என்கிற நினைவோடு வருகிறதாகத் தோற்றுகிறது. அப்படிக்கு வருவானேயாகில் நாம் பரதனை ஓடத்திலேற்றிக் கங்கையில் கவிழ்த்துவிடுவோமென்பதாக யோசித்துக்கொண்டு ஓடத்துறையில் நின்றுகொண்டிருந்த குஹன் ஜடாவல்லதாரியாய் இராமபஜனை செய்துகொண்டு பாதசாரியாய் வரும் பரத சத்துருக்கனுளைக் கண்டு பிரமித்து ஹே மந்திரிகளே நம்முடைய ஜென்மம் தொழில் யாவும் பாபகிருத்தியமாயிருப்பதால் என் புத்தி பாபகிருத்தியத்தையே நாடுகிறது என்றுரைத்து மந்திரிவர்க்கங்களோடு பரதனிடத்தில் சென்று வணங்கி ஹே பரதா! பாகவதோத்தமரான தம்முடைய தெரிசனத்தால் தாஸனான குஹன் தன்னியனாக ஆனேன் என்று கூற இச்சொல்



லைக் கேட்ட பரதன் குஹனை ஆலிங்கனம் செய்து ஹே மித்திரா என் பிராதாவான இராகவனுடைய தெரிசனத்தால் நீ தன்னியனாக ஆனாய் உன்னுடைய தெரிசனத்தால் நான் தன்னியனாக ஆனேன். என்னுடைய இராகவன் வைதேகியோடும் லக்ஷ்மணரோடும் எவ்விடம் சென்றாரோ அவ்விடம் என்னைப் போகும்படி செய்யவேண்டியது என்று சொல்லி சேனை முதலியவைகளுடன் குஹனால் தள்ளப்பட்ட ஓடத்தில் ஏறி கங்காநதியைக் கடந்து குஹன் முதலானவர்களுடன் பரத்துவாஜருடைய ஆசிரமம் சென்று பரத்துவாஜரை வணங்கவும் பரத்துவாஜர் பரதனை அனுக்கிரகித்து (குழந்தாய்) நீ இராஜ்யத்தை அனுபவிக்காமல் மரப்பட்டை முதலியவைகளைத் தரித்து ரிஷிகள் வசிக்கும் வனத்திற்கு ஏன் வந்தாயென்று கேட்க பரதன் அஞ்சலி அஸ்தனாய் தழுதழுத்த நாவுடன் பரத்துவாஜரைப்பார்த்து ஹே முனிசிரேஷ்டரே, உலகிலிருக்கும் ஜந்துக்களுடைய உள்ளத்தையறிந்த தாம் என்னைக் கேட்பது என்னுடைய அனுக்கிரகமே. இராகவனுக்கு தாஸனாயிருக்கும் யான் இராமச்சந்திரனுடைய காலில் விழுந்து இராஜ்யாதிகளை ஒப்புவித்து வசிஷ்டாதிகளும் பட்டணத்து ஜனங்களாலும் இராகவனிடம் நல்வார்த்தை சொல்லும்படி செய்து அயோத்திக்கு அழைத்துப் போய் மகுடாபிஷேகம் செய்வித்து இராகவனிடம் வேலையை யான் செய்து கிருதார்த்தனாக வேண்டுமென்று நினைத்து வந்தேன் என்பதாகச் சொல்லவும் பரத்துவாஜர் பரதனைப்பார்த்து குழந்தாய் நீ துக்கப்பட வேண்டாம். நீ இலக்ஷ்மணனைப் பார்க்கிலும் இராகவனிடத்தில் மிகுந்த அன்புள்ளவன் என்பதை முன்பே ஞானக்கண்ணாலறிவேன். இன்றைய தினம் யான் உன்னுடைய சைன்யம் யாவற்றிற்கும் விருந்துசெய்ய விரும்புகிறேன், இன்றைய தினம் நீ இங்கு இருந்து விருந்துண்டு நாளைக் காலையில் இராகவனைக் காணச் செல்லலாம் என்றுரைக்க பரதன் பரத்துவாஜரைப்பார்த்து, ஹே பகவன்! தாம் எவ்விதமாக ஆக்ஞாபிக்கிறீர்களோ அவ்விதமே யான் நடக்க சித்தமாய்க் காத்திருக்கிறேன், என்பதாகக் கூறி பரத்துவாஜரால் நடத்தப்பட்ட அதிதிபூஜையைப் பெற்று அன்றிரவு அங்கிருந்து மறுதினம் காலையில் பரதன் பரத்துவாஜர் முதலியவர்க

ளோடு சித்திரகூடம் சென்று அங்கு ஆசிரமத்தில் ஜடாவல்லதாரி
யாய் ஸீதையோடு தர்ப்பாசனத்தில் வீற்றிருக்கும் இராகவனுடைய சர
ணத்தில் யான் பாபியாக ஆகிவிட்டேன் என்று கதறிவிழவும், இராமச்
சந்திரன் பரதனை எடுத்துத் தழுவி, ஹே பரதா! பிதாவையும் இராஜ்
யத்தையும் விட்டு எதினிமித்தம் இவ்வனம் வந்தாய் என்று கேட்கும்
பொழுதே புலம்பிக்கொண்டுவரும் தாய்மார்களைப் பார்த்து பிரமித்து
நிற்க இவர்களோடு வந்த வஸிஷ்டபகவான் இராகவனை நோக்கி,
ஹே குழந்தாய்! தசரதசக்ரவர்த்தி உன்னுடைய பிரிவினாலே மிகுந்த
துயரத்தையடைந்து ஹா இராகவா! ஹா ஸீதே! ஹா லக்ஷ்மணா!
என்று புலம்பிக்கொண்டே, சுவர்க்கம் சென்றார் என்றுரைக்கவும்
இராமச்சந்திரன் பெருங்காற்றிலடிபட்டமரம்போல் பூமியில் விழுந்து,
ஹே அண்ணா! அநாதையாக என்னைவிட்டு எங்கு சென்றீர். இனி
என்னை அன்புடன் யார் சீராட்டப்போகிறார்கள். என்று புலம்பவும்
லக்ஷ்மணர் ஸீதை முதலானவர்களும் புலம்பினார்கள். வஸிஷ்டர்
இராகவனை எடுத்துத் தழுவி, ஹே ரகுகுலோத்தமா! பிறந்தவனுக்கு
மரணமும் இறந்தவனுக்கு ஜனனமும் ஸித்தமாயிருக்க பரிகரிக்கக்
கூடாத இவ்விஷயத்தைக் குறித்து நீ துக்கப்படுவது தகுதியல்ல.
இன்னமும், வேதகாதிகள் பிரகிருதியிலிருந்துண்டாய் மத்தியில் காணப்
பட்டு பின்பு பிரகிருதியிலேயே மறைகின்றன. இந்த விஷயத்தில்
ஏன் நீ விசனப்படவேண்டும். இன்னமும், மனிதன் எப்படிப் பழைய
ஆடைகளைக் கழித்துப் புதிய ஆடைகளைத் தரிக்கிறானோ அப்படி ஆத்மா
வானவன் பழைய உடல்களை விட்டுப் புதிய உடல்களை அடைகிறான்;
என்று சொல்லப்பட்டிருக்கிறபடி உன் பிதா மானிட சரீரத்தை விட்டு
திவ்ய சரீரத்தை யடைந்து சுவர்க்கத்தில் வாஸஞ்செய்துகொண்டிருக்
கிறார். அது விஷயத்தில் நீ ஏன் துக்கப்படுகிறாய் என்பதாக அநேகம்
தேறுதல் சொல்லவும் இராகவன் சகலமான பேர்களோடும் மந்தா
கினியை அடைந்து ஸ்நானஞ்செய்து பிதுரு கிருத்தியத்தை விதிப்படி
முடித்தபின் அனைவரும் ஆசிரமஞ்சென்று அமர்ந்தார்கள். உடனே
பரதன் எழுந்து அஞ்சலி ஹஸ்தனாய் இராகவனைப்பார்த்து, ஹே ரகு
குலோத்தமா தேவரீருடைய பிதாவால் பரிபாலிக்கப்பட்ட இராஜ்யத்தை



பிதாவுக்குச் சமானமாயிருக்கும் தேவரீர் பரிபாலித்து அச்வமேதாதியாக்
ஞங்களை நடத்தி குலவிருத்திகரமான புத்திரர்களை உண்டுபண்ணி
அவர்களிடம் ராஜ்யத்தை ஒப்பிவித்து பிறகு தேவரீர் வனத்திற்கெழுந்
தருளுவது நியாயமாயிருக்க என் தாயாருடைய அல்பப் பிழைக்காக இப்
படி வனத்திற்கெழுந்தருளுவது உசிதமல்ல. ஆகையால் இப்பொழுதே
தேவரீர் அயோத்தியா நகருக்கெழுந்தருளி முடிசூட்டிக்கொண்டு அடி
யேன்களை அநுக்கிரகிக்க வேண்டுமென்றுரைத்து சரணத்தைப் பிடித்
துக்கொள்ளவும் இராகவன் பரதனை எடுத்துத்தழுவி மடியில் வைத்து,
ஹே வத்ஸா! நம்முடைய பிதாவானவர் உன் தாயை விவாஹம்பண்ணிக்
கொள்ளுங்காலத்தில் உனக்கு ராஜ்யத்தை அளிப்பதாக உன் பாட்ட
னன யுதாஜித்தினிடம் பிரதிக்ஞை செய்ததாகக் கேள்விப்பட்டிருக்
கிறேன். இப்பவும் தேவாஸுரயுத்தத்தில் கைகேயிக்கு அளித்த வர
னுக்காக நமது பிதா உனக்கு ராஜ்யத்தையும், எனக்கு ஆரண்யத்தையும்
அளித்தார். அதற்கு நாம் விரோதம் செய்வோமாகில் அசத்தியம்
விருத்தியடையும், என்றுரைக்கவும் பரதன் இராகவனுடைய மடியி
லிருந்து எழுந்து, இராகவன் நகரத்திற் கெழுந்தருளாதவரையில்
ரகுநாதன் வனஞ்செல்லக் காரணமான இவ்வுடலை மாய்த்துவிடு
கிறேன் என்பதாக நிச்சயித்து பிராயோபவேசம் பண்ணத்தொடங்குஞ்
சமயத்தில், இராகவன் வஸிஷ்டரை நேத்திரத்தால் சங்கேதஞ்
செய்யவும் வஸிஷ்டர் எழுந்து அவதார ரஹஸ்யத்தை பரதனுக்கு
உபதேசிப்பதற்கு ரஹஸ்யபிரதேசத்திற் கழைத்துப்போய், குழந்தாய்!
சிறுபிள்ளைத்தனத்தால் தேவரகஸ்யத்தை யறிந்துகொள்ளாமல் பிரா
யோபவேசம் பண்ணத்தொடங்கின நீ நிச்சயமாய் என் வார்த்தை
யைக் கேள். முன்காலத்தில் தேவர்களெல்லாம் ராவணனுடைய
ஹிம்சையைப் பொறுக்கமாட்டாது பிரமனிடம் முறையிட அவர்
ஜகன்னாதனை வேண்ட அவர் இராமனாகவும், யோகமாயையானவள்
ஸீதையாகவும், ஆதிசேஷன் லக்ஷ்மணனாகவும், அவதரித்து, இரா
வணனை வதைக்க இச்சையுள்ளவர்களாகச் செல்லுகிறார்கள். கைகேயி
யினுடைய இரண்டு வரமும், நிஷ்டூரமான வார்த்தையும் தெய்
வச்செயலேயல்லாது அவள் சொன்னதல்ல; ஆதலால் தாய்மார்க

ளோடும் சேனைகளோடும் நகர்க்குச் செல்; இராவணனைக் குலத்தோடு வதைத்தபின் அயோத்திக்கெழுந்தருளி முடிசூட்டிக்கொள்வார்; என்றுரைக்க பரதன் மிகுந்த ஆனந்தத்தோடு இராகவனை ஸாஷ்டாங்கப் பிரணாமம் பண்ணி; ஹே ஜகத்குரோ! பிருமாதிகளாலாராதிக்கப்பட்ட தேவரீருடைய பாதுகைகளையாவது அடியேனுக்குக் கொடுத்தருளவேண்டும். அடியேன் தேவரீர் எழுந்தருளியிருக்கும் ஸ்தானத்தில் பாதுகைகளை எழுந்தருளப்பண்ணி தேவரீர் இராவண வதானந்தரம் ஆகி நகரத்திற்கெழுந்தருளி திருமுடி சூட்டிக்கொள்ளுகிறவரையில் தேவரீரை ஸேவிப்பதுபோலப் பாதுகைகளை ஸேவித்துக்கொண்டு இராஜ்யத்தைப் பரிபாலித்து வருகிறேன் என்று பிரார்த்திக்கவும் இரகுநாதன் பாதுகைகளைப் பரதனுக்களித்தனர். பரதன் பாதுகைகளை சிரத்தில் வைத்து தழதழத்த நாவுடன் இராகவனைப்பார்த்து, ஹே பிரபோ! (௧௪) வருஷம் சென்றபின் பதினைந்தாவது வருஷத்தின் முதல் தினத்தில் அயோத்திக் கெழுந்தருளாதவனாயில் இச்சரீரத்தைத் தீயில் புகுத்தி மாய்த்துவிடுவேனொழிய, அரைநிமிஷமும் அதற்குமேல் வைத்துக்கொண்டிரேன் என்று சொல்லி விடைபெற்று வஸிஷ்டாதிகளோடு பாதுகைகளை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, அயோத்திக்குச் சென்று பாதுகைகளை ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளப்பண்ணி முடி சூட்டிவித்து ஸகல ராஜ்யவிசாரணைகளையும் பாதுகையை முன்னிட்டே நடத்திக்கொண்டு சத்துருக்கனனோடுகூட நந்திக்கிராமத்தில், இராகவனுடைய வரவை எதிர்பார்த்தவராய் தவவேடம் பூண்டு தவஞ்செய்துவந்தனர். பிறகு இராமசந்திரன் மறுதினம் காலையில் வால்மீகருடைய ஆசிரமம் சென்று அவரைவணங்கி மகரிஷே நாங்கள் தண்டகாரண்யத்தில் வஸிக்கும் மஹாரிஷிகளைத் தரிசித்துக்கொண்டு அவ்விடத்தில் கொஞ்சநாள் வஸித்து பின்பு இவ்விடம் வந்து சேருகிறோம் என்று கூறி அவரிடம் விடைபெற்று, தண்டகாரண்யம் செல்லும்பொழுது அத்திரிமகரிஷியாசிரமத்தையடைந்து அவரை வணங்கி அவரால் அளிக்கப்பட்ட ஆதித்தியத்தைப்பெற்று அம்மஹரிஷியினுடைய தர்மபத்தினியான அநசூயையால் அலங்கரிக்கப்பட்ட ஆபரணத்தோடுகூடியிருக்கும் ஸீதையொடு விடைபெற்று தண்ட-



காரண்யத்தை யடையவும் இரகுநாதன் லக்ஷ்மணனைப் பார்த்து, லக்ஷ்மணா! இதற்குப்பிறகு மிகுந்த ஜாக்கிரதையோடு செல்லவேண்டியவர்களாயிருப்பதால் வில்லை நாணேற்றிப் பாணத்தையும் கையில் தரித்தவனாக யான் முந்திச் செல்லுகிறேன். நீயும் இவ்விதமாகவே பின்தொடர்ந்து வா. நம்மிருவர்களுடைய மத்தியில் ஸீதை ஆத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் மத்தியில் மாயையைப்போல் தொடர்ந்துவரட்டும். தண்டகாரண்யத்தில் அரக்கர்களுடைய தீவினை மிகுதியென்று கேள்விப்பட்டிருக்கிறேன் ஜாக்கிரதையால் நான்குபுறமும் பார்த்துச்செல், என்பதாகச் சொல்லிக்கொண்டே ஸீதையோடும் லக்ஷ்மணனோடும் தண்டகாரண்யத்தில் கொஞ்சதூரம் செல்லவும், அனேகம் யானைகளைத் தந்தப்பல்லில் இடுக்கிக்கொண்டும் அனேக ஸிம்ஹங்களை சூலத்தில் குத்தித் தூக்கிக்கொண்டும் பயங்கரமான ரூபத்தோடு கர்ஜித்துக்கொண்டு ஒரு ராக்ஷதன் இவர்களுடைய எதிரில் வந்து கையில் வில்லையும் தோளில் சரக்கூடையும், இடையில் மரவுரியையும், தலையில் சடையையும், பக்கத்தில் பேதையையும், பார்க்கும்பொழுது வேஷதாரிகள்போலத் தோன்றுகிறதே. இப்பொய்வேஷம் தரித்த நீங்கள் யாவர். எதற்காகப் பயங்கரமான இவ்வனம் வந்தீர்கள். அழகுள்ள சிறுவர்களான நீங்கள் எனக்கு ஆகாரமாகப் போகிறீர்களே. ஐயோ நீங்கள் எனக்கு ஆகாரமாவதற்காகவோ படைக்கப்பட்டீர்கள் என்றுரைத்ததைக்கேட்ட இராகவன் அரக்கனைப் பார்த்து (ஹே! இராக்ஷதா) தர்மபத்தினியான ஸீதையோடும் பிரியமுள்ள தம்பியான லக்ஷ்மணனோடும் இராமனென்று பெயருள்ள யான் உன்னைப்போன்ற துஷ்டர்களை வதைப்பதற்காகவே பிதாவினுடைய வார்த்தையைக் காரணமாகக்கொண்டு இவ்விடம் வந்தேன் என்றுரைத்ததைக் கேட்ட அரக்கன் இராகவனைப்பார்த்து (ஹே! இராமா) லோகப்பிரஸித்தனான என்னை விராதன் என்று அறியாயோ. என்னுடைய பயத்தால் ரிஷிகள் இக்காடுவிட்டு ஓடிவிட்டார்கள். நீங்கள் ஜீவிக்க இச்சித்தால் ஆயுதத்தோடு ஸீதையைவிட்டு ஓடிவிடுங்கள். இல்லாவிடில் இருவரையும் பக்ஷித்துவிடுவேன், என்று சொல்லிக்கொண்டே ஸீதையை அபகரிக்க வேகமாய் வந்த விராதனை ஒரே பாணத்தாலடிக்க, அவன் இராக்ஷதரூபத்தை மாறி கந்தர்வரூபத்தை

அடைந்து பிரபோ சத்ருக்களை ஸம்ஹரிப்பதற்காக ரகுகுலத்தி
லவதரித்த ஜகன்னாதனை தேவரீரைத் தரிசித்த உடன் சாபத்தினின்
றும் விடுபட்டு தன்னியனுகயான் யான் என் உலகமான கந்தர்வலோகத்
திற்குச் செல்லுகிறேன் என்றுரைத்து ஆகாசமார்க்கமாய்ச் சென்
றான். பிறகு ரகுநாதன் தெண்டகாரண்யத்திற் கொஞ்சதூரம் சென்ற
வுடன் சாபங்கமஹரிஷியினுடைய ஆசிரமத்தைக்கண்டு அங்கு சென்று
அவரை வணங்கி அவராலாராதிக்கப்பட்ட அதிதிபூஜையைப் பெற்று
ஆஸனத்திலமர்ந்திருக்கையில், சரபங்கர் இராகவனைநோக்கி, ஹே பர
மேசுவரா! நீடித்த காலமாய் தேவரீரை ஸேவிக்கவேணுமென்று இவ்
விடத்திலேயே தபஸுசெய்துகொண்டிருந்தபடியால் தேவரீருடைய
ஸேவை அடியேனுக்குக் கிடைத்தது. அடியேன் செய்த தவத்திற்கு
எந்தப் பலனோ அதைத் தேவரீரிடத்தில் நேராகவே ஸமர்ப்பித்து
விடுகிறேன். புண்ணிய பாபங்களைவிட்டு விலகிய அடியேனுக்கு
மோக்ஷத்தை சாதித்தருளப் பிரார்த்திக்கிறேன். இப்பிரகிருதி சம்பந்த
மான சரீரத்தை அக்னியிற் போக்கி ஸ்ரீ வைகுந்தத்தை அடைகிறேன்
என்பதாகப் பிரார்த்தித்துப் பகவத்அனுக்கிரகத்தின்பேரில் தபஸையே
அக்கினியாகச் செய்து, அதில் பகவானைத் தியானித்து பிரவேசித்த
வுடன் சங்கசக்கிராதி லக்ஷணமுள்ள திவ்ய சரீரத்தை அடைந்து
வைகுந்தம் சென்றார். இராகவன் தண்டகாரண்யத்திற்கு வந்திருப்ப
தைக் கேள்விப்பட்ட மஹாமுனிவர்களெல்லாரும் சரபங்க மஹரிஷியி
னுடைய ஆசிரமத்திற்கெழுந்தருளி இராகவனைத் தரிசித்துத் தங்களு
டைய குறைகளைச் சொல்லிக்கொள்வதற்காக ஒன்றாய்க்கூடி ரகுநாதனி
டம் வந்து வணங்கி, ஹே பகவன்! முந்தி பூமியானது அரக்கர்களுடைய
பாரத்தால் பீடிக்கப்பட்டதைச் சதுர்முகனாலறிந்து அவதரித்த தேவரீர்
நேராகவே இத்தண்டகாரண்யத்தில் துஷ்டர்களான அரக்கர்களாலே
அநேகவிதமாய் பீடிக்கப்பட்ட தியான நிஷ்டர்களான மகரிஷிகளு
டைய சரீரங்களைக் கடாக்ஷித்தருளவேண்டும்; தேவரீரைத்தவிர எங்
களுக்கு இவ்வுலகத்தில் வேறு கெதியில்லாததால் சரணாகதி செய்த
அடியேங்களை அரக்கர்களுடைய உபத்திரவத்தினின்றும் இரக்ஷித்
தருளப் பிரார்த்திக்கின்றோம்; என்று கூற, இராகவன், மஹரிஷி



களைப்பார்த்து, ஹே மஹரிஷிகளே! தண்டகாரண்யத்திற்குத் தற்செய
லாக வந்த என்னைத் தேடிவந்து சரணாகதி பண்ணினீர்களானதை
யால் உங்களுக்குச் சத்ருக்களாயிருக்கின்ற அரக்கர்களைச் சீக்கிரத்
தில் ஸம்ஹரித்துவிடுகிறேன்; என்று அபயப்பிரதானம் பண்ணி,
தபோநிதிகளான முனிகளிடத்தில் விடைபெற்று சுதீக்ஷ்ணர் அகஸ்
தியர் முதலிய முனிவர்களுடைய ஆசிரமஞ்சென்று அவர்களால்
அளிக்கப்பட்ட ஆதித்தியத்தைப்பெற்று பஞ்சவடி சென்று, லக்ஷ்
மணனால் கட்டப்பட்ட பர்ணசாலையில், ஸீதையோடு இராகவன்
வசித்து வருகையில், இராவணனுடைய தங்கையான சூர்ப்பனகை
வனமார்க்கமாய் வரும்போது சங்கசக்கிராதி ரேகைகளுடன் பூமியில்
பதிந்திருக்கும் அடிகளைப்பார்த்துக் கண்டு மோகித்து அரக்கர்கள்
காமரூபிகளானதையால் சூர்ப்பனகை செவ்வியவன்முன் பத்மினீஜாதிப்
பெண்ணைப்போல வடிவெடுத்து அடியைத் தொடர்ந்து வந்து ஸீதை
யோடு பர்ணசாலையி லமர்ந்திருக்கும் ரகுநாதனைப் பார்த்து, உன்பேரில்
மோகங்கொண்டு திரியும் என்னுடைய தவப்பயன்தான் உன்னைக்
காணலாச்சுது, மாரன் கணைக்கென்னை இரையாக்காமல் காத்தருள
வேணும் என்றுரைத்ததைக் கேட்ட ரகுநாதன் சூர்ப்பனகையை
நோக்கி புன்சிரிப்போடு ஜானகியைக் கடைக்கண்ணால் பார்த்துக்
கொண்டே ஏ பெண்ணரசே! நற்குணமுள்ளவளாய் என்னைவிட்டுப்
பிரிய மனமில்லாமல் மிருகாதிகள் வசிக்கும் வனத்திற்குப் பின்
தொடர்ந்து வந்த இம்மனைவியோடு வாழும் என்னுடைய கற்பை
யழிக்க நீ நினைப்பது உசிதமல்ல. என்னைப் பார்க்கிலும் ரூபத்தில்
மிகுந்த தம்பி லக்ஷ்மணனுக்கு தர்மபத்னி இவ்விடத்திலில்லை; அவ்
விடம் செல்வாயாகில் உன்னபீஷ்டம் பூர்த்தியாகும் என்றுரைத்ததைக்
கேட்டு சூர்ப்பனகை ஆனந்தம் கொண்டு லக்ஷ்மணரிடம் சென்று
ஆலிங்கனம் செய்துகொள்ள எத்தனிக்கையில், லக்ஷ்மணர் இராகவ
னிடம் பேசிவந்த வன்மையால் அரக்கியென்று நிச்சயித்து கத்தியை
உருவி அவளுடைய மூக்கையும் காதுகளையும் கொய்துவிட்டார்.
மூக்கு அறுபட்ட சூர்ப்பனகை கதறிக்கொண்டு ஜனஸ்தானத்தி
லிருக்கும் காதிகளிடம் சென்று விர்த்தாந்தத்தைச் சொல்லுதல்.

சூர்பனகையினது கூக்குரலைக்கேட்ட கரன் தன்னிடமுள்ள சைனியங்களில் பதினாலாயிரம் ராக்ஷசர்களை ஸ்ரீ ராகவனிடம் அனுப்பினான். முதலில் பதினான்கு ராக்ஷத தலைவர்களை ராகவன் மடியச்செய்தனர். பிறகு கரனிடம் இவர்கள் மடிந்த விருத்தாந்தம் சூர்ப்பனகை மூலமாய் அறிய கரன் யுத்தத்திற்கு திரிசிரஸ் தூஷணன் முதலானவர்களோடு வர முதலில் அனேக ராக்ஷதர்களையும் தூஷணனையும் திரிசிரஸையும் மடியச்செய்து கரனையும் வதைத்தனர். இவ்விதம் ஜனஸ்தானத்தில் நடந்த விருத்தாந்தத்தை அகம்பன் ராவணனிடம் அறிவிக்கவும் சூர்பணகை தன்னைக் காக்கவெண்ணி ராமரது பராக்கிரமத்தையும் ஸீதையை அபகரிக்கும் உபாயத்தையும் சொல்ல, அதைக்கேட்ட ராவணன் மாரீசனிடம் போய் ஸீதையை அபகரிப்பதற்குத் தனக்கு உதவிசெய்ய வேண்டுமென கேட்டுக்கொள்ள, அதற்கு மாரீசன் ஸ்ரீராமரது பராக்கிரம விசேஷத்தை எடுத்துச்சொல்லக் கேட்ட ராவணன் எப்படியாவது நீ எனக்கு உதவி புரிந்தாலாச்சு, இல்லாவிடில் உன்னை அதம்செய்து விடுவேனென்று சொல்ல, மாரீசன் ராவணனது கோபத்தால் மடிவதைக் காட்டிலும் ஸ்ரீராகவனது கோதண்டத்தால் மடிந்து உத்தம பதம் பெறுவதே அவனது கோரிக்கையென அதற்கிசைந்தான். மாரீசன் மானுருவு கொண்டு ராமாசிரமத்திற்குப் போகவும் அதைப்பார்த்து ஸீதை ஆச்சரியப்பட்டு அதை தனக்கு வேண்டுமென்று ராகவனை வேண்டலும், அதற்கு லட்சுமணர் தடுத்தும், ராமன் அப்பொன்மானான மாயாமானை பின் தொடர்ந்து விரட்டிச்செல்ல அது ராகவனது கையில் அகப்படாதது கண்டு தன்னுடைய கோதண்டத்தைப் பிரயோகிக்க அவன் ஹா ஸீதா! ஹா லக்ஷ்மணா! என்று கதறிக்கொண்டு கீழேவிழுந்து மடிந்தான். இச்சத்தத்தைக் கேட்ட ஸீதை தம்மருகில் இருந்த லக்ஷ்மணரைப்பார்த்து இக்கூக்குரலிட்டவர் தனது பிராணநாயகர் என்றும் லக்ஷ்மணரைப்போய்ப் பார்த்து வரும்படி கேட்டுக்கொள்ள, அதற்கு லக்ஷ்மணர் இது மாயா ராக்ஷதனுடைய குரல் என்றும் அதைப்பற்றிக் கொஞ்சமேனும் கவலைப்படவேண்டாமென்றும் ஜானகிக்கு ராமருடைய பராக்கிரமத்தைத் தெரிவிக்க, அதற்கு ஜானகி லட்சுமணரது வாக்கை அங்கீகரியாமல் கடுஞ்சொற்களால் நிந்தித்ததைக் கேட்ட லட்



சுமணர் ராமரைத் தேடிக்கொண்டு பின் சென்றனர். லட்சுமணன் ஜானகியை விட்டகன்றதைக்கண்ட இராவணன் சன்னியாசி கோலத்துடன் ஸீதையின் அருகில் வந்து அவளைக் கண்டு புகழ்ந்து ஸீதையின் விருத்தாந்தத்தைக் கேட்டலும் அதற்குப் பதில்கூற ஸீதையினிடம் ராவணன் தன்னுடைய நிஜசுரூபத்தைக் காட்டி தன் பராக்கிரமங்களை ஸீதைக்குச் சொல்லி ஸீதையை அவ்விடத்தை விட்டு எடுத்துச் செல்லும்போது ஸீதை தன் பிராணநாதனை நினைத்து நினைத்துக் கதறி ஓலமிட்டாள். ராவணன், ஸீதையைத் தனது விமானத்தில் ஏற்றிச் செல்லும் அலங்கோலத்தையும் விமானம் ஆகாயத்தில் செல்வதையும் கண்ட ஜடாயு என்ற கழுகு அரசன் ராவணன் முன்சென்று ஸீதையைவிட்டுவிடும்படி இதமான வார்த்தைகளால் சொல்லியும் கேளாததினால் ஜடாயு ராவணனுடைய ரதத்தையுடைத்தும் சாரதியின் கழுத்தை அறுத்துச் சின்னாபின்னமாக்கிவிட்டான். ராவணனுக்குக் கோபம் அதிகரிக்க ஜடாயுவுடன் யுத்தம் புரிந்து ஜடாயுவின் இரண்டு சிறகுகளை அறுத்ததும் ஜடாயு கீழே விழுந்து விட்டார். இதை மீறி இராவணன் ஸீதையுடன் சென்றுகொண்டு இருக்கும்போது ஸீதை தனது ஆபரணங்களைக் கழற்றி கீழே எறிந்துவிட்டாள். இராவணன் ஸீதையைக் கொண்டுபோகும் காலத்தில் ஸீதை அவனை துரும்பாக நினைத்து பலவாறாக நிந்தித்தனள். ராவணன் ஸீதையை அசோக வனத்தில் இராக்ஷத ஸ்திரீகளின் காவலுக்கு வைத்தான். இங்கு இப்படி இருக்க, மானை விரட்டிச்சென்ற இராகவன் மிருகரூபம் தரித்திருந்த மாரீசனை வதைத்துத் திரும்புகையில் அபசகுனங்கள் நேரிட்டதினால் கவலையுறவும் எதிரில் வரும் லட்சுமணனைக்கண்டு லட்சுமணருடன் நீ ஏன் ஸீதையை விட்டு இங்கு வந்தாய் என்று கவலையுடன் கேட்டுக்கொண்டே வர இருவர்களுக்கும் நேர்ந்த அபசகுனங்களால் ஸீதைக்கு என்ன ஆபத்து வந்து விட்டதோ என்ற சந்தேகத்துடன் சோகமுற்று புலம்பிக்கொண்டு வரவும் ஸீதையைப் பர்ணசாலையில் தனித்துவிட்டு வந்த காரணம் யாதென லட்சுமணரை வினவ, அதன் விருத்தாந்தத்தை லட்சுமணர் சொல்லிக்கொண்டே ஆசிரமத்துக்கு வந்தார்கள். பர்ணசாலையில் ஸீதையைக் காணாமல் கதற, லட்சுமணர் பல

விதமான தேறுதல் சொன்னார். ராமரது சோகத்துக்கும் ரோதனத்திற்கும் லட்சுமணர் பலவிதமான சமாதானப் படுத்தினார். பிறகு இருவருமாக ஆசிரமத்தை விட்டுக்கிளம்பி சீதையைத் தேடிக்கொண்டு வருகையில் வழியில் புலப்படும் அடையாளங்களால் சீதையை யாரோ அபகரித்துப் போய்விட்டனரென்று நிச்சயித்து லட்சுமணருடன் தேடிக்கொண்டே வரும் மார்க்கத்தில் ஜடாயு ரத்தத்தைக் கக்கிக்கொண்டு பூமியில் விழுந்து கிடப்பதையும் ஸ்ரீராமர் கண்டு லட்சுமணனைப் பார்த்து இவனே நம் சீதையைப் பக்ஷித்துவிட்டுக் கழுகுவேடம் பூண்டு படுத்து இருக்கின்றனன். ஆகையால் யான் இவனை கூரிய பாணங்களால் கொல்லுகிறேன் என்று கோபத்துடன் சொல்வதைக் கேட்ட ஜடாயு ஸ்ரீராகவனைப்பார்த்து சீதையும் என்னுடைய உயிரையும் இராவணன் அபகரித்துக்கொண்டு போய்விட்டனன் என்றான். ஜடாயு இராவணனுடைய விருத்தாந்த முழுவதையும், கேட்டு தனக்கும் இராவணனுக்கும் நடந்த யுத்தத்தையும் தான் தசரதருடைய நண்பன் என்பதையும் தெரிவித்து உயிர் விட்டனன். உடனே ஸ்ரீ ரகுநாதன் ஜடாயுவுக்குச் செய்யவேண்டிய உத்திரக்கிரியைகளை செய்து நல்லலோகம் அடையும்படியும் செய்தார். பிறகு இருவருமாகப் புறப்பட்டு க்ரௌஞ்சாரண்யம் என்னும் வனத்தில் பிரவேசித்தார். அதைத் தாண்டி மதங்காசிரமத்துக்குக் கிழக்குப்பக்கத்தில் ஒரு வனத்தில் குகைக்குள் அயோமுகி என்னும் ராக்ஷஸ்திரீ வெகு படாடோபத்துடன் இவர்களை எதிர்த்துச் சண்டைசெய்ய ராமலக்ஷ்மணர் இவளை வதைத்துக் கொன்றனர். பிறகு கபந்தன் எதிர்பட அவனையும் வதைத்துக் கந்தர்வவுருக்கொண்டு இராமலக்ஷ்மணர்களை ஸ்தோத்தரித்து சுக்ரீவனை ஸ்நேகஞ்செய்தால் சீதையை அடையலாமென்று விளம்பிய கபந்தனுக்கு நற்கதி கொடுத்துக் காப்பாற்றினார். பிறகு இருவரும் சபரியின் ஆசிரமத்திற்குச் சென்று அவளால் அளிக்கப்பட்ட அதிதி பூஜைகளை ஏற்றுக்கொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு பம்பாஸரஸுக்குச் சென்றனர். அவ்விடத்தில் ஸ்ரீராமர் சீதையை நினைந்து நினைந்து விரகவேதனைப் பட்டுக்கொண்டிருந்தனர். இராமலக்ஷ்மணர்கள் பம்பாஸரஸிலிருந்து வந்துகொண்டிருக்கையில் வானரசிரேஷ்டனும் பலபராக்ரம-



சாலியாகிய சுக்ரீவன் ரிஷ்யமூக பர்வத உச்சியிலிருந்து இவ்விரு ராஜகுமாரர்கள் வருவதைப்பார்த்து திகிலடைந்து வாலியால் அனுப்பப்பட்டவர்களென்றெண்ணி வானரர்கள் வசிக்கும் மதங்காசிரமத்தில் பயந்து ஒளித்துவிட்டான். பிறகு சுக்ரீவன் அனுமானை அனுப்பி இவர்கள் யாவரென்று விசாரித்துவரும்படி அனுப்ப, அனுமார் இராமலக்ஷ்மணர்களைப்பார்த்து முறைப்படி பூஜித்து நேர்மையான வசனங்களினாலே பேசி அவருடைய விருத்தாந்தத்தைத் அறிந்துகொண்டார். பிறகு இராமலக்ஷ்மணர்களை அனுமார் தன் தோளின்மேல் தூக்கிக்கொண்டு ரிஷ்யமூக பருவதத்தின் சிகரம் சென்று சக்கியத்தைச் செய்துவைத்தார். பிறகு சுக்ரீவன், தனக்கும் வாலிக்கும் இருக்கும் விரோதத்தை ஸ்ரீராகவனிடம் கூறவும் அதற்கு அபயஸ்தம் தந்தருளினர். பிறகு சுக்ரீவனால் வாலியின் பிரதாபத்தை யறிந்தனர். வாலியை வதைப்பதாக ஸ்ரீராகவன் கூறினர். பிறகு சுக்ரீவன், வாலியை யுத்தத்திற்கு வரும்படிச் செய்து இருவருக்கும் பிரமாதயுத்தம் நடக்கையில் இருவருடைய அடையாளந் தெரியாமையினால் மறுதினம் சுக்ரீவனுக்கு ஓர் மாலையை அடையாளமிட்டு யுத்தத்திற்குப் போகும்படிச்செய்து வாலியையுத்தத்திற்கு வரும்படியாய் சுக்ரீவன்செய்ய, வாலியினது பத்தினியாகிய தாரை வாலியை யுத்தத்திற்குப் போகாதபடியும், ஸ்ரீ ராகவனின் மஹிமையும் எடுத்துக் கூறி யுத்தஞ்செய்ய வேண்டாமென தடுத்தனள். அதை வாலி கேளாது சுக்ரீவனுடன் யுத்தஞ் செய்கையில் ஸ்ரீராமரால் விடுக்கப்பட்ட ஓர் பாணமானது மராமரம் ஏழையும் துளைத்து வாலியின் மார்பில் பாய்ந்தது. உடன் வாலி ஸ்ரீராகவனை பலவாறாய் நிந்தித்தனர். அதற்கு இராகவன் பதிலுரைத்ததைக் கேட்டு வாலி மரணமுற்றான். வாலியினது மரணத்தைக் கேட்டு தாரை, அங்கதன் முதலானவர்கள் வாலியிடம் வந்து கதறியழுது இராமரால் தேறுதல் சொல்லி தேற்றினார்கள். பிறகு சுக்ரீவனுக்கு ராஜ்யாபிஷேகஞ்செய்வித்து, அங்கதனை யுவராஜா வாக்கினார்கள். மாரிகாலம் முடிந்தவுடன் ஜானகியைத்தேட வானரவீரர்களை அனுப்புவதாகச்சொன்ன சுக்ரீவன் கிரீடாபோகத்தில் மூழ்கி யிருந்துவிட்டான். பிறகு லக்ஷ்மணர் கோபங்கொண்டு சுக்ரீவனிடம் வந்து கோபங் கொள்ளவும், தாரை லக்ஷ்மணர்

கோபத்தைச் சாந்தப்படுத்தினள். பிறகு சுக்ரீவன் வானரவீரர்களை அழைத்துக்கொண்டு ஸ்ரீ ராகவனிடம் வந்து நின்று ஜானகியைத்தேட நாலுதிக்குகளிலும் வானரவீரர்களை அனுப்ப ஏற்பாடு செய்தான். விநுதன் என்னும் ஸேனாதிபதியைப் பல வானரவீரர்களுடன் கிழக்கு திக்கிற்கு அனுப்பினன். மஹா வீரபராக்கிரம சாலியாயுள்ள அனுமான் முதலானவர்களைத் தென்திசைக்கு அனுப்பினன். சுஷேணனை மேற்குதிக்கிற்கும், சதவலியை வடக்குதிக்கிற்கும் அனுப்பினன். இப்படிக்கு அனுப்பிய வீரர்களுக்கு ஜானகியை தேடிப்பார்த்து நற்செய்தியுடன் இவ்விடம் வரலாமேயன்றி இல்லாவிடில் இவ்விடம் வரக்கூடாது என்றும் கண்டிப்பான உத்திரவையும் செய்தனன் வானர வீரர்களெல்லாம் சுக்ரீவனது ஆக்ஞையைச் சிரமேல் வஹித்து ஸீதையைத் தேடும்பொருட்டு தங்கட்தங்கட்கு ஏற்பட்ட திக்குகள் தோறும் போய் மலைவனாந்தரம் முதலானவைகளில் எல்லாம் நன்றாய் தேடியும் காணாமல் சுக்கிரீவன் முன்பு வந்து தாம் ஸீதா தேவியைப் பார்க்கவில்லையென்றும் தெரிவித்துவிட்டார்கள். அனுமான் அங்கதன் தாரன் முதலானவர்களோடு தென்திசையைத் தேடப் போனான். போகும் வழிகளில் அநேக வனாந்திரங்களையும், மலை குகை முதலானவைகளையும் தேடினார்கள். நடுவில் ரிக்ஷபிலம் என்ற ஓர் குகையைக் கண்டார்கள். அது மயன் என்னும் ராக்ஷஸனால் காக்கப்படுகிறது. அந்தக் குகைக்குள் வானரவீரர்கள் புகுந்தார்கள். அந்தக் குகையில் அவர்கள் புகுந்தவுடன் அவர்கள் கண் தெரியவில்லை. அந்தக் குகைக்குள் தாபசி யென்றவளால் வெளிவந்து வானரவீரர்கள் எங்கும் தேடியும் காணாது எப்படியாவது பிராயோபவேசம் செய்வதே உஜிதமென எண்ணினார்கள். நடுவில் சம்பாதி யென்ற கழுகரசன் தென்படவும், அவனுக்கு ஜடாயுவின் விர்த்தாந்தத்தையும் தெரிவித்து இராமகாரியமாக ஸீதையைத் தேடவந்ததாக வானரவீரர்கள் தெரிவித்தார்கள். ஸம்பாதி வானரர்களுக்கு இலங்காதிபதியான இராவணன் ஸீதையை அபகரித்த விர்த்தாந்தத்தைச் சொல்லவும், சம்பாதி சொன்ன அடையாளங்களைக்கொண்டு தென்ஸமுத்திரக்கரையை அடைந்தனர். கஜன், கவாக்ஷன், சரபன், கவயன், கந்தமாதனன்,



மைந்தன், துவிதன், சுஷேணன், ஜாம்பவந்தன் முதலானவர்கள் ஸமுத்திரத்தைத்தாண்டவேண்டியதற்குத் தம்முடைய வல்லமைகளைச் சொன்னார்கள். அவர்களுக்கு லங்கையைத் தாண்டக்கூடிய சக்தியில்லை. ஆஞ்சநேயரோ நூறுயோஜனை தூரத்தைத் தாண்டக்கூடிய அங்கத்தை விர்த்திசெய்துகொண்டு தாண்ட புறப்பட்டனர். நடுவில் மகேந்திர பர்வதம் கடந்து அதன் உச்சியிலிருந்து ஸமுத்திரத்தைத் தாண்ட முயன்றார். அப்பொழுது அனுமார் கிளம்பிய வேகத்தினால் பூமி அதிர்ந்தன. ஸமுத்திர நடுவில் ஆஞ்சநேயனுக்கு உதவி புரிய வேண்டுமென்று மைநாக பர்வதம் தென்படவும், அவர்களது உபசாரணை பெற்று அங்கிருந்து கிளம்பிப் போகையில் ஸமுத்திர நடுவில் சுரஸையைக் கண்டார். அந்த சுரஸை அனுமானை விழுங்கிவிட அங்கத்தைப் பெரியதாய் ஆக்கிக்கொண்டனள். அநுமான் சிறிய உருவந்தரித்து சுரஸையின் வாயுட் புகுந்து காதினால் வெளிவந்துவிட்டார். பிறகு சிம்ஹிகை யென்ற இராக்ஷஸ ஸ்திரீயைக் கண்டனர். அவள் அனுமானை விழுங்க அவள் குடலைக் கிழித்துக்கொண்டு வெளிவந்து ஒருவராலும் தாண்டமுடியாத ஸமுத்திரத்தைத் தாண்டி திரிகூட மலை சிகரத்திலுள்ள இலங்கையைப் பார்த்தார். இலங்காதேவி தென்பட்டு இலங்கையினுட் பிரவேசிக்கக் கூடாதென்று மறைத்தனள் அவளை யெதிர்த்துக் கீழேவீழ்த்தி இலங்கையினுட் புகுந்தார். இராவணனது கோட்டை கொத்தளம்; புஷ்பகம், அசோகவனம் முதலானவைகளைப் பார்த்தனர். இராவணனது அந்தப்புரத்தையும் கண்டார். ஜானகியைக் காணோம். அசோகவனத்தில் சென்றார்: இராக்ஷஸ ஸ்திரீகளின் காவலின்கீழ் அங்கு ஸீதையைக் கண்டார். இராவணன் ஸீதையிடம் வந்தான். ஸீதை அவனைத் திரணமாய் நினைத்து அவனது இஷ்டத்திற்கு இணங்காமல் மறுத்துவிட்டனள். இராவணனது ஆக்ஞாபிரகாரம் இராக்ஷஸ ஸ்திரீகள் ஸீதையைப் பலவாறாகப் பயமுறுத்தியும் ஹிம்ஸித்தார்கள். அதினால் மிகவும் வருத்தமுற்றாள். விபீஷணன் குமாரியாகிய திரிசடையென்பவளுக்குக் கெட்ட ஸ்வப்னம் காணப்படவும் அதைப்பற்றி யோஜித்தாள். ஸீதாபிராட்டியாருக்கு நல்ல ஸ்வப்னங்கள் தோன்றின. அனுமான் அசோகவனத்தில் மரத்தின்மேல்

நின்று மரத்தினடியில் இருப்பது ஸீதைதான்யென்று யெண்ணி ஸீதை
யின் முன்பு இறங்கிநின்று இராகவனது குணங்களையும் விருத்தாந்
தங்களையும் எடுத்துச் சொன்னார். ஸ்ரீராகவனால் கொடுக்கப்பட்ட
கணையாழியையும் கொடுத்தார். அதை எடுத்துக்கொண்டு மட்டில்லா
மகிழ்ச்சியை யடைந்தார். ஸீதைக்குத் தாம் வந்த விதத்தையும் சொ
ல்லி, தமது நிஜரூபத்தையும் ஸீதைக்குக் காண்பித்தார். பிறகு
ஸீதையால் இராகவனுக்குக் கொடுக்கப்பட்ட சூடாமணியைச் சிர
மேல் வஹித்து ஸீதையிடம் விடைபெற்றுக்கொண்டார். போகும்
பொழுது அசோகவனத்தையும் அழித்தார். அநுமானால் அசோகவனம்
அழிக்கப்பட்டதை அறிந்த இராவணன் யுத்தத்திற்காக அநேக அரக்கர்
களை அனுப்பினான். அநுமான் வாயில்காப்போன், பிரஹஸ்த புத்திரன்,
மந்திரி எழுவர், சேனாதிபதிகள் ஐவர், அக்ஷயகுமாரன் முதலானவர்
களை வதைத்து விட்டார். இதைக்கேட்ட இராவணன் இந்திரஜித்தை
யனுப்பவும் இந்திரஜித்தால் விடப்பட்ட பிரம்மாஸ்திரத்தினால் அநு
மான் கட்டுண்டு விட்டதை யறிந்த இந்திரஜித்து இராவணன் முன்பு
அநுமானைக் கொண்டுபோக அநுமான் இராவணனுக்குப் பல நீதி
களைக் கூறியும், ஸ்ரீராகவனது சாமர்த்தியத்தைச் சொல்லியும் இரா
வணனுக்குக் கடுங்கோபமுண்டாகி, இந்தக் குரங்கை வதைத்து
விட வேண்டுமென்று கட்டளையிட்டவும் அருகிலிருந்த உத்தமராகிய
விபீஷணன், இராவணனுக்குப் பலவிதமாய் ஹிதமுரைத்தான். அதை
அவன் கவனிக்கவில்லை. அநுமானினது வாலில் தீயை வைத்துக்
கொளுத்திவிட ஏற்பாடு செய்தான். அநுமான் இலங்காநகரை கொளுத்
தினான். இலங்கா நகரம் அநுமானது வாலிலிட்ட தீயினால் எரியும்
போது இலங்கா நகரம் முழுவதும் எறிந்துபோகிறதே ஸீதைக்கு
என்ன நேர்ந்ததோ வென அநுமான் கவலைகொண்டு, மறுபடியும்
அசோகவனம் போய் ஸீதையைப்பார்த்து பிரயாணப்பட்டு ஸமுத்திரம்
தாண்டி வரும்போது சுனபன் என்ற மலையரசனையும் ஸ்பரிசித்து மகேந்
திரபுரத்தின் உச்சியில் அநுமானது வருகையைப் பார்த்து ஸதா தியா
னஞ் செய்துகொண்டிருந்த வானரவீரர்களின் மத்தியில் குதித்தனர்.
ஸீதா விருத்தாந்தத்தை ஜாம்பவான் அநுமானைக் கேட்க விருத்தாந்தங்



களை ஸவிஸ்தாரமாய் அநுமான் சொல்லவும் கேட்டு மகிழ்ந்து அவ்விடம்
விட்டு வானர வீரர்களுடன் கிளம்பி வழியில் மதுவனம் வந்து, அதிலு
ள்ள கனிவர்க்கங்கள் மது முதலானவைகளை அருந்தி மதுவனத்தையும்
அழித்தனர். அந்த வனத்திற்கு அதிபதியான ததிமுகன், வானரவீரர்
கள் மதுவனத்தை யழித்த விருத்தாந்தத்தை ஸுக்ரீவனிடம் சொன்னார்
கள். ஸீதாவிருத்தாந்தத்தை அநுமான் ஸ்ரீராகவனுக்குச் சொல்லி சூடா
மணியையும் கொடுத்தார்கள். சூடாமணியைப் பார்த்து ஸ்ரீராகவன் 'வரு
த்தமுற்றார். ஸ்ரீராகவன் ஆஞ்சநேயனுக்கு மரியாதையாகத் தம் ஆலிங்
கனத்தைத் தந்தருளினார். சுக்கிரீவன் ஸ்ரீராகவனுக்குத் தைரியங்களைச்
சொல்லியும் சேனைகளுடன் இலங்கைக்குப் புறப்பட்டனர்கள். இங்கு
இவ்வாறிருக்க, இராவணன் ஓர் ஸபையைக் கூட்டி அதில் அநுமான்
இலங்காபுரியில் செய்த மிக்க பெரிதாயும் அபாயகரமானதுமான காரி
யங்களைக் குறித்து மிகவும் வெட்கமடைந்து மந்திரிகளைப் பார்த்து எவ
ராலும் அடையமுடியாத இந்த லங்காபுரியில் செய்த பெரிய காரியத்தை
செய்ததைக் குறித்தும், ஜானகியைப் பார்த்துப் போனதைப்பற்றி
யும், அதன் மாடமாளிகை கூடகோபுரங்களைத் தகர்த்து பாழாக்கியதை
யும், இராக்ஷத சேனாதிபதிகள் கொல்லப்பட்டதையும்பற்றி சிந்தாக்கி
ராந்தர்களாகி செய்யவேண்டிய விஷயங்கள் யாதுவென்று யோசிக்க
லாயினன். நம்மிடத்தில் ஏராளமான ஸைன்யங்களும் சூலம், ஈட்டி,
கதை முதலிய ஆயுதங்கள் இருக்கையில், நீர் ஜயிக்காத விடமே
யில்லை. குபேரனையும் ஜயித்திருக்கிறீர். தேவர்களையும் ஜயித்து
ஏவல்கொள்ள செய்திருக்கிறீர்கள். நீங்கள் எதற்கும் அஞ்சவேண்
டாமென்று மந்திரிகள் சொல்லவும், அதன் பிறகு பிரஹஸ்த சேனாதி
பதியும், துர்முகன் என்ற ராக்ஷஸனும், வஜ்ரதம்ஷ்டிரனும், நிகும்ப
னும், வஜ்ரவரனும் எதிரிகளாகிய ராம லக்ஷ்மணர் முதலானவர்களை
சங்கரித்துவிடுவேன் என கூறலுற்றான். அதன்பின் மிக்க தர்மாத்
மாவும், பலசாலியும், இராவணனது தம்பியுமாகிய விபீஷணன்
இராவணனுக்கு ஹிதமாய் பலவாக்கியங்களையும், ஸ்ரீ ராகவனது பராக்
கிரமத்தையும் பற்றிச் சொல்லியும், அந்த இராமரிடத்தில் விரோதம்
வைத்துக்கொள்ளவேண்டாம். இப்பொழுதே ஸீதையை இராகவ-

னிடம் கொண்டுபோய் விட்டுவிடுவென்றும் சொன்னான். அதைக்கேட்ட இராவணன் விபீஷணனை அனுப்பிவிட்டான். இராவணன், கும்பகர்ணன், மஹாபார்சுவன், இந்திரஜித்து முதலானவர்களிடம் ஆலோசனை செய்து, விபீஷணனை அவ்விடத்தை விட்டு நீக்கிவிட்டார்கள். பிறகு விபீஷணன், அவ்விடமிருப்பதைக் காட்டிலும், ஸ்ரீ ராகவனை சரணமடைவதே நலமென வெண்ணி ஸ்ரீ இராகவனிருக்குமிடத்திற்கு வந்து, அங்கு அவரை சரணமடைந்தார். இப்படிச் சரணமடைந்த விபீஷணனை ஸ்ரீ ராகவன் தம்மிடம் சேர்த்துக்கொண்டு அபயஸ்தம் தந்தருளினார். பிறகு விபீஷணன் ஸ்ரீ ராகவனுக்கு இராவணனது பலத்தை யெடுத்துச் சொன்னான். பிறகு சுக்ரீவன் முதலானவர்கள் இராகவன் முன்பு யுத்த ஸன்னத்தர்களாய் ஸமுத்திரக்கரையில் இருந்தார்கள். அச்சமயம் இராவணன் சார்த்தூலன் என்ற ஓர் அரக்கனை இராமலக்ஷ்மணர் முதலானவர்கள் இருக்குமிடத்தில் நடக்கும் விர்த்தாந்தத்தை யறிந்து வரும்படி யனுப்பினான். இவர்கள் யுத்த ஸந்நத்தர்களாயிருக்கும் விர்த்தாந்தத்தை இராவணனுக்குத் தெரிவித்தான். பிறகு இராவணன் சுகன் என்கிற அரக்கனை சுக்ரீவனிடம் அனுப்பி அவனைப் பகை கொள்ளாதிருக்கும்படியாய் சொல்ல வானர வீரன் சுகனின் இறக்கைகளைப் பறிக்கிறதற்கும் அவனைக் கொல்வதற்கும் எத்தனித்தான். தூதுவந்தவனை கொல்லக்கூடாதென்ற நியாயங்களைச் சொல்லி அவனை விட்டுவிட்டார்கள். பிறகு ஸ்ரீ ராகவன் ஸேதுபந்தனஞ் செய்தார். பிறகு ஸமுத்திரத்தைத் தாண்டி சைன்யங்களை அணிவகுத்து நிறுத்தினார். இராவணன் சுகசாரணர்களை எதிரிகள் இருக்குமிடத்திற்கு அனுப்பி எதிரிகளுடைய பலத்தை யறிந்து வரும்படி ஏற்பாடுசெய்தான். சுகசாரணர்கள் இராகவனுக்கு வானர வீரர்களது பராக்கிரமத்தையும் சொன்னான். இராவணன் ஓர் மாய இராமனைச் செய்து அந்த இராமனது தலையை அசோகவனத்திலிருக்கும் ஸீதைக்கு காண்பித்து இராமர் இறந்து போனார் என்பதாக ஸீதைக்குச் சொன்னான். இதற்கு விபீஷணனுடைய மனைவியாகிய ஸரமை என்பவள் இது மாய இராமன் என்று சொல்லி, இதற்கு கவலையுற்றிருக்கும்படி ஸீதைக்குத் தேறுதல்சொன்



னான். இராகவனுடைய தாயாருக்குச் சிற்றப்பனான மாலிவான் இராவணனுக்கு நல்ல புத்திமதிகளை கூற அது இராவணனுக்கு பிடிக்காமையினால் மாலிவானை நிந்தித்து அவனை யனுப்பிவிட்டான். ஸ்ரீ ராகவன் இலக்ஷ்மணர், சுக்ரீவன், ஜாம்பவான், விபீஷணன், அங்கதன், சரபன், ஸுஷேணன், மைந்தன், த்விதன், கஜன், கவாக்ஷன், குமுதன், அனுமான், நளன், பனசன் இவர்கள் எல்லோரும் வானரஸைந்யங்களுடன் லங்காபுரி ஸமீபம்வந்து சேர்ந்தார்கள். அனலன், சரபன், ஸம்பாதி, பிரஹஸ்தன், முதலிய நாலுமந்திரிகளும் பட்சிரூபம் கொண்டு சேனைகளைச் சோதித்து இராவணனால் நிறுத்தப்பட்டிருக்கிற முறையைப் பார்த்துக்கொண்டே வந்தார்கள். பிரஹஸ்தன் சேனைகளுடன் கிழக்குவாசலிலும், மஹோதரன் மஹாபார்சுவன், இவர்கள் தென்திசையிலும், இந்திரஜித்து மேற்றிசையிலும், இராவணன் வடதிசையிலும், ரத, கஜ, துரக பதாதிகளுடன் யுத்த ஸந்நத்தராய் நின்றார்கள். அதை சுக்ரீவன் முதலியோர் கண்டார்கள்.

ஸ்ரீராகவன் லங்காநகரைப் பார்ப்பதற்காக சுவேதமலையை, ஸ்ரீராகவனும், இலட்சுமணரும், சுக்ரீவனும், விபீஷணனும், அங்கதன், அனுமான், நீலன், மைந்தன், த்விதன், கஜன், கவயன், கவாக்ஷன், கந்தமாதனன், சரபன், குமுதன், பனசன், ரம்பன், ஹரன், ஜாம்பவந்தன், ஸுஷேணன், ரிஷபன், துர்முகன், சதவலி முதலானவர்கள் அநேக வானரவீரர்களும் ஏறிப்பார்த்தார்கள். அவ்விடமிருந்து சுக்கிரீபன் முதலானவர்கள் இலங்கா நகரிற்கு இறைவனான இராவணனைப் பார்த்துக்கொண்டிருக்கையில், சுக்ரீவன் மனதில் அச்சமின்றி இராவணனை கொஞ்சமேனும் மதியாமல் அவன்மேல் பாய்ந்து அவனது கிரீடத்தை உதைத்துத் தள்ளினான். அவனுடன் யுத்தஞ்செய்து ஜயத்துடன் கிளம்பி வேகமாய் ஸ்ரீராகவன் அருகில் வந்துசேர்ந்தார். பிறகு இராகவன் அம்மலையினின்று இறங்கி ஸ்ரீராகவன் இலக்ஷ்மணர் ஸமேதர்களாய் இலங்கையின் வடக்குவாயிலில் அநேக வானர வீரர்களுடன் முற்றுகை போட்டார்கள். நீலன் மைந்தன் த்விதர்களுடன், கிழக்குவாயிலிலும், அங்கதன், கவயன், கவாக்ஷன், தெற்குவாயிலிலும், அனுமான் பிரமாதி, பிரகஸ்தன், மேற்குவாயிலிலும், அநேக வானர

வீரர்களுடன் முற்றுகைபோட்டு நின்றார்கள். அங்கதனைத் தூது அனுப்ப அங்குள்ள மந்திரிகள் அங்கதனைப் பிடித்து இம்சித்து கீழே தள்ளவும், அங்கிருந்து கிளம்பி இராகவனது பக்கத்தில் வந்து நின்றார்கள். பிறகு வானரவீரர்கள் இலங்காநகரைத் தாக்கி அவர்களுடன் யுத்தஞ்செய்தார்கள். இப்படிக்கு யுத்தம் நடந்துகொண்டிருக்கையில், இராவணனது குமாரனாகிய இந்திரஜித்து, இராம லக்ஷ்மணர்களை நாகபாசத்தால் கட்டிவிடவும், அச்சமயம் விபீஷணன், ஸுக்ரீவன், நீலன் மைந்தன், த்விவிதன், சுஷேணன், குமுதன், அங்கதன், அநுமான், முதலானவர்கள். இராம லக்ஷ்மணர்களிருந்த இடத்துக்கு வந்து மிகவும் வருந்தி யோசிக்கலானார்கள். இப்படிக்கு வீரசயனத்திலிருக்கும் இராகவன், லக்ஷ்மணர்களை எல்லா வானரவீரர்களும் காத்துநின்றார்கள். இப்படிக்கிருக்கும் அலங்கோலத்தை இராவணன், ஸீதைக்கு ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் இறந்தார்களெனக் காண்பிக்கும்படியாய்ச் செய்து, ஸீதையைக் கதறச்செய்தான். உத்தமகுணம் வாய்ந்த திரிசடை ஸீதைக்குத் தேறுதல் சொல்லி இது மாயை என்று சொன்னாள். இப்படிக்கு நாகபாசத்தால் கட்டுப்பட்டிருக்கும் சமயத்தை அறிந்த கருடன் அங்கிருந்து விரைவாக ஓடிவந்து இவர்களை அப்பாசத்தினின்றும் மீட்டுவைத்தார். பிறகு தூம்ராக்ஷதன் யுத்தத்திற்கு ராமலக்ஷ்மணர் முன் வந்தான். வாயுகுமாரனாகிய அனுமானால் தூம்ராக்ஷதன் மரணமடைந்தான். வஜ்ரதம்ஷ்ட்ரன் என்ற ராக்ஷதன் யுத்தத்திற்கு எதிர்சென்றுவர வாலி புத்திரனான அங்கதன் அவனைக் கொன்றான். அகம்பன் யுத்தத்திற்கு வர அனுமான் அகம்பனை யுத்தகளத்தில் மாய்த்தனர். பிரகஸ்தன் ராமலக்ஷ்மணர்களை எதிர்த்துச் சண்டைக்கு வர, வானரசேனாதிபதியாகிய நீலனால் யுத்தத்தில் மரணமடைந்தான். ராவணன் யுத்தத்திற்கு அனேக சைனியங்களோடு யுத்தகளத்திற்கு வர, ஸ்ரீராமர் பயங்கரமாக வருகிற அந்த சைனியங்களைக்கண்டு விபீஷணனைப் பார்த்து இந்த சேனை யாருடையது என்று கேட்க, விபீஷணன் ஸ்ரீராமரைப்பார்த்துச் சொல்லத் தொடங்கினான். யானையின் பிடரியின்பேரில் உட்கார்ந்து இருப்பவன் அகம்பன். சிங்கக்கொடி கட்டின தேரின்மேல் உட்கார்ந்திருக்கிறவனும், இந்திரதனுசுபோலப்



பிரகாசிக்கிற வில்லை குணத்தொனி செய்கிறவனும், இந்திரஜித்தன். வந்தியம், அஸ்தகிரி மஹேந்திரம் இவைகளைப்போல உயரமான சரீரத்தையுடையவன் அதிகாயன். அப்போது உதித்த பாலசூரியனைப்போல ஜ்வலிக்கிற கண்களையுடையவனாய்க் கண்டத்வனியாலே மிகுந்த நாதமுள்ள யானையின்பேரில் ஏறிக்கொண்டு வருகிறவன் மகோதரன். பிசாசாயுதம் தரித்துக் குதிரையின்பேரில் ஏறிக்கொண்டு வருகிறவன் பிசாசன் என்கிற இராட்சதன். மலைபோல மிக உயர்ந்து வஜ்ராயுதத்தைவிட மிகுந்த கூர்மையுள்ளதாய் மின்னலைப்போலப் பிரகாசிக்கிற வாளை [illegible]ணிந்துகொண்டிருக்கிறவன் திரி[illegible] என்பவன். விசாலமாய் [illegible] வருகிறவன் கும்பன். சொர்ணமயமாய் பிரகாசிக்கிற வில்லையுடையவன் நிகும்பன். கதையைக் கையில் பிடித்திருக்கிறவன் நராந்தகன். பலவிதமான குரூரரூபமும், புலி, ஒட்டகம், யானை, குதிரை இவைகளைப்போன்ற முகமும், வட்டமாய் சுழலுகிற கண்களும் உள்ள பூதங்களுடன் கூடினவனுமாய் வருகிறவன் தேவர்களுடைய கர்வத்தை அடக்கின இராக்ஷஸேந்திரனான இராவணன் என்று ஒவ்வொருவராகச் சொன்னார். இப்படி வருகிற இராக்ஷஸேந்திரனான இராவணன்பேரில் வானர அரசனான சுக்ரீவன் விருக்ஷங்களோடு கூடிய மலையைத் [illegible]கி இராவணன்பேரில் எறிய அது அவனுடைய பாணங்களால் [illegible]தூளாகியது. இராவணன் கோபம்கொண்டு வஜ்ராயுதம் என்ற வில்லை எடுத்து சுக்ரீவன்பேரில் பிரயோகிக்க அது அவன் மார்பில் பட்டு ஸ்மரணையில்லாமல் கீழே விழுந்தான். இராவணன் வானர சைனியங்களை அடிக்க வானரர்கள் ஸ்ரீராமனிடத்தில் முறையிட்டார்கள். ஸ்ரீராமர் கோபம்கொண்டு யுத்தத்திற்குக் கிளம்ப லக்ஷ்மணன் தான் யுத்தத்தில் இராவணனைக் கொல்ல உத்திரவு கேட்க, ஸ்ரீராமரும் உத்திரவு அளிக்க லக்ஷ்மணன் சண்டைக்குப் போக அனுமான் லக்ஷ்மணன் முன் சென்று இராவணனை முஷ்டியால் மார்பில் குத்த இராவணன் நடுங்கினான். இராவணன் கோபம்கொண்டு அனுமானை மார்பில் அறைய அனுமான் கலங்கி மூர்ச்சையாயினார். பிறகு இராவணன் நீலனை அனேக பாணங்களால் அடித்தான். நீலன் மரங்களைப் பிடுங்கி இராவணன்பேரில் எறிய

இராவணன் அதைத் தன்னுடைய பாணங்களால் முறிய அடித்தான். இராவணன் கோபம்கொண்டு ஆக்கினேயாஸ்திரத்தால் நீலனை அடிக்க அவன் தன் பிதாவாகிய அக்கினியின் அனுக்கிரகத்தினால் சாகாமல் மூர்ச்சை அடைந்து கீழே விழுந்தான். பிறகு இராவணன் இலக்ஷ்மணரை எதிர்த்து அவர்பேரில் சக்தியாயுதத்தை எடுத்துவிட அது இலக்ஷ்மணருடைய அம்புகளாலே தடுக்கப்படாமல் அவர் மார்பில் பட்டு மூர்ச்சை அடைந்தார். அதைப்பார்த்த இராக்ஷத இராஜன் இலக்ஷ்மணரைத் தனது இரண்டு கைகளாலும் தூக்க முயன்றும் அது முடியவில்லை. இமயம், மந்தரம், மேரு பர்வதங்களுடன் மூன்று உலகங்களிலுள்ளவர்களையும் தேவர்களையும் எடுக்கவல்ல இலக்ஷ்மணரை அசைக்கவும் முடியாது. அனுமார் லக்ஷ்மணரைத் தூக்கிக்கொண்டு இராமரிடத்தில் விட்டார். லக்ஷ்மணர் களை தெளிந்தார். ஸ்ரீராமர் அனுமார் கழுத்தில் ஏறிக்கொண்டு இராவணனை எதிர்த்துச் சென்றார். இராவணன் அனேக பாணங்களால் அனுமாரை அடிக்க ஸ்ரீராமர் கோபம் கொண்டு அனேக பாணங்களால் தேர், குதிரை, பதாதிகை, கத்தி முதலியவற்றைத் தூளாக்கினார். ஸ்ரீராமர் அனேக பாணங்களால் இராவணனுடைய மார்பைப் பிளந்தார். அடிபடவும் அவன் மூர்ச்சையாயினான். இராவணன் அப்படி வருந்துவதைக்கண்டு ஒரு அர்த்தசந்திரபாணத்தை எடுத்து சூரியனைப்போல் பிரகாசிக்கிற இராவணனுடைய கிரீடத்தை உடைத்தார். விஷமில்லாத பாம்புக்குச் சமானமானவனும், சூரியகாந்திக்குச் சமானமானவனும், கிரீடம் இழந்தவனுமான இராவணனை நோக்கி நீ வானர சேனைகளை அழித்து மிகவும் கொடுமை செய்திருக்கிறாய். ஆகையால் உனக்கு களைப்பு அதிகமாக இருக்குமாகையால் நீ ஊருக்குச் சென்று இராத்திரி களைதீர்த்துக்கொண்டு நாளைக்கு சைனியங்களோடு யுத்தத்திற்கு வா என்றும் சொல்லி அப்போது நீ என்னுடைய பலத்தைத் தெரிந்துகொள்வாய் என்றும் சொன்னார். இவ்விதம் ஸ்ரீராமர் சொன்னதைக்கேட்டு வெட்கமடைந்து கிரீடம் இழந்தவனாய் லங்காநகரம் போய்ச் சேர்ந்தான்.

இலங்கைக்குச் சென்ற இராவணன் கிலேசமடைந்து 'இனி ஆகவேண்டிய காரியத்திற்காகத் தனது சகோதரனை கும்பகர்ணனை எழுப்



பும்படி சொன்னான். கும்பகர்ணன் ஒரு சமயம் ஆறுமாதமும் ஒரு சமயம் 8 மாதமும் ஒரு சமயம் 9 மாதமும் கூட தூங்குவான். மகாபலபராக்கிரமசாலி. இவனது மூடத்தனத்தினால் அற்பசுகத்தை விரும்பி எப்போதும் தூங்கிக்கொண்டே இருக்கிறான். இச்சமயம் அவனை எழுப்பினால் என் துக்கத்தை நீக்குவான். இந்திரனுக்குச் சரியான பலமுடைய அவனை உடனே எழுப்பும்படி கட்டளையிட்டான். போஜன வஸ்துக்களை எடுத்துக்கொண்டு கும்பகர்ணன் வசிக்கும் குகைக்குள் சென்றார்கள். தூங்கும் அவனை எழுப்புவதற்காக அனேகரை கூக்குரலிடும்படி செய்தார்கள். அனேக வாத்திய முழக்கங்களையும் செய்தார்கள். அதிலும் எழுந்திருக்கவில்லை. அனேக ஆடுமாடுகளையும் மேல்விட்டு விரட்டியும் அதிலும் விழித்து எழுந்திருக்கவில்லை. அனேக யானைகளையும் மேல்விட்டு நடத்தினதின் பேரில் அவனது நித்திரை தெளிந்ததும், பலசாலியான கும்பகர்ணனை நோக்கி யூபாக்ஷன் அஞ்சலியஸ்தனாய் நின்று, நடந்த யுத்தங்கள் யாவற்றையும் உரைக்கவும், கும்பகர்ணன் எழுந்து இராவணன் முன் வந்தான். கும்பகர்ணனது பராக்கிரமத்தையும் அவனுடைய வலுவையும் விபீஷணர் ஸ்ரீராகவனுக்குச் சொன்னார். கும்பகர்ணனை இராவணன், ஸ்ரீராகவன் முன் யுத்தத்திற்குப் போகும்படியாய்க் கேட்டுக்கொண்டான். அதற்குக் கும்பகர்ணன் இராவணனுக்குப் பலவிதமான ஹிதவார்த்தைகளைச் சொல்லவும், அதற்கு மகோதரன் கும்பகர்ணனை பலவிதமாய் நிந்தித்தான். இராவணனால் சொல்லப்பட்ட ஆக்கினைப்பிரகாரம் அவன் யுத்தத்திற்குப் புறப்பட்டான். கும்பகர்ணன் யுத்தத்தில் அனேகம் வானரர்களை எதிர்த்து ஓடச் செய்தான். கடைசியாகக் கும்பகர்ணனுக்கும் ஸ்ரீராமருக்கும் நடந்த யுத்தத்தில் கும்பகர்ணனுடைய சிரசை துண்டித்து லங்கையின் மத்தியில் விழச்செய்தார். இப்படி மடிந்துபோன சூரனாகிய தன் தம்பி இறந்துபோனதைக்கேட்டு துக்கித்தும், சிந்தாக்கிராந்தனாகி அதிகாயன் என்னும் தனது குமாரனை யுத்தத்திற்குப் போகும்படி அனுப்பினான்.

அதிகாயன் யுத்தத்திற்குப் போகவும் அவனுடன் தேவாந்தகன், திரிசிரன், மகோதரன், மகாபார்சுவன் முதலானவர்கள் யுத்தத்திற்குச் சென்றார்கள். தேவாந்தகன், திரிசிரன், மகோதரன், மஹாபார்சுவன்

என்ற நால்வர்களும் வானர வீரர்களான அங்கதன், அநுமான், நீலன் என்பவர்களால் மடிந்தார்கள். அதிகாயன் லக்ஷ்மணரோடு சண்டை செய்ததில் லக்ஷ்மணனால் கொல்லப்பட்டான். இச்செய்தியை இராவணனுக்குத் தெரிவிக்க அவன் துக்காக்கிராந்தனானான். இந்திரஜித்து தன் தகப்பன் துக்கிப்பதை உணர்ந்து தகப்பனைப் பார்த்து நான் ஒருவன் இருக்கும்போது உங்களுக்குக் குறைவு யாதிருக்கின்றது. நான் யுத்தத்திற்குச் சென்று இராம லக்ஷ்மணர்களைக் கொன்றுவிட்டு வருகிறேன் என்று சொல்லித் தன் தகப்பனிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு யுத்த க[illegible]. அவர்களை யுத்தத்தில் வெல்வது அசாத்தியம் என்று அறிந்து இராமலக்ஷ்மணர்களை பிர்மாஸ்திரத்தால் கட்டிவிட்டான். இராம லக்ஷ்மணர்கள் கட்டுண்டதைக் கண்ட வானர சைனியங்கள் புலம்ப, விபீஷணர் அநுமானைப்பார்த்து ஔஷதிமலையைக் கொண்டுவரும்படி சொல்ல அநுமான் அப்படியே சென்று கொண்டுவந்ததும், இராமலக்ஷ்மணர்கள் தூங்கி விழித்ததுபோல் எழுந்தார்கள். இராமலக்ஷ்மணர்கள் எழுந்ததைக்கேட்ட இராவணன் கும்பனை யுத்தத்திற்கு அனுப்ப, கும்பன் யுத்தகளத்தில் வந்து சுக்ரீவனை எதிர்க்க சுக்ரீவன் கும்பனை யுத்தத்தில் கொன்றான். நிகும்பன் அநுமானால் யுத்தத்தில் கொல்லப்பட்டான். கரன் குமாரனாகிய மகராக்ஷன் யுத்தத்திற்கு வர யுத்தத்தில் இராமபாணத்திற்கு இரையானான். இராவணன் இவர்கள் எல்லோரும் மடிந்ததைக் கேட்டு துக்கித்து இந்திரஜித்தை மறுபடியும் யுத்தத்திற்கு அனுப்பினான். அவன் மாயாயுத்தம் புரிந்தான். இந்திரஜித்து மாயாஸீதையைப் பிடித்து யுத்தகளத்திலிருக்கும் இராமலக்ஷ்மணர்கள் முன் கொண்டுவந்து வெட்டினான். வெட்டிவிட்டு நிகும்பிலையாகம் செய்யச் சென்றான். இச்செய்தியை அறிந்த விபீஷணன் இராமருக்கு இந்திரஜித்துடைய மர்மத்தையும் இடத்தையும் சொல்லி நிகும்பிலை முடியுமுன் அந்த பங்கம் பண்ணும்படி ஏற்பாடு செய்தார். அவ்விதமாகவே வானரர்கள் நிகும்பிலை யாகத்தை அழி[illegible] இந்திரஜித்து யுத்தகளத்திற்கு வந்துசேர்ந்தான். தனது சிற்றப்பனாகிய விபீஷணனையும் நிந்தித்தான். பிறகு இந்திரஜித்து உக்கிரமான யுத்தம் செய்ய கடைசியாக இலக்ஷ்மணர் பாணத்தைப் பூட்டி தசரதர்



குமாரராகிய ஸ்ரீராமர் தர்மாத்மாவாயும் பிரதிக்ஞை தப்பாதவராயும் ஆண்மையில் ஒப்பற்றவராயும் இருந்தால் ஏ பாணமே நீ இந்த இராவணன் புத்திரனான இந்திரஜித்தைக் கொல் என்று சொல்லி பாணத்தை விடுக்க அது இந்திரஜித்துடைய சிரசை அறுத்து கிரீடத்துடன் கீழே தள்ளியது. தேவர்கள் முதலானவர்கள் துந்துபி வாத்தியம் முழக்கினார்கள். ஸ்ரீராமர் தம்பியைக் கொண்டாடினார். பிறகு இராவணன் இந்திரஜித்து இறந்துபோனதைக் கேட்டு மிகவும் துக்கித்து வைதேகியை வதைத்துவிடுகிறேன் என்று கோபங்கொண்டு வைதேகியிடம் வந்து வைதேகியை வதைக்கப்போகும் [illegible]யும் சதாசாரமுடையவனுமான சுபார்சுவன் என்ற மந்திரியும் தடுத்து கோபத்தினால், இராவணனை நோக்கி ஏ தசக்கிரீவா, நீ குபேரனுடைய தம்பி, சகல நீதிகளையும் அறிந்தவன்; இப்படி இருக்க நெறிதப்பி ஸ்திரீஹத்தி செய்யக் கருதுவது தருமமன்று. ஆகையால் இக்கோபத்தை இராகவனிடம் செலுத்து; நாங்கள் எல்லோரும் சகாயம் செய்வோம் என்று [illegible] சொல்லி அழைத்துச் சென்றான். பிறகு இராவணன் மூலபலத்தைச் சண்டைக்கு அனுப்பினான். அம்மூலபலத்தார் இராகவன் யுத்தத்தில் மாய்ந்தனர். இராக்ஷத ஸ்திரீகள் யாவரும் புலம்பி அழுதார்கள். இப்படிக்கு லங்கையிலுள்ள ஒவ்வொரு வீடுகளிலும் புத்திரர், பர்த்தா, சகோதரர் முதலானவர்கள் இறந்துபோனதைக் குறித்து அழும் குரலைக்கேட்டு இராவணன் பெருமூச்சுவிட்டு மகோதரன், மகாபார்சுவன், விரூபாக்ஷன் என்ற மந்திரிகளைப் பார்த்து சைனியங்களை அழைத்துவரும்படி கட்டளையிட்டு யுத்தத்திற்கு சன்னத்தனானான்.

இராவணன் அநேக சைனியங்களோடு எட்டு குதிரை கட்டின தேரில் ஏறிக்கொண்டு வடக்கு வாசலின் வழியாக இராமலக்ஷ்மணர்கள் இருக்கும் இடத்திற்கு வரும்போது சூரியன் மறைந்தான். எங்கும் இருள் மூடியது. பூமி நடுங்கிற்று. பக்ஷிகள் பயங்கரமாய்க் கூவின. இந்திரன் இரத்த மழை பொழிந்தான். குதிரையின் கால்கள் தடுமாறின. துவஜத்தின் நுனியில் கழுகுகள் உட்கார்ந்தன. நரிகள் [illegible]மாய் ஊளையிட்டன. இராவணனுக்கு இடது கண் துடித்தது. இடது கை துடித்தது. முகம் ஒளி இழந்தது. பிறகு இரு சைனியங்களும

அடித்துக்கொண்டார்கள். இதைப்பார்த்து இராவணன் கோபங்கொண்டு அனேகம் பாணங்களால் வானர சைனியங்களை மார்பைப் பிளக்கும், சிலரை காதுகளை அறுத்தும் சின்னாபின்னமாக ஓடும்படி செய்தான். சுக்ரீவன் ஓடுகிற வானர சைனியங்களைக் கூப்பிட்டு தனக்கு சமமான சுஷேணனை சேனைகளுக்கு நடுவில் வைத்து மரத்தைப் பிடுங்கி சத்துருவை எதிர்த்தான். சுக்கிரீவன் அனேக இராட்சதர்களை மாய்க்க, அடிபட்டு அவர்கள் விழுகிறதைக் கண்டு விரூபாக்ஷன் சுக்கிரீவன்பேரில் அனேக பாணங்களைவிட்டான். சுக்கிரீவன் கோபங்கொண்டு விரூபாக்ஷன் நெற்றியில் அடிக்க அவன் பொறுக்கமாட்டாமல் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு கீழேவிழுந்து மரணமடைந்தான். இராவணனுடைய உத்திரவின்பேரில் மகோதரன் சுக்கிரீவனை எதிர்க்க இருவர்களுக்கும் பிரமாத யுத்தம் நடந்தது. கடைசியாக சுக்ரீவன் கட்கத்தை எடுத்து அவன் பேரில் வீச அது மகோதரனுடைய தலையைக் கொண்டு போயின. மகோதரன் இறந்ததைக் கண்ட மகாபார்சுவன் அதிகக் கோபங்கொண்டு அங்கதனை எதிர்த்து யுத்தம் செய்கையில் அங்கதன் முஷ்டியால் மகாபார்சுவனுடைய மார்பில் அடித்தான். அவனும் பூமியில் விழுந்து இறந்தான். இராவணனுக்கு அதிக கோபமுண்டாயின. இராவணன் அதிக கோபங்கொண்டு தன் சாரதியைப் பார்த்து சீதையாகிய புஷ்பத்தையும், சுக்கிரீவன், ஜாம்புவான், குமுதன், நளன், அங்கதன், அனுமான் முதலிய வானரவீரர்களாகிய கிளைகளையும் உடைய இராமனாகிய விருக்ஷத்தை வெட்டித் தள்ளுகிறேன்; ஆகையால் என் ரதத்தை அவர்கள் முன் ஓட்டு என்றான். அனேக பாணங்களால் வானரர்களை வதைக்க, அவர்கள் மூலைக்கு மூலை சிதறி ஓடினார்கள்.

லக்ஷ்மணர் அனேக பாணங்களால் இராவணன்பேரில்விட அதை அவன் தடுத்துவிட்டு, தன்னை அவைகள் ஒன்றும் செய்யவில்லை என்று அலக்ஷியம் செய்து லக்ஷ்மணரைவிட்டு ஸ்ரீராமரை எதிர்த்தான். இராமர் கோபத்தால் கண்கள் சிவந்து பாணவருஷம் செய்தார். இராவணன் [illegible] அனேக பாணங்களைச் சொரிய ஆகாயம் முழுவதும் பாணங்களாகவே நிறைந்திருந்தன. இருவர்களுக்கும் கொடிய யுத்தம் உண்டாயிற்று. இருவரும் யுத்தத்தில் கைதேர்ந்தவர்கள். இரா



வணன் பாசுபதாஸ்திரம் முதலிய அனேக பாணங்களைவிட அதை ராமர் ஆக்கினேயாஸ்திரம் முதலிய அனேக கூறிய பாணங்களால் எய்தார்.

இராவணன் கோபங்கொண்டு ரௌத்திராஸ்திரத்தை ராமர்மேல் விட அது அனேகமான ரூபங்களுடன் சென்றன. அதை ராமர் காந்தர்வாஸ்திரத்தால் அடித்தார். இராவணன் பத்து பாணங்களால் ராமர் மார்பில் அடிக்க, லக்ஷ்மணர் கோபங்கொண்டு ஏழு அம்புகளால் இராவணனுடைய கொடியை அறுத்தார். மற்றொரு பாணத்தால் சாரதியினுடைய தலையையும் ஐந்து பாணங்களால் யானையின் துதிக்கை போன்ற வில்லை ஒடித்தார். விபீஷணன் கோபங்கொண்டு கதையால் தேர்க்குதிரையை அடித்தார். இராவணன் தம்பியின்பேரில் கோபங்கொண்டு சக்தியை விபீஷணன்பேரில் எறிய, அதைப்பார்த்த லக்ஷ்மணர் மூன்று அம்புகளால் வெட்டினார். தசக்கிரீவன் கோபங்கொண்டு லக்ஷ்மணரைப் பார்த்து என்னுடைய தம்பியை தப்புவித்தபடியால் சக்தியால் உன்னைக் கொல்லுகிறேன் என்று சொல்லி சக்தியை எறிய அது லக்ஷ்மணருடைய மார்பில்பட்டு மூர்ச்சித்து கீழே விழுந்தார். ஸ்ரீராமர் கோபமடைந்து லக்ஷ்மணரை விபீஷணன் முதலானவர்களை பாதுகாக்கும்படி செய்து அதிக கோபத்துடன் அனேக பாணங்களினால் தசக்ரீவனை அடித்தார். இராவணன் அனேக பாணங்களால் ராமர்மேல்விட இருவரும் விட்ட பாணங்கள் ஒன்றோடொன்று மோதுவதால் மிகுந்த ஓசை உண்டாயிற்று. இராவணன் இராமருடைய பாணங்களால் வருத்தமடைந்து மிகுந்த பயத்துடன் ஓடிப்போனான். ஸ்ரீராமர் லக்ஷ்மணர் விழுந்து கிடைப்பதைப்பார்த்து துக்கித்து பலவாறாகப் புலம்பினார். சுஷேணன் ராமருக்கு அனேக தேறுதலை சொல்லி அனுமானைப் பார்த்து நீ ஔஷதமலைக்குச் சென்று விசல்யகரணி, ஸுவர்ணகரணி, ஸஞ்சீவகரணி, ஸந்தானகரணி என்னும் ஔஷதங்களைக் கொண்டு லக்ஷ்மணரைப் பிழைப்பிக்கவேண்டுமென்று சொல்ல, அனுமான் அவ்விடம் சென்று அம்மலையோடு பிடுங்கிக்கொண்டுவர வானரர்கள் அனுமானைப் புகழ்ந்தார்கள். சுஷேணன் அந்த ஔஷதத்தைப் பறித்து லக்ஷ்மணர் மூக்கில் பிழிய அவர் களை தெளிந்து எழுந்தார். எல்லோரும் சந்தோஷமடைந்தார்கள். ராமர்

தன்னுடைய வருத்தத்தை லக்ஷ்மணரிடம் சொல்ல, அவர் சூரியாஸ்தமனமாவதற்குள்ளாக ஸீதையை அடையும்பொருட்டு இராவணனைக் கொல்லவேண்டுமென்று லக்ஷ்மணர் கூறினார்.

இராவணன் தேரின்மேலில் இருந்தும் ஸ்ரீராமர் கீழே இருந்து யுத்தம் செய்வது தகாது என்று கந்தர்வர்கள் சொன்னார்கள். அப்பொழுது தேவேந்திரன் ஓர் உன்னதமான ரதத்தை ஸ்ரீராமருக்கு அனுப்பினான். ஸ்ரீராமர் அந்த ரதத்தில் ஏறிக்கொண்டு இருவருமாக யுத்தம் செய்தார்கள். இவர்கள் யுத்தம் செய்யும்பொழுது சகல பூதங்களும் பயமடைந்தன. பூமியும் மலைகளும் நடுங்கின. ராமருடைய பாணங்கள் இராவணனுடைய சரீரத்தில் தைத்ததினால் துன்பமடைந்து ராமனை எதிர்த்தான். அப்பொழுது இராவணன் சாரதியானவன் தேரை அப்புறம் ஓட்டிக்கொண்டு போய் அவனுடைய களைப்பைத் தீர்த்துக் கொண்டு இராமருடைய எதிரில் வந்து நின்றான். அகஸ்தியர் ஸ்ரீராகவன்முன் எதிர்ப்பட்டு இராமா, சகல சத்துருக்களை நாசம் பண்ணுகிறதும், ஜயத்தை அளிப்பதும், நாசரகிதமானதும், நித்தியமானதும், சாசுதமானதும், சுபங்களையே கொடுக்கக்கூடியதும், நித்திய மங்களத்தைத் தருவதும், சகல பாபங்களைப் போக்குவதும், தீர்க்காயுளை அளிப்பதும், மனோவியாகுலத்தை நீக்குவதும், உத்தமோத்தமமானதுமான ஆதித்திய மந்திரத்தை ஸ்ரீராமருக்கு உபதேசித்தார். இராவணன் யுத்தகளத்திற்கு வருகையில் அநேக துர்சகுனங்களைக் கண்டான். ஸ்ரீராமருக்கு அப்போது தென்பட்ட சுபசகுனங்களினால் தம் ஜயத்தை தெரிவிக்கிறது என்று மகிழ்ந்து எப்போது இராவணனைக் கொல்லப்போகிறோமென்று எண்ணினார். ஸ்ரீராமர் ஒரே பாணத்தால் ராவணனுடைய கொடியை அறுத்துத் தள்ள இருவருக்கும் பிரமாத யுத்தம் நடந்தன. அநேக அஸ்திரங்களினால் இறக்காததைக் கண்ட ஸ்ரீராகவன் கடைசியாக பிரமாஸ்திரத்தை, அவனுடைய மர்மஸ்தானத்திற்கு நேராக விட அது மார்பில் பட்டு வெளிவந்து அவனுடைய உயிரைவாங்கி ராமருடைய அம்பறாத்தூணியில் வந்துசேர்ந்தது. அப்போது இராவணன் விருக்ஷத்தைப்போல் தேரிலிருந்து கீழே விழுந்தான். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். துந்துபிவாத்தியம் முழங்கியது. அனுமான்



முதலிய வானர வீரர்கள் சந்தோஷமடைந்தார்கள். இப்படிச் சந்தோஷத்துடன் கூடி இருக்கிற சபையில் ஸ்ரீரகுநாதன் இந்திரனைப்போல் விளங்கினார்.

இராவணன் இறந்ததைக்குறித்து விபீஷணர் புரண்டு அழுது மிகவும் துக்காக்கிராந்தராயிருந்து இராவணனுடைய பராக்கிரமத்தையும் அவனது செய்கையையும் குறித்து விபீஷணர் அழ, அதை இராகவன் பார்த்து விபீஷணருக்கு யுத்தத்தில் பிரதாபத்தைக் காட்டாமல் இராவணன் இறந்தவனல்ல. மிகுந்த உத்ஸாகத்தையும் பராக்கிரமத்தையும் காட்டி மரணம் அடைந்தான். யுத்தத்தில் மரணம் அடைந்து பரலோகம் சென்றதைக்குறித்து க்ஷத்திரிய தர்மமான செளரியத்தைக் குறித்து புலம்புவது தகாது. இராவணன் இந்திராதி தேவர்களையும் மூன்று லோகங்களையும் ஜெயித்தவன். ஒருபோதும் அபஜயமடைந்தவனல்ல. வீரனுக்கு ஜெயமும், அபஜயமும், இரண்டும் சமமே. உன் மனதில் விசனத்தை ஒழித்து, அவனுக்குச் செய்யவேண்டிய ஸம்ஸ்காராதிகளைச் செய் என்று சொல்லி, தேற்றினார். இராவணன் மரணமடைந்ததைக் குறித்து அந்தப்புரத்திலுள்ள மண்டோதரி முதலான ஸ்திரீகள் யாவரும் புலம்பவும், ஸ்ரீராகவன் விபீஷணனை நோக்கி, அந்த ஸ்திரீகளெல்லாரையும் தேற்றி, உன் ஸகோதரனுக்கு ஸம்ஸ்காரம் முதலானதுகள் செய்விக்கச் சொல்லவும், விபீஷணன் அந்தப்படியே ஸம்ஸ்கார முதலானதுகள் செய்து ஸ்ரீராகவனருகில் வந்து வணங்கி நின்றார். லக்ஷ்மணன் சுக்ரீவன் அனுமான் முதலான வானர வீரர்களும் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தார்கள். ஸ்ரீராமருடைய கட்டளைப்படிக்கு லக்ஷ்மணர், விபீஷணரை உத்தம ஆஸனத்தில் வீற்றிருக்கச் செய்து இராச்சிய பட்டாபிஷேகம் செய்தார். அதின் பின் தன் பக்கலில் அஞ்சலிபந்தராய் நின்ற அனுமனைப்பார்த்து ஜெய சீலரில் சிறந்தவனே, நீ, விபீஷணருடைய உத்தரவின் பேரில் லங்காபுரத்திற்குள் போய் ஜெயசமாசாரத்தை, வைதேகிக்குச் சொல்லி சந்தோஷப்படுத்து. லக்ஷ்மணர் சுக்ரீவன் முதலானவர்கள் க்ஷேமமாக இருக்கிறார்கள். இராவணன் என்றவன் கொல்லப்பட்டான் என்று சொல்லி, ஆஞ்சநேயரை ஸீதையிடம், அனுப்

பிறார். ஆஞ்சநேயர் சீதையிடம் சென்று ஜெயத்தை தெரிவிக்கும் காலத்தில் அருகில் நின்ற ராக்ஷஸ ஸ்திரீகளைக் கண்டார். ராக்ஷஸ ஸ்திரீகள் சீதையிடம் காட்டிய அடாத செய்கைகளைக்குறித்து வருந்தி, அவர்களை இக்ஷணமே மடித்துவிடுகின்றேன், என ஆஞ்சநேயர் கேட்க, பதிவிருதையான ஜானகி அனுமான் சொன்னதைக்கேட்டு தர்ம்யுக்தமாக பதில் சொல்லுகிறாள். ஆஞ்சநேயா! இங்குள்ள ராக்ஷஸ ஸ்திரீகள் அந்த இராவணனுடைய அடிமைகள் இராஜனுடைய ஆஞ்யாபிரகாரம் செய்தார்கள். அவர்களைத் தண்டிக்கக்கூடாது, என்று சொன்னாள். பிறகு அனுமானிடம் நான் நாதனைப்பார்க்க விரும்புகிறேன் என்று சொன்னதின்பேரில், சீதையின் அனுமதி பெற்று ஸ்ரீராமரிடம் வந்து சேர்ந்தார். பிறகு, விபீஷணனை அனுப்பி சீதையை அழைத்து வரும்படி சொன்னார். விபீஷணர் ஸ்திரீகளை அழைத்து, சீதைக்கு மங்களஸ்நானம் செய்விக்கச்சொல்லி ஆபரணம் முதலானது அலங்கரித்து, பல்லக்கில் ஏற்றிவரச் சொன்னார். விபீஷணன் உத்திரவுபடி அலங்கரித்து, விபீஷணன் முன் கொண்டுவந்து விட்டார்கள். அப்போது சீதை, வெட்கத்தினால் தலைகுனிந்துகொண்டு விபீஷணன் பின்தொடர்ந்துவந்து தன் கணவன்முன் வந்துநின்றாள். பதியே தெய்வமாகக் கருதியிருக்கின்றவளும், அழகான ரூபத்தை யுடையவளுமான சீதை, தன் கணவன் முகத்தை ஆசையுடனும் சந்தோஷத்துடனும் பார்த்தாள். பூர்ண சந்திரனுடைய பிம்பத்தைப்போன்ற ஸ்ரீராகவனுடைய முகாரவிந்தத்தைப் பார்த்து மனமகிழ்ச்சி கொண்டாள். அப்படிக்குத் தலைகுனிந்து நிற்கும் ஸ்ரீமைதிலியைப்பார்த்து ஸ்ரீராகவன், நீ இனிமேல் இஷ்டமான இடத்துக்குப் போகலாம் என்று சொன்னார். அப்படிக்குச் சொன்ன ஸ்ரீராமருடைய வாக்யத்தைக் கேட்ட சீதை, லக்ஷ்மணரைக்கொண்டு அக்கினியை வளர்க்கச் செய்து, அதில் பிரவேசமானாள். எல்லாரும் வருத்தமடைந்து ஆஹா என்று அலறி வெகு துக்கத்துடன் இருந்தார்கள். ஸ்ரீராமரிடம் அக்கிதேவர் சீதையைக் கொண்டுவந்து கொடுத்து சீதை நிர்தோஷி என்று சொல்லவும், சகல தேவர்களும் அங்குவந்து கூடிக் கொண்டாடினார்கள். சாக்ஷாத் பரமேஸ்வரன் ஸ்ரீராமருடைய எதிரில் வந்துநின்று ஸ்ரீராமா இதோபார்.



கீர்த்தியுள்ள உன் பிதா தசரதர் விமானத்திலேறிக்கொண்டு வந்திருக்கிறார். செல்வவந்தனான இந்த தசரதராஜன் நீ செய்த சத்தியவாக்ய பரிபாலனத்தினாலே இந்திரலோகமடைந்தார். நீயும் லக்ஷ்மணரும் இவருக்கு நமஸ்காரம் செய் என்றார். நமஸ்கரித்த ராம லக்ஷ்மணரைப் பார்த்து மகா சந்தோஷமடைந்து அவர்களைத் துடைமேல் உட்கார வைத்து இருகரங்களாலும் தழுவிக்கொண்டு உன்னைப்பிரிந்து சொர்க்கத்திலிருந்தாலும் எனக்கு சந்தோஷமுண்டாக வேயில்லை. நீ இப்பொழுது சத்ரு ஸம்ஹாரம் செய்து பூர்ண மனோரதம் பெற்று பிரதிக்ஞை நிறைவேற்றினதினால் உன்னைப் பார்க்கும்போது மகா ஆனந்தமுண்டாயிற்று என்று சொன்னார். பிறகு தசரதர் அவர்களைப்பார்த்து தீர்க்காயுசு உள்ளவராய் தம்பிமார்களுடனும் சீதா தேவியுடனும் சுகமாயிரு, என்று சொல்லி மறைந்தார். பிறகு இந்திரன் அங்கு வந்து ஸ்ரீராகவனைப் பார்த்து உங்களால் நாங்கள் பட்ட கஷ்டம் நிவர்த்தியாயிற்று. ஆகையால் தாங்கள் விரும்பினதைக் கேளுங்கள் என்று சொன்னார். இந்திரனிடம் ஸ்ரீராமன் யுத்தத்தில் மடிந்த வானரர்களைப் பிழைப்பிக்கவேண்டுமென்று கேட்க அவ்விதமே இந்திரன் வரங்கொடுக்க எல்லோரும்பிழைத்து எழுந்தார்கள். தேவர்கள் எல்லோரும் ராகவனிடம் விடைபெற்று மறைந்தார்கள். பிறகு விபீஷணனால் கொண்டுவரப்பட்ட புஷ்பகவிமானத்தில் ராமலக்ஷ்மணர்கள் சுக்ரீவன் முதலானவர்களும் மற்ற வானர சைனியங்களும் ஏறி எல்லோரும் அயோத்திக்குப் புறப்பட்டார்கள். வரும் வழியிலுள்ள எல்லா விநோதங்களையும் சீதைக்கும் காண்பித்துக்கொண்டே வந்தார். அங்கிருந்து பரத்துவாஜ ஆசிரமம் அடைந்து அவரால் அளிக்கப்பட்ட விருந்தை ஏற்று அவ்விடமிருந்து பரதன் வசிக்கும் நந்திக்கிராமத்துக்கு அனுமானை அனுப்பித்தார். இராகவன் வருகிற செய்தியைத் தெரிவிக்கும்படி சொன்னார். பரதன், ராமன் குறித்த நாளில் வராததைக்கண்டு மனம் வருந்தி அக்கினி பிரவேசம் பண்ணும் தருணத்தில் அனுமான் ராமன் வந்த செய்தியைத் தெரிவித்து பரதனை தேறுதல் பண்ணும்பொழுது, ஸ்ரீரகுநாதனும் அவ்விடம் வந்து பரதனைக்கட்டித் தழுவி கண்ணீர் விட்டுப் பிறகு பெரியவர்களுக்கு எல்லாம் அவர்களுக்குத் தகுந்தபடி மரி

யாத்திரை செய்து அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு ஊருக்கு வந்து சேர்ந்தார். புஷ்பக விமானத்தை குபேரனிடத்தில் அனுப்பினார். நவரத்தின கசிதமான ஸிம்மாஸனத்தில் ஸீதாதேவியுடன் உட்காரவைத்து வசிஷ்ட, வாமதேவ, ஜல்லியர், ஜபாலி, காஸிபர், காத்தியாயினர், ஸுயக்கியன், முதலிய முனிவர்கள் ராமரை சுகந்த பரிமள தீர்த்தத்தினால் ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார்கள். பரதனுக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்துவைத்தார். அப்போது தேவகந்தர்வர்கள் துந்துபிவாத்தியம் முழக்கினார்கள். இந்த ராமாயணத்தை எழுதினவர்களுக்கும், அதைப் பக்தி சிரத்தையோடு படித்தவர்களுக்கும் அதைக் கேட்டவர்களுக்கும் ஸ்வர்க்கலோக வாஸம் உண்டாயிருக்கின்றன. சுபம். சுபம். சுபம்.

## ஸ்ரீ கிருஷ்ணன்

பகவானது அவதாரங்களுக்குள் கிருஷ்ணாவதாரத்தில் அநேக அற்புதங்களைச் செய்யப்பட்டது. அவரது அநந்த மகிமைகளைக் காண்பித்தார். இந்த அவதாரத்தில் பக்தர்களை மாத்திரம் ஸம்ரக்ஷித்தாரென்பதில்லை. துஷ்டர்களையும் வைரிகளையும் இவரது கடாக்ஷத்தால் இரக்ஷித்தார். அஸுரர்களை ஸம்ஹாரம் பண்ணிக்கொண்டு பூமியின் பாரத்தைக் குறைத்தார். கோகுலத்திலிருந்த பாபிகளானவருக்கும் ஞானபதவியை யளித்தார். தாம் வெகு ஸௌந்தரியமாய் விளங்கினார். பல்லவரிடம் பிள்ளைகளைப் பெற்றார். ஒருவராலும் சாத்தியமாகாத போகங்களைச் செய்தார். பலசாலிகளான ஸுராஸுரர்களின் துரும்பாக விலக்கித் தொழித்தார். கோபிகைகள் ஸ்ரீகிருஷ்ணரோடும், ஒவ்வொரு கிருஷ்ணனாக விளங்கினார். ஒருவராலும் பார்க்கமுடியாத விஸ்வரூபதரிசனத்தை யசோதைக்கும் அர்ஜுனனுக்கும் மற்றும் சிலருக்கும் அளித்தார். வஸுதேவருக்கும் தேவகிக்கும், தான் பிறந்தவுடன் தனது திவ்யரூபத்தைக்காட்டினார். கோகுலம் முழுதும் கூத்தாடி விளையாடினார். பசுக்களை கூட்டம் கூட்டமாக மேய்த்து இப்படியே ஜீவர்களெல்லாரையும் ஸம்ரக்ஷிப்பதாகத் தெரிவித்தார். வெண்ணெயைத் திருடி பக்தர்களான கோபிகைகள் கையால் லீலையாக அடிபட்டார். இராஜக்கிரீடையில்



ஒவ்வொரு கோபிகருக்கும் ஒவ்வொரு கோபாலனாயிருந்தார். இத்தகைய மஹா வல்லமையுடைய கிருஷ்ணாவதாரத்தைச் சில மந்தர்கள் பரிகாஸிக்கிறார்கள். அது அவ்வுண்மையை யறியாத குற்றமே. ஸர்வ வல்லமையுடைய பரமேஸ்வரனுக்கு எந்தக் காரியம் விரோதமானது. ஆகாசம் எதில் ஒட்டுகிறது. ஒன்றிலும் ஒட்டவில்லையன்றோ. அங்ஙனமே பரமேஸ்வரனுக்கு ஒன்றிலும் பற்றுதலில்லை. அங்ஙனமே சுருதியும் கூறுகின்றது. பாபுண்ய தோஷங்களில் அவன் ஒட்டுவதில்லை. ஆனால் அவரிடத்தில் ஓர் குறையும் கற்பிக்கக்கூடாது. ஸர்வஜ்ஞதயாபரனான எம்பெருமான் அவதாரஞ்செய்து துஷ்டநிக்கிரஹ சிஷ்டபரிபாலனம் செய்வதையே தொழிலாகக்கொண்டிருக்கிறார். அவர் என் துஷ்டர்களை சிருஷ்டித்து மறுபடியும் நிக்கிரஹிக்க வேண்டும்? ஜீவர்கள் கருமத்தால் ரஜோகுணத்தில் மூழ்கி அசுரபாவனையி லழுந்துகிறார்கள். அதைக்கண்டு கருணையினால் அவ்வப்பொழுது அவதாரஞ்செய்து பாபிகளையும் இரக்ஷிக்கிறார். பாபிகளை இம்சிப்பது இரக்ஷிப்பதாகும். அவர்கட்கு பாபத்திற்கேதுவான சரீரத்தை யொழித்து ஸாத்வீக குணம் அபிவிர்த்தியாகத்தக்க தனுவைக் கொடுக்கிறார். மற்றும் அவரது கையால் ஸம்ஹரிக்கப்பட்டவன் அவரையே யடைகிறான். ஏனெனில் அவர் ஞாபகமாகவே உயிர்விடுதால் உடனே அந்த இடத்தையே யடைகிறான். பகவானை யடைவதற்குப் பல மார்க்கங்களுண்டு. சிலர் வைராக்கியத்தால் அடைவார்கள். கம்ஸனும் அங்ஙனமே யடைந்தான். அங்ஙனமே பாகவதமும் கூறுகின்றது.

பரீக்ஷித்துக் கூறுகிறார்.—ஸ்ரீ பகவான் ஸமமாயும் சுத்தராயும் பூதங்களுக்கெல்லாம் ஸாதாரணமாயிருக்கிறார். அங்ஙனமே இந்திரனுக்காக அசுரர்களை எதற்காக வதம் பண்ணவேண்டும். கிருஷ்ணனை பகவானுக்குத் தேவர்களால் பிரயோஜனமுமில்லை. தைத்தியர்களிடத்தில் துவேஷமுமில்லை. அங்ஙனமிருக்க தேவபக்ஷபாதமாக தைத்தியர்களை எதற்காக நசிக்கச்செய்தாரென, ஸ்ரீமந் நாராயணனுடைய நிக்கிரஹானுக்கிரஹ குணங்களிடத்தில் எனக்கு மிக்க ஸம்சயமிருக்கிறது. அதைப் போக்கவேண்டும் என்றார்.

சுகர்.—ஹே! மஹாராஜனே உன்னால் நல்ல பிரஸ்னம் பண்

ணப்பட்டது கூறுவாம். பகவான் நிர்க்குணனாயிருந்தாலும் தனது மாயையினுடைய சத்துவ குணத்தை சுவீகரித்துக்கொண்டு தைத்தியர்களுக்கு பாதகரானார். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று பிரகிருதிக்கு முக்குணமுண்டு. அவைகளுக்கு ஒரே காலத்தில் விருத்தியாவது, க்ஷயமாவது வருவதில்லை. ஸத்வம் மேற்பட்டால் தேவர்களை யபிவிருத்திசெய்கிறது. ரஜோகுணம் மேற்பட்டால் அசுரர்கள் அபிவிருத்தியாகிறார்கள். தமோகுணமதிகரித்தால் ராக்ஷஸர்களபிவிருத்தியாகிறார்கள். இங்ஙனம் அந்தந்த காலானுகுணமாக பகவான் இருக்கிறார். எங்ஙனம் அக்னி பிறது முதலியவைகளில் அந்தந்த ரூபமாகத் தோன்றுகிறதோ அங்ஙனமே பகவான் தேவாதிகளிடத்தில் இருக்கிறார். நிபுணர்கள் அவரை சிருஷ்டியாதி காரியத்தால் விசாரித்து தரிசிக்கிறார்கள். எப்பொழுது பகவான் சிருஷ்டிக்க இச்சிக்கிறாரோ அப்பொழுது ரஜோகுணமபிவிருத்தியாகின்றது. ஸம்ரக்ஷிக்கும் காலத்தில் சத்வகுணம் ஸம்ஹரிக்கத் தமோ குணம், இவ்விஷயமாக இராஜஸூயயாகத்தில் ஒரு பிரச்னம் நடந்தது. அதைச் சொல்லுகின்றேன்.

ராஜஸூயயாகத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் சிசுபாலனை வதம் செய்தபொழுது அவனது தேஜஸ்ஸானது அப்பொழுதே எம்பெருமானை கிருஷ்ணனிடத்து வந்து, ஐக்யமாயிற்று. அதைப்பார்த்து யுதிஷ்டிரர் நாரதரைக் கேட்கிறார். பிரமோ இடைவிடாது பக்திசெய்யும் மஹான்களும் அடைய முடியாத, ஸ்ரீ கிருஷ்ணப்ராப்தியை கிருஷ்ண த்வேஷியான சிசுபாலன் எப்படி யடைந்தான். அதைப்பற்றிய நாங்கள் இச்சிக்கிறோம். பகவானை நிந்தித்தால் வேனனென்பவன் பிராம்மணர்களால், தமஸில் அழுத்தப்பட்டான். அங்ஙனமிருக்க சிசுபாலனும் பால்யந்தொடங்கி இதுபரியந்தம் கிருஷ்ண த்வேஷியாக விருக்கிறான். அங்ஙனமே தந்தவக்ரனும், இவ்விருவரும் கிருஷ்ண த்வேஷிகளன்றோ. இவர்கள் நரகத்திற்குச் செல்லவில்லை. ஆனால் ஸ்ரீபகவானது ஸாயுஜ்யத்தை யடைந்தார்கள். இச்சந்தேகத்தை நிவர்த்திக்கவேண்டுமென, நாரதர் கூறுகிறார். ஜீவர்கள் பிரகிருதி புருஷவிவேகமின்றி சரீரத்தை யடைந்திருக்கிறார்கள். அச்சமயத்தில் தேகாபிமானத்தாலும் நான் எனதென்னுமஹங்காரத்தாலும் வைஷம்யமும் அதனால் ஹிம்



ஸாதிகளுமுண்டாகிறது. அங்ஙனமிருக்க ஸர்வாந்தர்யாமியான ஈசுவரனுக்கு வைஷம்யமேயில்லை. அப்பொழுது ஹிம்சை எப்படி யுண்டாகும். ஆனதினால் வைரத்தாலாவது, நிர்வைரத்தினாலாவது, பயத்தினாலாவது, காமத்தினாலாவது, ஸ்ரீஹரியிடத்தில் மனத்தை வைத்தலே, அவரையடையச் சாதனமாகின்றது. எப்படி ஜீவர்கள் வைரானுபந்தத்தால் தன்மயராவார்களோ அப்படிப் பக்தியோகத்தாலடைய முடியாதென எனது நிச்சயம்: அதெங்ஙனமெனில் குளவி ஒரு பச்சைப் புழுவைத் தனது கூட்டில்வைத்து அடிக்கடி அதைக் கொட்டுவதால் அப்புழு அவ்வலியைச் சகிக்காமல் ஸதா அந்த நினைவையே யடைந்து எங்ஙனம் அப்புழுவும் குளவியாய் விடுகின்றதோ அங்ஙனமே வைரத்தால் ஈசுவரனை நினைக்கால் ஈசுவரனையே யடைந்துவிடுகிறான். அப்படியே புருஷர்கள் ஈசுவரனிடத்தில் மனதை வைத்து அந்த ஸ்வரூபத்தை யடைகிறார்கள். அநேகர் காமக்ரோதாதிகளால் பகவானிடத்தில் மனதை வைத்து அக்கதியை யடைகிறார்கள். அவர்கள் யாரெனில்,

காமத்தால் கோபிகள்
பயத்தால் கம்ஸன்
த்வேஷத்தால் சிசுபாலன்
சம்பந்தத்தால் யாதவர்கள்
ஸ்நேகத்தால் பாண்டவாதிகள்
பக்தியால் நாரதாதிகள்

இவர்களைப்போல ஒருவிதத்தாலும் வேனன் ஈசுவரனை நினையாததால் தமஸிலழுத்தப்பட்டான். ஆனதால் ஈசுவரனுக்கும் ஒருவரிடத்திலாவது வைஷம்யாதிகளில்லாததால், அவர் எந்தக் காரியத்தைச் செய்தாலும், ஒன்றையும் செய்யவில்லை. அனைத்தும் அவர் ஸந்நிதானத்தில் குணவைஷம்யத்தால் நடக்கின்றன, அதற்கு அவர் ஸாக்ஷியாய் விளங்குகிறார். ஆனதால் இவ்வவதார ரகஸ்யத்தைக் கிருஷ்ணோபநிஷத்தும் கூறுகின்றது. ஸர்வாங்க சுந்தரனும் ஸச்சிதானந்த ஸ்வரூபியுமான ராமச்சந்திரனைப்பார்த்து வனவாஸியான ரிஷிகள் கன்விஸ்மயத்தை யடைந்து ஆலிங்கனம் செய்துகொள்ள

வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது ஸ்ரீராமன் நாம் கிருஷ்ணாவதாரஞ் செய்யும்பொழுது நீங்கள் கோபிகைகளாக வந்து எம்மை ஆலிங்கனஞ் செய்துகொள்ளுங்கள். மற்றும் கிருஷ்ணாவதாரஞ் செய்த காலத்தில் கூடவந்தவர்களனைவரும் தேவாம்சமாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

வைசம்பாயன முனிவர் சொல்லுகின்றார்:—ஹே! ஜனமேஜய மகாராஜனே! கேளும். யௌவன புருஷர்களான மகா பராக்கிரமம் பொருந்திய ஸ்ரீ கண்ணபிரானும், பலதேவனும் ராஜலக்ஷணம் பிரகாசிக்கப்பெற்ற திருமேனியுடன் உத்தம ரத்னாபரணங்களை அணிந்துகொண்டு யாதவ நகரமாகிய மதுராபுரியில் சுகமாய் வசித்து வந்தார்கள். சிலநாட்சென்றபின் சதாசாரத்தாலும் வேதாத்தியயனத்தாலும், அலங்கிருதர்களான அவ்விரு யதுகுலோத்தமர்களும் தனுர்வேதங் கற்க வெண்ணி, காசிதேசத்தில் அவந்தி நகரத்திலுள்ள ஸாந்தீபமுனிவரைக் குருவாக அடைந்து அகங்காரமென்பதை யகற்றி மிக்க வினயத்துடன் அம்முனிவர்க்குச் சிசுருஷை செய்து வருநாளில், அம்முனிவரும் அவர்களைத் தன் சிஷ்யர்களாக ஏற்று அவர்கட்குத் தனுர்வித்தை பயில்வித்தார். ஏகசந்த கிராஹிகளாகிய இவ்விரு வீரர்களும், தீக்ஷை, ஸங்கிரஹம், ஸஹித, பிரயோகம் என்ற நான்கு பாகங்களையுடைய தனுர்வேதத்தையும், நானாவிதமான அஸ்திர சாஸ்திரங்களின் பிரயோகத்தையும், உபஸம்ஹாரத்தையும் 64 தினங்களுக்குள் அப்பியசித்தனர். பிறகு 12 தினத்தில், கணிதம், கவனம், சங்கீதம், சில்பம், யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய வித்தைகளெல்லாம் கற்றுக்கொண்டு, தர்மஞர்களும், தர்மாசாரியர்களுமான அவர்கள் தாங்கள் கற்ற தனுர்வித்தையைப் பரீட்சிக்க ஆசைகொண்டு தனுர்வேத பாரங்கதரான தங்கள் ஆசாரியரை நமஸ்கரித்து யாசிக்க ஆசாரியரும், மிக்க அபிமானத்திற்கு அபிமானத்துடன் அவர்களுடன் 15 நாள் அஹோராத்திரம் பரிகாசப் போராடி அவர்கள் சாமர்த்தியத்தைக் கண்டு அதிசயித்து தனுர்வேதத்தில் நுட்பமாயுள்ள எல்லா இரகசியங்களையும் சொற்ப காலங்களுக்குள் சிக்ஷை செய்து வைத்தார். சாந்தீப முனிவர் தமது சிஷ்யர்களுடைய அமானுஷியமான யோக்கியதைகளைக் கண்டு, அவர் சந்திர சூரியர்களே என



நினைத்தார். ஒருநாள் அம்முனிவர் வழக்கப்படி பர்வகாலத்தில் பரமசிவனையும், திருமாலையும் ஆராதனை செய்தபொழுது மகாத்மாக்களாகிய இராமகிருஷ்ணரிருவரையும் அப்பூஜையில் தரிசித்தார்.

இவ்வாறிருக்க, ஒரு தினத்தில் தனுர்வேதத்தில் தேர்ச்சியடைந்த அவ்விரு யாதவகுல சிரேஷ்டர்களும் குருவின் அநுமதி பெற்றுக்கொண்டு மதுராபுரிக்குத் திரும்பிப்போக வெண்ணி அவர் ஸந்நிதானத்தில் நின்று "ஹே பரமாசாரியரே! நாங்கள் தங்கள் அனுக்கிரகத்தால் தன்யர்களானோம். தங்களுக்குக் கொடுக்க வேண்டிய குருதக்ஷிணை யென்னவென்று திருவுளமகிழ்ந்து பகர்வீராயின் அதனைக் கொடுக்கின்றனம்," என்று சொல்ல, அதற்கு ஆசாரியர், தன் சிஷ்யர்களின் மிக்க பராக்கிரமத்தையும் மகிமையுமறிந்து, "ஹே! கிருஷ்ணா, எனக்குச் சில வருடங்களுக்குமுன் ஒரு புத்திரனிருந்தான். நான் பிரபாசமென்ற புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யப் போயிருக்கையில் ஓர் திமியானது என் புத்திர[illegible] கொண்டுபோய்விட்டது. இவ்வாறு சமுத்திர ஜலத்திற் போன அப்புதல்வனை மீண்டும் அழைத்துத் தருக" என்றார். என்னவும் கண்ணபிரான், பலராமருடைய அனுமதியின்பேரில், "நல்லது அப்படியே ஆகட்டும்" என்று ஆசாரியருக்கு வாக்களித்து, சமுத்திரத்தை நோக்கிச்சென்று அதனுட் பிரவேசிக்க சமுத்திரராஜன் அஞ்சலியஸ்தனாய் வாசுதேவன் ஸந்நிதியில் வந்து நின்றான். அவ்வாறு நின்றவனை நோக்கி, "ஹே ஸமுத்திர ராஜனே! சாந்தீப முனிவரின் மைந்தன் எங்கே?" என்று கேட்க, அதற்குச் சமுத்திர ராஜன் "ஹே! மாதவா! பருத்த சரீரத்துடன் பஞ்சஜனனென்ற ஓர் இராக்ஷஸன் திமிரூபமாக வந்து அந்தக் குழந்தையைக் கொண்டுபோய்விட்டான்" என்று சொன்னான். அதைக் கேட்ட ஸ்ரீபகவான் புருஷோத்தமன் அச்சுதன் அவ்வரக்கனைக் கொன்று அவன் கூட்டைக் கைப்பற்றினார். ஆயினும் ஆசிரியரது புத்திரனை அடைந்திலர்.

இவ்வாறு ஜனார்த்தனன் அடைந்த அவனது கூடாகிய சங்கமானது தேவமனுஷியர்களுக்குள் பாஞ்சஜன்யமென்று பெயர்பெற்று விளங்குகின்றது. பிறகு புருஷோத்தமனான ஸ்ரீகிருஷ்ணன் வைவ

ஸாதபட்டணம் செல்லவே, யமன் கண்ணபிரானுக்கு வந்தனோபசாரங்கள் செய்து அவர் வந்த காரியம் என்ன என்று வினவ, அதற்குக் கண்ணபிரான், "எனது ஆசாரிய புத்திரனை எனக்குக் கொடும்" என்று கேட்டார். அப்பால் புருஷோத்தமராகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் எமனுக்கும் ஒரு யுத்தம் நேர அதில் ஸ்ரீகண்ணபிரான் எமனை வென்று தனது ஆசாரியரது புத்திரனை அவனது ஸ்தூல சரீரத்துடன் யமலோகத்தினின்றும் மீட்டு வந்தார். குருபுத்திரனையும் பாஞ்சஜன்யம் என்ற சங்கத்தையும், காருயிதமான விலை மதித்தற்கரிய ஆபரணங்களையும் எமனது படாள் மூலமாயும் ராக்ஷதர்கள் மூலமாயும் உபேந்திரனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் கொணர்ந்து, தன் பரமாசிரியருக்குச் சந்தோஷத்துடன் சமர்ப்பித்து குருஸன்னிதானத்தில் பலராமருடன் கைகட்டி நின்றார். குருபுத்திரன் இறவாவிடில் என்ன பிராயமுள்ளவனாயிருப்பானோ அதே பிராயத்துடனும் அழகுடனும் தன்னிடத்[illegible] கொண்டுவந்து சேர்த்ததைக் கண்ட கசிய புத்திராகிய ஸாந்தீபமுனிவர் இராமகிருஷ்ணர்களை மிகவும் வாழ்த்திப் பூஜித்தார். சாமான்யரால் நினைக்கவாவது செய்யவாவது ஒண்ணாத இந்த மகா அற்புதச் செயலைக்கண்ட எல்லோரும் மிக்க ஆச்சரியமடைந்தனர். ஆனதால் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியிடத்து இடைவிடாது பக்தியைச் செய்வோமாக.

## ஹனுமான்

அஞ்சிலே யொன்று பெற்றான்
அஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாக
ஆரியர்க்காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற
அணங்கைக் கண்டயலாரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவனெம்மை யளித்துக்காப்பான்.

அஞ்சனையினுடைய கர்ப்பத்திலிருந்து பிராதக்காலத்தில் அவதரித்த வாயுபுத்திரர் பசியினால் மிகவருந்தி உதயகால சூரியனை



யொருபழமென்றெண்ணி அதைப் பிடித்துப் பக்ஷிக்க ஆகாசத்திற் கிளம்பிவிட்டார். இப்படிப் போகிற தன் புத்திரனை சூரியனுடைய கிரணம் தகியாமலிருப்பதற்குக் குளிர்ந்த காற்றுகளை வீசிக்கொண்டு வாயுபகவான் பின்சென்றார். அந்தத் தினத்தில் சூரியனைப் பக்ஷிக்க வாயுபுத்திரர் கிளம்பினபோ அன்றையத்தினம் சூரியக்கிரஹணமாகையால் சூரியனைப் பக்ஷிக்க வந்த ராகு இவரைப்பார்த்து நமக்கு விரோதியாரோ வந்துவிட்டாரென்று பயப்பட்டு அதிவேகமாக இந்திரனிடமோடி, தேவராஜனே! ஆதித்தியனைப் பக்ஷிக்க எனக்கும் நியமித்து இதரனுக்கும் நியமித்துவிட்டீரோ? இன்றையத்தினம் அமாவாசையாகையால் சூரியனைப் பிடிக்க நான் போகிறதற்குள்ளே இன்னமொரு ராகு வந்து வெகு சீக்கிரமாக சூரியனைப் பிடிக்கிறானே. இதற்குள் பக்ஷித்து விட்டானோ என்னமோ வென்று கூக்குரலிட்டார். இதைக்கேட்ட இந்திரனும் ஆச்சரியமுற்றவனாய் வஜ்ராயுதத்தோடே கூட ஐராவதத்தின் மேலேறி ராகுவை முன்னிட்டுக்கொண்டு சூரியனிடம் வந்தார். இராகு இந்திரனைவிட்டு சூரியனைப் பிடிக்க அதிவேகமாயோடினான். வாயுபுத்திரர் இவனை யொரு பழமென்றெண்ணிப் பக்ஷிக்கப் பின்றொடர்ந்தார். அப்பொழுது ராகு அச்சமுற்று இந்திரா! இந்திரா! வென்று கதறினான். இவனுடைய தைந்ய சப்தத்தைக்கேட்டு இந்திரன் வருகிறபோது அவனேறின ஐராவதமென்கிற யானையைப் பெரிய பழமென்றெண்ணிப் பக்ஷிக்க வருகிற வாயுபுத்திரனைக் கண்ட இந்திரன் மிக்க கோபத்தை யடைந்து வஜ்ராயுதத்தால் இடது கன்னத்தில் அடிக்கவே ஒரு பருவதத்தின் மேல் விழுந்து இடது கன்னம் பிளந்து போய்விட்டது. இதை வாயு கண்டு கோபித்து எங்கும் காற்றில்லாமல் பண்ணிவிட்டான்; இதைக்கண்ட தேவர்களெல்லாருங்கூடி பிரும்மாவினிடத்தில் [illegible]களைச்சொல்லி முறையிட்டனர். பிரும்மா இதைக் கேட்டு சமஸ்த தேவதைகளுடன் வந்து வாயுவினிடத்திலிருக்கிற இளங்குழந்தையை வாங்கி வந்த வேத ஸ்வரூபத்தைக் காண்பிக்கும்படியான தம்முடைய கைவிரல்களினால் தடவிக்கொடுத்தார். பின்பு உடனே சிசுவானது சுகமாக எழுந்துவிட்டது. பிறகு சதுர்முகன் ஸமஸ்த தேவர்களைப்பார்த்து இந்த சிசுவினால் உங்களுக்குச் சில காரியங்களைப்

போகிறபடியால் எல்லோரும் அனுக்கிரஹித்து வரங்களைக் கொடுங்களென்று நியமிக்க, அப்பொழுது இந்திரன் சந்தோஷமடைந்து என்னுடைய வஜ்ஜிராயுதத்தால் பிளவுண்ட சின்னத்தை யுடையவனாகையால் இவனுக்கு ஹநுமானென்று பேருண்டாகட்டுமென்று இத்திருநாமத்தைச் சாற்றினாராகையால் ஹநுமானென்று சொல்லப்படுகிறது. இவர் சூரியனிடத்தில்கூட ஓடிக்கொண்டே கல்விபயின்றார். இவரை நவவியாகரண பண்டிதரெனவும் சொல்லுவதுண்டு. இவரின் இளமைப்பருவத்தில் பல ரிஷீசுவரர்களிடம் தம்முடைய பராக்கிரமத்தைக் காண்பித்து தொந்தரவு செய்ய ஆரம்பிக்க இவரின் பலம் இவருக்குத் தெரியாமலே யிருக்கட்டும், ஆனால் இவரின் வரலாறுகளைத் துதித்து யாராவது இவருக்கு எடுத்துச்சொன்னால் ஞாபகம் வரக்கடவதென்று சபித்தார்கள். இவரின் பராக்கிரமம் இராமாவதாரத்தில் தான் வெளிக்கிளம்பின. ஸ்ரீ ராமருக்கு ஸக்கியராக ஏற்பட்ட சுக்கிரீவனிடத்தில் அமைச்சராயிருந்து வந்தார். சுக்கிரீவனை வாலி துரத்தி இம்சித்த காலத்திலும்கூட ஸ்ரீமத் ஆஞ்சநேயருக்கு தம்முடைய பராக்கிரமம் வெளிவரவில்லை. ஏனெனில் தமக்கு ஸ்ரீராமனுடைய கிருபா நோக்கம் அதுவரையிலும் ஏற்படாமலிருந்தது. ஸ்ரீராமனுக்கு சுக்ரீவர் ஸக்கியத்தினால் ஜானகியை தேடவேண்டி சுக்கிரீவ இராஜனால் திக்குகள் தோறும் வானரவீரர்களை அனுப்பும் காலத்தில் ஆஞ்சநேயருக்கு அச்சமயத்தில் வெகுகால ஞானவானாகிய ஜாம்பவனால் ஆஞ்சநேயருக்கு அவரின் வல்லமையைக் குறித்து சொல்லிய மாத்திரத்தில் ஞாபகம் உண்டாகி சாபவிமோசனமானவுடன் திக்விஜயஞ் செய்து ஜானகியைத் தேடி எம்பிரான் இராமச்சந்திரமூர்த்திக்கு ஸதா தாஸராகவேயிருந்து அவருக்குப் பணிவிடைகள் புரிந்துவந்து அவருடன்கூட இராவணாதிகளை ஜெயித்தும் ஸ்ரீராமச்சந்திரனுக்கு நடந்த பட்டாபிஷேகத்தைப் பார்த்து களிகூர்ந்து அவரால் அளித்த ஆலிங்கன சுகத்தைப்பெற்று ஸதா ஸ்ரீராமத்தியானமே கொண்டு, சிரஞ்சீவித்துவம் புரிந்து வருகிறார். இப்பேர்க்கொற்ற அதிவீரபராக்கிரமஸாதுவாகிய ஆஞ்சநேயரைத் தியானிப்பவர்கள் நித்திய முக்தர்களாக இருப்பார்கள் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.



## வால்மீகி மகாரிஷி

ஸ்ரீ ஆதிகாவியமாகிய ஸ்ரீமத் வால்மீகி இராமாயணத்தை அருட்பிரவாகத்தால் செய்தவருடைய மஹரிஷி சிரேஷ்டராகிய ஸ்ரீ வால்மீகி மகாரிஷி பூர்வத்தில் பில்லவர்க்கத்தைச் சார்ந்த கிராதகன். கொலைகளவுகளால் காலத்தைக் கழித்துவந்தான். ஒருநாள் யாரும் அகப்படவில்லை. கோபத்தால் மரத்தடியில் உட்கார்ந்திருக்கையில் மகரிஷியான நாரதர் அவ்வழி வந்தார். பில்லன் கோபத்துடன் ரிஷியைக் கொல்லச்சென்றான். மகரிஷி அவனை நோக்கி இந்தப் பாபச்செய்கையால் வந்த பலமென்ன? பரஹிம்சையால் பாபியாகிறாயே? என்றார். கிராதகன் லக்ஷ்யஞ்செய்யாமல் "என் ஸம்ஸாரத்தை ரக்ஷிக்க நான் எந்தக் காரியமும் செய்வேன்" என்று கத்தியை ஓங்கினான். ரிஷி "நல்லது. நீ யாருக்காக இந்தப் பாபத்தைச் செய்கிறாயோ அவர்களும் பலாபலன்களில் ஸமபாகிகளாயிருப்பார்களா?" என்றார். தடையில்லை நான் கொடுக்கும் பணம் காசுகளை அவர்கள் அனுபவிப்பதுபோல் கஷ்டநஷ்டங்களிலும் பங்குக்காரர்களே என்றான். கிராதகன்; ஆனால் அதை யறிந்துவா; நான் இங்கே இருக்கிறேன் என்று நாரதர் கூற கிராதகன் ஸம்மதித்து வீடுசென்று பத்நீபுத்திரர்களை [illegible]. எங்களைக் காப்பாற்றுவது உமது கடமை. ஆனால் உமது கர்மபலனை நீரே அனுபவிக்க வேண்டும். நாங்கள் அதற்குப் பாத்தியப்பட மாட்டோமென்றனர். கிராதகன் துக்கத்துடன் நாரதரிடம் வந்து மகரிஷியே! என்னை ரக்ஷிக்க வேண்டும். ஸ்வார்த்தமய ப்ரபஞ்ச ஜீவனம்போதும்! என்னைக் காப்பாற்றும் என்று முறையிட்டான். அப்பொழுது தாரகமந்திரமாகிய ராம நாமத்தை உபதேசஞ் செய்து நான் வரும்வரையில் ராம, ராம, ராம வென்று ராம நாமத்தைப் பண்ணிக்கொண்டிரு என்று சொல்லிவிட்டு வெகுகாலங்கழித்து அவ்வழியே வருகையில் இராமநாமத்தின் த்வனி மாத்திரம் தென்படவே, அங்[illegible] மகரிஷி பார்க்கவும் ஓர் புற்று அவர்மேல் படிந்து ஓங்கி நிற்க புற்றடியிலிருந்து, அவரை வால்மீகியெனக் கூப்பிட்டு, அவரை எழுந்திருக்கச் செய்தார். ஆஹா! [illegible]வாக்யத்தின் மகிமையை வர்ணிக்கத்தகுமோ? பாபத்தொழிலி

விருந்த கிராதகன் நாரதருடைய ஸத்துபதேசத்தால், வால்மீகி ரிஷி என்ற கீர்த்தியை அடையும்படி செய்ததல்லவா? இவரின் பிரவாகத்தை யாவரும் நன்குணர்ந்தவராகையில் சுருக்கி முடித்தோம்.

## நாரதர்

நான் ஆதியில் ஒரு ரிஷியினுடைய புத்திரனாயிருந்தேன். சாதுர்மாதத்தில் யோகிகளும், பிரம்மரிஷிகளும், தேவரிஷிகளும் அவ்விடம் வருவார்கள். ஒரு நாள் ஸனகாதி மகரிஷிகள் எங்கள் ஆசிரமத்துக்கு வந்தனர். எங்கள் ரிஷி அவர்களை அதிகம் உபசரித்தார். அவர்களுக்கு நான் ஸேவை செய்து வந்தேன். என் காரியத்தில் அவர்களுக்கு திருப்தியுண்டாயிற்று. மிதவாதியும், இந்திரிய நிக்ரஹியும், ஆக்ஞாநுசரனுமான என்னிடம் அவர்களுக்கு அதிக வாஞ்சை ஏற்பட்டது. எனக்கு ஸத்யதர்மத்தின்மேல் ஆவல் அதிகரித்து, பிரம்ம மயமான பரமேசுவரனிடம் நிச்சய பக்தி யுண்டாயிற்று. பிரம்ம கீர்த்தனையைக் கேட்டு என்னுடைய அந்தக்கரணமான ஆகாசத்தில் பக்தி சந்திரோதயமாயிற்று. என்மேல் அவர்கள் அன்புகூர்ந்து "ஸாக்ஷாத் ஈசுவரப் பிரவர்த்தக ஈசுவரீ ஞானோபதேச"த்தைச் செய்து தேச ஸஞ்சாரம் போகும்படிக் கட்டளையிட்டார்கள். என் தாய்க்கு நான் ஒரே மகன். அவள் என் பிரிவைப்பற்றி அதிக வருத்தமுற்றாள். அவளுடைய வேண்டுகோளுக்கிணங்கி சிலகாலம் போகாமலிருந்தேன். ஆனால் ஸனகாதிரிஷிகள் உபதேசித்தபடி ஜபம், தபம், ஆஸனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தியானம், பிரம்மஸ்வரூப சிந்தனை முதலியவைகளைத் தவறாமல் செய்துவருவேன். இவைகளால் எனக்கு தத்வ ஞானமுண்டாயிற்று. வனத்தில் ஏகாந்தமாய் உட்கார்ந்து பிரம்மத்தைச் சிந்திப்பதில் எனக்கு அதிக உத்ஸாகம். என் பிரிய மாதாவினிடமிருந்த பிரேமம் என்னைவிட்டு நீங்கவில்லை. அவள் மனதை நோகவைப்பதில் எனக்கிஷ்டமில்லை. நான் தேசாடனம் செய்வதாயிருந்தால் தாயை இழக்கவேண்டும். ஒரு யுக்தி தோன்றிற்று. அன்னையையும் பின்தொடர்ந்து வரும்படி அழைத்தேன். அவளும் ஸம்மதித்து என்னுடன் வந்தாள். மத்தியமார்க்கத்தில் மாதா அரவம் தீண்டி மரணமடைந்தாள்.



துக்கப்பட்டேன். என்ன பிரயோஜனம்? வருவது வழி தங்காது. மனிததேகம் அஸாஸ்வதம். ஜீவனம் அதிக சஞ்சலமானது. தத்வ ஞானி இவைகளை நீக்கவேண்டும். அதுமுதல் பிரம்ம சிந்தனை அதிகமாயிற்று. தேசாடனம் செய்வதும் பரமேசுவரனுடைய ஸத்யஸ்வரூபத்தைத் தியானிப்பதுமாயிருந்தேன். பலவிடங்களையும் சுற்றியாயிற்று. ஒருநாள் ஈசுவரனையே தியானம் செய்துகொண்டு அரசமரத்தடியில் உட்கார்ந்திருந்தேன். ஆ! என்ன சொல்வேன்; மின்னலைப்போல் தோன்றி மறைந்தார். பிரமாவேசத்துடன் எழுந்தேன். என் அவயவங்கள் சோர்ந்தன. ஆனந்தபாஷ்பம் சொரிந்தேன். மறுபடி தரிசனம் பார்க்க முயன்றேன். காணவில்லை. வருத்தமுற்றேன். அப்பொழுது "ஹே பாலகா! இந்த ஜென்மத்தில் உனக்கு என்னுடைய தர்சனமாகாது. ஏனென்றால் இந்திரியாஸக்தர்களான யோகிகளால் என்னைப் பார்க்க முடியாது. ஒரு முறை தரிசனம் உனக்குக் கிடைத்தது. உனது பக்தியின் உன்னதிக்காக; ஸாதுக்கள் எல்லா வஸ்துக்களையும் என் பிரியத்தின் பொருட்டு வெறுப்பார்கள்; நீயும் அவ்விதமே செய். மகரிஷிகளின் ஸேவையைச் செய்து என்னிடம் நிச்சய பக்தி வை. உன் தேகத்தைவிட்டு என் லோகத்துக்கு வந்தபிறகு மறுபடி என் தரிசனம் உனக்குக் கிடைப்பதுடன் பூர்வ ஞானமும் உண்டாகும். ஸந்தோஷசித்தனாய் பிரம்ம சிந்தனை செய்து சுப ஸமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிரு" என்று ஆகாசவாணி கூறி ஒரு வீணையையும் கொடுத்தது. பிரம்ம வீணையை வாசித்து பிரம்ம சிந்தனையும் செய்தேன். ஸச்சிதானந்த ரூபத்தை எப்போது பார்ப்போமென்ற ஆவல் என்னைத் தூண்டிக்கொண்டே இருந்தது.

வழியில் சிபியின் தேசமிருந்தது. அரசனால் உபசரிக்கப்பட்டு இராணியால் ஸத்கரிக்கப்பெற்றேன். பர்வதரிஷியின் பரிச்சயமும் அங்கேயே கிடைத்தது. அனேக நாட்கள்வரை நாங்களிருவரும் அங்கிருந்தோம். ஒருநாள் நானும் அவரும் பேசுகையில் பர்வதரிஷி தாம் விவாகம் செய்துகொள்வதாய்க் கூறினார். அரசகுமாரியைத் தனக்கு கன்னியாதானம் செய்யுமாறு தெரிவித்தார். அரசன் ரிஷிக்கு மகளைக் கொடுப்பதில்லையென்று கூறிவிட்டான். நானும் பர்வத ரிஷி

யிடம் அரசகுமாரியை மணக்கவேண்டுமென்று அறிவித்தேன். ரிஷி கோபங்கொண்டு "குரூபியாகக்கடவாய்" என்று சபித்தார். என்னைக் குரூபம் சூழ்ந்தவுடன் பர்வதரிஷிக்கு "ஸ்வர்க்க பிராப்தி கிட்டாமற் போகக் கடவது" என்று பிரதி சாபம் கொடுத்தேன். பர்வதரிஷி உலகபிரதக்ஷணம் செய்யச் சென்றார். நான் சிபிராஜ்யத்திலிருந்தே பகவத்தியானம் செய்தேன். யாருக்காக விரூபமடைந்தேனோ அந்த மாது என் சமாசாரத்தைக் கேள்வியுற்று தந்தையிடம் தெரிவித்தாள். சிபிராஜா அதிக துக்கமடைந்தான். என்னுடைய சேவையை ராஜகுமாரியான தமயந்தி தவறாமல் செய்யலானாள். வெகு நாட்களுக்குப் பிறகு நானும் பர்வதரிஷியும் ஸந்தித்தோம். ஒருவரோடொருவர் ஸம்பாஷணை செய்தபிறகு சாபத்தை விலக்கிக் கொண்டோம். ராஜகுமாரி எனக்கு மனைவியானாள். கிருகஸ்தாசிரமத்தைப் பெற்றிருந்தும் பிரம்மத்தியானத்தை மறக்கவில்லை. அநேக வருஷங்களுக்குப் பிறகு இந்த சரீரம் தொலைந்தது. பரமனுடைய கிருபையால் பிரம்மனுடைய மானஸ புத்திரனானேன். அன்றுமுதல் கடோர பிரம்மசரியத்தை ஆதரித்து தேவதத்தவீணையை வாசித்து மதுரமான கானங்களைப்பாடி ஜனங்களுக்கு ஈஸ்வர ஸ்வரூபத்தைப் போதிக்கின்றேன். பரப்பிரம்மத்தை நினைத்துப் பாடுந்தோறும் ஹிருதயம் ஆனந்தமயமாகிறது. பரமேசுவரனுடைய கிருபையால் பூர்வஜென்ம அறிவும் எனக்குண்டாயிருக்கிறது. இதுவே நிஜமான ஆநந்தம். இந்த ஆநந்தம் எல்லோருக்கும் லபிக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் நான் சிரமப்படுகிறேன்" என்று நாரதர் கூறினார். வியாஸர் ஆநந்தமடைந்து பரமேசுவரனுடைய பக்தியை வர்ணித்து ஸந்தோஷமடைந்தார். ஸத்ஸங்கத்தின் பிரபாவத்தை யார் அறிவார்கள்?

ஸ்வாயம்பு மன்வந்த்ரத்தில் பிரஜோத்பத்திக்காக பிரம்மா மானஸ புத்திரர்களைப் பிறக்க வைத்தார். பத்து மானஸ குமாரர்களில் நாரதர் ஒருவரென்று தெரிகிறது. இவர் பத்மகல்பத்திலும், வராககல்பத்திலும் வசித்தவர். பிரஜோத்பத்தி காரியத்தில் இவர் பிரவேசிக்கவில்லை. பிரம்மசாரியாகவே யிருந்தார். ஹரிநாமகீர்த்தனங்களைப் பாடுவார். பிரம்ம விசாரத்தில் மனம் செலுத்துவார். ஒரு பண்டித



மணியிடம் வித்யாப்யாசம் செய்தார். மனுவின் சபையில் முதல்முதல் பிரவேசித்தவர். அதுவரையில் உலகத்தில் அவருடைய பெயர் பிரஸித்தி பெறவில்லை. ஸூக்ஷ்மபுத்தியுள்ளவர், புத்தி பலத்தால் அதிசீக்கிரத்தில் மகாயோகி என்ற பெயரை எடுத்தார். தேவரிஷிகளில் நாரதரே சிரேஷ்டமென்பார்கள். இவருடைய குணாதிசயங்கள் புகழக்கூடியவை. தார்மீகர்; உத்ஸாஹி; பரஹிதி; கலகப்பிரியர்; விநோதி; ஸங்கீதகலாவித்; பலவித்யாதி; தத்வஞானி; வாக்சாதுர்யமுள்ளவர். நாரதமகரிஷி ஹிதகரமான யோசனையால் பாஹ்ய பிரபஞ்சத்தை நிர்மித்து தேவ மானவ தானவர்களில் கலகமேற்படுத்தி பிறகு நிச்சயமான யோசனையை வெளியிட்டு சாந்தமுண்டாக்குவார். இவரிடத்தில் எல்லோருக்கும் பிரியமதிகம். ஸ்வேச்சாவிஹாரி ஸதாலோகஸஞ்சாரி. உலகத்தாருக்கு மகத்வ ஸமாசாரத்தை வெளியிட்டவர் இவரே. இவருடைய வசனங்கள் ரஸம் நிறைந்ததும் விநோதமும் ஹிதமுள்ளதுமாயிருந்தன. அக்காலத்திலிருந்த தேவதானவர்களின் கர்ணங்களுக்கு இவருடைய வார்த்தைகள் அமிருதமாயிருந்தன. இவருடைய ஆச்ரமம் எமுனைநதி தீரத்திலிருந்தது. உபதேசத்தால் எல்லோரையும் வசப்படுத்திக்கொள்வார். ஈசுவரன் தர்மம், நீதி, அத்யாத்மம் ஆகிய இவைகளே இவருடைய போதனைவிஷயங்கள். தெருக்களிலும் ராஜமார்க்கத்திலும் நின்று ஸுந்தரமான வீணையை வாசித்து மதுரமான கிருதிகளைப் பாடுவார். இவருடைய பாடசாலையில் 60,000 பிள்ளைகளிருந்தனர். சிக்ஷாவிதானம் வெகு நேர்த்தியாயிருக்கும். இவர் தத்வஞான விஷயமாய் எழுதியுள்ள "நாரத பஞ்சராத்திரி" என்ற கிரந்தம் வித்வாம்சர்களின் பிரியத்தைக் கவர்ந்திருக்கிறது. பிரம்மஞானத்தை வெகு ரம்யமாய் நிரூபித்திருக்கிறார். இந்தக் கிரந்தத்தின் மூலப்பிரதி தற்காலம் கிடைக்கிறதில்லை. "நாரதஸ்மிருதி" என்ற கிரந்தமும் இவரால் இயற்றப்பட்டதேயாகும். தர்மஸம்பந்த விவாதங்களிருந்தால் இவர் பார்த்து பரிகாரம் செய்வார்கள். ஸங்கீத காயன வித்தைகளைப்பற்றி வெகு ஸ்வாரஸ்யமாய் எழுதியிருக்கிறார். ஸ்ரீராமர் சபையில் தர்ம சாஸ்திரியாயிருந்தார். குபேரன் ஆஸ்தானத்தில் குடிகொண்டிருந்தார். தர்மராஜாவின் அக்ஷசாக்ஷியிலும்

விஜயம்செய்து இந்திராதி லோக பாலர்களின் வர்ணனையைக் கூறினார். தர்மராஜனுக்கு நீதி உபதேசம் செய்தவர் இவரே. "நாரத நீதி" என்கிற கிரந்தம் அக்காலத்திலேயே வெளிவந்தது. நாரதநீதியை ஒருமுறை படித்தாலல்லவோ அதன் பெருமை தெரியும். ஸாமத்தில் நாரதர் பிரவீணர். புராணத்தில் கூறியபடி விஷ்ணுவுக்கும் மகாலக்ஷமிக்கும் விவாகம் நடத்தவேண்டி பிரயத்தனப் பட்டவர். விஷ்ணுவின் ஆக்ஞைப்படி இந்திரனை வசப்படுத்தி புரூரவனுக்கும் ஊர்வசிக்கும் மணம் செய்துவைத்தார். அதமர்களை யுக்தியால் வென்றவர். ஜாலந்தனென்னும் தைத்யன் மனைவியின் பதிவிரதா தர்மத்தால் ஜெயமடைந்து கர்வித்திருந்தான். அவனை இவரே யுக்தியால் பங்கம் செய்தவர். கம்ஸாஸுர கர்வபங்கம் அரனிடம் ஸ்ரீ கிருஷ்ண ஜென்னத்தைக் கூறி தேவகியை பந்தனத்தில் வைக்கும்படி ஏற்படுத்தினார். இவர் பவிஷ்யத்தி என்பதற்கு அத்தாக்ஷியாய் வாஸ்வதத்தையின் புத்திரன் ராஜனாவான் என்று கூறியிருந்தது மெய்யாயிற்று.

ஸாவித்ரியின் பாதிவிரத்யத்தால் அவள் புருஷனுக்கு நேரவிருக்கும் அபமிருத்யு நீங்குமென்று தெரிவித்தவர் இம்மகரிஷியே. புத்திர சோகத்தால் சிந்தித்த சித்திரகுப்தனுக்கு தத்வ ஞானோபதேசம் செய்து விரக்தனாக்கினார். இவர் உண்மையான ஸத்குருவென்றே சொல்லவேண்டும்.

ஒருநாள் நாரதர் வீணையை வாசித்துக்கொண்டே ஸரஸ்வதி நதி தீரம் வந்தார். வியாஸ மகரிஷியின் ஆச்ரமம் அங்கே யிருந்தது. நாரதரை வியாஸர் விருவாய் உபசரித்தார். மகரிஷிக்குண்டான ஆநந்தத்திக்களவில்லை. ஆனால் வியாஸரிஷியின் முகத்திலுள்ள வியஸனக்குறியை யறிந்து "ஹே பிரம்மரிஷி! உன் முகம் வாடுவானேன்? வியவ்ஹாரம், தர்மம், நீதி முதலிய விஷயங்களடங்கிய மஹாபாரதத்தை எழுதியுள்ள நீ சிந்தைப்படுவானேன்? எப்பொழுதும் பிரம்ம சிந்தையில் நிலைத்துள்ள உன் மனம் வருந்துவானேன்? நீ எழுதியுள்ள மஹாபாரதத்தில் ஏதாவது தோஷமுளதென்று கவலைப்படுகிறாயோ?" என்று கேட்டார். வியாஸரிஷி அவரைப் பார்த்து நாரதா நீ சொல்வது நிஜம்; என் அந்தக்கரணத்தில் சொல்லமுடியாத



துக்கம் வியாபித்திருக்கிறது, என்று கூறி 'ஹே பரப்பிரம்ம பரமாத்மனே! நிராகாரனுள்ள உன் நிஜரூபத்தை வர்ணிக்காமல் உன் அவதாரங்களை வர்ணித்து தீர்த்தயாத்திரை மூலமாய் உன் ஸர்வ வியாபகத்துவத்தை நாசப்படுத்தினேன். விகார ஜெனிதமான இந்த தோஷத்தை க்ஷமிப்பாயாக' வென்று வேண்டினார். இவைகளைச் சொல்லுகையில் வியாசரின் கண்களிலிருந்து ஜலத்துளிகள் விழுந்தன. பார்த்தார் நாரதர். 'ஹே மகரிஷி, உன் விசேஷமான துக்கத்துக்கு இது காரணமல்ல. நீ எழுதியுள்ள மஹாபாரதத்தில் தெய்வபக்தியை அதிகமாய் நிரூபிக்கவில்லை. அதனால் உன் மனம் வியாகூலத்தை யடைந்தது. பரப்பிரும்ம நிரூபணத்தை உன் கிரந்தத்தில் பிரகாசப்படுத்தி உன் துக்கத்தைத் தூரத் துரத்து என்றார். வியாஸர் ஆநந்தத்துடன் உபதேசத்தை அங்கீகரித்தார். நாரதர் வியாஸருக்கு சாக்ஷமுண்டாகும்படி யோகாப்பியாசத்தாலும், பிரபு கிருபையாலும் தமக்கேற்பட்டுள்ள ஞானத்தைக்கொண்டு தம் பூர்வஜென்ம விருத்தாந்தத்தை விவரிக்கலானார்.

## உபமன்யு மகரிஷி

### குருபக்தி

### ஆசார்யவான் புருஷோவேத.

பாண்டவர்களின் குலத்துதித்து இக்குவலயம் குறை யாதுமின்றி வாழச் செங்கோலோச்சி யாண்டுவந்த ஜநமேஜய மகாராஜனுடைய ஆக்ஞையின் கீழ் மாந்து வாழுங்குடிகளுள் அந்தணர் குலக்கொழுந்தாய் தௌமியர் என்ற ஒரு முனிவர் இருந்தார். இவருக்குச் சீடர்களாயிருந்தோரில் உபமன்யு என்று பெயர் பெற்றவர் ஒருவர். ஆசிரியர்மீது வெகு அன்பு பூண்டு அவரது பணிவிடைத் தமது சிரமேற்றுங்கி யொழுகுந்தன்மையர். இத்தன்மைய சீடனுக்குத் தமது பசுக்களை நாடோறும் மேய்த்துவரத் தௌமியர் விதித்திருந்தனர். குருவின் நியமனப்படியே உபமன்யு தினந்தோறும் காலையிலெழுந்து பசுக்களை யோட்டிச் சென்று பசுமையான புற்களடர்ந்து வளர்ந்துள்ள பூமியிற் சேர்த்துப் பசுக்களெல்லாம் வயிறு நிரம்பப் புல் மேய்ந்தபிறகு

அருகிலோடு மருவியில் நீருண்ணச் செய்து இளைப்பாற்றுவித்து மாலைப் பொழுதில் அவற்றைத் திருப்பிக் குருவின் கிருகம்கொண்டு சேர்ப்பது வழக்கம். இவ்வாறு சிலநாளாகியபின், ஒருநாள் தௌமியர் சீடனை நோக்கி, குழந்தாய்! உபமன்யு நீ தினந்தோறும் பொழுது விடிந்தவுடன் எனது பசுக்களையோட்டி மேய்த்துப் பொழுது புலர்ந்தபின் வருகின்றனை என்றாலும் சரீரம் வாட்டமுறாதிருக்கின்றாய். நீ உட்கொள்ளும் உணவென்ன. ஒளியாது சொல் என்றார். அதற்கு உபமன்யு வெகு பயபக்தியுடன் குருவை வணங்கி சுவாமி நான் இதோ சமீபத்தில் காணும் அக்கிரகாரம் சென்று பிக்ஷையேற்றுண்டு வருகிறேன் என்றார். இதோ சீடன் சம்பாதிக்கும்பொருள் யாதாயினும் குருவைச் சார்ந்ததன்றோ. ஆதலின் நீ யாசித்து அடையும் உணவை என்னுடைய அனுமதியின்றி புசிக்கலாகாது. இன்றுமுதல் உனக்குக் கிடைப்பதை என்னிடம் சேர்ப்பாயாகவென்று குரு ஆக்ஞாபித்தார். குருமொழியையே வேதவாக்கியமாகக் கொள்ளும் தன்மையரான உபமன்யுவானவர் அவ்வாறே யாதும் வெறுப்பின்றி ஒப்புக்கொண்டு அன்றுமுதல் தனக்குக் கிடைத்த உணவை ஆசிரியர் பக்கல் வைத்துப்போவார், அதை உண்ணும்படி சீடனுக்குச் சொல்லாமல் தௌமியரும் உபமன்யுவைப் பார்த்து சரி போய்வாவென்பார். இவ்வாறு உபமன்யு தான் யாசித்துப் பெற்றதை குருவுக்கு அர்ப்பணம் செய்துவிட்டுத் தன் தொழிலில் யாதொரு குறைவுமின்றிப் பசுக்களை மேய்த்து வந்தார். பின்னும் சிலநாள் சென்றபின் குருவானவர் மறுபடியும் சீடனைப்பார்த்து " என்னடா உபமன்யு, நீ தினந்தோறும் யாசித்துக் கொண்டுவரும் உணவை நீ கொஞ்சமேனும் உட்கொள்ளாது முழுதும் என்னிடமே சேர்த்துப்போகின்றாய். அப்படி இருந்தும் உனக்கு உடம்பு இளைக்கவில்லையே. யாது காரணம். எதனால் ஜீவிக்கிறாய் சொல் என்றார். அதற்கு உபமன்யு சுவாமி யாசித்துப்பெற்று வந்ததை இந்த சன்னிதியில் ஒப்புவித்தபிறகு இரண்டாமுறை அக்கிரகாரஞ் சென்று பிக்ஷையெடுத்துண்கிறேன் என்றார். இதைக்கேட்டு தௌமியர் அடடா இதுதானோ குருவுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் தருமம். நீ இருமுறை யாசிப்பதால் உன்னைப்போல இரந்துண்போருக்கு இடை-



யூறுமிருக்கும். மேலும் பேராசை கொண்டவனாய் விட்டாய். இனிமேல் அவ்வாறு செய்யாதொழிக வென்று கட்டளையிட்டார். கனவிலும் குருமொழி கடக்க ஒண்ணாத உபமன்யு அவ்வாறே நடப்பதாக உடன்பட்டுத் தன்னுடைய வழக்கம்போல் மாடுகளை மேய்த்து வந்தார். சிலநாளான பிறகு குரு சீடனை நோக்கி, அப்பா குழந்தாய் நீ கொண்டு வரும் அன்னத்தை நான் சுவீகரித்து விடுகிறேன். நீ இரண்டாவது தடவைக்கும் போகிறதில்லையே. அப்படி இருக்க நீ முன்போலவே இளைக்காமல் பருமனுடனிருக்கக் காரணமென்ன என்று கேட்டார். உபமன்யு தான் தனக்கு வேண்டியவளவு பசுக்களின் பாலைக் கறந்து குடித்துத் தனது சரீரத்தைக் காப்பாற்றி வருவதாகச் சொல்லத் தௌமியர் கேட்டு அப்பா என்னுடையதாகிய பசுவின் பாலை எனது உத்தரவின்றிக் குடிப்பது நீதியல்லவே, என்று குறை கூறினார். தாங்கள் சொல்வது சரிதான் என்று உபமன்யுவும் ஒப்புக்கொண்டு மாடு மேய்க்கச் சென்றார். பின்னும் சிறிது நாள் கழித்துத் தௌமியர் தமது சீடனை விளித்துக் குழந்தாய் நீ இரந்து வருவதை உண்பதுமில்லை மறுமுறை இரக்கச் செல்வதுமில்லை. பாலும் குடிப்பதுமில்லை என்றாலும் மேனி தளராது காணுகின்றனை. இப்பொழுது உன்னுடைய ஜீவனோபாயம் என்னவென்றார். சுவாமி யான் கன்றுகள் ஊட்டும்பொழுது அவற்றின் வாயினின்று வழியும் நுரையைப் புசித்து வருகிறேன் என்று சீடனும் கூற குருவானவர் அக்கன்றுகள் உன்னிடத்தில் வைத்திருக்கும் அன்பினால் தாம் அரைவயிற்றுக்குப் பால் குடித்து மிகுதியாகக் குடிக்கவேண்டிய பாலைக் குடிக்காமல் நுரையாக வெளியில் தள்ளுகின்றன போலும். பேசுந்திறமையில்லாத ஆன்ம கோடிகளைப் பட்டினியாக்கி நீ வயிறு நிரப்பிக்கொள்வது அடுக்குமோ அதையும் விட்டொழிக்கக்கடவாய் என்று நியமித்தார். உபமன்யு என் செய்வார். குருவாக்கியத்தைக் கடப்பது மகா பாதகமென்று தெரிந்துள்ள மகாத்துமாவாதலால் அன்றுமுதல் கன்றுகள் நுரையையும் உட்கொள்ளாமற் தனக்கு ஏற்பட்ட மாடு மேய்க்குந்தொழிலைக் குறைவறச் செய்து வந்தார்.

சரீரம் உண்டாகும்பொழுதே அதனுடன் பிறக்கும் வியாதிக

ஞள் முதன்மையான பசிநோயால் வருந்துவதைப் போன்ற[...]ம் வேறுள்ளதோ. பசியைப் பொறுப்பது எவர்க்கும் [...]. உபமன்யு அதைத் தணிப்பதற்காக வேறொன்றும் வகையறியாது மேய்க்கப்போனவிடத்தி லகப்பட்ட எருக்கஞ்செடியின் இலைகளைப் பறித்துத் தின்றார். இந்த ஆகாரத்தின் விசேஷத்தால் உபமன்யுவுக்குக் கண்ணொளி மழுங்கி வந்தது. ஒருநாள் காலையில் கட்டுத்தொறி மாடுகளை மேய்க்க ஓட்டிப்போனவர் மாலையில் திரும்புமுன் கண்களிரண்டும் முற்றும் குருடாய்ப்போகவே, சரியான வழியைப் பிடித்துச்செல்ல இயலாமல் அங்குமிங்குமாய்த் திரிகையில் ஒரு பாழுங்கிணற்றில் விழுந்து விட்டார். அதினின்றும் வெளியேவர வகையின்றி அவ்விடத்தையே இருக்கப் பசுக்கள் மாத்திரம் வழக்கம்போல் வீடுவந்து சேர்ந்தன. சிடனைக் காணாததால் குருவானவர் ஓஹோ நாம் நமது சிடனை வெகுவாய் உபத்திரவத்துக் குள்ளாக்கினோம். அதனாற்றான் நம்மிடத்தில் வெறுப்படைந்து இக்நேரமாயும் அவன் வாராமலிருக்கிறான். நாமே போய் அவனைத் தேடிவருவோம் என்று உடனே புறப்பட்டுச் சிடனைத் தேடிச் சென்றார். போகும் வழியெல்லாம் உபமன்யு உபமன்யு என்று உரக்கக் கூவிக்கொண்டே சென்றார். மேற்சொல்லிய பாழுங்கிணற்றண்டை போகையில் இவருடைய குரலைக்கேட்ட உபமன்யு நான் இதோ இந்தப் பாழுங் கிணற்றில் விழுந்து கிடக்கின்றேன் என்று மாற்மொழி கொடுத்தார். அங்குச் சென்று சிடனைக் கண்டு உனக்கு இக்கெதி நேரவேண்டியதென்னை யென, உபமன்யுவுக்கு பசியைத் தணிக்க அர்க்கபத்திரம் தின்றதால் உண்டான அநர்த்தம் என்றார். அப்பொழுது குரு மனமிரங்கிச் சிடனைப் பார்த்து அப்பா உனக்குக் கண் வருவதாகத் தேவலோகத்து வைத்தியர்களான அசுவினி தேவதைகளைத் தோத்திரம் செய்வாயாகில் அவர்கள் உனக்குப் பார்வையுண்டாகச் செய்வார்கள் என்று சொல்லி அத்தோத்திர[...]குரிய மந்திரத்தையும் உபதேசித்துப் போனார். உடனே உபமன்யு அசுவினி தேவர்களைத் தோத்திரிக்க அதற்கு மகிழ்ந்து உபமன்யு இருக்குமிடம் வந்து திவ்வியமான மருந்தைக் கொடுத்து இதைச் சாப்பிடுவாயாகில் இழந்த கண்களை மட்டும் பெறுவாய் என்றனர். எத்தகைய இடுக்கண்



வரினும் குருபக்தியே தன்னைக் கடைத்தேற்ற வல்லது என்ற கொள்கையைக் கடைப்பிடியாகக்கொண்ட உபமன்யு என்ன செய்தார். அசுவினி தேவதைகளைக் குறித்து என் ஸ்தோத்திரத்துக்கு வந்து எனக்கருள் புரியவந்த உங்கட்டளையை மீறி நடக்கக் கூடாதாயினும் எனது குருவாகிய தௌமியருடைய ஆணைக்குள்ளடங்கினவனாகையால் நீங்கள் கொடுக்கு மிவ்வருமையான மருந்தை அவருடைய அனுமதியின்றிப் புசிக்கமாட்டேன் என்று சொல்லி மறுத்துவிட்டார். அசுவினி தேவதைகள் இவரது குரு பக்தியைப் புகழ்ந்து கொண்டாடி உனக்கு யாதொரு குறையுமில்லை. இழந்த கண்களை மீட்டும் பெறக்கடவாய். நீமாறாய் வாழக்கடவாய் என்று அனுக்கிரகம் செய்து போயினர்.

உபமன்யு உடனே கண்கள் வரப்பெற்றுக் கிணற்றினின்றும் வெளியே வந்து தனது குருவின் ஆச்சிரமம் சென்று நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லி அவருடைய பாத கமலங்களில் பணிந்து நின்றான். தௌமியருக்கு மனதில் உண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை. உபமன்யுவைக் கட்டியணைத்து, அப்பா உபமன்யு நான் உன்னுடைய பணிவிடைக்கு மெத்த மகிழ்ந்தேன். உன்னைப்போன்ற சீடன் கிடைத்தலரிது. நான் உன் விஷயத்தில் செய்ததெல்லாம் உன்னை இம்சிக்க வேண்டுமென்ற எண்ணத்தாலல்ல. குருவை விசுவாசிக்கவேண்டிய விதம் இன்னதென்பதை உலகினர்க்கு விளக்கிக்காட்ட வேண்டுமென்றே இவ்வாறு செய்தேன் என்று சொல்லி சகல கலைகளையும் ஆய்ந்துணர்ந்து தத்துவம் தெரிந்த பெரியோரையொப்ப ஞானியாகுக என்று அனுக்கிரகித்தார். குரு கடாக்ஷத்தைப்பெற்ற உபமன்யுவும் உடனே ஓதாதுணர்ந்த மகா ஞானியாய் விட்டனர். இதுவன்றோ குரு அனுக்கிரகிப்பும், சிஷ்யன் பரிகரிப்பும் குருபக்தி.

[...]ஆகையால் கல்வி பயிலுவோர் யாவராயினும் ஆசிரியனைப்போற்றி [...]ளன் பெறும்படியாகத் தொண்டு செய்து பயபக்தியுடனிருந்து வர[...]வேண்டும்.

[...]பக்தி குறைந்திருக்கும் இக்காலத்தில் ஆசாரியவான் புருஷோ வேத[...]ன்னும் வாக்யத்திற்கிணங்க குருபக்தியுடன் இருந்து வர வேண்டியதற்கு ஜகத்குரு சங்கராசாரியார், போன்ற மஹான்கள் தம்

சிஷ்யர்களுக்குத் தாமிருக்கு மிடங்களில் ஹிதோபதேசமாகத் தம்முடைய அருட்பிரசங்கத்தை ஸ்ரீங்கேரி ஜகத்குரு சாரதா பீடாதிபதிகளாகிய சங்கர பகவத்பாதாசாரியார் அவர்களைப்போல் உபதேசஞ் செய்வதும் அவர்களின் கடமையாகும்.

## நசிகேதஸ் என்னும் பிர்ம்மச்சர்ய ஆச்சிரம ரிஷி

பூர்வத்தில் வாஜ்சிரவஸ் என்ற ஒரு மகரிஷி இருந்தார். அவர் அன்னதானத்தில் மிக்க சிரத்தையுள்ளவர், வேதத்தில் உள்ள தருமங்களை அனுஷ்டிப்பவர். மிக்க பண்டிதர். இவருக்கு நசிகேதஸ் என்ற ஓர் புத்திரர் இருந்தார். அப்புத்திரனது 15-வயதுக்குட்பட்ட சரித்திரமே இப்பொழுது தெரிவிக்கப்படுகிறது. வாஜ்சிரவஸ் என்பவர் ஓர் யாகத்தைச் செய்தார். அந்த யாகத்தில் ருக்விகளுக்கு (யாகத்தை நடத்துகிற பிராம்மணர்கள்) தக்ஷிணை கொடுக்கும்போது லோபத்தாலோ தரித்திரத்தினாலோ இந்திரியங்களெல்லாம் சுருங்கியதும், பால் கொடுக்கக்கூடாததும், லோகத்தில் மேயவேண்டிய புற்களை மேய்ந்ததுமான கிழப்பசுக்களைத் தானம் பண்ணினார். அதைக்கண்ட நசிகேதஸ் (தனது பிதாவைப்பற்றி அடியில் வருமாறு சிந்திக்கிறார்.) எவர் யஞ்ஞத்தில், உபயோகமற்ற பசுக்களைத் தானம் பண்ணுகிறார்களோ அவர்கள் ஆனந்தியற்ற இருட்டுலோகங்களை அடைவார்கள் என்று நாம் கேழ்வியுற்றிருப்பதால் இதை நமது பிதாவினிடத்தறிவிக்கவேண்டும். நம்மைக் கொடுத்தாவது இந்த யாகத்தின் உத்தமமான பலனை நமது பிதா அடையலாம் என்று கருதி பிதாவைப் பார்த்து, ஐயா என்னை எவருக்குக் கொடுக்கப்போகிறீர்? என்று மும்முறை பிரார்த்தித்தனர். அதைக் கேட்டுத் தந்தை கோபத்துடன், உன்னை மிருத்யுவுக்குக் கொடுக்கிறேன் என்றார். அதைக் கேட்ட குழந்தை ஏகாந்தத்திலிருந்து சிந்தித்து அடியில் வருமாறு தக்கித்தார். நமது பிதாவினிடத்தில் அத்தியயனம் பண்ணுகிற சிஷ்யர்களில் நானே முதன்மையாயிருக்கிறேன். அங்ஙனமே அநேக புத்திரர்களில் நானே ஜேஷ்டபுத்திரன். வித்தியா விஷயத்தில் ஒருகால் நான் மத்திய மாணாக்கனாயினாலும் இருக்கலாம்; அதமனன்று. இத்தகைய குணமுடைய என்னை எதற்



சாக மிருத்தியுவுக்குக் கொடுக்கிறேன் என்று பிதா கூறினார். அந்த மிருத்தியு என்றால் அடையக் கூடியவை யாது ஒன்றுமில்லை. நிச்சயமாகவே நமது பிதா கோபத்தினாலேயே என்னைக் காலனுக்குத் தத்தம் பண்ணினார். ஆனதால், நாம் இப்பொழுது செய்யவேண்டுவது என்னவெனில் நமது பிதா கோபத்தாற் கொடுத்திருந்தாலுங் கூட அவரது வாக்கைப் பொய்யாக்காமல் நான் மிருத்தியுவினிடத்தில் போகவேண்டும் என்று சிந்தித்து நாம் யாது இங்ஙனம் பிதாவிற்குக் கோபத்தை மூட்டினோம் என்று மறுபடியும் பிதாவைப்பார்த்து ஹே, பெருந்தகையே! பூர்வத்தில் தங்களுடைய பிதா பிரபிதா முதலியவர்களுடைய சரித்திரங்களைப் பாருங்கள். அதைப்பார்த்து, இப்பொழுது தாங்கள் நடக்கவேண்டும். இன்னும் மற்ற சாதுக்கள் எப்படி நடக்கிறார்களோ அதையும் பார்த்து ஆலோசியுங்கள். அவர்களிடத்தில் பொய்யைக் கூறினார்கள் என்ற சரித்திரமில்லை. பொய் சொல்லிய ஒருவன் தேவனாகான். இன்னும் வயலில் உள்ள பயிரைப்போல மனுஷியர்கள் உண்டாகிறார்கள். அதைப் போலவே மறுபடியும் மடிகிறார்கள். அதுபோலவே மறுபடியும் உண்டாகிறார்கள். ஆகையால் இத்தகைய அநித்திய சரீரத்தை இரக்ஷிக்கப் பொய் சொல்லுவது கூடாது. என்றைக்கிருப்பினும் இறப்பது திண்ணமே. ஆனதினால் என்பொருட்டு நீர் விசனப்படவேண்டாம். மிருத்தியுவுக்குக் கொடுக்கிறேன் என்று கூறிக் கொடாமல் இருக்கவேண்டாம். உடனே என்னை மிருத்தியுவினிடத்தில் அனுப்புங்கள் என்று கூறினார். அதைக்கேட்ட பிதா தனது வாக்கின் சத்தியத்தைக் காப்பாற்றும்பொருட்டு தனது புத்திரனை மிருத்தியுலோகத்திற்கு அனுப்பினார். யோகசாஸ்திரத்திற் கூறியபடி ஸூக்ஷ்ம சரீரத்துடனேயே அனுப்பி இருக்கவேண்டும். அவரும் மிருத்தியுவினுடைய கிரகத்திற் சென்று அவர் வீட்டில் இல்லாததால் [illegible] நாள் ஆகாரமின்றி இருந்தார். அப்பொழுது வெளியிற் சென்று இருந்த மிருத்தியு கிரகத்திற்கு வந்தவுடன் அவரது பத்தினிகளும் மந்திரியும் அவரைப்பார்த்துக் கூறுகிறார்கள். ஹே நாதா நமது கிரகத்தை அதிதியாகிய ரிஷிபுத்திரனாற வைசுவாநராக்கினியானவர் பசியின் அக்கினி எரிகிறாற்போல் தோன்றுகிறது. ஆனதால் அவரது

பசியையும் தாகத்தையும் உடனே சமனம் பண்ணவேண்டும். அவருக்கு அர்க்கிய பாத்ய ஆசமனாதிகளைக் கொடுங்கள். அங்ஙனம் கொடாவிடில் எந்த அற்ப புத்தியுள்ள மூடனது கிரகத்தில் அதிதியானவன் ஆகாரமின்றி இருக்கிறானோ அவனது தெரியாமல் வரக்கூடிய பலனைத்தும் தெரிந்துவரக்கூடிய ராஜ்ஜியாதிபிராப்திகளும் பிரிய வார்த்தைகளாலும் இஷ்டாபூர்த்திகளாலும் வரக்கூடிய அபூர்வாதிபலன்களும் புத்திரபசுக்களும் நசித்துவிடும் என்று அறிந்திருப்பதால் நாம் அதிதிகளை உபேக்ஷிக்கக்கூடாது என்று கூறினார்கள். அதைக்கேட்டு மிருத்தியுவானவர் அவரிடத்திற் சென்று வினயத்துடன் பூஜைகளைச் செய்து ரிஷிபுத்திர! பூஜ்யரான நீர் எனது கிரகத்தில் மூன்று நாள் ஆகாரமின்றி வசித்தீரன்றோ? நமஸ்கரிக்கிறேன். ஹே பிராம்மணரே! தமது அனுக்கிரஹத்தால் எனக்கு மங்களம் உண்டாகட்டும். எனது அபராதத்தை க்ஷமிக்கும் பொருட்டு என்னிடத்தில் மூன்று வரன்களைக் கேட்டுக்கொள்ளும் என்றார். அங்ஙனம் கூறியவுடன் இச்சிறுவன் வரன்களைக் கேட்டதும் அதனின் ஓ மிருத்தியுவே.

பூலோகத்திலிருக்கும் எனது பிதா சேர்ந்தாய் இயம லோகத்திற்குச் சென்ற எனது புத்திரன் என்ன செய்கின்றானோ என்று விசாரப்படாமல் இருக்கவேண்டும். நீர் இங்கிருந்து என்னை அவரிடத்து அனுப்பியவுடன் இவன் எனது புத்ரனென அவர் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பிரயோஜனமே, தாங்கள் கொடுக்கும் வரனில் முதல் வரனும். உடனே மிருத்தியுவானவர் கூறுகிறார். உமது பிதா விசாரமில்லாதவராய் ராத்திரியில் செவ்வையாய் நித்திரை செய்வார். இயமனிடத்திற் சென்ற நமது புத்திரன் யாது செய்கின்றானோ வென, விசாரத்தை யடையார். என்னிடத்திலிருந்து நீர் அங்கு போனவுடன் உம்மை தனது புத்திரனென அறிந்துகொள்ளுவார் என்றார். உடனே இரண்டாவது வரனைக் கேட்டார். யாதெனில்,

நசிகேதஸ் பகவ! ஸ்வர்க்க லோகத்தில் ரோகாதிகளால் பயம் கொஞ்சங்கூட இல்லை. அந்த இடத்தில் உமது பிரவேசத்தால் தேவர்கள் நசிப்பதில்லை. இந்த லோகத்தில் கிழத்தனம் வந்துவிட்டால் ஜீவர்கள் இறந்துவிடுவோமே, என்று பயப்படுவதுபோல் அங்கு பய



மில்லை. மற்றும் பசிதாக மின்றி எப்பொழுதும் சுகியாகவே சோகாதிகளின்றி இருப்பார்கள்.

இத்தகைய லோகத்திற்குப் போவதற்குச் சாதனமாய் இருக்கப்பட்ட அக்கினியை நீர் அறிவீர். அதைச் சிரத்தையோடு கூடியிருக்கப்பட்ட எனக்குச் சொல்லவேண்டும். அவ்வக்கினியைத் தெரிந்து ஹோமம் பண்ணுகிறவர்கள் சரீரம் இறந்தவுடன், தேவலோகத்தை யடைந்து ஜனனமரணமின்றி வெகுகாலம் வாழ்வார்கள் என்று கேள்வியுற்றிருக்கிறேன் என்றார்.

இங்கு அறியவேண்டியவை உண்டு. அக்கினியை அறிந்து ஹோமம் பண்ணுவதால் சுவர்க்க லோகத்திற்கு எப்படிப் போக முடியுமெனில் அவ்வக்கினியில் வேதத்தில் கூறியிருக்கிற விதிப்படி ஹோமம் பண்ணி தேவதைகளுக்குத் திருப்தி செய்வித்தால் அக்கர்த்தாவின் சூக்ஷ்ம சரீரத்தில் சிற்சில ஸம்ஸ்காரங்கள் உண்டாகின்றன. அதற்கு அபூர்வம் என்று பெயர். அவ்வபூர்வசக்தி அவ்வக்னியின் ஹோமத்தாலேயே உண்டாகின்றது. அநேக பதார்த்தங்களைச் சேர்த்து ஹோமம் செய்யும்போது தீக்ஷையுடன் ஏகாக்கிரகச் சித்தத்துடன் சுவர்க்க லோகத்திற் போய்த் தேவனாகவேண்டும் என பலமுறை நினைப்பதாலும் அநேகர்களும் அவன் சன்னிதானத்தில் கூறுவதாலும் ஒரே காலத்தில் அநேகர் கூடி ஒருவன் சுவர்க்கலோகத்தில் தேவனாவதற்கென்றே ஹோமம் பண்ணுவதாலும் அக்கர்த்தாவின் மனதில் தனக்கு தேவத்துவ ப்ராப்தி வந்துவிட்டதாகவே பதிந்துவிடும். அப்பொழுது அவனது மனோமய கோசத்தில் ஒருவித மனுஷியத் தன்மையின் குணங்கள் மாறி தேவத்தன்மைக்கு வேண்டிய குணங்களிற் சிலது விருத்தியாகிறது.

மனதின் ஸ்வபாவம் எதை எங்ஙனம் பார்க்கிறதோ அங்ஙனமே வாங்கிக்கொள்ளுகிறதானதாலும் எதை இச்சிக்கிறதோ எதை இந்த ஜன்மத்தில் எப்பொழுதும் தியானம் பண்ணுகிறதோ அதையே அது அடுத்த ஜன்மத்திலடைய நேரிடும். அதற்காகவே சுவர்க்கலோகத்திற் போய் இந்திராதி தேவர்களுடனிருந்து சுகத்தை யநுபவிக்க வேண்டுமென்றும் அவர்களை மந்திரத்தால் பிரார்த்தித்தழைத்து அக்னியின்

முகமாக ஆவீர்பாகங்கொடுத்து அவர்களது அநுக்கிரகத்தைப்பெற்றுப் பிறகு, ஆயுட்காலபரியந்தம் தேவதைகளின் திருப்திக்காகவே, அக்னிஹோத்திராதி கர்மங்களை இயற்றி மரணகாலத்தில் அதையே எப்படி மனதில் பாவித்துக்கொண்டு சரீரத்தை விடுகிறானோ அங்ஙனமே அந்த ரூபத்தையே சரீராந்தத்தில் அடைகிறான். என்றபடி இறந்தவுடன், அவன் புகையுருவமாகிறான். பிறகு ராத்திரியை அடைகிறான். பிறகு கிருஷ்ணபக்ஷ அபிமானி தேவதையை யடைகிறான். பிறகு தக்ஷிணாயன அபிமான தேவதையை யடைகிறான். பிறகு ஒரு மாஸத்தில் பிதிர்லோகத்தை யடைகிறான். பிறகு ஆகாசத்தின் வழியாக சந்திர மண்டலத்திற்குப் போகிறான். அங்கிருந்து தேவ லோகத்திற்குப் போகிறான். தேவதைகள் இவனை வேலைவாங்குகிறார்கள். அங்கு இவனும் தேவபோகத்தை அநுபவிக்கிறான். இங்கு வேண்டுவது யாதெனில், சுவர்க்கலோகத்திற்கு போக பிரியமுள்ளவனும் அதற்கு வேண்டிய அந்தக்கரண சம்ஸ்காரமுடையவனை சந்திரமண்டலமானது முற்கூறிய வழியாக ஆகர்ஷித்துக்கொள்கிறது. இதை விரிக்கின் வளரும்.

நசிகேதஸால் கேழ்க்கப்பட்ட இரண்டு வரங்களும் தனது பிதாவின் க்ஷேமத்தின் பொருட்டு ஒன்றும், மற்றொன்று லோகோபகாரமாக சுவர்க்கலோகத்திற் கிச்சையுள்ளவருக்குப் போகப்படும்படியாகக் கேட்டனர். இதனாலவருக்கு சுவர்க்க லோகத்திற்குப் போய் அந்தத்தை யநுபவிக்கவேண்டுமென்று பிரியமன்று. அவர் தத்துவ விசாரணைக்கு யோக்கியர். இவ்வுலகத்தைத் திருணமாக மதித்தவர். அவ்வாறு பாலிய பருவத்திலேயே பரீக்ஷிக்கப்பட்டவர். ஆனதால் அவருக்கு ஒருபோதும் இவ்வாழ்க்கையிலும் இந்திரிய சுகங்களிலும் பிரியமுள்ளவரன்று. பிறகு மூன்றாம் வரனை கேழ்க்கிறார். இவ்வரனே அவருடைய விரக்தியைத் தெரிவிக்கிறது.

மனிதன் இறந்துவிட்டால், சரீர இந்திரிய மனோபுத்தி முதலியவைகட்கு விலக்ஷணமாய் அடுத்த தேகத்தை அடையக்கூடிய ஜீவனுக்காதாரமான ஆத்மா ஒன்று இருக்கிறதா? சிலர் இருக்கிறது என்கிறார்கள். அப்படியிருந்தாலதைப் பிரத்தியக்ஷமாகவாவது அநுமா



னத்தாலாவது அறிய முடியாதன்றோ? அவைகட்கெல்லாம் காரண விஞ்ஞானமான மோக்ஷத்தை எமக்குத் தெரிவிக்கவேண்டும். நாம் உமது முக்கிய சிஷ்யரன்றோ என்றனர்.

அதைச் செவியுற்ற, காலன் இவர் நிச்சயமாகவே பிரம்மஞானத்தை யறிவதற்குச் சக்தியுடையவரா? அவர் இந்த ஞானத்திற்குப் பாத்திராரா இல்லையாவென அடியில் வருமாறு பரீக்ஷிக்கிறார். குழந்தாய்! தேவர்களும் இவ்விஷயத்தைப்பற்றி மிக்க சம்சயித்தறியச் சாத்தியமற்றது. அதைச் செவ்வையாய் அறிய முடியாது. அவ்விஷயத்தைக் காதாற் கேழ்ப்பினும் அஞ்ஞானிகளுக்குப் பிரகாசமாகாது. எப்படி அணுவானது வெகு சூக்ஷ்மமாகுமோ அங்ஙனமே வெகு சூக்ஷ்மமானதாலும் இதைச் சொல்லியும் அடைய முடியுமோ முடியாதோவென, சந்தேகமான பாவத்தை யுடைத்தாயிருப்பதாலும் வேறு வரனைக் கேட்டுக்கொள்ளுக என்றனர். பிறகு நசிகேதஸ் கூறுகிறார்.

தேவர்களும் இவ்விஷயத்தை யறிவதற்குச் சக்தியற்றார்கள் என்று தாமே கூறுகின்றீர்கள். அத்தகைய மஹா ரகஸியமாயும் பண்டிதர்களாலும் அறிவதற்குச் சாத்தியமற்றதுமான அம்மஹா வித்தையைக் கூறுவதற்குத் தம்மையன்றி நான் வேறு யாரை யடையப்போகிறேன். நான் எங்கு தேடினும் தங்களைப்போன்ற குருவை யடைய முடியாது. இவ்வரனே அநேகாநேக ஜன்மத்தை நிவர்த்தித்து மோக்ஷப்பிராப்திக்கு ஹேதுவானதால் இதற்குச் சமான வரன், வேறு எனக்கில்லை என்றனர். அதைக் கேட்ட மிருத்யு கூறுகிறார். நீ நூறு வயதுவரையில் ஜீவிக்கக்கூடிய புத்திர பௌத்திரர்களை ஏராளமாய் அடையவேண்டுமென்றும், ஆட்டுமந்தைகள், மாட்டுமந்தைகள், யானை, குதிரை முதலிய பசுவர்க்கங்கள் வேண்டுமென்றும், கேட்டுக்கொள்ள பூமியிற் பெருத்த ராஜ்யத்தை கேட்டுக்கொள்ள வேண்டியதையும் பிரார்த்தித்துக்கொள்க. பூலோகத்தில் எவ்வளவு நாள் நீ சுகமாக வாழ்கலாம். நீ சுதந்தரமாய் இச்சையுள்ள மட்டும் பூமியை அரசு செலுத்தலாம். இன்னும் இத்தகைய வேண்டிய வரன்களைப் பிரார்த்திப்பினும் கொடுக்கிறேன். நீ நினைத்ததெல்லாம் அநுபவிக்கக்கூடிய கர்மங்களைத் தருகிறேன். நான் சத்திய சங்கல்பமுள்ள தேவனன்றோ. எந்தெந்தக் கர்மங்கள் உனக்குப் பூலோகத்தில்

வேண்டுமோ அவ்வளவையும் பிரார்த்தித்துக்கொள்க. இன்னும் புருஷர்கள் ரமிக்கக்கூடியவர்களாயும், ரதங்களோடு கூடியவர்களுமான வாத்தியங்களோடு கூடியவர்களான அப்ஸரஸ்திரீகளைத் தருகிறேன். இத்தகைய ஸ்திரீகள் மனுஷிய லோகத்தில் கிடைப்பதரிது. அவர்களை உனக்குப் பணிவிடை செய்யச்சொல்லுகிறேன் என்றார். நசிகேதஸ், நீ கேட்ட மரணசம்பந்த பிரச்சினத்தை விட்டொழிக. இங்ஙனம் பலவாறு மிருத்தியுவான் அவர் மனதை பரீட்சிக்கப்பட்டும், அவர் அவைகளைச் சிறிதும் அபேட்சிக்கவில்லை. அதனிடத்தில் தீக்ஷ புத்தியுடன் கூறுகிறார். தங்களாற் கூறப்பட்டவைகள் நாளைக்கு இருக்கக்கூடியவைகள் என சந்தேகிக்கக்கூடியன. மற்றும் இந்திரியங்களின் சக்தியை யொழிக்கக்கூடியதும், அல்பமுமான அப்ஸர ஸ்திரீகளின் போகங்கள், அனர்த்தத்தையே உண்டுபண்ணும். ஏனெனில், தருமம் வீரியம் பிரஞ்ஞை தேஜஸ் யசஸ் முதலியவைகளை க்ஷயிக்க செய்வார்கள். அவர்களது சேர்க்கைத் துக்கத்தையே கொடுக்கும். என்னை தீர்க்க காலஞ் ஜீவிக்க செய்கிறேன் என்கிறீர். உமக்கும் காலம் ஓர் அளவுடையதுதான். பிரம்மனும், ஓர் காலத்தில் ஒழிந்து விடுவாரெனில் நமது காலம் எவ்வளவு அமைப்புள்ளது. அற்பமே ஆனதால் முச்சால்ங்களும் அப்ஸரஸ்திரீகளும் தம்மிடத்திலேயே இருக்கட்டும். தம்மைப்போன்ற மஹான்களைத் தெரிசித்தால் அவைகள் எனக்குக் கிடைப்பதியல்பே. ஆனதால், நான் முற்கூறிய வரனையே தரவேண்டும். அவ்வரனையன்றி வேறொன்றை யான் வேண்டேன் என்றனர். பிறகு மிருத்தியு, இவரது தைரியத்தையும், வைராக்கியத்தையும் கண்டு மகிழ்ந்து ஆத்மவித்தையை உபதேசித்தார். அவ்வித்தையை யடைந்து பிரம்மஞானியாய் இவ்வுலக பற்றற்ற தீரராய் ஞானிகளிற் திலகமாய் மிருத்தியுவினிடத்து உத்திரவு பெற்றுக்கொண்டு பிறகு தனது தந்தையிடத்து சென்றார். அதைக்கண்ட பிதாவும் மகிழ்ந்து ஆநந்தபரவசராய் தனது ஒரே புத்திரன் மிருத்தியு லோகத்திலிருந்து திரும்பி வந்ததுடன் பிரம்மஞானியாய் இருப்பதைக்கண்டு அடங்கா ஆநந்தத்தை யடைந்தார். அக்காலத்திய மஹாரிஷிகளுக்கு பணத்திலும் மற்ற ஸ்திரீயாதி போகங்களில் சிறிதும் இச்சையில்லை



வென்பதையும் எக்காலத்தும் தத்துவஞானத்தையே எதிர்பார்த்தவரென்றும், அவர்கள் மஹா வல்லமையுள்ளவர்களென்றும் இதனாலறிகிறோமல்லவா. மற்றும் நசிகேதஸ் என்னும் சிறுவரது சத்திய வாக்கும், அவரது மனோதைரியமும், அவர் மிருத்தியுவினிடத்திற் சென்று கேட்ட மூன்று வரன்களுடைய மகிமைகளையும் பார்க்க, இத்தகைய பிரம்மசாரிகள் இப்பொழுது நம் தேசத்தில் ஒருவருளரோ இல்லையோ! பிரம்மசாரியென்ற ஆசிரமே போய்விட்டதே. ஒற்றைப் [illegible] பெயரளவே பிரம்மசாரியாக விளங்குகிறது. அந்தோ! முற்காலத்தில் நசிகேதஸைப்போன்ற பிரம்மசாரிகள் எவ்வளவு வல்லமையுடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் வல்லமையில் ஆயிரத்திலொரு பங்குகூட இக்காலத்தவர்கட்கில்லையே. இருஷிகள் வம்சத்திற் பிறந்த நாம் சிறிதேனும் சக்தியின்றி இருக்கிறோமே. தற்கால [illegible]த்தியவர்கள் சந்தியாவந்தனமும் சரியாகச் செய்வதில்லை [illegible] காலம் கழி[illegible]த்தாட்சியாக அல்ப போகங்களான இந்திரியங்கள் போகத்திலேயே நம்மவர் மனம் அழுந்திவிடுகிறது. இப்போகங்கள் இன்றைக்கிருந்து நாளைக்கொழியுமே. ஓர் நிலையுடையதல்லவே. ஆனதால் நமது நசிகேதஸ் இவ்விய சரித்திரங்களை [illegible] வந்தனங்களைச் செய்வோமாக.

## சுகப்பிரம்மரிஷி

இம்மஹரிஷியைப்பற்றி வேதம், இதிகாசம், புராணம் முதலானவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மஹரிஷிக்கு வைராக்கியமே முக்கியம். [illegible] அன்றி அவிவேகத்தைக் கனவிலும் கண்டறியார். இவர் மனதில் சாந்தமே குடிகொண்டிருந்தது. இந்திரியங்களாகிய [illegible] தலைமைபெறாதடக்கி சற்குண சிங்கம். நிதிகளை என்னும் செல்வத்தை வெறுத்தவர். குருவாக்கியத்தில் மிக்க சிரத்தையுடையவர். பக்தியிற் பிரகலாதனுக் கொப்பானவர். காமமென்னும் சத்துருவைக் கொன்று, குரோதத்தைக் குலைத்து லோபத்தை மறுத்து மோகாதிகளை வெறுத்து முத்தியே நாடினவர். ஞானிகளின் திலகமென இவ்வொருவரையே கூறலாம். அக்காலத்திலிவரது

பெருமை யுடைக்குமுலாவியது. பிறந்தபொழுதே ஞானிகளினி லக்ஷணத்தோடிருந்தார்கள். சுயஞ்சோதியான ஆத்மசொரூப விருத்தியினின்றொருபோதும் நழுவார். பராசரது புத்திரரான வியாஸ பகவான் ஓர்நாள் ஸரஸ்வதி நதிதீரத்தில் இக்கரையிலிருந்து வெளிவந்திடவுங் காலையில் ஓர் மரத்தில் திந்திரி பக்ஷியானது தனது குஞ்சுக்காகாரம் கொடுத்துக் குலாவி பிரேமையோடு விளையாடுவதைப் பார்த்தார். அதைக் கண்டவுடனவரது நெஞ்சில் அடியில் வருமாறு சிந்திக்கலானார். உலகத்தில் மனிதனுக்குப் புத்திரனுண்டாயின் (புத்திராயதே-இதி-புத்திர) என்றபடி, புத்தென்னும் நரகத்தைப் போக்குவான். இன்னும் 'எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க நற்குண நற்செய்கை வாய்ந்த புதல்வனைப் பெறுவானாயின் வினைவழியா லெங்ஙனாகுந் தேவர் முதலானோரும் கருகவுடைய வெழுவகைப் பிறப்புகளிலும் புத்திரனாலே செய்யப்படுந் தான தருமங்களினால் எவ்விதத் துன்பங்களையு மடையப் பெறான். பிதிர்க்கட்குத் திருப்தி செய்வான். மாதா பிதாக்களைக் காப்பாற்றுவான். அதிதிகளை யாதரிப்பான். குலத்தை அபிவிருத்தி பண்ணுவான். அழியாக் கீர்த்திக் கிறைவனுஞ் சாஸ்திரங்களை யப்பியசித்து பரோபகாரச் செய்கைகளிற் சதா காலமுஞ் சிந்தையுடையவனாயிருப்பான். இப்பட்சியினுடைய குஞ்சு என்ன செய்யப்போகிறது. ஆ! ஆ! பரமேஸ்வரனது மாயையன்றோ; ஸர்வஜீவர்கட்கும் இத்தகைய பிரேமை யுண்டாயிருக்கின்றன. மாதா பிதாக்கள் தங்களுடைய புத்திரர்களை இளமைப் பருவத்திலுண்டாகும் பலவகை இடுக்கண்களினின்று காப்பாற்றுகிறதும், புத்திரர்கள் பெற்றோர்களை முதுமைப் பருவத்திலரட்சிப்பதும் சுபாவமன்றோ. (நாபுத்தரஸ்யலோகொஸ்தி) என்றபடி புத்திரனில்லாதவனுக்குப் பரலோகமுமில்லை யன்றோ. குல பரம்பரை யென்றுங் கொடி புத்திரனன்றோ அபிவிருத்தியாகிறது. நமது குலாபிவிருத்தியின் பொருட்டு புத்திரனை யடையவேண்டும். அப்புத்திரனுஞ் சத்புத்திரனாயிருப்பின் தருமாதிகளைப் பண்ணுவான். 'மகன் றந்தைக் காற்று முதவி இவன் றந்தை, என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்' என்ற திருக்குற



ளுக்கிணங்க, இந்நற்குண நற்செய்கை வாய்ந்த பிள்ளையைப்பெற இவன் றந்தை எவ்வளவு கோடி தவஞ் செய்தானோவெனப் பிறர் சொல்லுஞ் சொல்லை யுண்டாக்குவதே பிள்ளை பிதாவுக்குச் செய்யும் உதவியாம். அசத் புத்திரராயின் குலம் நசித்துவிடுமன்றோ? ஆனதால் சத்புத்திரனையே யடையவேண்டும் எனச் சிந்தித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அவ்வழியாகச் சென்ற நாரதர், வியாஸரைக் கண்டு மிக்க வாஞ்சையுடையவர்களாய் ஒருவரை யொருவர் நமஸ்கரித்து ஸத்விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது நாரதர், வியாஸரது முகத்தை நோக்கி வியாஸபகவ! எப்பொழுதும் உமது முகமானந்த மயமாகவே யிருக்குமன்றோ வியப்பு! அப்படிக்கின்றி யாது காரணத்தைப் பற்றி விசனமுற்றிருக்கிறீர்? என்றார். வியாசர் திரிலோக ஸஞ்சாரியான நாரதரே! தாம் கூறியது வாஸ்தவமே. யானிப்பொழுது குலவிருத்தியின் பொருட்டு புத்திரோற்பத்தியிலாவல் கொண்டவனாயிருக்கிறேன். சத்புத்திரனாவும் பிறக்கவேண்டும். யாது செய்வேன். இதற்காக விவாகஞ் செய்து கிரகஸ்தாசிரமத்திற்குப் போவோமென்றால் அதற்கு விக்கினமுண்டாகிறது. அதின் வழியே சம்சார விர்த்தியாய்விடும். வாசனை வளர்ந்துவிடும். ஜென்மத்திற்கேதுவாகும். அநேக ஜென்மங்களை எடுத்திடின் மகா துக்கமன்றோ? அதற்கே பயப்படுகிறேன். இதற்கோர் வழியைத் தாமே கூறவேண்டுமென்றனர். நாரதர் தாமிக்க சுபகாரியத்திற் பிரவிருத்திக்கிறீர்கள். தமது தபோமகிமையும், கீர்த்தியும், பிரம்மசரியமும், திரிலோகமும் பிரசித்தி பெற்றிருக்கின்றனவன்றோ! விஷ்ணுவின் அவதாரமான தமக்கே இத்தகைய சந்தேக முண்டாயின் எங்கள் கதி யாதோ? மகா தீரரானதா மிவ்விஷயத்தைப்பற்றி யிவ்வளவு யோசிப்பதழகன்று. ஆனதினாற்றான் இப்பொழுது பரமேசுவரனைக் குறித்து தபஞ்செய்தால் புத்திரனைப் பெறுவீர்கள். தங்களைப்போன்ற சத்திய சங்கற்பமுள்ள மகரிஷிகள் கிலேப்பிறிதோர் பெரிய காரியமா என்றனர். வியாசருமுடனே யாலோசித்துப் பரமசிவனைக் குறித்துத் தவம் புரிந்தனர். பகவானும் மகிழ்ந்து பிரத்யக்ஷமாகி உனக்கு வேண்டும்

வரம் யாது? என வினவினார். வியாஸர் ஐயனே எனக்குச் சத்புத்திரனொருவன் வேண்டுமென வுரைத்தார். அதைக்கேட்ட பரமசிவன் மிகச் சத்தியவானாயும், ஞானிகளின் சிகாமணியாயும், உமக்கு ஒரு புத்திரனுதிப்பானெனக் கூறி மறைந்தனர். வியாஸருந் தனதாசிரமத்துக்குச் சென்று வசித்துக்கொண்டிருக்குங் காலையில் ஒருநாள் எதிரிலிருந்த விருக்ஷ மூலத்தில் ஓர் சுந்தரமான ஸ்திரீயைக் கண்டனர். இந்த ஆரண்யத்திலித்தகைய பெண்மணி வருவதற்குக் காரணமென்ன? இவள் விண்ணுலக ஸ்திரீயைப்போல் விளங்குகிறாள். இவளை யிங்கனுப்பினவர் யாவர். இதுகாறும் யான் இத்தகைய பெண்ணணங்கையை இங்குக் கண்டோமில்லை. தபோநிஷ்டர்களைக் கெடுக்க தேவர்களாலனுப்பியவளோ? மனிதனென்னும் பக்ஷியைப் பிடிக்க, காமனென்னும் வேட்டுவன் விடுத்த அம்பிற்கொப்பான ஸ்திரீயினிடத்திலென்ன சுகமிருக்கிறதென்று சிந்தித்து அக்னியின் பொருட்டு அரணியை (அக்கினியுண்டாக்கு மங்காலியற்றிய வியந்திரம்) கடைந்துகொண்டிருந்தார். அப்பொழுது அம்மாதுசிரோமணி இவர் நிலையைக் கண்டு ஆ! இவர் மகாரிஷி. இவரிடத்தில் நாம் செல்லின் சபித்துவிடுவார். மஹரிஷிகளின் சாபஞ்சகிக்க முடியாததன்றோ! நாமதற்குட்படலாகாதென்றெண்ணி யுடனே யோர் பச்சைக் கிளியினுருவமாயினள். அதைக் கண்ட வியாஸர் மனங்கலங்கித் தியக்கமுற்றிருந்தனர். அக்கணமே யவரது இந்திரியம் நழுவி யரணியில் வீழ்ந்தது. அக்கினி சொரூபமான பெண் பறந்து அதனருகிற் சென்று அதை மூக்கினால் கொத்தி விழுங்கியவுடனே யோர் புத்திரனைப் பெற்றனள். [அரணியிலிருந்தே யுண்டானதாகத் தேவிபாகவதங் கூறுகிறது.] அங்ஙனே சுகப்பிரம்மரிஷி உடனே புத்திரோற்பத்தி யுண்டாகக்கூடுமா கர்ப்பத்தில் பத்துமாதமிருக்க வேண்டாமா என்றால் கூறுவோம்.

அவ்விதி சாதாரண மனிதர்களுக்கே. ஜீவனானது புருஷனது கர்ப்பத்தில் ஒரு மாதமிருந்து பிறகு விந்தின் வழியாக ஸ்திரீயினது கர்ப்பத்தில் பத்துமாதந்தங்கி வெளிவருகின்றதெனக் கர்ப்பவுபநிஷத்திற் கூறுகின்றது. 'நிஷ்பிண்ட மிராத்தங்காது' என்னும் பழமொழி கேள்வியுற்றதில்லையா? ஏனெனில் ரிஷிகளினது, சுக்கிலம்



வெகுநாட் கட்டுப்பட்டு மகாவீரியத்தை யுடைத்தானதால் கர்ப்பாசயத்தை யடைந்தவுடனே சரீரமாய்ப் பரிணமிக்குஞ் சக்தியுடையதாய் இருக்கிறது. அவர்களது சுக்கிலத்தில் பத்துமாதம் பரிணமிக்கவேண்டிய சக்தியை யோர் நிமிடத்திலுண்டாக்கக்கூடிய சக்தியுமிருக்கிறது. அது கர்ப்பாசயத்தை யபேக்ஷியாமலே பிண்டமாய்ப் பரிணமிக்குஞ் சக்தியுடையது. அகஸ்தியர் கும்பத்தில் அவதரித்தவர். விஸ்வாமித்திரர் 'அந்யமிந்திரம் கரிஷ்யாமி' வேறு இந்திரனையுஞ் சிருஷ்டிப்பேனென்றார். திருசங்குவரசனுக்கு வேறு சுவர்க்கத்தைச் சிருஷ்டித்துக்கொடுத்தார். இத்தகைய மகா வீரியமுள்ள மஹரிஷிகளுக்கு ஈதோர் பெரிய காரியமா? பிறகு வியாஸபகவான் மகாசௌந்தரியமும், மேதா[illegible] சந்திரனை யொத்த முகத்தையுடைய புத்திரனை யெடுத்து, முத்தமிட்டு ஹே! சுக! என்றழைத்தார். பின்பு தம் புத்திரனுக்கு உபநயனஞ்செய்து பிரகஸ்பதியிடம் வித்தியாப்பியாசத்திற் கனுப்பிவைத்தனர். அவரிடத்திற் சர்வவித்தையுங் கற்றுத் திரும்பி பிதாவினிடத்திற்கு வந்தார். அவர் லோகானுக்கிரகத்திற்கென்றே யவதரித்தவரானதால் அவருக்குப் பிறர் கற்பிக்கவேண்டியதில்லை யாயினும் உலகத்தை யனுசரித்துச் சற்குருவை யடைந்தார். பிறகு பிதாவினிடம் சில காலமிருந்துகொண்டிருக்கும் காலையில் வியாஸர் புத்திரனுக்கு விவாஹம் செய்ய வெத்தனித்தனர். அப்பொழுது, சுகர் பிதாவின் [illegible]யறிந்து பகவ! இப்பிரபஞ்சம் மிகக் கொடியது. பிறப்பதும் இறப்பதுமே தொழிலாக ஜீவர்களலைகிறார்கள். "ஜாதஸ்யமரணம் த்ருவம்" என்றபடி பிறப்பது சாவதற்கே. இச்சரீரமோ அற்பமான காலத்தை யுடைத்தாயிருக்கிறது. அநேகர் பிறந்துமிறந்தும் விடுகிறார்கள். சிலர் பால்யத்தில் மடிகிறார்கள். இன்னுஞ் சிலர் நல்ல போகத்தை யனுபவிக்கும் காலத்தில் மடிகிறார்கள். ஆயுள் காற்றைப்போல் சலித்துக் கொண்டே இருக்கிறது. சூரியன் சஞ்சாரத்தாலொவ்வொரு நாளும் சென்றுகொண்டே யிருக்கிறது. க்ஷணம் க்ஷணமாகப்போகிறது. மரத்தின் நுனியின் நுனியிற்றொங்குகிற நீர்த்துளிக்கொப்பானது தேகம். இன்னும் நீரிலெழுத்தாகும் யாக்கை என்றான்றோர்வாக்கின்படி நீரிலெழுதமெழுத்திற் கொப்பானதாகு மிவ்வியாக்கை. பால்யத்திலோ,

மாதாவின் கையை யெதிர்பார்த்து ஒவ்வொரு காரியத்தையும் நடத்த வேண்டியிருக்கிறது. எவ்விஷயத்திலும் ஸ்வதந்திரமாகவே யிருக்க வேண்டியிருக்கிறது. வியாதிகளாலுங் கண்களாலும் பயமுண்டாக்கப்படுகிறது. இரண்டு மூன்று வயதாயின் பெரிய குழந்தைகளிடத்திற் பயப்பட்டுத் துக்கமடைய நேரிடும். ஐந்தாறு வயதாயின், உபாத்தியாயரிடத்திலும் மாதா பிதாக்களிடத்திலு மடக்கத்தோடிருக்கவேண்டும். பதினாறு வயதிற்கு மேற்பட்டாற் சித்தம் ஸ்திரீமயமாகி யவள் வசப்பட்டு அவளுக்குழைக்க நேரிடும். அதனாற் புத்திரனுண்டாயின் அவனை ரக்ஷிக்கப் பிரவிருத்திக்கவேண்டும். விருத்தப் பருவத்திலிந்திரியங்களனைத்துந் தளர்ந்து சக்தியற்று, பொறிகலங்கி, மதிமயங்கி, கோலூன்றி, மற்றோர் பரிகசிக்க, அனைத்திற்கும் பிறர் ஜனங்களைப் பார்த்து மூலையிலுட்காரவேண்டும். மரணகாலத்தில் கபவாத பித்தங்களால் பீடிக்கப்பட்டுத் துக்கமுறவேண்டும். அந்தோ! இத்துக்க சரீரத்தாலென்ன பயன். இவ்வுலகில் ஐசுவரியமிருந்தாற் சுகமில்லையோவெனில், அதைச் சம்பாதிப்பதிலுந் துக்கம். காப்பாற்றுவதிலுந் துக்கம். அதாவது கள்வர் முதலியோர் பறித்துப்போய்விட்டாலென் செய்வோமென எப்பொழுதும் பயம். அந்தோ, எவ்வளவு சிலர்கள் அப்பணத்தால் மாண்டவர். அரசர்கள் ஐசுவரியத்தின்பொருட்டு ஒருவரோடொருவர் போர்புரிந்து இருதிறத்துச் சைனியங்களும் மாளுகின்றன. பஞ்சமா பாவங்களத்தனையு மியற்றும் பாதகம். பணமுள்ளோரிடத்தில் லோப முதலிய அசாவாசனை எப்போதும் வீசிக்கொண்டிருக்கும். ஒருவரையொருவர் சிநேகத்தினின்று விலக்குவது பணமே. கொடியது கொடியது! பணமே கொடியது!! சிலர் தமக்குச் செல்வமிருக்கிறதென இறுமாந்திருப்பார்கள். அவை உடனே செல்வோமெனப் பேய்விடுகின்றன.

"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப் பகடு
நடந்தகூழ் பல்லாரோடுண்க, வகடுறயார்மாட்டு நில்லாது"

செல்வஞ் சகடக்கால்போல் வரும், செல்வப்பொருள் நடுநிலைமையாக ஒத்தன்மையிற் சித்தம் நிலைபெறுதலில்லாததாகி வண்டியினது உருளைப்போலக் கீழ் மேலாக மாறும். ஆனதால் ஐசுவரியத்



தால் என்ன பிரயோஜனம்! பதிவிரதையான ஸ்திரீயிருந்தாற் சுகமில்லையோவென்றால் அவளைப் பிறர் கொண்டுபோகாமல் காப்பாற்றுவதால் பயம், அவள் நாளுள்ளவரையில் சாகாமலிருக்கவேண்டுமென விசாரம்; அவளுக்கு வியாதி வந்தால் துக்கம்; அவளை யாத்ரிக்க விசாரம்; அலங்கரிக்க விசாரம்; அந்நியர் பார்த்து மோகிக்காமலிருக்க விசாரம்; ஸ்திரீயென்றால் எலும்பு, நரம்பு, இரத்தம், மாமிசம், மஜ்ஜை, மூத்திரம், மலம், இவைகளால் நிரப்பப்பெற்ற ஒரு சொரூபம். அவளிடத்திலென்ன சுகமிருக்கிறது. எவனுக்கு ஸ்திரீயென்று தோன்றுகிறதோ அவனுக்கே போக இச்சையுண்டாகிறது. அதனாற் சரீரத்திற்குத் தளர்ச்சியுண்டாகி வியாதியுண்டாகிறது. அந்தோ ஸ்திரீயினை நேசித்தார். ஆனதால் ஸ்திரீயின் சித்திரத்தையும் பார்க்கலாகாது. பார்க்கின் அது துக்கமே. இவ்வுலகத்திலெதைப் பார்க்கினுந் துக்கமேயன்றி சுகமில்லை! அதுபற்றி எனக்கு தத்துவ ஞானத்தையுபதேசிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தார். அதைக்கேட்ட வியாஸர் திராத்துயரடைந்து, குழந்தாய்! இப்பால்ய பருவத்திற் தத்துவ ஞானத்தை யுபதேசிக்கலாகாது. உன்னை கிரகஸ்தாசிரமியாக யான் பார்க்கவேண்டும். இத்தேசத்தரசனிடத்திற் சென்று, வேண்டிய ஐசுவரியங்களைச் சம்பாதித்து சாஸ்திரோத்திரத்தில் நல்ல வரண்மனையையொத்த கட்டடம் ஒன்று கட்டி யோரழகிய பெண்ணையும் விவாஹம் செய்துவைக்கிறேன். அங்கு நீ சுகமாக அக்கினிஹோத்திரம் வைசுவதேவம், ஔபாஸனம் முதலானவைகளைச் செய்துகொண்டு புத்திரப்பேற்றையுமடைந்து ஆனந்தமாயிருப்பதை யான் கண்குளிரக் காணவேண்டும். இவ்வுலகிலெங்குசென்றாலு முன்னைப் பியாதிகள் விடப்போகிறதில்லை யென்றார். சுகர் பகவ! தாமங்ஙனங் கூறலாகாது. தாங்களே வேதத்தை விரித்தீர்கள், பதினெண் புராணங்களையு மியற்றினீர்கள். தபசில் தங்களுக்கீடு தரணியிலில்லை. வித்தைக்கு நிதியாய் விளங்குகிறீர்கள். எங்குந் தங்களுடைய கீர்த்தியே பரவியிருக்கிறது. தாங்களறியாத காரியம் யாதொன்றுமில்லை. இத்துக்கமான இவ்வுலக வாழ்க்கையிலென்னை முழுகவிடவேண்டாம். எனக்கு தத்துவ ஞானத்தையே உபதேசித்தருள வேண்டுமென்றார். வியாஸர், என்

கண்மணி! உன்னை யான் மிக்க தபசால் வருந்தியடைந்தேன். இவ்வுலகத்தில் குலபரம்பரை யபிவிருத்தியாகவேண்டாமா! என்து பிதாமகரிஷியாயிருந்தும், மச்சியகந்தி யென்னும் வேடஸ்திரியை யோஜனைதூரம் வரையில் மணம்வீசுங் குணமுடையவளாகச் செய்து அவளோடு புணர்ந்து அக்கணமே யென்னை யுண்டுபண்ணி யழைத்துக் கொண்டு வந்து பரம்பரை யபிவிர்த்தி செய்தாரன்றே! தபோநிஷ்டராயினுங் குலத்தையபிவிர்த்தி செய்யவேண்டியது அவசியமன்றோ. ஆகையாலென் வாக்கிற்கிணங்கி யதன்படியே செய்யவேண்டுமென்றார். சுகர் இவ்வுலகமே பொய்த்தோற்றமாக விருக்க குலமேது கோத்திரமேது சகிதன்ன! நமக்கு இத்தகைய பிரேமை விடவில்லை. நான் இக்கணமே இமயமலைச்சாரலுக்குச் செல்லுகிறேன். எனக்குச் சமாதிக்குரிய தத்துவஞானத்தை யுபதேசித்தருளவேண்டும்.

பகவ! நான் ஆத்மாநந்தத்தையே இச்சிக்கிறேன். அதையன்றி வேறொன்றையும் நான் வேண்டேன். இவ்வுலகத்தில் துக்கத்தையன்றி சுகம் ஒருபோதும் இல்லை. மனமோ வாசனையால் நிறைந்திருக்கிறது. ஒன்றுபோக ஒன்றாய் வாசனைகள் அபிவிருத்தியாகின்றன. வாசனையின் வசமாகச் செல்லுவோமாயின் மறுபடியும் ஜன்மத்தை எடுக்க நேரிடும். ...ன் இனி ஜன்மம் வாராத வழியைத் தேடவேண்டும்.

சித்தமே எல்லா விஷயங்கட்கும் காரணமாயிருக்கிறது. அதனிடத்திலேயே மூன்று லோகங்களும் இருக்கின்றன, அச்சித்தம் நசிக்குமாயின் நசித்துவிடும். ஆனதினால் மனோநாசத்தைச் செய்ய முயலவேண்டும். பகவ! இவ்வுலகத்திற்கெல்லாம் குருவாக அவதரித்திருக்கிறீர்கள். தாங்களே என்னைச் சம்சார வாழ்க்கையிற் றள்ளுவீர்களானால், நான் என்ன செய்வேன். என்து மனத்தில் சில தோற்றங்கள் உண்டாகின்றன. அவைகளைத் தங்களிடத்துக் கூறுகிறேன்.

எனக்கும் இவ்வுலகத்திற்கும் ஆதாரமாயுள்ளது, எங்கும் வியாபித்த சிதாகாசமே. அதனையே பிரம்மமென்று கூறுகிறார்கள். அது அழிவற்றது. குணமற்றது. இவ்வுலகத்தில் இருத்தல் என்னும் சொல்லுக்கும் ஆதாரமான சத்தாய் இருக்கிறது. அது நாமரூப



விக்கும் சுதந்திரருக் காரணமாய் உள்ளது. இவ்வுலகமும் அதிலுள்ள சர்வ பூதங்களும் அந்த பிரம்ம சுவரூபத்திடத்தில் கற்பனையாக பிரமையினால் தோற்றுகிறது. அப்பிரமையையே மாயை என்பார்கள். எதுவரையில் பிரமை இருக்கிறதோ, அதுவரையில் பிரபஞ்சமிருக்கிறது. (கட்டையில் கள்ளன் என்ற பிரமை யுள்ளமட்டும் கள்ளன் இருப்பதுபோல் தோன்றுகிறது; பிரமையொழிந்தால் கள்ளனும் போய்விடுவதுபோலும்) பிராந்தியொழிந்தால் பிரபஞ்சமும் ஒழியும். பிராந்தி எங்ஙனம் * போமெனில், பரம்பரையாக வந்த வாசனைகளொழிந்திடல் வேண்டும். விஷய வாசனைகள் மனதை விட்டொழிந்தபின் ஆத்மானந்தம் மேலிடும். அதனையே மோக்ஷமென்கிறார்கள். இத்தகைய உண்மைகளை புராணங்களிலும் வேதங்களிலும் கூறுகின்றன. ஆனதால் என்னிடம் ஆத்ம நிஷ்டைக்குரிய வழிகளைக் கூறவேண்டுமென்றார். வியாசர் புத்திரனது தீவிர வைராக்கியத்தைப் பார்த்து ஆ! இதென்ன அதிசயம்! உலகத்தில் விருத்தப் பருவத்திலும் ஆசைமேலிட்டு புத்திராதிகளில் பிரேமையோடு அலைகிறார்கள். வைராக்கிய மென்பது இளம்பருவத்தில் வருவது கஷ்டம். ஆ! நமது புத்திரனுக்கு வைராக்கியம் பாலியத்திலேயே வந்துவிட்டதே; நமது எண்ணத்திற்கு வசப்படுவது கஷ்டம்போற் றோன்றுகிறது, என்ன செய்வோம் என்று ஆலோசித்துக் கூறலுற்றார்.

குழந்தாய்! சமாதியிலிருப்பதற்கு வனத்திற்கு ஏன் போகவேண்டும். கிரகத்தில் இருந்தே ஜீவன் முக்தனாய் இருக்கலாகாதோ? உன்னை விட்டு ஒரு கணமேனும் பிரியேன். உனக்கு நான் ஞானத்தை உபதேசிக்க வேண்டுவது என்ன இருக்கிறது. நீ இப்பொழுதே மறைத்தான ஞானத்தை அடைந்திருக்கிறாய். இந்திரன் தேவலோகத்திலிருந்து பிரமதேவனிடத்திற்குச் சென்று நூறு வருஷம் பிரமசரியத்தை யனுஷ்டித்து பிரம்ம வித்தையை யடைந்தார். அத்தகைய மகாவித்தையானது உனக்கு சுபாவமாயவே யுதித்திருக்கின்றது. அது உனது பூர்வ பாக்கியமே. நான் உனக்கு உபதேசிக்க வேண்டுவதொன்றுமில்லை. எங்கும் பிரகாசிக்கும் சிவமாயுள்ள நீயிருக்கிறாய். நானும் அங்ஙனமே எல்லா ஜீவராசிகளும் சிவமய

மாகவே இருக்கின்றன. நீ அறிந்தபடியே நானும் அறிந்திருக்கிறேன் நிர்விகாரமாக இருத்தலே சுகம், அச்சுகமே உருவாய் நீ அமைந்திருக்கிறாய் என ஆலிங்கனம் செய்துகொண்டு உச்சி மோந்து ஆசீர்வதித்தார். வியாஸரது வாக்கியத்தைக் கேட்ட சுகருக்கு ஆத்மானந்தத்தை ஸ்வயமாகவே அறிந்ததால் இன்னும் விஸ்ராந்தி வரவில்லை. ஆனதால் மறுபடியும் பிதாவைப் பார்த்து கூறுகிறார். பகவ, ஜீவன் முக்த ஸ்திதியை யடைந்தும் கிரகஸ்தாசிரமத்தில் இருக்க முடியுமா? இருட்டும் வெளிச்சமும் ஓரிடத்தில் இருக்குமா; சீதமும் உஷ்ணமும் ஓரிடத்தில் தங்குமா; அதுபோல் கூறுங்கள் பிதாவே! ஜீவன் முக்தியோ ஸர்வஸாதனத்தியாகத்தின் முடிவில் உண்டாகிறது. வாசனை இருந்தாயிருப்பினும் ஆத்மானந்த முண்டாகாது. ஜீவன் முக்தன் என்ற பெயரும் வராது. வாசனையன்றிக் கிரகஸ்தாசிரம விருத்தியும் நடைபெறாது. இவ்விரண்டிற்கும் விரோதமானதால் எங்ஙனம் ஜீவன் முக்தனாய் இல்லறத்திலிருக்க முடியும். குடும்ப வாழ்க்கை துக்கமன்றோ. துக்கமென்பது அங்குதான் குடிகொண்டிருக்கிறது. துக்க சாகரத்தில் சுகம் எங்கிருந்து உதிக்கும். அவ்விஷயத்தில் எனக்கு மிக சந்தேகமாயிருக்கிறது என்றார். அதைக் கேட்ட வியாசர் கூறுகிறார். எனது செல்வமே! நீ எங்கு சென்றால் உன்னை துக்கம் விட்டுப்போகிறது. எங்கு சரீரமிருக்கிறதோ அங்கு துக்கம் இருக்கிறது. ஆத்மாவையன்றி சுகம் வேறொருவரிடத்திலுமில்லை. ஆத்மானந்தத்தைக் காட்டில்தான் அனுபவிக்கவேண்டுமோ. இல்லிருந்தின்னா அனுபவிக்கலாகாதா? விதேகபுரத்தில் ஜனகன் என்னும் ஒரு மகாராஜர் இருக்கிறார். அவர் எப்போதும் விதேகபுரத்திலேயே இருக்கிறார். அவர் அரசனாயிருந்தும் ஆத்மானந்தத்தை யடைந்து அசங்கனாய் இராஜ்ய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கிறார். அவரைக் கேட்பாயானால் நீ விஸ்ராந்தியை யடைந்து சமாதியைப் பெறுவாய் என்றார். அதைக் கேட்டவுடனே அங்ஙனம் ஒருவர் இருக்கிறாரா! ஆ! ஆச்சரியமே! ஆனால் அவரை நான் இப்பொழுதே பார்க்கவேண்டும், நான் அங்கு போகிறேன் என சன்னியாசியைப் போல் (திடீரென) கிளம்பிவிட்டார். உடனே தந்தை, குமா



ரா! போய்விட்டு இங்கே திரும்பி வரவேண்டுமென்றார். அதற்கு சுகர், கர்மம் இருப்பின் திரும்புவேன் எனச் சென்றார். வெகு தூரமானதால் பன்னாட்கள் காலநடையாக நடந்து விதேகபுரத்தை யடைந்தார். அங்கு கோட்டையின் வாயிலில், சென்றவுடன் சேவகன் உள்ளே போகக்கூடாது என்றான். ஏன் என்றார். அதற்கு அவன் கூறுகிறான், இக்கோட்டைக்குள் குல கோத்திரம் தெரியாதவர்கள் போகலாகாது. அதைக் கூறுவீரேல் உள்ளே செல்லலாம்.

அதைக்கேட்ட சுகர், ஜனகன் விதேகபுரவாஸி என்று கேள்வியுற்றேன். தேகமற்ற பரமாத்ம பிரம்ம ஸ்வரூபமாக விருக்கும் அரசனது பட்டணத்தில், ஜாதியேது, கோத்திரமேது, சூத்திரமேது, இது என்ன புதுமை.

ஸ்வயம்பிரகாசமாயும், ஏகாந்தமாயும், விளங்கும் ஆத்ம ரூபமாய் ஜன்மமும் நாசமும் இல்லாததாய், சோகமும் துக்கமுமற்றதாய், இப்பிரபஞ்சத்திற்கு அபின்ன நிமித்தோபாதான காரணமாய், விளங்கும் பரமானந்தனை எனக்கு ஜாதி ஏது, குலமேது, கோத்திரமேது, என்று கூறினார். அதைச் செவியுற்ற சேவகன் அண்ணலே தம்போலியருக்கு, இங்கு ஒரு விசாரணையுமில்லை நமஸ்கரித்து அஞ்சலிபண்ணி தாங்கள் இக்கோட்டைக்குள் எங்கு இஷ்டமோ அங்கு போகலாம் என்று கூறினான். அதைக்கேட்டு, ஓமெனக்கூறி கோட்டைக்குள் சென்றார். சென்றதும் இதுகாறும் பட்டணத்தையே பாராதவராதலால் பட்டணத்தின் கோலாகலத்தை நோக்கி ஒன்றிலும் ஆச்சயப் புத்தியுமின்றி, பிறந்தபடி ஆடையின்றிச் சென்றனர். முன்னொருகால், சுகர், தனது பிதாவுடன் ஓர் வனத்தில் போய்க்கொண்டிருந்த காலத்தில், வழியில் ஓர் தடாகத்தில் ஆடையின்றி, ஜலக்கிரீடை பண்ணிக்கொண்டிருந்த ஸ்திரீகள் சுகரைக்கண்டு சிறிதும் லஜ்ஜையின்றிக் கிரீடித்துக்கொண்டிருந்தார்கள். பிறகு போகிற வியாஸரைக் கண்டவுடன் நாணி, ஆடைகளை யணிய ஆரம்பித்தார்கள். அதைக்கண்ட வியாஸர் அப்பெண்களை நோக்கி பாலியப்பருவமும் நிர்வாணியாயும் போகிற எனது புத்திரனை சுகர் சென்றபோது நீங்கள் லஜ்ஜையின்றி இருந்தீர்களே. இப்பொழுது என்னைக் கண்டு வஸ்திரம் தரித்த

தற்குக் காரணம் யாதெனக் கேட்டனர். அதற்கவர்கள் உமக்கு ஸ்திரீ புருஷ பேதந்தோற்றியிருக்கிறது. இவருக்கு அது இல்லை. எல்லாவற்றையும் ஒரே சின்மயமாய்ப் பார்க்கிறார். ஆனதால் எங்கட்கும் லஜ்ஜை தோன்றவில்லை என்றார்கள். ஸ்வரூபத்தையன்றி, சரீராதி புத்தியின்றி சஞ்சரிக்கும் இவருக்குப் பட்டணமாயினும் கிராமமாயினும் வனமாயினும் ஒன்றே.

நீ, நான் என்ற அபிமானமற்றவராய், மலரஹிதமான (அழுக்கின்றிய) சுகசமுத்திரமான ஆத்மாநந்தத்தில் முழுகினவராய், குழந்தைகளைப்போல பட்டணத்திற்குட் சென்றார். பட்டணத்திலுள்ள ஜனங்கள் கண்டு ஆ இதென்ன அதிசயம். கோடிசூரியப் பிரகாச முகமும் ஆநந்தம் புரிந்த மந்தகாசமும் பாலியப்பருவம் பொருந்தியவரும் அவதாரயுமுள்ள இவர் யார்? ஸநகாதியோ? [illegible]லாருவரோ? அல்லது வியாசரது புத்திரரான சுகரோ? தாருகாவனத்து மஹரிஷிகளது கர்வபங்கப்படுத்திய ஈசனது பிக்ஷாண்டவக்கோலமோ? என ஒருவருக்கொருவர் விஸ்மயத்தோடு பேசிக்கொண்டனர். சுகரோ, மாடமாளிகை பொருந்திய பட்டணத்தைக் கண்டு ஒன்றையும் அதிசயமாகப் பார்க்கவில்லை.

அகிலப்பிரபஞ்சத்தையும் மாயையால் தோற்றுகிறதென்றும், அஸத்தென்றும், மனதில் திடமாய்ப் பார்த்தவர்களாய், மதமாச்சர்யாதிகளற்றவராய், ஆசையையொழித்தவருமான எம் கருணாநிதிக்கு அச்சரியமாயுளது எது? ஒன்றுமில்லை. எல்லா வீதியையும் கடந்து அரசனது அரண்மனை வாயிலில் சென்று உள்ளே நுழைந்தார். அங்கு நிற்கும் சேவகர்கள் இவரைக் கண்டவுடன் பயந்து நமஸ்கரித்து, பிரபோ, அரசனண்டையிற் சென்று தெரிவித்து வந்து அழைத்துச் செல்லுவோம் எனச் சொல்லி, அங்கேயே நிறுத்திவிட்டு உள்ளே சென்று, இவரது வரவைத் தெரிவித்தார்கள். அதைக்கேட்ட ஜநகரோ ஒன்றும் கூறாது மௌனமாயிருந்தார். சேவகர்களும் மௌனமாய்த் திரும்பினார்கள். வாயாலேயே ஒருவரும் அழையாமல் எழுநாள் அன்னமின்றித் தாகத்திற்கு நீருமின்றி, சீதோஷ்ணத்திருஷ்டியன்றி மானவமானமின்றி காத்திருந்தார். பிறகு மந்திரிகளை விட்டு அரண்



மனையில் ஓர் புறத்திலழைத்து ஆகாராதிகளைக்கொடுத் துபசரிக்கும்படி அரசனாக்ஞை யளித்தார். அங்கு காமினியான யுவதிகளைக் கொண்டு, ஆகாராதியுபசாரங்களைச் செய்யும்படி ஆக்ஞையளித்தார். அங்கும் ஓர் விஸ்மயமுமின்றி இருந்தனர்.

இளமென் றென்றல் பொன்ன வசலத்தின்
மிக்க பொருப்பினை யிழுக்கவற்றே.

என்றபடி இளங்காற்றானது இமயமலையின் ஓர் முகட்டை இடித்து விடுமோ? அங்ஙனமே [illegible] மகாதீரரான எம் ஆனந்த மூர்த்தியை மலமாம்ஸ நாற்றத்தோல் ரூ[illegible]மான ஸ்திரீகளால் மயக்கமுடியுமா. முன்னொருகால் வியாஸர் தன் [illegible]த்[illegible]ரனைக் காணாது எ சுக! என்று கூவிக்கொண்டு வ[illegible]ற் சு[illegible] மரங்களெல்லாம் ஏன் ஏன் என்று கேட்டதாம், அதற்குத் தாத்பரியம் யாதெனில் (அவர் எங்கும் வியாபித்த சிதாகாசஸ்வ[illegible]பமாகவே இ[illegible]த்தலால் மரங்களிலுமிருப்பதால் அந்த ரூபமாகவுமிருந்து [illegible]னர் என்று பொருள்). அத்தகைய மஹா மகிமை பொருந்தியவரானதால், இவ[illegible] மயக்கில் சிறிது மயங்காதிருக்க அவர்கள் பட்ட சிரமம் வீணாயிட்டதை யரசனி[illegible]து முறையிட, அரசனும் ஆநந்த பரவசனாய் இ[illegible]ரிடத்தில் வ[illegible] ரிஷிபுத்திரனானதால் நமஸ்கரித்து அர்க்கிய பாத்திய ஆசனம் கொடுத்து முனிவன், தாம் இங்குவந்த காரணம் யாதோ என்றார். அதைக்கேட்ட சுகர் கூறுகிறார்.

தன்னுள விகற்பித்தெழுந்த விகற்பம் போகிற்
றவிர்ந்திடும் மாயையிற் பயனே சற்றுமில்லை
யின்னவகைத் தானவுண்மை யியம்பவேண்டும்
யார்மயக்கமாற்றுமிறைவ.

எனது ஆத்மஸ்வரூபத்தில் கற்பனையாகத் தோன்றும் விகற்பமான[illegible]துவைதமொழிந்தால் கூறப்படுகிற மாயையால் பயனொன்றில்லை. இவ்வுண்மையை எனது அனுபவத்தினாலறிந்தேன். இதுதான் அடையவேண்டிய ஞானம். இத்தகைய ஞானமே தாமும் அடைந்திருக்கிறீர்களோ? அவ்வுண்மையை சிறுவனான எனக்குக் கூறவேண்டும் என்றார்; அதைக்கேட்ட ஜனகர்.

முனிவநீயே மதித்துணர்ந்து பிதாவுரைக்க
மறுத்துங்கேட்டாயந்நிலையே நிச்சயமிங்கு
கண்டஞானவாகாய புருஷனுளயவொன்றில்லை.

முனிவ, நீயே பூர்வஜன்ம பாக்கியவசத்தால் ஆத்மஞானத்தை சுவயமாகவே யடைந்தீர். தமது பிதாவிடத்துக் கேட்டு, மறுத்தும் உரைத்தீர். நீர் எந்த சுவாநுபூதியை யடைந்தீரோ அந்நிலையே நிச்சயம். இங்கு அகண்டமாயும் ஞானமாயும் சிதாகாசமாயுமிருக்கிற பரமாகாசத்தையன்றி மற்றொன்றில்லை. பிறகு சுகர் இந்த ஞானத்தோடு இல்லறத்திலிருக்க முடியுமா? என்றார்.

ஜனகர், முனிவ! இந்த ஞானமடைந்தவனெங்கிருப்பினும் தோஷமில்லை. காட்டிற் சென்றாலும் அங்கும் ஆகாராதிகளைச் சம்பாதிக்க வேண்டும், வியாக்ரோதிகளாற் பீதியுண்டாகும். சீதோஷ்ணாதிகளால் சரீரத்திற்கு வாட்டமுண்டாகும். ஆனால் இங்கிருக்கும் பிரவிருத்தியைப் பார்க்க இன்னும் அநேக பிரவிருத்தியைச் செய்யவேண்டும். இங்கு அத்தகைய பீதியொன்றில்லை. நாம் எங்கிருப்பினும், அகண்டாகாசமான ஆத்மசுவரூபமே எங்குஞ் சென்றாலும், பிராப்தமுள்ள மட்டும் பிரகிருதியின் சேஷ்டைகள் நம்மை விடாது. ஆனதால் காட்டில் இருப்பினும் காட்டிலிருப்பினும் ஒருவனே வந்தே தீரும் என்றார். அதைக்கேட்டு சம்சயந்தெளிந்தவராய் (தனது பிதாவிடத்துச்சென்றனரெனத் தேவிபாகவதம் கூறுகின்றது) இமயமலைச்சாரலுக்கு சென்று ஆயிரங்கோடிகாலம் சமாதியில் உவமானமற்ற ஸ்வயம்பிரகாசமான ஆத்மாவிடத்து நிஷ்டையடைந்து ரூபங்களொன்றையும் பாரார். ஒன்றையும் கேளார். ஒரு வசனத்தையும் சொல்லார். கட்டை எப்படிக் கிடக்குமோ அதேமாதிரி ஆநந்தத்தில் வீற்றிருந்தார். அம்மஹாயோகியே லோகத்திற்கு அநுபவ மார்க்கத்தை விளக்கியவர். இவர் பிரம்மஞான ஆசாரியர். இவர் கருணையங்கடல். இவரது மகிமையைப் புராணங்களுள் விரிவாய்க் கூறப்பட்டிருக்கிறதாயினும் நாம் சங்கிரஹமாகத் தெரிவித்தோம். இந்த சுகபிரம்மரிஷியின் சரித்திரத்தால் நாம் அறிவது யாதெனில்,—



ஞானமென்பது புஸ்தகபடிப்பால் மாத்திரம் வருவதல்ல, ஞானத்திற்குச் சாதனம் விவேகம், வைராக்யாதிகளோடு சத்சங்கத்தைச் செய்யவேண்டும். செய்யினும் பூர்வபாக்கியமில்லையானால் ஞானோதயமாகாது. நமது மஹரிஷியான சுகரோ பிறக்கும்போதே ஞானத்தோடு உதித்தவர். அவருக்கு பிறர் உபதேசத்தால் ஞானோதயமாகவில்லை. தமது பூர்வ பாக்கியத்தாலேயே ஆத்மாவை யறிந்து அடங்காத ஆநந்தத்தி லழுந்தி அத்வைத பேறு பெற்றவராதலால் அவரது இருவடியை முக்காலத்தும் நமஸ்கரிப்பாம். ஓம்.

## சுக்ரன்

உலகம் பொய்யென்று சிலரும் மெய்யென்று சிலரும் கூறுகின்றனர். இவற்றில் எது உண்மையென்று பலர் கேட்கக்கூடும். அத்தகையோர் கீழ்வரும் கதையைக் கவனிக்கக்கடவர். பூர்வம் பிருகுமகாரிஷி உய[illegible]ங்கிய மந்திரகிரிச்சாரலில் அருந்தவம் செய்தனர். அவருடைய பாதார விந்தங்களை விட்டு ஒருபோதும் பிரியாத அவரது புத்திரனாகிய சுக்ரன் என்போன் சித் [illegible] இரண்டுக்கு மிடையில் தன் மனதை நிறுத்தியிருந்தான். இவ்வாறிருக்கையில் தந்தை நிர்விகல்ப சமாதியிலிருந்ததால் சுக்ரன் ஆகாயத்தை நோக்கியவண்ணமாய்ச் சில நிமிஷம் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது வனப்பே உருவெடுத்தன்ன ஓர் தேவஸ்திரீ அந்தரமார்க்கமாய்ப் போக அவளுடன் சேரவேண்டுமென்னும் ஆசை சுக்ரனுக்கு உண்டாயிற்று. சுக்ரன் தன் கண்களை மூடிக்கொண்டு மனதால் அந்த தேவஸ்திரீயிருக்கும் தேவலோகத்துக்குப்போய் அவளுடன் சேரவேண்டுமென்று நினைத்தான். தக்ஷணமே தேவலோகம் அதிஸமீபமாய்த் தோன்றியது. அங்கே சகல தேவர்களாலும் புகழப்பெற்ற இந்திரன் சிம்மாசனத்தில் கொலுவிருந்தான். அதன் பிறகு சுக்ரனை இந்திரன் உபசரித்து நல்வரவு கூறியதும் முன் பார்த்த தேவஸ்திரீயே மறுபடியும் அவனிடம் வந்ததும் நடந்தேறின. சுக்ரன் தன்னுடைய ஸங்கல்பத்தால் இருளுண்டாகவேண்டுமென்று நினைத்தான். எங்கும் இருள் கவிழ்ந்தது. சகல தேவர்களு மோடிப்போனார்கள். தேவமாதர்கள் மட்டும் கற்பகத்

தருவினடியில் சுக்ரனுக்கு வேண்டிய சுகத்தைத் தந்தனர். இம்மாதிரியாக 8-சதுர் யுகங்கள் கழித்தான்.

அதன் பிறகு ஓகோ நாம் செய்த தர்மங்களெல்லாம் தொலைந்து போகுமே யென்று சுவர்க்கத்தைவிட்டுப் பூலோகத்துக்கு வந்தான். வரும்வழியில் சுக்ரனுடைய ஜீவன் சந்திரனுடைய கிரணங்களிற்கலந்து குளிர்ச்சியான பனியை நெல்வயலில் விழுந்து தானியமாக மாறிற்று. அந்தத் தானியத்திலுள்ள அரிசியைச் சமைத்து தேசார்ணத்துப் பிள்ளையாய்ப் பிறந்தான். பிறகு மகா தபஸ்விகளுடன் சேர்ந்து ஓர் மன்வந்தரம்வரை மகமேருமலைச்சாரலில் தவம் செய்துகொண்டிருந்தான். அங்கே ஓர் பெண்மானுடன் கலந்து ஓர் புத்திரனைப் பெற்று உலக வின்பத்திலுள்ள ஆசையாலும், பிள்ளையின் மேலுள்ள பக்ஷத்தாலும், தனது உண்மை நிலையினின்றும் தவறி மாயையின் வலையிற் சிக்கி அனேக ஜன்மங்களெடுத்து கடைசியில் ஓர் தபஸ்விக்குக் குமாரனாகப் பிறந்து கங்காதீர்த்தத்தில் தவஞ்செய்துகொண்டிருக்கிறான்.

இங்ஙனமிருக்க, பிருகுமகாரிஷியின் ஸமீபத்தில் ஜீவனைப்பிரிந்த சுக்ரனது உடல் என்ன கதியாயிற்று? பார்ப்போம். வெய்யிலும் காற்றும் அவ்வுடலை உலர்த்தி நரம்பு மறுவக்குயன் போலாக்கிவிட்டன. ஆனால் மிருகங்களாவது பக்ஷிகளாவது அதை யணுகவில்லை. பிருகுமகாரிஷி அநேக தேவ வருஷங்கள் நிர்விகல்ப ஸமாதியிலேயே யிருந்து பின்னர் கண்ணை விழித்துப் பார்த்தார். தன் மகனுடைய உடலைக்கண்டு பிராணன் நீங்கிவிட்டதென்றறிந்தார். கோபங்கொண்டார். எமனை ஹதம் செய்யத் துணிந்தார். எமதர்மன் பயந்து தன் பரிவாரங்களுடன் முனியிடம் வந்து சொல்லலுற்றான்.

"ஈசுவரனது கட்டளையை நிறைவேற்றும் நாங்கள் உம்முடைய அருந்தவத்துக்காக மிகவும் மெச்சுகிறோம். வீணாக கோபங்கொண்டு பூர்ணமாய் உம்முடைய தபஸைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம். ஜ்வலிக்கும் பிரளய காலாக்கினிகூட என்னைத் தகிக்கமாட்டாது. அவ்வாறிருக்க, உமது சாபம் என்னை நாசப்படுத்துமா? எத்தனையோ ருத்திரர்களும் விஷ்ணுக்களும் ஸம்ஸாரத்தி லடிபட்டு எங்கள் வசத்தில் அகப்பட்டிருக்கின்றனர். துன்பமிகுந்த இவ்வுலகத்தில் யாவரும் என்னை ஜெயித்த



தில்லை. எல்லோரும் என் வாயிலகப்பட்டவர்களே. பரமேசுவரர் எனக்கு இவ்வித கட்டளையை யிட்டிருக்கிறார். இந்தக் கட்டளையை யாராலும் மீறமுடியாது. ஞானிகளுக்குமட்டும் உலகம், சுவர்க்கம், நரகம், ஜென்மம் முதலிய வியவகாரங்களில்லை. அவர்கள் ஜீவன்முக்தர்கள். மாயையால் கட்டுண்ட அஞ்ஞானிகளெல்லோருக்கும் உலகம், ஸ்வர்க்கம், நரகம், எமன், ஜென்மம் முதலிய சகல பீடைகளுமுண்டு. கர்மத்தின் பலத்தால் பிறக்கும் ஸகல ஜீவராசிகளும் தங்கள் ஸங்கல்பத்தால் பிறந்து கல்பத்தின் முடிவில் அழிந்துபோகின்றனர். பிரளயகாலத்தில் உம்முடைய மனவுறுதி எங்கேயிருக்கும்? உமது மகிமை எங்கேயிருக்கும்? இப்போது நீர் படுகிற துக்கங்களெல்லாம் பிரளயகாலத்தில் எந்த விடத்தை நாடிச்செல்லும்?

உமது குமாரன் தன்னுடைய ஸங்கல்பத்தால் அனேக ஜென்மங்களெடுத்தான். அதற்காக நீர் என்பேரில் கோபங்கொள்வது தகுதியாமா? இப்போது நான் சொல்வதைக் கவனியும். மனதுதான் ஆத்மா. மனதின் காரியங்களே உண்மையான காரியங்கள். இவ்வுலகத்தில் அது வாழும் போது ஜீவன் எனப்படுகிறது. ஏதேனும் ஓர் காரியத்தை நிச்சயிக்கும் சக்தியால் புத்தியெனப்படுகிறது. கோபம், மோகம், முதலிய குணங்களுடன் 'நான்' 'எனது' என்னும் விவகாரங்கள் சேர்ந்து அகங்காரமாகிறது. ஆதலின் மனதுதான் உலகமாகி அதில் பற்பல தோற்றங்களையுண்டாக்குகின்றது. நீரும் உம்முடைய புத்திரனும் நிர்விகல்ப ஸமாதியிலிருந்தீர்கள். அப்போது உமது புத்திரன் அதிக ஆசையால் மாம்ஸ சரீரத்தை விட்டு மனதின் மூலமாய் ஆகாசத்திற் போய்க் கொண்டிருந்த விசுவாசி என்னும் தேவஸ்திரீயுடன் மருவிப் பிறகு பூமியில் வந்து ஓர் பிராமணனுக்குப் புத்திரனாய்ப் பிறந்து, கோசல தேசாதிபதியாய், வேட்டைக்காரனாய்ப் பிறகு கங்கைக்கரையில் ஓர் அன்னபக்ஷியாய் ஜெனித்து, பௌண்டரதேசாதிபதியாகப் பிறந்து, சாளுவ நாட்டரசனுக்கு ஆசாரியனாகச் சிலகாலம் வாழ்ந்து, அனேக கல்பங்கள் வரை வித்தியாதரர்களின் அரசனாக வீற்றிருந்து, மற்றொரு தேசத்தில் சைவர்களுக்குக் குருவாய்ப் பிறந்து இன்னொரு தேசத்தில் மூங்கில் மரமாய் வளர்ந்து, பின்னர் ஓர் பெருங்காட்டில்

ஆன்மாவுக்குக் கடைசியில் ஓர் மகரிஷிக்குப் புத்திரனாய்ப் பிறந்து மனதை நிர்மலமாக்கி மாயையைத் துறந்து வாசுதேவனென்னும் பெயரைப் புனைந்து இப்போது கங்கைக்கரையில் தவம் செய்கிறான். உமது புத்திரனெடுத்த ஸகல ஜென்மங்களையும் நீர் ஞானதிருஷ்டியால் பார்க்கலாம்" என்று கூறிய எமன் வார்த்தைப்படி பிருகு மகரிஷி தன் மனதை நோக்கவே அது சுத்தமான ஓர் கண்ணாடியைப் போல் சுக்ரன் எடுத்த ஜன்மங்களை யெல்லாம் காட்டியது. இவ்விதமான பிரமை மனதுக்கு எவ்விதமுண்டாயிற்றெனில்? ஞான சூரியனது ஒளியாலென்றறிக. உலகவாசையற்ற பிருகுமகரிஷி ஒரு நிமிஷத்தில் ஸகல சந்ததிகளையு மறிந்து கடைசியாய்க் கங்கைக்கரையினின்று மந்திரகிரிச் சாரலிலுள்ள தன் உடலிற் புகுந்தார். பிறகு மகா ஆச்சரியங்கொண்டு தன்னை மன்னிக்கும்படி தருமதேவதையை வணங்கி, "எல்லாம் வல்ல காலனே! நீதான் முக்காலத்தையு முணர்ந்தவன். என்னை போன்றவர்கள் பிரம்ம ஞானத்தில் ஓர் மூலையைக் கூடக் காணவில்லை" யென்றார்.

அதன் பிறகு எமன் அம்மகரிஷியை அழைத்துக்கொண்டு கங்கைக்கரையில் வாசுதேவனிருக்குமிடத்துக்கு வந்துசேர்ந்தான். பிறகு தம் அருமைப் புதல்வனைக் கண்டார். ஆனந்தம் கொண்டார். வாசுதேவன் ஸமாதியினின்று எழுந்து அவ்விருவர்களையும் நமஸ்கரித்தான். பிறகு மூவர்களும் ஓர் கற்பாறையிலுட்கார்ந்துகொண்டனர். வாசுதேவன் அவர்களை நோக்கி "உங்களால் என் தவமீடேறிற்று" என்றான். பிறகு அவனுக்கு ஞானம் பூர்ணமாயுண்டாகி அஞ்ஞானம் சிறிதேனுமின்றி அழிந்துபோமாறு ஆசீர்வதித்தார். இதன் பிறகு சுக்ரன் தன் கண்ணை மூடிக்கொண்டு ஞானக்கண்ணால் தான் எடுத்த ஜென்மங்களை யெல்லாம் அறிந்தான். இவ்விதமாக ஒரு நிமிஷத்தில் மறுபிறப்பின்றி முக்தனானான்.

இதன் பின்னர் சுக்ரபகவான் சொல்லுகிறார்: "பிரகிருதியென்று சொல்லப்படுகிற பயங்கரமான மாயையானது இந்த ஜெகமாக மாறி என் மனதில் வெகு விநோதமாய் வளர்ந்து வந்தது. அறியவேண்டியவைகளையெல்லாம் அறிந்தேன். ஜனனமரண துக்கத்தினின்று



விடுபட்டேன். ஆதலின் மந்தரமலையருகிற் சென்று என் சரீரத்தைப் பார்ப்போம். இதனால் எந்தப் பொருளிலும் இச்சையாவது வெறுப்பாவது எனக்கு உண்டென்று நினைக்க வேண்டாம்." இவ்வாறு சுக்ரன் கூறியவுடன் மூவர்களும் ஒரு நிமிஷத்தில் மந்தரமலையையடைந்தார்கள். சுக்ரன் தன்னுடலைப் பார்த்து 'ஆகா, ஞானத்தால் பெரியோர்களடையும் பேரின்பத்தை இவ்வுடல் அடைந்திருக்கிறது. மகத்தாகிய தபவலிமையன்றோ நான் இதைக் கண்டறிந்தேன்' என்றான். இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில் காலன் அவரை விளித்து, 'ஐயா, சுக்ர பகவானே, அரசர்கள் தங்கள் பட்டணங்களில் நுழைவது போல் நீர் இந்த சரீரத்தில் நுழையும். அரசர்களுக்கெல்லாம் ஆசாரியராவீரும்' என்றிவ்வாறு கட்டளையிட்டு அந்தர்த்தானமானான். அக்குமாரது பிரிவால் தந்தையும் மகனும் சிறிது வியசனம் கொண்டனர். வாசுதேவன் எமனுடைய கட்டளைப்படி அச்சரீரத்தில் புகுந்தார். பிருகுவானவர் வேத மந்திரங்களால் சுக்ரனது உடலை ஸ்நானம் செய்வித்து சுத்தமாக்கினார். பிராணவாயு உள்ளே செல்லும்படியாக நாடிகளெல்லாம் மிருதுவாயின. உடனே பார்க்கவர் (பிருகுவின் புத்திரர்) எழுந்து தந்தையின் பக்கத்தில் வணங்கி நின்றார். இவ்விதமாகத் தந்தையும் புத்திரனும் முக்தராயினர்.

## பகீரதன்

பகீரத மகாராஜன் இன்னாரென்பது நமது இந்து [illegible]க்களனைவருக்கும் தெரியும். இவர், சூரியகுலத்தில் உதித்த அயோத்தியா நகரில் ஆண்டுவந்த இக்ஷுவாகு வம்சத்தில் பிறந்து ராஜ்யபாரம் வகித்தவர். ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு மூதாதையாயுள்ளவர். இவர் ஸகல புவனங்களையும் சேர்த்து ஏகச்சக்ராதிபத்தியமாய் ஆண்டுவந்தார். சிந்தாமணியைப்போல் [illegible]யுடையவர். இவர் ராஜ்யத்தில் பட்டம் வகித்து மிகவும் மேன்மையுடன் ஆண்டுவருங்காலத்தில் தன்னுடைய பாட்டன்மார்கள் பாதாளத்தில் பஸ்மமாய் கரையேற்றமன்னியில் இருப்பதை எண்ணி வருந்தி தங்கள் குலகுருவான வசிஷ்டரை யழைத்து அதற்கு வியோசனம் என்னவென்று வினவ, வசிஷ்டர், பகீரத மகா

ராஜனே உம்முடைய பாட்டனார்கள் ஓர் ரிஷியின் சாபத்தால் பாதாளத்தில் பஸ்மமாய் கரையேற்ற மன்னியில் இருக்கிறதை நீர் அறிந்து வருந்துவதினால் மட்டும் போதாது. ஸத்தியலோகத்தில் பிரம்மாவிடமிருக்கிற கங்கையைக் கொணர்ந்து உன் முன்னோர்களை கரை ஏற்ற வேண்டியது. உன் தகப்பனால் ஆகாத இக்காரியம் உன்னால்தான் ஆக வேண்டியது என்று கூறினார்.

இதைக்கேட்ட பகீரத ராஜன் கடுந்தவமிருந்து பிரம்மா சிவன் ஜன்னு முதலிய தேவ ரிஷிகளை ஸ்தோத்தரித்து கங்கையை, மனுஷ்ய ஜன்ம நிவர்த்தியின் பொருட்டும், ஸர்வலோக உபகாரத்தின் பொருட்டும், அகஸ்தியரால் வற்ற வைக்கப்பட்ட சமுத்திரத்தைப் பூர்த்தி செய்யும்பொருட்டும் பூலோகத்தில் கொணர்ந்து தன் முன்னோர்களை கரை ஏற்றி சத்தியலோகம் சேர்த்தார்.

பாலப்பருவத்தில் துன்பமிருந்த உலகாசாரத்தைப் பார்த்து தன் மனதிலுதித்த அற்ப விசாரத்தால் களங்கமற்ற தோற்றமுண்டாய் மனதை நிலைபெறச்செய்தது ஆச்சரியம். ஏகாந்த ஸ்தானத்தையடைந்து ஒன்றுக்கொன்று பொருந்தாததாயும் வியப்புள்ளதுமான ஜகசுவபாவத்தைப் பார்த்து மனதில் நினைத்ததாவது ஒன்றும் நூதனமில்லை, போனதே திரும்பவரும்.

இரவும், பகலும், புசிப்பும் கர்ப்பமும் ஈகையும் யாசகமும், முதலானவைகள் சகலமும் திரும்பித்திரும்பி வந்தும், மூடர்கள், முயற்சித்தும், ரசமில்லாததும் வாதையும் உடைய தொழில்களையே செய்துகொண்டு வருகிறார்கள். எதைச்செய்தாலடையப்படாதது வேறு ஒன்று இல்லையோ, அதைச்செய்வதே சுவபாகமாகிய தொழிலாம். மற்றதெல்லாம் வீணென்றே சொல்லப்படும் என்று ஜெகத்தொழில் அச்சப்பட்ட பகீரதன் ஒரு நாள் திரிதலை முனியை சரணமடைந்து வணங்கி மூப்பு இறப்பு பயம் மயக்கம் துன்பம் இவைகளுக்கு முடிவு யாதென்று எனக்கு விளங்கும்படி அனுக்கிரகம் செய்யவேணுமென்று கேட்டான்.

திரிதலமுனி, ஏ அரசனே! பிரகாசிக்கின்ற ஞானாத்மாவைப் பூர்ணாகாரமாகத் தெரிசித்தலே துக்கமனைத்தும் அப்போதே நீங்கும் பந்



தங்களும் சந்தேகங்களும் கன்மங்களும் மதங்களும் கெடும். செவ்வையாக அறியத்தக்கதும் ஞானமே. வடிவாகியிருக்கதும் பரமாத்ம சொரூபமாம். அது எங்குமுள்ளது. நித்தியமானது. உதயஸ்தமனமில்லாதது. அமலமானது. கெடாதது. திரிகுணமில்லாதது. இப்படிப்பட்டதொன்று இருக்கிறதென்று சொல்ல, வேறாக நின்ற சரீர முதலான பி[illegible]பங்களைப் பாராமல் இருக்கவும் விவகாரங்களியாவும் ஸ்திரமில்லாமல் போகவும், ஞான சொரூபமானது தடையில்லாமல் விளங்கவும் எப்படிக் கூடுமென்று அரசன் கேட்க, முனிமனமானது ஹிருதயத்தில் வியாபக அறிவினால் சொரூப நிட்டையைப் பொருந்தின பின்பு சகல வடிவங்களுமாய் மேற்பாடான ஜீவனானது ஜெனனத்தைத் திரும்பவும் அடையாது. உயிர்சார்பு பொருட்சார்பு நீங்குதலும் சுகதுக்கத்திற்குச் சமமான ஞானபாவனையடைதலும் தனக்குப் பேதமில்லாமல் எப்போதும் விஷயங்களில் தோற்றமாகுதலும் ஏகாந்தத்தையடைதலும் மானுட கூட்டங்களை நீக்குதலும் ஆத்மதத்துவத்தில் நீங்காத ஞான நிட்டையும் உண்டானபோது தத்துவஞான அபரோக்ஷானுபவம் உண்டாகும்.

இவ்வனுபவம் உள்ளவர்களைச் சத்துக்களென்று சொல்லுவார்கள். சரீரத்தை நான் அல்லவென்று தன்னிடமே ராகத்துவேஷம் நீங்குவதற்கு ஆதாரமும் ஜனன விபரீதம் நீக்க மருந்துமாகும். அப்போது சைதன்னியம் பிரத்தியக்ஷமாகுமென்று [illegible] அனுக்கிரகம் செய்தார். இச்சரீரத்தில் ஸ்திரமாக நானென்னும் நினைப்[illegible] தானேவது எப்படியென அரசனே, தனது மனவருத்தத்தால் போகத்தில் நினைவு தொடராமற் கெடுத்து சத்பாவத்தைப் பொருந்தி யகங்காரம் ஆசை முதலானது அறிவினாற் [illegible]த்து சலனமின்றி யிருப்பாயானால் நாசமின்ற தோற்றந் தொடாமற் பிரம்மமே கூடஸ்தரான அத்துவைத சொரூபமாகும். அதுவே வேதங்களாற் சொல்லப்பட்ட பரமவஸ்துவாம். வருணாச்சிரமபேதமும் பயமும் கவலைகளும் ஓர் அணுவளவும் பற்றாமல் தரித்திரத்தைக் கைக்கொண்டு செல்வங்களைச் சத்துருவுக்குக் கொடுத்து அகமும் சரீரத்தொழிலும் விட்டு சத்துருமித்துரு இடத்தில் பிச்சைவாங்கி புசித்து என்னையும் விட்டு பாரமில்லாமல்

நின்றால் உயர்வுக்கு உயர்வாகிய பிரம்மம் நீயாவாயென்று முனி யுப தேசித்துச் சென்றார்.

பகீரத அரசன் மனதிற் செய்வதற்குரிய சிந்தனையை யடைந்து சில நாட்சென்ற பின் ஒரு யாகஞ்செய்து அதில் தன் ஸம்பத்து முழு மையும் தரித்திரர்கள் பிராமணர்கள் தெய்வங்கள் முதலானவர்களுக்கு மூன்றுதினத்திற் கொடுத்து இராஜ்யத்தை சத்துருவுக்குங் கொடுத்து தரித்த வஸ்திரமாத்திர முடையவனாய் ராஜரிஷிக்குரிய சின்னங் களை யடைந்து தன் தேசம்விட்டு தனியனாய்ச் சஞ்சரிக்கத் தொடங்கி பல நாடு, காடு மலைகளிலும் உலாவி இச்சைகளை நீக்கிச் சாந்தத்தால் ஆத்மாவிடத்தில் விச்ராந்தி அடைந்தான்.

ஒரு தடவை சத்துருவுக்குக் கொடுத்த பின் ராஜ்யத்திற்குப் போய் மந்திரி முதலானவர்கள் வீட்டில் பிக்ஷை வாங்கும்பொழுது அரசனைப் பார்த்து வருந்தி பழையபடி ராஜ்யபரிபாலனம் செய்யும்படி சத்துரு வாகிற அத்தேசத்து அரசன் விரும்பவும் பிச்சையின்றி ஒரு திருண மும் இச்சியேனென்று சொல்லவும் இது புதுமை என்று எல்லோரும் வியப்படைய புறநாட்டிற் சென்று சாந்தி வடிவமாய் மனது தளர் வின்றி ஆனந்தமடைந்து தன் ஆத்மதிருஷ்டியிலிருந்தான்.

அப்போது தற்செயலாய் வந்து தன் குருவாகிய திரிதல முனி யைக் கண்டு ஸ்தோத்தரித்து காடு நாடு மலை முதலிய இடங்களில் ஆசிரியரும் சீஷரும் ..... யடைந்து விநோதமாய் சரீரத் தைத் தாங்கி .... இருந்தாலென்ன போனாலென்ன வென்று இச்சித் தம் சஞ்சரித்து சகதுக்கங்கள் சாராமலிருந்து சித்தர்களாற் கொடுக்கப் பட்ட திரவ்யம் ஸ்திரீகள் செல்வங்கள் அணிமா முதலிய சித்திகளை ஆசையின்றி விட்டு நீங்கி விளங்கினார்.

வேறொரு தேசத்துக்குப் போகும்போது சந்ததியற்ற ஓர் அரசன் மரிக்க மந்திரிகள் ராஜ்யத்துக்கு அதிபதியாக யாரை வைப்பதென்று யோசிக்கும்போது பிச்சைக்கு வந்த பகீரத மன்னனை அரசனுக்க சேனைகள் சூழ அரசாளுவதைத் தெரிந்து முந்திய நாட்டமைச்சர்கள் வந்து உம்மால் நியமித்த அரசன் சந்ததியின்றி யிறந்தான். அந்த ராஜ் யத்தையும் சேர்த்து ஆளவேணு மென்று விரும்ப வலிய வந்ததை



வெறுப்பது நல்லது அல்லவென்று சம்மதித்து அதையும் சேர்த்து மனக்களிப்புடன் மவுனத்தையும் உபசாந்தத்தையும் சமத்துவத்தையு மடைந்து ஆசையின்றி மாச்சரியமின்றி நேர்ந்த தொழிலைச் செய்து பகீரத அரசன் ராஜ்ய பரிபாலனம் செய்தார்.

அநேக வருடங்களிருந்து கங்கையைக் கொணர்ந்து முன்னோர் .... கரை ஏற்றி நரகத்திலிருந்து நீக்கி சுவர்க்கத்தை அடையச் செய்த பகீரதன் பூலோகத்தில் புகழ் அழியாமல் நிலையாய் நிறுத்தின னென்பதாக எல்லோரும் அறிவார்கள்.

நாம் இதனால் அறியக்கூடிய தென்னவென்பது வெளிப்பட பகீ ரத மகாராஜனுடைய சரித்திரத்தை நன்கு ஆராய்வோமாகில் அதில் விளங்கக்கூடிய உண்மைகள்:

1. எக்காரியமானாலும் மனம் தளர்ச்சியடையாமல் உண்மை யான நம்பிக்கையுடன் எவ்வளவு இடையூறுகள் ஏற்படினும் அவை களை விரும்பாமல் பிடிவாதத்தோடு செய்யின் காரியம் நிச்சயமாக வெற்றிக்கக்கூடுமென்பது.

2. மேலும் இக்கதையின் சங்கதியால்தான் முயற்சியால் அனு பவமடையலாமென்பதை அறிகிறோம்.

சலிப்பற்ற ஆத்மாவில் விருப்பங்களனைத்தையும் விட்டு மனத் தைத் திருப்பி இச்சையின்றி இராயபு நீங்கும்படி மனம் விஸ்ராந்தி .... நிர்மலமாக்கி மவுனியா யடைந்து சுத்த மனத்தால் அ.... ஆகாயம் போல யும் ஏகாயும் சாந்த வடிவமாயும் சமமாயும் .... தீரத்தை அடைந்து தெளிந்து நிற்பார்கள். நிர்மலமான புத்தியான் .... ராஜனைப்போல மூடமின்றி யமைவார் .... தலைகளை அனுசரித்து .... அடைவதற்கரிதாயினும் குறைவின்றிப் பெறலாமென்றும் அறியலாம்.

## ஜடபரதர்

அருச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ண பகவான் யோகத்தின் மகிமையைக் கூறுமிடத்து அதைச் செய்யவேண்டிய விதத்தையும் அப்படிச் செய்வத னால் ஸாக்ஷாத் பரமாத்மாவைத் தரிசிக்க முடியுமென்னும் விஷயத்தை யும் சவிஸ்தாரமாய்ச் சொல்லிவருகையில் அவ்வருச்சுனன் சுவாமியை

னோக்கி இப்படிப்பட்ட யோகம் செய்வது சாத்தியமல்ல வென்றதற்கு, பகவான் இயமமாதிய அஷ்டாங்கமென்னும் சாதனங்களால் விவேகி யானவன் தன்மனதை மெள்ளமெள்ள வசப்படுத்திப் பகவானது பாதாதி கேசபரியந்தமான ஒவ்வொரு அவயவங்களிலும் ... தியானம் செய்தால் யோகசித்தி பெறுவானென்று கூறினார். பிறகு யோகியான வன் கர்மத்தை விட்டு விடுகிறானென்றும் ஒருவேளை யோகம் சித்தி யாகாமற்போனால் அவன் கர்மபிரஷ்டனைப் போனதுமன்றி யோகபிரஷ்ட னையும் ஆய்விடுவதால் இரண்டுமின்றி அவஸ்தைப்படுகிறானே அக்கா லத்தில் அவனுக்கு என்ன பலனுண்டாகுமென்றும் பகவானை நோக்கித் தான் கேள்வி கேட்க, அதற்கவர், மறுமொழி சொல்லுகிறார். "அருச் சுனா, நீ கேட்டகேள்வி வெகு சிலாக்கியமானதே. அந்தக் கேள்வி கேட் கத்தகுந்த சிஷ்யன் நீதான். அதற்கு மறுமொழி சொல்லத்தகுந்த சக்தன் நான்தான். நாற்பது ஸம்ஸ்காரங்களைச்செய்து பிரமலோகத்தை யடையும் கர்மியைவிட யோகியே மேலானவன். யோகம் சித்தியாகா மல் பிராணன் போய்விட்டாலும் அவன் எத்தனையோ கோடி அஸ்வ மேத, வாஜபேய மகா யாகங்கள் செய்வோர்களடையும் சொர்க்க லோகத்தை அடைந்து வெகுநாள் அங்கே வாசம் செய்து மறுபடியும் பூலோகத்தில் ஸ்ரீமானாயிருக்கும் வைதிகன் குலத்தில்வந்து பிறக்கிறான். அதிகமான யோகம் செய்து அது சித்தியாகாமல் ஆவியை யிழப்பவன் சொர்க்க சுகங்களை யனுபவியாமல் பூமியில் தரித்திரனான யோகியின் வம்சத்தில் ... பிறக்கிறான். ஸ்ரீமானான வைதிகனைவிட தரித்திரனான யோகியே மேல். தரித்திரனுடைய தயவை நாடி அவனிடம் ஒருவ ரும் வரமாட்டார்கள். பணமின்மையால் அவன் மனம் விஷயாதிகளிற் செல்லவுமாட்டாது. பூர்வ ஜன்ம வாசனையாலும் பகவானது அனுக்கி ரகத்தாலும் அவனுக்குத் தானகவே உண்டாய்விடும். அப்போது யோகத்தி லாசை யுண்டாகி அதைச் செய்ய வாரம்பிப்பான். சித்தியையுடையவன். மோக்ஷம் பெறுவான். மகாராஜா வழையானாலும் ஓர் கிராமாதிகாரி யின் யோக்யதையாவது அவனுக்கிருக்குமன்றோ. கோடீஸ்வரன் ஏழை யானால் லக்ஷாதிகாரியென்னும் பெயரையாவது அடையமாட்டானா! அதுபோல் யோகியானவன் தன் யோகம் சித்தியாகாமல் இறந்துபோ



னாலும் அஸ்வமேதம் முதலிய கர்மங்களைச் செய்து அடையும் சொர்க் காதி போகங்களை யடைய அருகனே. மறுபடியும் அவன் பூர்வஜன்ம வாசனையால் யோகத்தையே செய்து பூரணனாகிறான். ஆனதால் கல்யாண காரியங்களை (நல்ல காரியங்களை) செய்கிறவர்களுக்கு எப்போ தாவது பலன் கிடைக்குமென்பதில் தடையேயில்லை. சித்தியை யடையாத யோகி விமானத்திலேறுவன். ரம்பாஸ்திரீகளுடன் இருப்பான். பிறகு பூமியில் அத்தியான அத்தியாபனாதி காரியங்களைச் செய்து சுத்தமாயும் ஆசாரமாயுமிருக்கப்பட்ட சர்வோத்திருஷ்டமான வைதிகர்களது வம்சத்திற் பிறந்து அந்த ஜன்மத்தில் மோக்ஷமடைவன். இதை நிரூபிப்பதற்காக ஓர் உபாக்கியானம் சொல்லுகிறேன்."

"நாம் வசிக்கும் இந்த ஜம்பூத்வீபத்தைப் பாதகண்டம் என் கிறார்கள். விஷ்ணுவின் பக்தர் என்னும் பராசர் இதை ஆண்டு வந்தாராம் அப்படிப்பட்ட மகாராஜர் மோக்ஷமடையவேண்டி ஸாளிக்கிராமம் என் னும் க்ஷேத்திரத்தில் யோகம்செய்து பகவத்தியானம் பண்ண வாரம்பித் தார். சாளிக்கிராமம் என்பது கண்டகீநதியில் வஜ்ரகீட மென்னும் ஓர் வகைப்புழுவினாலுண்டாகிறது. அதில் பிரம்மா, விஷ்ணு, ஈசுவரன் ஆகிய சகல தேவதைகளும் வசிக்கிறார்களென்பது சாஸ்திரம். அதைப் பூஜைசெய்பவர்களுக்குச் சாதவழி ... த்திலுள்ள சகலமான போக ளும் மோக்ஷத்தை யடைகிறார்களென்றால் அந்த சாளிக்கிராமத்தின் விசேஷத்தைச் சொல்லவும் வேண்டுமோ? அப்படிப்பட்ட திவ்யக்ஷேத் திரத்தில் பரதமகாராஜர் இந்திரியங்களை நிக்கிரகம் செய்து தபஸ் பண்ணினார். பகவானது சமூஹம்புஜத்தில் தம்முடைய அந்தக்கரணத் தைப் பிரவேசிப்பித்தார். யோகத்துக்குச் சாதனமான அஷ்டாங்கங்க ளாலே பகவானைப் பூஜைசெய்தார். யக்ஞேசா, அச்சுதா, கோவிந்தா வென்று வாஸுதேவனைப் படிக்கடி ஸ்தோத்திரம் செய்தார். அவருக்கு சரீரம் சுவஸ்தமாயிற்று. வைகுந்தனாய் பரமபதத்தில் ஏறுவதற்குத் தயாராயிருந்தார். அப்படியிருக்கையில், ஓர்நாள் ஸ்நானம் செய்வதற் காகக் கண்டகீநதியில் இறங்கி தேவரிஷி தர்ப்பணம் செய்துகொண்டிருந் தார். அப்போது ஓர் பெரும்புலியின் சப்தத்தைக் கேட்டுப் பயந்து ஓடிவரும் கர்ப்பிணியான பெண்மானொன்று அந்நதியில் குதிக்கவே,

அதன் கர்ப்பம் வெளிப்பட்டது. குட்டிமான் பிறந்தது. தாய்மான் இறந்தது. ஜலத்தில் தத்தளித்துக்கொண்டிருந்த மான் குட்டியை பாதர் கரையிலேற்றினார். அதை அன்றுமுதல் வளர்க்க ஆரம்பித்தார். அது அவர் மடியைவிட்டு இறங்குகிறதில்லை. பாதமகாராஜா அம்மானைத் தம்மடியில் வைத்துக் கொஞ்சுவது, அதன் முகத்தைத் தம் முகத்துடன் இணைத்து முத்தமிடுவதும் இவ்வாறாய் அதன் சம்சர்க்கத்தால் ஈசுவரத்தியானத்தை விட்டுவிட்டார். மான்குட்டியை நோக்கி நீயே எனக்கு கதி என்றார். அதை கைத்தால் சொரிந்து என் மிருககுல நாதனே இங்கே வாவென்பார். தகப்பனில்லாப் பாலனே இதோ என்றலையில் உட்காரு வென்பார். யோகம் செய்வதற்காகக் கண்ணை மூடியபோது மான்குட்டியின் ஞாபகம் வந்துவிடும். ஐயோ, மேது அருமைக்குழந்தையை ஓநாய் கடித்துவிடுமோ! பாலனைப் புலி கவ்விவிடுமோ வென்று விசாரப்படுவர். அவருக்கு அதன்மேலுள்ள ஆசையால் பகல் இருளாய்த் தோன்றும். அது எப்போது இளம்புல் தின்னும் என்று ஏக்கம் கொள்வார். அநேக பெண்மான்களைப் பிடித்து அவைகளை ஊட்டும்படி இந்தக் குட்டிமானை விட்டுவிடுவார். இம்மாதிரியாக அன்புடன் வளர்க்கத் தலைப்பட்டார். ஸர்வ ஸம்ஸார பாரமும் அவருக்கு அம்மான்பேரில் வந்துவிட்டது. இந்த மான் பெரிதாய்க் கூட்டத்துடன் சேருமா? இதற்கு சம்சாரம் வருமா? பேரன் பிறப்பானா! அதை நான் கண்ணுறப்பட பாக்கியம் செய்வேனா வென்பார். இப்படியிருக்கையில் காலன் வந்து விட்டான். அப்போதும் இவர் ஐயோ, யோகப்ரஷ்டனாய் விட்டோமோவென்று துக்கங்கொள்ளாமல் மான்குட்டியை விட்டுப் போகிறோமே யென்று மனதில் நினைத்தார். உடனே ஆவியையிழந்து மறுஜன்மத்தில் மானாய்ப் பிறந்தார். பூர்வஜன்மவாசனை வந்தது. இனி யானாய் பிறக்கோமே. இரணங்களைக் கடிக்கவும், வேடர்களுக்கும் நாடர்களுக்கும் பயந்த மானானோமே யென்று மிருந்த துக்கத்தை யடைந்து உடலைத் துறந்தார். உடனே ஆங்கிரஸர் என்னும் ஸதாசார சம்பந்நரான ஓர் பிராமணனது இளையாளுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தார். அவ்வாங்கிரஸனுக்கு மூத்தாளிடம் பிறந்தவர்கள் நாலுபேர்கள். அவர்களெல்லாம் மகா



புத்திசாலிகள். இளையாள் குழந்தையாகிய பாதருக்குப் பூர்வஜன்ம வாசனை வந்துவிட்டது. அப்போது நினைத்துக்கொள்ளுகிறார். கேவலம் ஓர் மான்குட்டியின் சகவாஸத்தால் நம்முடைய தபஸ் தொலைந்து அவதிப்பட்டோம். மனுஷ்ய ஜன்மத்தில் எத்தனையோ மனிதர்களுடன் சகவாசம்பண்ண நேருமே. ஆனதால் எல்லாவற்றையும் ஜடமாய் நினைத்துக்கொண்டு ஒருவருடனும் சகவாசம் செய்கிறதில்லை யென்று தீர்மானித்தார். குழந்தையோ சாண்நீளம். அதற்குள்ள ஞானமோ பூர்ண சந்திரோதயம்போல் விளங்குகிறது. குழந்தை அழுகிறதில்லை, சிரிக்கிறதில்லை. தலையணை மாதிரி நீளமாய்த் தரையில் கிடக்கிறது. பெற்றோர்கள் பெருந்துயரம் கொண்டார்கள். மாரீசனுக்கு பயத்தினால் எங்கே பார்த்தாலும் ராமமயமாய்த் தோன்றியதுபோல குழந்தையாகிய பாதருக்கு எல்லாம் ஈசுவரமயமாய்த் தோன்றியது. குழந்தையை சீராட்டினால் சிரிக்கிறதில்லை, பாலூட்டினால் மட்டும் வாயைத் திறக்கிறது. ஆங்கிரஸர், ஐயோ, என்னுடைய குலத்தில் இந்த ஜடமா பிறக்கவேணும், ஏ ஜடமே, பிராரப்தமே, வீலமே, மரக்கால்மாதிரி கிடைக்கிறையே, சிரிக்கமாட்டாயா, அழமாட்டாயா, பேசமாட்டாயா வென்பார். உபநயனமுமாயிற்று. அது காயத்திரியை உருசெய்விப்பதற்கு 6 மாதம் சென்றது. அது முதல் ஜடபாதர் என்னும் பேர் வழங்கத் தலைப்பட்டது. இந்த மகா ஞானியின் மகிமை யாருக்கும் தெரியவில்லை. அவர் தம்முடைய தேகத்தைக் கவனிக்கிறதில்லை. உபவீதத்தில் இருக்கும் அழுக்கையெடுத்தால் ஓர் சுவர் வைக்கலாம். யார் என்ன வேலையைச் செய்யச் சொன்னாலும் செய்துகொண்டேயிருப்பார். உலக்கையைக் கொடுத்து நெல்லைக் குத்தச்சொன்னால் உமியமாகும்படிக் குத்துவார். இப்படியிருக்கையில் ஜடபாதருடைய தந்தையார் இறந்துபோனார்கள். மூத்தாளின் பிள்ளைகள் நாட்டாண்மைக்கு வந்தார்கள். பாதரை சோளக்காட்டில் ஓர் பரண்மேட்டின்மீதில் காவல்வைத்தார்கள். பாதர் திருடனை விரட்டமாட்டாரானாலும் அதோ ஓர் ஆள் காத்திருனாய் உட்கார்ந்துகொண்டிருக்கிறானென்று பயந்து திருடர்கள் ஓடிப்போகட்டும் என்பது இக்காலவர்களின் கருத்து. பாதருக்கு இப்படிப்பட்ட ஏகாந்தமான

இடம் கிடைத்ததே என்று சந்தோஷமுண்டாயிற்று. நிர்விசாரமாய் ஈசுவரத்தியானம் செய்துகொண்டிருந்தார். இப்படியிருக்கையில் அக்காட்டில் திருடர்களுக்குத் தலைவனொருவன் தனக்குப் பகற்கொள்ளையடிக்கும்படியான ஓர் பாலன் பிறந்ததால் ஒரு பிராமணனை யழைத்து வரும்படி தன்னாட்களுக்குத் திட்டஞ்செய்தான். அவ்வாறே திருடர்கள் இந்த ஜடபாதரைக் கொண்டு போய்ப் பலியிடுங்கால் பத்திரகாளி பிரசன்னமாய் அந்தத் திருடர்களை வெட்டியெறிந்து ஜடபாதரைத் தம்மை க்ஷமிக்கும்படி கேட்டுக்கொண்டாள். இப்படிப்பட்ட மகிமை வாய்ந்த பாதரை ரகுகண மகாராஜன் தன்னுடைய சிவிகையைத் தூக்கும்படி முதுகில் அடிக்கவே, அதுவரையும் வாய் திறவாமலிருந்த பாதர் அவ்விராஜனுக்கு ஸத் உபதேசஞ்செய்து ஸித்தி முக்தராகின்றார். மகாஞானிய ஜடபாதரும் மோக்ஷ ஸாம்பிராஜ்யத்தை யடைந்தார். ஆனதால் யோகத்தைப் பூர்ணமாகச் செய்யாதவர்களுக்கும் பலன் உண்டென்பதையும் அவர்கள் இன்னொரு ஜன்மத்திலாவது மோக்ஷமடைவார்களென்பதையும் ஹே அருச்சுனா! நீ அறிந்துகொள்ளக்கடவை. இனி நீ யோகியாயிரு என்றார்.

## கயன்

"கயாசிரார்த்தம்" என்று வழங்குகிறது. இதன் சிறப்பையும் விருத்தாந்தத்தையும் சிறிது சொல்லுகிறோம். 'கயா' வென்பது கங்காக்கரையிலுள்ள ஓர் பட்டணம். இதில் ஆதிகாலத்தில் கயன் என்ற ஓர் அசுரனிருந்தான். இவன் மகாதபஸ்வி. ஜாதியில் அசுரனாயினும் தயை, சாந்தம், காருண்யம் முதலிய நற்குணங்கள் இவனிடம் பொருந்தியிருந்தன. ஒரு சமயம் மகாவிஷ்ணுவைக் குறித்து உக்கிரமான தவம் செய்ய ஸ்ரீமந்நாராயணன் இவனுடைய தபஸுக்காக மெச்சி பிரத்தியக்ஷமாகி 'அடே உனக்கென்ன வரம் வேண்டும்' என்றார். கயன் 'நான் எனக்கிஷ்டமான எல்லோரையும் மோக்ஷத்துக்கனுப்பவேண்டும். எவர்களை வைகுண்டத்துக்குப் போவென்று உத்தரவு செய்கிறேனோ அவர்களுக்குத் தங்கள் தூதர்கள் விமானம் கொண்டுவர வேண்டும்" என்றான். மகாவிஷ்ணு "இதேதடா அடிமடியில் கையைப்



போடுகிறான். மற்ற அதிகாரங்களைப் பிறருக்குக் கொடுக்கலாம் பாதகமில்லை. மோக்ஷத்துக்கனுப்பும் அதிகாரத்தைமட்டும் நாம் வைத்துக்கொள்ளவேண்டும். இதுவரை பிறருக்கு இவ்வதிகாரத்தைக் கொடுத்ததில்லை. இந்த கயன் தனக்கு மோக்ஷம் வேண்டுமென்று சொன்னால் அட்டியின்றிக் கொடுக்கலாம். இவன் மோக்ஷ அதிகாரத்தையே தரும்படி வரம் கேட்கிறான். நாம் எந்த வரத்தையும் கொடுப்பதாய் வாக்களித்தோம். ஆதலின் இனி தவறக்கூடாது" என்று "அடே உன்னுடைய இஷ்டப்படியே வரம் கொடுத்தேன்" என்று மறைந்துபோனார். கயன் ஆலோசிக்கலானான். ஏககாலத்தில் அநேக ஜனங்கள் கூடியிருக்குமிடம் எது? எமலோகம்தான். அங்கேயுள்ள நரகங்களில் அநேகர் இம்சைப்படுகின்றனர். ஐயோ எமபடர்கள் அவர்களைச் சற்றேனும் இரக்கமின்றி ஆயுதங்களால் வெட்டுகின்றனர். பற்பல விதமாய்த் தண்டிக்கின்றனர். ஆதலின் அங்கே செல்லுவோம் என்றெண்ணினான்.

"அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை" என்ற பழமொழியானது கயனிடம் சிறக்கும்படி அவன் எமபுரம் சென்று அங்கே நரகவாதனையடையும் ஸகல பாபிகளையும் நோக்கி, 'நீங்களெல்லோரும் மோக்ஷத்தையடையுங்கள்' என்றான். தக்ஷணமே அத்தனை பேர்களுக்கும் விமானம் வந்தது. எல்லோரும் திவ்யதேகிகளாய் வைகுண்டத்துக்கேகினர். எமபடர்களெல்லாம் பசபச வென்று விழித்தனர். என்னடா இத்தனை பேர்களும் நம்முடைய எஜமான் உத்திரவின்றி யாரையும் லக்ஷியஞ்செய்யாமல் ஆகாசமார்க்கமாய் விமானத்திலேறிப் போய்விட்டார்கள். இதென்ன அக்கிரமம், நம்முடைய பிழைப்புக்கு மோசம் வந்துவிட்டது. இனி இந்த ஆயுதங்களை வைத்துக்கொண்டிருந்தென்ன பயன் என்று எமதர்மராஜனிடம் சென்றார்.

பிரபோ! எங்கள் உத்தியோகம் இன்று முதல் ஒழிந்துபோயிற்று. நரகத்தில் யாருமில்லை. கயனென்ற ஓர் அசுரன் வந்து எல்லா பாபிகளையும் மோக்ஷத்துக்குப் போகும்படி ஆக்ஞாபித்தான். தக்ஷணமே ஆகாசத்தில் விமானம் வந்தது. அதில் ஸகல பாபிகளும் திவ்ய சரீரிகளாய் ஏறிக்கொண்டு போயினர். நாங்கள் தடுக்க முடியவில்லை. இனி நரகத்திலிருந்து என்ன பிரயோஜனமென்று இங்கு வந்தோம் என்றார்

கள். தர்மராஜன் யோசித்தான். பகவானுடைய உத்தரவை யார் மறுக்கக்கூடும். கயன் என்ற அசுரன் மகாவிஷ்ணுவிடம் வரம் வாங்கிக் கொண்டு இத்தனை ஆர்பாட்டம் செய்கிறான். ஆதலின் நாம் அவனை ஒன்றும் செய்ய முடியாதென்று பிரம்மாவிடம் சென்றான். அவர் மகா விஷ்ணுவிடம் போய் 'சுவாமி! தாங்கள் கயனுக்கு வரம் கொடுத்தது அனர்த்தமாயிற்று. அவன் நரகத்திலுள்ள எல்லோரையும் மோக்ஷத் துக்கனுப்பி அதைக் காலிசெய்துவிட்டான். எமனைத் தாங்களே க்ஷமித்தீர்கள். இனி தாங்களே அவனை நீக்கவேண்டும்' என்றார். விஷ்ணு "என்ன செய்யலாம். அருமையாகத் தவம் செய்து கயன் வரம் வாங்கினான். வெகு நல்லவன். காருண்யமென்னும் நற்குணம் அவனிடம் குடிகொண்டிருக்கிறது. அவன் செய்வது அதிருத்திய மன்று. நீங்கள் ஏதேனும் யுக்தி செய்து உங்கள் கருத்தை நிறைவேற்றிக்கொள்ளுங்கள்" என்றார். பிரம்மா அவ்வாறே யாகட்டு மென்று கயனிடம் சென்றார்.

"வேஷம் போட்டால் கோஷமில்லை" யென்று ஓர் அந்தணர் போல் வேஷம் பூண்டு பிரமன் கயனை நோக்கி 'அப்பா, நீ தான வினோதி யென்று கேள்விப்பட்டு உன்னிடம் யாசகம் செய்ய வந்தேன். நான் யக்ஞம் பண்ணவேண்டும். அதற்காக நான் கோருமிடத்தை நீ எனக்குத் தரவேண்டும் என்றார். கயன் அப்படியே தருகிறேன் என்று வாக்களித்ததால் பிரமன் "உன்னுடைய மார்பில்தான் யக்ஞம் பண்ண உத்தேசித்திருக்கிறேன்" என்றார். கயன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு 'நல்லது மார்பிலேயே யாகத்தைச் செய்யுங்க' ளென்று படுத்துக்கொண்டான். அந்த மார்பு எழுநூறு காதம் நீளமுள்ளதாம். அதில் பிரமன் முதலிய தேவர்கள் விறகுகளை யடுக்கி குட்டம் குட்டமாய் நெய்யைச் சொரிந்து தீயை மூட்டி எரிக்கையில் கயனுக்கு சிரமுண்டாயிற்று. பகவானை நோக்கி 'ஹே பக்தவத்ஸலா! நீர் என்னுடைய ஹிருதயத்திலிருக்கிறீர். உம்முடைய காலை இதோ நான் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுகிறேன். நெருப்பு உம்முடைய காலைத்தான் சுடும் என்று கைகளால் பகவானுடைய பாதத்தைப் பிடித்துக்கொண்டதுபோல் பாவித்து மார்பில் கட்டிக்கொண்டான்.



அக்காலத்தில் பிரமன் செய்த யாகத்தினின்றும் உண்டான அக்கினி பகவானுடைய காலை எரித்தது. அதனாற்றான் ஜெகன்னாத க்ஷேத்திரத்தில் இடுப்புக்குக் கீழ் பகவான் கரிக்கட்டையா யிருக்கிறதாகச் சொல்லுகின்றனர். இவ்வளவு பரோபகார சிந்தையுள்ள கயனுக்கு வரமளிக்கவேண்டி ஸ்ரீஹரி பிரத்தியக்ஷமானார். பிரம்மா முதலிய தேவர்கள் யாகத்தை நிறுத்திவிட்டனர். கயன் பகவானைப் பார்த்து ஐயா, இனி உமது வார்த்தையில் நான் நம்பிக்கை கொள்ளுவதெப்படி. இப்போது ஒரு வரம் கேட்கிறேன். இந்த ஸ்தலத்தில் அதாவது 'கயாவில்' சிரார்த்தம் பண்ணினால் மோக்ஷம் ஸித்திக்கும்படி வரங் கொடுக்கவேண்டும். இதற்கு ஸாக்ஷியாக இதோ தெற்கில் மூன்று ஆலமரங்களிருக்கின்றன. இவ்வடவிருக்ஷங்கள் முன்னிலையில் ஸத்தியம் செய்து மேற்கூறிய வரனைக் கொடுத்தால் நான் திருப்தியுடன் இச்சரீரத்தை யொழிப்பேன் என்றான். நாராயணன் அவ்வாறே ஸத்தியம் செய்து வரம் கொடுத்தார். ஆதலின் கயாசிரார்த்தம் வெகு சிலாக்கியமாயிற்று. அங்கே சிரார்த்தம் செய்தால் பிதுர்க்கள் நரகத்தினின்று நீங்கி மோக்ஷமெய்துவர். இதை யாதாரமாகக்கொண்டே தற்காலம் சிரார்த்தம் என்று வடக்கே செல்வதும் அக்ஷயவடம் என்று நோக்குவதுமான வழக்கத்தை யனுசரிக்கின்றனர்.

## ஜய தேவர்

பூரி அல்லது ஜெகன்னாத் என்ற தூய்மை ஸ்தலத்திற் கருகாமையிலுள்ள கிண்டு பில்வம் என்னும் கிராமத்தில் ஜயதேவர் என்பவர் ஓர் விப்பிரகுலத்திற் றோன்றினர். இவருடைய பெற்றோர் தரித்திரராயிருந்ததினால், இவருக்குத் தகுந்த காலத்தில் உபநயனஞ் செய்வித்து வேதசாஸ்திரம் கற்பிக்கக்கூடவில்லை. என்றாலும், ஈஸ்வரானுகூலத்தால் அவருக்கிருந்த சுபாவ புத்தியினால், குருவுபதேசமில்லாமலே சகல சாஸ்திரங்களையு மறிந்து நக்ஷத்திரங்களின் மத்தியில் சந்திரன் பிரகாசிப்பதுபோல பிரகாசிக்கலாயினர். சாக்ஷாத் ஸ்ரீ வியாச பகவான்முன் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றிக் கிரந்தங்களில் எவ்வாறு புகழ்ந்து எழுதியிருக்கிறாரோ அவ்வாறே இவரும் "கீத கோவிந்த" என்னும் ஓர் கிரந்தத்தை இயற்றினர். இந்தக் கிரந்தம் கேவலம் பக்தி

மார்க்கமே சிறந்ததென்றும் அதுவே முக்திக்குக் காரணமென்றும் கூறுகிறது. ஜயதேவர் இயற்றிய நூலுக்கு அதிக பிரக்யாதி உண்டாவதை அறிந்த அவ்வூர் சத்யகி மன்னன் அதே பக்திரசம் அடங்கிய வேறொரு நூலைத் தான் இயற்றி இனி ஜனங்கள் தன் நூலைத்தான் படிக்கவேண்டும் ஜயதேவராலியற்றிய நூலை கற்கலாகாது என்று கண்டிப்பான கட்டளையிட்டனர். இதைக்கேட்டு வித்வஜ்ஜனங்கள் ஓர் கூட்டம் கூடி ராஜாவினிடஞ் சென்று ஜயதேவரியற்றிய நூலுக்கு ராஜாவாலியற்றிய நூல் சமீபத்தில் நெருங்குவதற்குங்கூட யோக்கியதை இல்லையென்றும் ராஜா ஆத்மஸ்துதி செய்துகொள்வதில் பயனில்லையென்றும் கூறினர்.

இதன்பேரில் மன்னன் யோசனை செய்து அறிஞர்களை நோக்கி ஜயதேவராலும் என்னாலுமியற்றப்பட்ட நூல்களை ஓர் இரவில் ஸ்ரீ ஜெகன்னாதன் சன்னிதியில் வைக்கும்படியாயும் அந்த ஜெகதீசன் தீர்மானமே முடிவானது என்றும் கூறினார். பண்டிதர்கள் இந்த யோசனைக்கு மிக்க சந்தோஷமுள்ளவர்களாய் அப்படியே ஸ்ரீ ஜெகன்னாதன் சன்னிதானத்தில் இந்த இரண்டு நூல்களையும் கொண்டுவந்து வைத்தனர். மறுநாட் காலையிற்றான் கபாடத்தைத் திறக்கவேண்டுமென்று ஆக்ஞாபித்து தம் முத்திரையையுமிட்டனர். மறுநாட் காலையில் பூபாலனுடன் பண்டிதர்கள் வந்து சன்னிதானக் கதவைத் திறக்கவே, பண்டிதர்கள் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைய தங்களுடன் கூடவந்த மன்னர் மனவருத்தமடைய ஜயதேவர் நூல் வைக்கப்பட்ட இடத்திலேயே இருக்க, மற்ற நூல் வெளியே கிடக்கவுங் கண்டனர். அரசன் வெட்கித் தலைகுனிந்து சுவாமிக்கு முன் பிரமித்து நின்றனர். பின்னர் அரசன் எழுந்து தைரியத்தை வரவழைத்துக்கொண்டு ஜெகதீசனைக் கண்ணுற்று ஜயதேவருக்கனுகூலமாக இருந்தது பக்ஷபாதமென்றும், தன்பேரில் கடாக்ஷம் வைக்காமற்போனது தனக்குச் சம்பவித்த இவ்வவமானத்தைப்பற்றிப் பிராணத்தியாகஞ் செய்துகொள்வதாகவும் வேண்டினர். கருணாசமுத்திரமான கடவுள் மன்னன்மேல் தயைகூர்ந்து அக்கூட்டத்தின் மத்தியிற்றோன்றி, "கீதகோவிந்தம்" என்னுங் கிரந்தமே சிறந்ததென்று அரசனுடைய மனதைத் திருப்தி



செய்வதற்காக அவ்வரசனுலியற்றிய நூலின் 24 சுலோகங்களை மட்டும் எடுத்து ஜயதேவர் நூலுடன் சேர்த்து சகலரும் ஆச்சரியப்பட அக்கூட்டத்திலிருந்து அந்தர்தியானமாயினர்.

இச்சந்தர்ப்பத்தில் ஜெகன்னாதத்தில் வசித்த தனிக விப்பிரர் ஒருவருக்கு ஓர் கன்னிகா ரத்தினம் ஜனித்தது. அழகான தாமரைமலரைப்போன்ற நேத்திரங்களையுடையவராதலால் பத்மாவதி என்ற நாமத்தை வகித்தவளாயினள். இந்தப் பெண்ணை ஜெகதீசனுக்கே விவாகஞ்செய்து கொடுப்பதாகப் பெற்றோர்கள் தீர்மானித்திருந்தபடியால் இவளை மணம் புரியவேண்டி வந்த பலர் அதிருப்தியுடன் போக நேர்ந்தது. கன்னிகைக்கு மணஞ் செய்யுங்காலம் நெருங்கவே, ஸ்ரீ ஜெகன்னாதன், அந்தணன் கனவில் ஒரு நாள் இரவில் தோன்றி இந்தக் கன்னிகையைத் தன் பக்தனாகிய ஜெயதேவருக்கு விவாகஞ்செய்து கொடுப்பதில் தான் தனக்கு திருப்திகரமென்றும் கட்டளையிட்டனர். அப்படியே அவ்வந்தணர் ஜயதேவரை மறுநாட்காலையில் தன் இல்லத்திற்கு வரவழைத்து, தனக்கு இரவில் கடவுள் கட்டளையிட்ட ரகசியத்தை வெளிப்படுத்தி ஜயதேவருக்குக் கன்னிகாதானஞ்செய்து விவாகத்தை முடிப்பித்தனர். ஈசுவராநுக்கிரகத்தால் கிடைத்த மனைவியுடன் இல்லறத்தை நடத்திக்கொண்டு சதா கடவுள் தியானத்திலேயே இருவரும் மனதைச் செலுத்தி வந்தனர். இங்ஙனம் சிலவருஷங் கழியவே பிறர் பொருள் தாரம் இவைகளை அபகரிக்குந்தன்மை, பொய் மொழிதல், அநாசாரமான அன்னபானம் உட்கொள்ளல், முதலிய கெட்ட கிருத்தியங்களை யகற்றி ஜீவகாருண்யம், தயை, தெய்வபக்தி, மதபக்தி, பெரியோரிடம் பக்தி முதலிய நற்குணங்களைக் கைக்கொண்ட பரதேசத்திலிருந்து வந்த ஒரு குணசீலன் இந்த ஜயதேவரிடம் வந்து சிலநாள் குருதலவாசஞ்செய்து உபதேசம் பெற்றார். பின்னர் இந்த சீடன் குருவைத் தன் இல்லத்திற்கு வந்து கொஞ்சநாள் வாசஞ்செய்து போகவேண்டுமென்று வேண்ட குருவான ஜயதேவரும் சீடருடன் அவன் ஊருக்குச் சென்று சிலகாலம் இருந்தபிறகு தன் இல்லமாகிய ஜெகந்நாதத்திற்குத் திரும்பிப் போகவேண்டுமென்று சீடனுக்

கழிவிக்க அவர் ஆக்ஞைப்படி சம்மதித்து விஷய ஆசையை ஒழித்த குருவுக்கு குருதக்ஷிணை என்ன கொடுத்தாலும் அங்கீகரிக்கமாட்டார் என்று அறிந்த சீடன் குருவுக்குத் தெரியாமல் கெம்பு, மாணிக்கம், வைரம், நவரத்தினம் முதலிய விலையுயர்ந்த கற்களை அவருக்கென்று தயார் செய்திருந்த வண்டியின் ஓர் பக்கத்தில் பத்திரமாகக் கட்டிவைத்துக் குருவினிடம் கூடச்சென்று அந்த நவரத்தினக் கற்குவியல்களை குருபத்தினியிடம் சேர்ப்பிக்கும்படியாய் நம்பிக்கையுள்ள அந்தரங்க ஆட்களுக்குக் கட்டளையிட்டிருந்தனர். குருவுக்கு நமஸ்காரஞ்செய்து குருவினிடம் ஆசீர்வாதம் பெற்று குருவை அனுப்பிவிடவே அந்த இரண்டு சதிமோசக்காரர்களான ஆட்கள் நவரத்தினக் குவியல்களைக் கண்ட நேரந்தொடங்கி எவ்விதத்திலாவது அவைகளை அபகரிக்க வேண்டுமென்றெண்ணங்கொண்டவர்களாய், ஜயதேவருடன் கொஞ்சதூரம் வழிவந்து பூரண கர்ப்பவதியான தன் மனைவிக்குத் துணை யாவரும் இல்லையாதலால் தனக்குத்தரவு கொடுத்தால் போய்வருகிறேன் என்று ஒருவனும், அதிக அவசரமான காரியமிருக்கிறபடியால் எனக்கும் உத்தரவளிக்கவேண்டுமென்று மற்றொருவனும் பொய்சொல்லி விடைபெற்று ஊருக்குத் திரும்பிப்போகிறவர்கள்போல் பாவனைகாட்டி வேறொரு குறுக்கு வழியில் பிரவேசித்து முன்னால் சென்று மாறுவேடம் பூண்டு ஓர் புதரில் ஒளிந்து ஜயதேவரின் வண்டியை எதிர்பார்த்திருந்தனர். வண்டி வரவே வண்டியை நிறுத்தி மறைவாக வைத்திருந்த நவரத்தினக்கற்களை அபகரித்து இத்தீச்செய்கை வெளியில் வராமலிருக்கும்பொருட்டு, ஜயதேவரைப் பிடித்து கைகால்களைச் சேதஞ்செய்து நீரில்லாப் பாழுங்கிணற்றிலெறிந்தனர். இப்போர்க்கொத்த விபத்து தனக்குச் சம்பவித்தபோதிலும் ஜயதேவருக்கு மனக்கிலேசம் ஓர் எள்ளளவுமில்லாமல் தன் மனதை அந்தப் பரவஸ்துவில் நிறுத்தியிருந்தனர். அந்தக் காட்டுவழியாய் வேட்டையாட வந்த விந்திய தேசத்து மன்னன் அன்றிரவு அக்காட்டிலேயே தங்கியிருக்கும்படி சம்பவித்து அப்பொழுது அப்பாழுங் கிணற்றில் கை, கால் சேதிக்கப்பட்டு கிருஷ்ணா கிருஷ்ணாவென்று மெதுவான தொனியுடன் தியானஞ் செய்துகொண்டு வந்த சப்தம் விந்தியமன்னன் காதில்



விழவே, கிணற்றில் பார்க்க பெரிய மகாத்துமாவாகிய ஜயதேவரைக் கண்டு அதிக ஜாக்கிரதையுடன் எடுத்து, இம்மாதிரியான கிலேசம் தனக்கு நேர்ந்ததை நோக்க பக்ஷம் துடிக்கின்றதே என்று சொல்லுகையில் ஜயதேவர் பரவஸ்துவில் வைத்த மனதை உலக வஸ்துவில் திருப்பினார். திரும்பவே தங்களுக்கு யார் இம்மாதிரி கைகால்களைச் சேதஞ் செய்தனர் என்று கேட்க [illegible] அரசனிடம் நடந்ததை உரைத்தால் அரசன் முனிந்து இத்தீச்செயல் செய்தவர்களைத் தண்டிப்பாரே என்று பரிதாபப்பட்டு இந்த உடலின் கர்மவசமேயன்றி ஒருவராலும் நேர்ந்ததன்று என்றனர். பூர்வத்தில் ஜனகமகாராஜாவுடைய குமாரி ஜானகி இலங்கையில் ராவணனுடைய வேலையாட்களான ராக்ஷஸி முதலிய அரக்கிகளால் ஹிம்சிக்கப்பட்டபொழுதும் அந்த உண்மையை மறைத்து ஒர் ஹிம்சையும் நேராததுபோல எப்படி வெளிப்படுத்தாமல் இருந்தாளோ அப்படியே ஜயதேவரும் இருந்தனர்.

பிறகு, மன்னன் ஜயதேவரைப்போன்ற மகாஞானிகள் தங்களுக்குற்ற தீங்கைப் பகிரங்கப்படுத்த மாட்டார்களென்று அறிந்து இந்த உத்தமரை ஓர் பல்லக்கில் வைத்துத் தன் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டுபோய் வெட்டுப்பட்ட கைகால்களுக்குச் சிகிச்சைசெய்வதின் பொருட்டு 50-ஆட்களை நியமித்தனன். இப்போர்க்கொத்த தெய்வபக்தருக்குச் சிகிச்சை செய்வதற்கு நாங்கள் பூர்வத்தில் என்ன புண்ணியஞ் செய்திருந்தோமோ என்று சொல்லிக்கொண்டு தங்களாலியன்ற சிகிச்சை செய்து சௌக்கியப்படுத்தினர். முக்தியடைய சுலபமான வழி என்னவென்று அரசன் ஜயதேவரைக் கேட்க, அதற்கு ஜயதேவர் பகவத்பக்தர்களுக்கு உதவிசெய்வதே முக்தியடையும் வழியென்றும் பகவத் பக்தர்களின் மூலமாயன்றி நேராகக் கடவுளை யடைந்தாலும் முக்தி கிடைப்பது அவ்வளவு சுலபசாத்தியமன்று என்றும் பக்தர்கள் பித்தர்களைப்போல் உலகத்தில் திரிந்துகொண்டிருப்பார்கள். அதையறிந்து அன்னவர்களுடைய அனுக்கிரகம் சம்பாதித்துக் கொள்ளவேண்டுமென்று கூறினர். இப்படியிருக்கையில் ஜயதேவரைக் காட்டில் கைகால்களைச் சேதஞ்செய்து பாழுங் கிணற்றிலெறிந்த அந்த இரண்டு சண்டாளர்கள் சாதுவேடம் பூண்டு தங்களால் துன்பஞ் செய்யப்பட்ட

ஜயதேவர் இருந்த ராஜசமுகத்திற்கு, வந்து சேர்ந்தனர். வந்த சாதுக்களை உபசரித்து ராஜ சபைக்குக் கொண்டுபோய் விடுவதே ஜயதேவருடைய தொழிலானதால் அப்படியே இந்த இரண்டு சாதுக்களைக் கூட்டிக்கொண்டு போகையில் அச்சத்துடன் பயப்பட்டு நடந்துவருவதை ஜயதேவர் கண்ணுற்றனர். நாங்கள் எவனுடைய கைகால்களை ஊனஞ்செய்து கிணற்றில் தள்ளிவிட்டனரோ அப்பேர்ப்பட்டவரை தற்செயலாயும் எதிர்பாராமல் இங்கொன்று சந்தித்ததினால் உண்டான பயமன்றே அவர்களிடம் தோன்றிற்று. இவ்விதமென்று ஜயதேவர் அறியாமல் ஏதோ ராஜஸபைக்கு முன்பின் வந்திராததினால் நடுங்குகிறார்களென்று நினைத்து அவர்களை தேற்றி ராஜ சமூகத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய், மிக்க பெரியவர்கள் விஜயஞ்செய்திருக்கிறார்கள், அவர்களுக்கு சரியான மரியாதை காண்பிக்க வேண்டுமென்று அரசனிடம் சிபார்சுசெய்தனர். இவர்கள் உண்மையாகவே நல்லவர்களென்று எண்ணி அரசன் அன்னவர்களுக்கு அதிக மரியாதை செய்தனர். தாங்கள் இன்னும் கொஞ்சநாள் இங்கேயே இருந்து தங்கள் பாததூளி என் கிரகத்தில் பட்டு என் அரண்மனைப் பரிசுத்தமாக்கி எங்களையும் கடைத்தேற்றி வைக்கவேண்டுமென்று அரசன் வேண்டினர். தாங்கள் ஜயதேவருக்குச் செய்த துர்க்காரியங்கள் வெளியாகிவிடுமோ? அப்படி வெளியாகிவிட்டால் அரசன் தங்கள் பேரில் வைத்த பிரியத்தின் அடையாளமாக தாங்கள் அவர் அரண்மனையில் அடைந்துவரும் மரியாதை சுகங்கள் இவைகள் மறந்துபோய் எக்ஷணத்தில் ராஜ சிக்ஷைக்கு ஆளாகி விடுவோமோ என்ற பீதியினால் நாளுக்கு நாள் தேகம் வாடித் தேய்பிறை போல் ஒடுங்கத் தொடங்கினார்கள். இதைக் கண்டு அரசர் தன் குருவாகிய ஜயதேவரை நோக்கி, இந்த இரண்டு சாதுக்களும் பார்வைக்கு ஏதோ பயப்பட்டவர்களாகவும் நாளுக்குநாள் அவர்கள் தேகம் மெலிந்தும் வருகின்றன. இதற்குக் காரணம் யாது என்று கேட்க, அவர்கள் இந்திரியங்களை விஷயத்தில் பிரவர்த்திக்க விடாமல், மனதை அந்தப் பரப்பிரம்மாவினிடம் வைத்து அதே தியானமாயிருப்பதினால் தேகமெலிந்துதான் போகும். அவர்களை அதிக நாள் இவ்விடம் நிறுத்திவைத்தல் தகாது. சீக்கிரம் அனுப்பிவிடவேண்



டும் என்று ஜயதேவர் விடையளித்தனர். அப்படியே அவர்களும் ராஜாவால் வெகுமதி பெற்று அனுப்பப்பட்டார்கள். அவர்களை வழி நடத்திவிட்டு வரும்படியாக சில மனிதர்களைத் துணையனுப்பினர். அம்மனிதர்களில் ஒருவன் இந்த கபட வேடதாரிகளான சாதுக்களை நோக்கி ஜயதேவர் உங்கள் பேரில் இவ்வளவு பிரியம் காண்பித்ததின் காரணம் யாது என்று கேட்க அதற்கு அக்கபட சாதுக்கள் பின்வருமாறு கூறினர். அநேக காலத்திற்கு முன் அவந்தி தேசத்து ராஜாவுக்கு ஜயதேவர் மந்திரியாகவும் நாங்கள் இருவரும் ராஜசேவகர்களாகவுமிருந்தோம். ஒரு நாள் செய்யத்தகாத ஓர் கெட்ட காரியத்திற்காக ஜயதேவர்மீது ராஜா முனிந்து ஜயதேவரைக் கொண்டுபோய்ச் சிரச்சேதம் செய்துவிட்டு வாருங்கள் என்று எங்களுக்குக் கட்டளையிட்டனர். நாங்களும் ராஜாக்கினையைச் சிரசாக வகித்து அவரை ஓர் காட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் அங்கே அவரைச் சிரச்சேதஞ் செய்ய மனமில்லாமல் கருணையால் அவருடைய கைகால்களை ஊனஞ் செய்துவிட்டுத் திரும்பிவந்தோம். அன்றுமுதல் நாங்கள் தேசசஞ்சாரஞ் செய்துகொண்டு உங்கள் அரசன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தோம். ஜயதேவர் எங்களைக் கண்டதும் தன் பிராணனைக் காப்பாற்றினவர்கள் இங்கே வந்திருக்கின்றனர் என்று அறிந்து உங்கள் அரசனுக்கு சிபார்சு செய்து எங்களுக்குத் தானும், அரசனுமாக மிக்க கௌரவத்தைக் கொடுத்துவந்தனர். இந்த அபத்த வார்த்தைகளைக் கேட்கச் சகியாத பூமாதேவி திடீரென்று இரண்டு பிளவாக வெடித்து, அந்த இரண்டு கொலைபாதகர்களைத் தன்னுடன் அடக்கி மூடிக்கொண்டது. இந்த விசேஷமான சமாசாரத்தைக் கூட வந்த மனிதர்கள் ஓடிப்போய் ஜயதேவரிடமும் ராஜாவிடமும் தெரிவித்தனர்.

பூர்வத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு விரோதிகளான பூதனை, கஞ்சன், சிசுபாலன், இவர்கள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவால் வதைக்கப்பட்டவர்களாயினும் கருணாநிதி யாகையால், அவர்களைத் தன் விரோதிகளென்று எண்ணாமல் அவர்களுக்குத் திவ்விய லோகத்தை யளித்ததுபோல், இந்த ஜயதேவரும், தனக்குத் தீங்குசெய்தவர்கள் பூமியில் ஆழ்ந்து இறந்தார்கள் என்றதைக் கேட்கச் சகியாமல், அவர்க

ளுக்கு நல்ல கதி யளிக்கும்படிக் கடவுளை வேண்டினார். இவர் வேண்டு கோளுக் கிணங்கிப் பரமாத்மா பிரத்தியக்ஷமாக வந்து, ராஜாவும் மற்ற வர்களும் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, ஜயதேவரின் கை கால் களைச் சரியான நிலையிலிருத்தி அவரை அநுக்கிரகித்து மறைந்தனர். இதைக்கண்டு அரசனும் மற்றுமுள்ளோரும் ஆச்சரியமடைந்து, ஜய தேவரை அழைத்துக்கொண்டு இரண்டு கபட சாதுக்கள் பூமியில் ஆழ்ந்து மரித்த விடத்திற்கு வரவே ஜயதேவருடைய விசித்திர மகி மையால், பூமியில் கிடந்த இருவரும் திவ்விய ரூபத்துடன் விமானத் தில் ஏறி வைகுந்தம் போவதைப் பார்த்துநின்ற ஜனங்கள் ஜயதேவ ரின் குணத்தைச் சிலாகித்து வீட்டுக்குத் திரும்பிவந்தனர். ராஜ்யத் திற்கு வந்தபின் ஜயதேவரின் சரித்திரம் முழுவதையும் அவர் வாயால் சொல்லக்கேட்டு ஆனந்தமடைந்து; ஜயதேவரின் மனைவியை ஜெகன் னாதத்திலிருந்து பல்லக்கில் ஏற்றி ஆடம்பரத்துடன் வரவழைத்து, பதிசதிகளிருவரையும் தன் அரண்மனையிலேயே இருக்கச்செய்து, இருவருக்கும் அதிக மரியாதையாக நடந்துவந்தது மல்லாமல், தன் பத்தினியையும் மற்றுமுள்ளோர்கள் அனைவரையும், மரியாதையாக நடந்துகொள்ளும்படியாய்க் கட்டளையிட்டனன்.

அனேகம் தாதிப் பெண்களால் சூழப்பெற்ற ராஜபத்தினி வீற் றிருந்த ஆசனத்திற்குச் சற்றுச் சிறியதான ஆசனத்தில் ஓர்நாள் பத்மாவதி அமர்ந்திருக்கையில், ராஜபத்தினியின் சகோதரர் இறந்த தாகவும், அவருடைய பத்தினி கணவனுடன் சககமனஞ் செய்ததாகவும் இப்போதுதான் அந்த சமாசாரமடங்கிய ஓர் கடிதம் ஒரு தூதனால் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. அந்தச் சமாசாரத்தைக் கேட்ட ராஜபத்தினி துக்க சாகரத்தில் மூழ்கி யிருந்தனள். தன் சகோதர னுடைய மனைவி கணவனுடன் உடன்கட்டை யேறி மரித்ததைக் கேட் டும் பத்மாவதி கொஞ்சமாவது மனமிளகாதிருந்ததைக் கண்ட ராஜ பத்தினி ஆச்சரியமடைந்து, பத்மாவதியை நோக்கி உடன்கட்டை யேறி மரித்தவளின் விஷயத்தில் ஏன் உன் மனம் கொஞ்சங்கூட இரங்க வில்லை யென்று கேட்க, ஒரு வஸ்துவின் நிழலைப்போல புருஷனுக் கும் ஸ்திரீக்குமுள்ள சம்பந்தம் ஏற்பட்டிருக்க புருஷன் இறந்தான



என்று கேட்டவுடனே தன் உயிரை மாய்த்துக்கொள்ளவேண்டியது உத்தம ஸ்திரீகளின் லக்ஷணமாயிருக்கவேண்டியது போய், கணவன் மரித்ததைக் கண்டு சில மணிநேரம் உயிரோடிருந்து பின் அவனுடன் சககமனம் செய்வது உத்தமமல்ல. ஆகையால் உன் தமையன் மனைவி சககமனம் செய்தாள் என்று கேட்க நான் ஆச்சரியப்படாமலிருந்தேன் என்றனள். இதைக் கேட்டவுடனே பத்மாவதியை இந்த விஷயத் தில் பரீக்ஷை செய்து பார்க்கவேண்டுமென்று ராஜபத்தினி தனக்குள் தீர்மானஞ்செய்து கொண்டனள். ஒரு நாள் ஜயதேவரும் அரசரும் அயலூருக்குப்போக நேரிட, இதுதான் நல்ல சமயமென்று, தானும் பத்மாவதியும் பேசிக்கொண்டிருக்குஞ் சமயம் பார்த்து ஜயதேவர் இறந்துவிட்டார் என்ற சமாசாரத்தைத் தெரிவிக்கும்படியாக மந்திரியி னிடஞ் சொல்லி ஏற்பாடு செய்திருந்தனள். அப்படியே ராஜபத் தினியும், பத்மாவதியும் பேசிக்கொண்டிருக்கையில், மந்திரியால் அனுப்பப்பட்டு ஓர் தூதன் வந்து ஜயதேவரும், ராஜாவும் ஓர் காட் டின் வழியாகச் செல்லுகையில் ஓர் புலி ஜயதேவர்மீது பாய்ந்து அவரைக் கொன்றுவிட்டதாகவும், இந்தச் சமாசாரத்தை ஸ்திரப்படுத் தும் பொருட்டு இரத்தமயமான ஓர் வஸ்திரத்தையும் அவர்கள் முன் னிலையிற் வைத்தனன். அதைக்கேட்ட ராஜபத்தினி பொய்யழுகை அழ ஆரம்பித்தனள். பத்மாவதியோ இறந்துபோன தன் கணவன் பாத கமலத்திலேயே தன் மனதை வைத்துக் கண்ணைமூடிச் சவமாகக் கிடந்த னள். இதைக்கண்ட ராஜபத்தினி, வேடிக்கையாகச் செய்ய யோசித்தது வினையாக முடிந்ததே என்று விசனமுற்றிருந்தனள். பிறகு ராஜா வும் ஜயதேவரும் ராஜதானிக்குத் திரும்பி வந்தபின் நடந்த சங்கதியை மந்திரி சொல்ல, மன்னன் அறிந்து தன் பத்தினியைக் கொலை செய்ய யோசிக்கவே, ஸ்திரீஹத்தி மிகவும் கெடுதி. ஆகையால் அந்த எண் ணத்தை மாற்றி பெரிய அக்கினி குண்டம் ஒன்றை வளர்க்கச் செய்து அதில் தான் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்வதே நலம் என்று எண் ணித் தன் குருவாகிய ஜயதேவரிடம் விடைபெற்றுக்கொண்டு போவ தற்காக வந்தனன். ஜயதேவரை நோக்கி, சுவாமி நான் அதிகப் பாவி யானேன். உம்முடைய மனைவியைக் கொன்ற பாதகனானேன். இந்தப்

பாவத்தினின்று விலக, அக்கினி குண்டத்தில் வீழ்ந்து உயிர் மாய்ப்பதே தகுதி. விடை கொடும் என்று வேண்ட, ஜயதேவருக்கு ஒன்றும் புரியாமல் மறுபடியும் விஸ்தாரமாகச் சொல்லச் சொல்ல ராஜாவும் நடந்ததை உரைக்க ஜயதேவர் கேட்டு மன்னா, இதற்காக இவ்வளவு ஆத்திரம்? நான் சகலவற்றிற்கும் முடிவு சொல்லுகிறேன். அவசரப்படாதே என்று சொல்லி, ஜயதேவர் பத்தினி இறந்து கிடக்கும் இடத்திற்கு அரசனுடன் சென்று, 24-அஷ்டபதிகங்களைப் பாடி, கீர்த்தனஞ்செய்து, ஹே ஜநார்த்தன ராஜாவுக்குத் தெரியாமல் நேரிட்ட இந்த அபகீர்த்தியைப் பரிகாரஞ்செய்து அனுக்கிரகிப்பாயாக என்று கடவுளை வேண்டிக்கொண்டனர். உடனே ஜெகதீசன் அங்கேயே பிரத்தியக்ஷமாகத் தோன்றி, ஜயதேவா! உன் பக்திக்கு மெச்சினேன் என்று சொல்லி ஜயதேவரை ஆலிங்கனஞ் செய்துகொண்டு பத்மாவதியை உயிருடன் எழுப்பி, இனி யார் இந்த ஜயதேவராலியற்றப்பட்ட அஷ்டபதிகங்களைப் பக்தியுடன் பாடுகிறார்களோ அவர்களை நான் ரட்சிக்கிறேன் என்று சொல்லி மறைந்தனர். பத்மாவதி தூங்கி விழித்தவள் போல் எழுந்து, பர்த்தாவை வலம் வந்து கைகூப்பி நின்றனள். ஆகாயத்திலிருந்து தேவதைகள் ஜயதேவர் தன் பத்தினியுடன் கூடியிருந்ததை நோக்கிச் சந்தோஷித்து புஷ்பமாரி பொழிந்தனர். ராஜாவும் ராஜபத்தினியும் அன்று முதல் ஜயதேவருக்கு தாஸர்களாயினர். ஜயதேவர் கீர்த்தியும் அவராலியற்றப்பட்ட கீதகோவிந்தம் என்னும் கிரந்தமும் உலகெங்கும் புகழ்பெற்றன.

ஜயதேவருடைய சரித்திரத்தை வாசிக்கும் ஒவ்வொருவரும் பின்வரும் விஷயங்களை மறக்காமல் மனதில் வைத்திருக்கவேண்டியது அத்தியாவசியம் என்று வற்புறுத்திக் கூறுகிறேன்.

1. கடவுள் காருண்யர் என்பது.
2. தற்புகழ்ச்சி, பரநிந்தனை இவைகள் இரண்டும் வெறுக்கத்தக்கவை.
3. குருகுலவாசம் அத்யாவசியம்.
4. பொறாமை பாவத்தொழில்.
5. திருப்திகரம் முக்கிய சாதனம்.



6. கற்பு சிறந்தது.
7. கடவுள் தன் பக்தர்களைப் பரீக்ஷிப்பதற்காகவே, அவர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுத்துவருகிறார்.
8. தீமைக்கு நன்மை செய்யப் பிரயத்தனப்படு.
9. இந்திரியங்களை அடக்கியாள்பவர்கள் அமானுஷ்யமான காரியங்களைச் செய்யவல்லவர்.

## தக்ஷிணாமூர்த்தி

1. ஞான தக்ஷிணாமூர்த்தி—பரமசிவன் வெள்ளியங்கிரியில் தேவர்கள் தங்கள் தங்கள் இஷ்டகாமியங்களை விரும்பியவாறே எய்தும்படி தேவகணங்கள் சூழ திருவோலக்கங்கொண்டு எழுந்தருளியிருக்கையில் உமையம்மை இறைவனைப் பணிந்து, "எம் பெருமானே! எனக்குற்ற தாக்ஷாயணி என்னும் நாமமும் தேவரீரை வணங்காத தக்கனாற் போஷிக்கப்பட்ட உடலும் மறையும்படி வரந்தரல் வேண்டும்" என்று விண்ணப்பிக்க, அரவாபரணன் அகமகிழ்ந்து, "மாதே! மலயத்துவஜ பாண்டியன் நின்னை மகளாக அடையக்கருதி நீண்ட நாளாய்த் தளர்வின்றித் தவம் புரிகின்றான். அவன்பாற் சென்று வளர்க. பின்னர் யாம் வந்து திருமணம் புரிவோம்" எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

பார்வதியார் சந்திரசூடனைச் சாஷ்டாங்கமாகப் பணிந்து கட்டளையை உச்சிமேற்றாங்கி இமயகிரியையடைந்து அவண் அருந்தவமியற்றும் மலைமன்னன் மனங்குளிர ஓர் பொய்கையில் தாமரைமலரின் மேற் குழந்தைவடிவங் கொண்டிருந்தனர். மலைமன்னன் பார்த்து மகிழ்ச்சியடைந்து தவப்பலன் கிட்டியதென்றுணர்ந்து, அக்குழவியை யெடுத்துக்கொண்டு இல்லத்திற்கேகி இல்லாளாகிய மேனையினிடத் தக்கொடுத்து விஷயம் அனைத்தும் விரித்துரைக்க, மேனை யென்பவளும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக அக்குழந்தையைப் போஷித்துவந்தனள். அம்மையார் ஐந்தாண்டுமுதல் அரிய தவமியற்றி அரவாபரணனை அடைந்தனர்.

அம்மையார் இவ்வாறு தவத்திருக்கையில் சநகன், சநந்தனன்,

சநாதனன், சநற்குமாரர் முதலிய முனிவர் நால்வரும், வேதங்களைக் கசடறக்கற்று பற்பல தவங்களையாற்றி, மீண்டும் கைலையை யடைந்து திருநந்திதேவரைப்பணிந்து விடைபெற்று திருச்சந்நிதி யடைந்து கங்காதரனைக் கண்குளிரக் கண்டு ஈசனை இணையடி பணிந்து சிரமேற் கரங்குவித்து "அருட்கடலே! அருளமுதே! [illegible] வேதத்தினுட்பொருளை ஆராய்ச்சி செய்தும் அடியார்களாகிய [illegible] மனம் பாவிடையாடு குழல்போல் சலித்துக்கொண்டிருக்கின்றது. மனமடங்கி எங்களுடைய அகம் குவியும்படி அவ்வேதத்தில் சூக்ஷுமமாயுள்ள பொருளை உபதேசித்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அதற்கிசைந்த திரிபுரனார் நந்திதேவனைக் கூப்பிட்டு, "எத்தகைய சுராயினும் எம்மைத் தரிசிக்க வருவரேல், சந்நிதானத்தில் விடவேண்டாம். மலர்க்கணையோன் வரில் வரவிடுக" எனத் திருவாய்மலர்ந்தருளி, விடையளித்தனுப்பிவிட்டு முக்கண்ணன் முனிவர் விரும்பியபடி சிவாகமங்களிற் கூறப்பட்ட பதி, பசு, பாச இலக்கணங்களை விளக்கி வெளியிட்டனர். முனிவர்கள், "நெற்றிக்கண்ணுடையாய்! எங்கள் மனம் விரிந்திருப்பதால் அது ஒடுங்கும்வண்ணம் ஞானோபதேசம் செய்யவேண்டும்," என விண்ணப்பித்தனர். நதிமேவிய செஞ்சடையுடையோன் அதற்கிணங்கி, "அப்பொருள் இவ்வாறிருக்கும்" என்று முனிவர்கட்கு அறிவிக்கவேண்டி திருக்கரத்தை மார்பிற்சேர்த்து, சின்முத்திரை காட்டி தபசிபோல ஒரு க்ஷணநேரம் நிஷ்டையிலிருந்தனர். அதன் பிறகு அந்நால்வரும் மனமொடுங்கி ஞானநிலை யறிந்து, பேரின்பப்பெருக்கெய்தித் தங்கள் செயலற்றிருந்தனர். நீலகண்டன் நிஷ்டை நீங்கி, "முனிவர்காள்! நாம் நிஷ்டையிலிருந்தவாறே நிஷ்டையனுஷ்டித்து நீடூழி வாழுவீர்" என்று ஆசிகூறி அனுப்புவித்தனர். பரமசிவன் தக்ஷிணதிசையை நோக்கிச் சநகாதியர்களுக்கு உபதேசித்தமையால் தக்ஷிணாமூர்த்தியென்னும் திருநாமமுண்டாயிற்று. இவ்வுண்மை

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதல் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்



எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்."

என்னும் ஆன்றோர் வாக்கால் இனிது புலப்படும். இனி சின்முத்திரையால் ஏற்படும் தத்துவார்த்தம் "அத்துவித முத்திநிலையாம்." கையிலுள்ள ஐந்துவிரல்களில் சுண்டுவிரல், மோதிரவிரல், நடுவிரல் ஆகிய மூன்றும் முறையே ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்று மலங்களையும், ஆள்காட்டி விரலாகிய நான்காவது விரல் ஆன்மாவையும், ஐந்தாவது விரலாகிய கட்டைவிரல் கடவுளையும் குறிப்பனவாகும். கையைச் சாதாரணமாக விரித்திருக்கும்போது சுண்டுவிரல் முதல், நான்குவிரல்கள் சேர்ந்திருப்பதையும், கட்டைவிரல்மாத்திரம் தனித்து நிற்பதையும் காண்கின்றோம். இது ஆன்மா இயற்கையில் ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களோடு சம்பந்தப்பட்டிருக்கிறதென்பதையும், கடவுள் மலரகிதராய் தனியாக இருக்கின்றார் என்பதையும் விளக்குகிறது. சின்முத்திரை பிடிக்கும்போது கட்டைவிரலும் ஆள்காட்டிவிரலும் ஒன்றுசேர்ந்து வட்டவடிவாயிருக்கிறது. மற்ற மூன்று விரல்களும் தனித்தனியே பிரிந்து நிற்கின்றன. இது, ஜீவாத்மா பரமாத்மாவோடு இரண்டறக்கலந்து அநுபவிக்கும் முத்திநிலை இன்பத்தையும், ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியப்படும்போது அதனை முன்பற்றியிருந்த மும்மலங்களும் ஒழிகின்றன என்னும் உண்மையையும் விளக்குகிறது. இவ்வுண்மை

"பதிபசு பாச மெனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாச மநாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசம்நில் லாவே."

என்னும் திருமூலயோகிகள் திருவாக்கால் வற்புறுத்தப்படுவதும் காண்க. இச்சின்முத்திரையில் இன்னும் பல தத்துவார்த்தங்கள் அமைந்திருப்பினும் விரிவஞ்சி இவ்வளவோடு நிறுத்துகின்றோம்.

யோகதக்ஷிணாமூர்த்தி.—பரமபதியாகிய பரமசிவன் குருமூர்த்தமாக (தக்ஷிணாமூர்த்தியாக) சநகன், சநந்தனன், சநாதனன், சநற்குமாரர் என்ற மஹாரிஷிகள் நால்வர்க்கும் பதி, பசு, பாச லக்ஷணங்களை உபதேசிக்கும்போது அம்மஹாரிஷிகள், "எம் பெருமானே! தொண்டர்களாகிய எங்கள் மனம் அலைகடலைப்போல் விரிந்து அலைகடல் துரும்பு போல் சலனமுற்று இருப்பதால், கதிரவன் தன் கிரணங்களை தன்னுள் ஒடுக்கிக்கொள்வதுபோல எங்கள் மனம் ஒடுங்கும் வண்ணம் கிருபை புரிதல் வேண்டும்" என்று இறைஞ்சி நிற்க சிவபெருமான் "முனிவரே! மாதத்திற்கோர் திங்கள் தோன்றி மறைதல்போல தேகம் முதலிய யாவும் அநித்தியமெனவும், ஆத்மாவொன்றே நித்தியமெனவும் அறிந்து ஞானத்தை உணரவேண்டுவோர் முத்திக்குச் சாதனமாகிய சாஸ்திரங்களைப் படித்தலும், படிக்கப் பக்கநின்று கேட்டலும், அவ்விஷயங்களை உணர்தலும், ஆசனம், இயமம், சமாதி, தாரணை, தியானம், நியமம், பிரத்தியாகாரம், பிராணாயாமம் முதலிய எண்வகை யோகங்களைச் செய்தலும் வேண்டும். யோகமென்பது ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் ஒன்றோடொன்று இரண்டறக் கலத்தலெனச் சிலரும், அவை ஆத்மாவுடன் கலத்தலென வேறு சிலரும், அபானன், உதானன், கிருகரன், கூர்மன், சமானன், தனஞ்செயன், தேவதத்தன், நாகன், பிராணன், வியானன் முதலிய தசவாயுக்களில் பிராணவாயுவும் அபானவாயுவுங் கூடுதலென்று மற்றுஞ் சிலரும் கூறுவார்கள். இவையெல்லாம் யோகமாகமாட்டா. ஆனால் ஜீவாத்மா பரமாத்மா என்ற இரண்டும் ஒன்றுபட்டுக் கலத்தலே யோகமாகும்" என்று திரிபுரமெரித்த பிரான் கூறினார்.

இங்ஙனம் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஐக்கியமுறுதல்தான் "யோகம்" என்பதின் உண்மைக் கருத்து என்பது

"இந்திய விடயங் களினோடு இயைதல் யோகமென்று சிலர்தாஞ்
சிந்தனை உயிரோ டடைதல் யோகமென் பர்சிலர் சிலர்தாம்
முந்திய பிராணன் அபானனோ டடைதலே என்பர் இவையெலாம்
அந்தமில் யோக மல்ல நற் சிவன் பரத்துட னடைவதே யோகம்".

என்னும் திருமூலயோகிகள் அருமைப்பாசுரத்தாலும் இனிது விளங்கும்.



மெய், வாய், கண், நாக்கு, செவி முதலிய புறக்கரணங்களை அகக்கரணங்களிலொடுக்கி அதி உத்கிருஷ்டமான ஆத்மாவைப் பரத்திற் கலப்பதாம். மேற்கூறியபடி யோகத்திற் பழகினொழிய பரம்பொருளைக் காணமுடியாது. மேலே சொன்ன தசவாயுக்களையும் அடக்கினாலன்றி மனம் உறுதிப்படாது. ஆகையால் அத்தகைய யோகத்தைச் சிறிது சங்க்ஷேபமாகக் கூறுவோம்" என்று சொல்லி மறுபடியும் விளக்கமாக உரைத்துப் பரமபதியாகிய பரமசிவன் அம்முனிவர்கள் செவ்வனே அறிந்துகொள்ளும்படி திருவுள்ளங்கொண்டு தாமே சிறிதுநேரம் அந்நிலையிலிருந்து அறிவித்தனர்.

அந்நிலையைக் கண்டு உள்ளம் ஒருவழிப்பெற்று சநகன், சநந்தனன், சநாதனன், சநற்குமாரனென்ற நான்கு முனிவர்களும் பரமபதியின் பாதத்தில் பணிந்து விடைபெற்று தத்தம் இருப்பிடமேகினர். பரமசிவன் பிரமபுத்திரர்களாகிய முனிவர்கள் நால்வரும் எளிதில் அறியும்வண்ணம் யோகாப்பியாசத்தை பழக்கினமையால் யோகதக்ஷிணாமூர்த்தி யென்னும் திருநாமம் அவருக்கு உண்டாயிற்று.

வீணாதக்ஷிணாமூர்த்தி.—பரமசிவன் திருக்கைலாயத்தில் தக்ஷிணாமூர்த்தமாக வீற்றிருக்கையில் வீணையில் வல்லவரான நாரதர், சுகர் முதலிய முனிவர்கள் கைலையையடைந்து அரவாபரணன் அடிபணிந்து கைகூப்பி, "எம்பெருமானே! நாங்கள் சங்கீத சாஸ்திரத்தை நன்குணரவும், இருக்கு, யஜுர், சாமம், அதர்வணமென்னும் நான்கு வேதங்களில் ஒன்றாகிய சாமவேதத்தை வீணையிலேற்றிப் பாடவும் விளக்கியருளவேண்டும்" என்று இறைஞ்சிநிற்க, உமையவள் பாகனும், அதற்கிசைந்து, "முனிவர்களே! அவ்வாறே ஆகுக!" என்று திருவாய்மலர்ந்தருளி, அடியில்வருமாறு அருளிச்செய்யத் தொடங்கினர்.

செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு என்னும் நான்குவகை இசைக்குற்றத்தை யுண்டுபண்ணக்கூடிய விலக்குமரங்களை விலக்கி உத்தமமாகிய மரங்களைக்கொண்டு, பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்னும் நான்கு வகை யாழும் செய்வித்தல் வேண்டும். பேரியாழுக்கு இருபத்தொரு நரம்பும், மகரயாழுக்கு பதினேழு

நரம்பும், சகோட யாழுக்குப் பதினாறு நரம்பும், செங்கோட்டி யாழுக்கு ஏழு நரம்புந் தொடுத்தல்வேண்டும். பண்ணல், பரிவட்டனை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு ஆகிய எண்வகைக் கலைத்தொழிலால் விசையெழுப்பவேண்டும். இவ்விதமே இசை எழுப்பினும் வார்தல், வடித்தல், உந்தல், உழற்றல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்ற எண்வகையான இசைக்கரணத்துடன், கண்ணிமைத்தல், கனைத்தல், தலையசைத்தல், பற்காட்டல் முதலிய குற்றங்களை நீக்கிப் பாடவேண்டும்" என்று உபதேசித்து அதை அநுபவபூர்வமாய்க் காட்டுவதற்காகத் தமது திருக்கரத்தில் தாங்கிய யாழ் மீட்டித் திருத்தோளிலணைத்து இசையெழுப்பி வாசித்துக்காட்டினார். அதுகேட்ட நாரதர் சுகர் முதலிய முனிவர் புளகமெய்தினர். சுரர், நரர், மிருகம், பறவை முதலிய பிராணிகளெல்லாம் இசை ஓசையால் இன்பமுற்று வாழ்ந்தன. முனிவர் யாழைக் கையிலேந்தி முக்கண்ணோனை சாமகீதத்தாற் பாடிப் பரவசமாயினர். பரமசிவன் யாழின் இலக்கணத்தை இயம்பி, தமது திருக்கரத்து யாழேந்தி இசைத்துக்காட்டினமையால் அவருக்கு வீணாதக்ஷிணாமூர்த்தி யென்னும் திருநாமமுண்டாயிற்று.

## திருநாவுக்கரசுசுவாமிகள் சரித்திரச்சுருக்கம்

இவர் சைவ சமயாசாரியர் நால்வருள் ஒருவர். இவர் மகதநாட்டில் திருவாமூரில் வேளாளர் மரபில் புகழனார் என்பவருக்கு அவர் மனைவியார் மாதினியாரிடத்திற் பிறந்தவர். இவர் அக்காலத்திற் பெற்றோரால் 'மருள்நீக்கி' என்ற பெயரிடப்பெற்றவர். இவரது பெற்றோர்கள் இறந்தபின்னர்,—தனக்கென்று நிச்சயிக்கப்பெற்ற கணவராகிய கலிப்பகையார் இறந்துபோனமையால் வேறு இனி கல்யாணஞ் செய்துகொள்வதில்லையென்று விரதத்துடனிருந்துவருகிற தமது தமக்கையார் 'திலகவதி' யாருடனிருந்து வந்தார். இவர் கல்வி கேள்விகளிற் சிறப்புற்றவராய்ச் சமயநூல்களை ஆராயத்தொடங்கி முதலிற் சைனநூல்களை ஆராய்ந்து, அம்மதத்தில் மிகுந்தப் பற்றுடையவராகி அதிற் சேர்ந்து 'தருமசேனர்' என்ற



பெயருடன் அந்த பாடலிபுரத்தில் அவர்களுள் தலைமைவகித்து விளங்கினர். இவர் இவ்விதம் மதம் வேறுபட்டுத் திரிவதைத் திருவதிகை வீரட்டானத்தில் சிவாலயத்தொண்டு செய்துவந்த திலகவதியார் நினைத்து வருந்தி வருநாளில் 'தருமசேனரு'க்குத் திருவருளால், வயிற்றிற் சூலைநோயுண்டாகி வருத்த ஆங்குள்ள சைனர்கள் இது தீராதென்று கைவிடவும் திலகவதியாருக்கு அறியப்படுத்தினர். திலகவதியார் மறுத்ததும் அம்மதத்தைவிட்டுச் சைவமதத்தைத் தழுவித் திருவதிகையிற் திலகவதியாரை அடைந்தனர். ஆங்கு அம்மையாருடன் சந்நிதியிற் பாடுகிடக்க திருவருளாற் பதிகம்பாடும் உணர்ச்சி உண்டாய் அப்பொழுதே 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்ற பதிகத்தைப்பாடி முடித்தனர். பின்னர் அந்நோய் நீங்கிற்று. இதை அறிந்த சைனர்கள் அரசனிடத்திற் குறைகூற அவர்களது துர்ப்போதனையைக்கேட்ட அரசன் 'மருள்நீக்கியாரை'ச் சுண்ணாம்பு நீற்றறையிற் போட்டுவித்தும், நஞ்சுகொடுத்துண்பித்தும் இவர் பிழைத்திருப்பதைப் பொறாது யானையின் காலால் மிதிக்கச்செய்தும் பின்னர் கல்லோடுகட்டிக் கடலிலே போடும்படி செய்தனன். அவ்விதம் போடப்பட்டவர் அக்கல்லே கப்பலாகக் கடல் நீந்தி நதியின்வழியே கரையேறினார். அவ்விடம் இன்றும் கரையேறவிட்ட குப்பமெனப் பெயர் வழங்கிவருகிறது. இவ்விதம் கரையேறிய 'மருள் நீக்கியார்' பல சில தலங்களைத் தரிசனஞ்செய்து ஆங்காங்கு பதிகம்பாடித் துதித்துத் திருத்தூங்கானை மாடத்திற் சென்று சிவசின்னங்களாகிய சூல ரிஷப முத்திரைகள் பெற்றுச் சீர்காழியை அடைந்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைச் சந்தித்து வந்தித்து அவரால் 'அப்பரே' எழுந்திருமென்றழைக்கப்பெற்று அப்பால், திருநல்லூரை அடைந்து எம்பெருமான் திருவடியைத் தமது தலையில் வைக்கப்பெற்றுத், திங்களூரை அடைந்து ஆங்குத் தம்மிடத்தில் மிகுந்த அன்புடையவராகிய அப்பூதி என்னும் அந்தணர்வீட்டில் போசனஞ்செய்யப்போகையில் அவர் மூத்தமகன் பாம்புகடித் திறந்துகிடக்கப் பதிகம் பாடிப் பிழைக்கச்செய்து, பின்னர் சம்பந்தமூர்த்திகளைச் சந்தித்து இருவரும் திருவீழிமிழலையை அடைந்து ஆங்குள்ள பஞ்சத்தை நிவர்த்

திக்குந் தினமும் வேண்டும் அளவு திருவருளாற் பொருள்கிடைக்கப் பெற்று வேதாரணியஞ் சென்றார்கள். ஆங்கு முன்னம் வேதங்கள் பூசித்து சாத்திவைத்திருந்த கதவைத் திறக்கச்செய்து பின்னர் திறக்கவும் சாத்தவும் பாடி எப்பொழுதும் அவ்விதமிருக்கக் கண்டு மகிழ்ந்திருக்குநாளில் மதுரையில் சைனர்களை வாதில்வெல்லச் சம்பந்தர் செல்லலும், அப்பர் அங்கிருந்து திருப்பைஞ்ஞீலி என்ற பதிக்கு [illegible]கையில் வழியிலே பசியால் வருந்த எம்பெருமான் ஓர் அந்தணர் வடிவங்கொண்டு வந்து அன்னமளிக்க உண்டு, அப்பால் வடக்கேசென்று பலதலங்களைத் தரிசனஞ்செய்து கைலாயத்திற்குப் போக நினைந்து நடக்கையில் எம்பெருமான் மீண்டும் ஓர் அந்தணவடிவங்கொண்டுவந்து கைலாயம் போவது கூடாத காரியமென்னலும் போவேனென்றுகூற அந்தணர் மறைந்தனர். உடனே அப்பர் இங்குவந்தவர் கடவுளே என்று வியந்து பூமியில்வீழ்ந்து வணங்கினார். அப்பொழுது எம்பெருமான் ஆகாயத்தில் நின்று 'நாவுக்கரசே' என்றழைத்தனர். அக்காரணமே இன்றும் அப்பெயர் வழங்குகிறது. பின்னர் திருவருளால் ஒரு தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றின் புஷ்கரிணியில் வெளிவந்து ஆங்குக் காட்சி கொடுக்கப்பெற்றுத் திருப்பூந்துருத்தியை அடைந்து சம்பந்தரைச் சந்தித்து இருவரும் பல தலங்களைத் தரிசனஞ்செய்து பதிகம்பாடித் துதித்து கடைசியாகத் திருப்புகலூரை அடைந்து ஆலயத்திலுள்ள புற்பூண்டுகளைக் களைந்து தொண்டுபுரிந்துகொண்டு வருநாளில் தமது எண்பத்தோராவது வயதில் சிவகதி அடைந்தனர்.

## சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரச் சுருக்கம்

இவர் சைவ சமயாசாரியர் நால்வர்களுள் ஒருவர். இவர் மகத நாட்டில் திருநாவலூர் என்னும் பதியிலே ஆதிசைவரென்னும் அந்தணர் குலத்தில் சடையனார் என்னும் சிவாசாரியாருக்கு அவருடைய மனைவியாராகிய இசைஞானியாரிடத்தில் அவதரித்தவர். இவருக்கு அக்காலத்தில் "நம்பியாரூரர்" என்ற பெயர். இவ்விதம் இவர் வளர்ந்துவருநாளில் இவருக்குப் புதூரில் விவாகம் நிச்சயிக்கப்பெற்று பந்தலில் மணவறையிலமர்ந்ததும், எம்பெருமான் ஓர் வயதுவந்த அந்



தணர் வடிவங்கொண்டு அந்தச் சபையில் வந்து "சபையோர்களே இம்மணமகன் எனக்கு அடிமை. இந்நிலையில் என் வழக்கைத் தீர்த்துக்கொள்ளாது எவ்விதம் கலியாணஞ் செய்துகொள்ளக்கூடும்" என்று சொன்னார். அந்தணன் அடிமை என்ற இந்த விந்தையான வார்த்தையைக் கேட்டு அனைவருந் திகைத்தலும், நாயனார் அதைத் தீர்த்துப் [illegible] வி[illegible]கமென்று வேதியரைக் குறுகி விசாரிக்கலும், உன் பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமை முறி இதோ இருக்கிறதென்று சபையோர்கள் முன் காட்டி ருசுப்படுத்தலும் நீர் பித்தரோவெனக் கூறி நாயனார் வெகுண்டு அம்முறியைக் கிழிக்கவே வேதியர் நாயனாரைப் பிடித்துக்கொண்டு முறையிடலும் எல்லோருங்கூடி விலக்கி உமது ஊர் பெயர் முதலானவை என்னென்று வினவ அவர் திருவெண்ணைநல்லூர் என்னலும் அங்கேயே போய் இவ்வழக்கைத் தீர்த்துக்கொள்வோமென்று அங்குள்ள அந்தணர்கள் சபையில் நடந்தவைகளைக் கூற அவர்கள் நாயனாரைக் கோபித்துப் பின் வேதியரைப் பார்த்து உமது வழக்கிற்குள்ள ஆதாரத்தைக் காட்டுமென, இவன் பாட்டன் எழுதிக்கொடுத்த ஆதி அடிமைமுறி இதோ இருக்கிறதென்று காட்டி அதைச் சபையோர்கள் படித்து நாயனாருக்குச் சந்தேகத்தைப் பலவழியிலும் நிவர்த்திசெய்து, நீர் வேதியருக்கு அடிமைதானென்று தீர்மானித்துப் பின்னும் வேதியரை நோக்கி இம்முறியால் உமது ஊர் இவ்வூரெனக் காணப்படுகிறது. அவ்விதமாயின் உமது இருப்பிடம் (வீடு) யாதென வினவ காட்டுகின்றேன் வாருங்களென அனைவரும் [illegible] அவ்வூரிலுள்ள 'திருவருட்டுறை' என்னும் கோயிலுட் புகுந்ததும் வேதியரைக் காணாது யாவரும் மயங்க நாயனார் வேதியரைத் தேடிக் கூப்பிடலும் சிவபெருமான் உமாதேவியாருடன் இடபவாகனத்தில் ஏறிக்கொண்டு நாயனார் முன்னே, 'நீ நமது தொண்டன் உன்னைச் சமுசார பந்தத்திலிருந்தும் நிவர்த்திக்க வேண்டிப் பண்டுவாக்களித்ததின் பிரகாரம் இன்று உன்னை விவாகத்தினின்று தடுத்து ஆட்கொண்டோம்' என்று அசரீரியாற் திருவாய் மலர்ந்தருளினர். அந்தக் குரலைக்கேட்ட நாயனார் பலவாறாக விழுந்து நமஸ்கரித்து அஞ்சலியஸ்தராய் நிற்றலும், நீ நம்மோடு 'வன்

சொற்களைச் சொன்னமையின் உனக்கு இன்றுமுதல் வன்றொண்டர்" என்று பெயர் வழங்கட்டும் என்று கூறி என்னை வழிபடுதலிற் சிறந்தது செந்தமிழ்ப் பாடலே, ஆகவே நீ நம்மைக்குறித்துப் பாடுவாயென்னலும், யான் யாது நினது குணத்தை அறிவேனென்னலும், நீதான் முன்னமே நம்மைப் பித்தனென்று அழைத்தனையேதான் என்று சொல்லி மறைந்தார். உடனே நாயனார் 'பித்தா பிறைசூடி' என்று தொடங்கி அன்றுமுதல் பல சிவதலங்கள் சென்று ஆங்காங்கு பதிகங்கள் பாடித் துதித்துவந்தார்.

பின்னர், நாயனார் திருவாரூர்வந்து சுவாமி தரிசனஞ் செய்து கொண்டிருக்கிற நாட்களில் அவ்வூரில் அவதரித்திருந்த உமாதேவியாரின் சேடியர்களில் கமலினியார் பரவையாரென்னும் பெயருடன் ஒருநாள் கோயிலுக்கு வருதலும் நாயனாரும் பரவையாரும் ஒருவருக்கொருவர் சந்தித்து ஆசை மேலிட்டிருந்தும் இருவரும் ஒன்றுஞ் செய்ய முடியாதிருக்க நாயனார் ஈசுவரனை எனக்குப் பரவையாரைக் கல்யாணஞ் செய்துகொடுக்க வேண்டுமென்று வேண்ட அவ்விதமே வேதியர்களைக்கொண்டு மணமுடித்துவைத்தும், பின்னர் பல நாட்களுக்குப் பிறகு திருவொற்றியூரில் நாயனார் சுவாமிதரிசனஞ் செய்யப் போயிருக்கையில் ஆங்கு நாயனாரையே நாயகனாக அடையக்கருதித் தவமியற்றும் உமாதேவியாரின் சேடியர்களில் அநிந்திதையாகிய சங்கிலியாரை முன் பரவையார்மணம்போலவே அங்கும் மணமுடித்து வைத்தார் எப்பொழுதும் பிரிகிறதில்லை என்ற வாக்குறுதியினின்றேறில். இவ்விதம் அங்கிருந்து திருவாரூரை பார்க்க, சபதம் மீறி வருதலும் இரண்டு கண்களும் நாயனாருக்கு மறைந்துவிட்டன. பின்னர் நாயனார் திருவெண்பாக்கத்தை அடைந்து பதிகம்பாடி ஊன்றுகோல் பெற்று, திருவேகம்பத்தை அடைந்து இடக்கண் பெற்று, இடையிடையே பலசில தலங்களைத் தரிசனஞ்செய்து திருத்துருத்திக்குப்போய் ஸ்நானஞ் செய்து உடல்நோய் நீங்கி, திருவாரூரை அடைந்து பதிகம்பாடி வலக் கண்ணையும் பெற்றுப் பரவையாருக்கும் தமக்கும் சங்கிலியார் விவாகத்தால் நேர்ந்த ஊடலை ஈசுவரனுடைய தூதால் தீர்த்து திருவாரூரிலிருந்து பின்னும் பல சிவஸ்தலங்களைத் தரிசிக்கத் தமது தோழனாகிய



சேரமான் நாயனாருடன்சென்று பல தலங்களைத் தரிசனஞ் செய்துவந்தார். இதனால் நாயனார் 'சேரமான்றோழன்' என்ற பெயர் பெற்றார். பின்னர் திருவஞ்சைக்களத்தை அடைந்து தன்னை ஐக்கியஞ் செய்து கொள்ளவேண்டுமென்று பிரார்த்திக்க எம்பெருமான் தேவதைகளை அனுப்பி நமது அடியவரை வெள்ளையானைமேலேற்றி நம்முன் கொணருமின் என்னலும் அவர்கள் அவ்வாறே கொண்டு போவதைத் தெரிந்து சேரமான் தானும் தனது குதிரையிலேறி நாயனாருடன் போகக் கைலையங்கிரியை அடைந்து உட்புகுந்ததும் சேரமான் வெளியிலேயே தங்க, பகவான் நாயனாரை 'சுந்தரா' வாவென்றழைக்கப் பின் நாயனாரால் சேரமான் நாயனாரும் அழைக்கப் பெற்று முறையே அவர்கள் ஆலாலசுந்தரராகவும், கணநாதராகவும் அமர்த்தப்பட்டார்கள். பரவையார், சங்கிலியார் இருவரும் முறையே கமலினியாகவும், அநிந்திதையாகவும் உமாதேவியார் சேடியர்களின் கூட்டத்திற் சேர்ந்தார்கள். இச்சரித்திரத்தில் கண்டு குறிப்பிட்டுக்காட்டியவற்றிலுள்ள விரிவையும், மற்றும் பரவையார் மகிழும்படி நெற்குவியல் வரவழைத்ததும், மணிமுத்தாநதியிலிட்ட பொன்னைத் திருவாரூர் கமலாலயத்தில் வரவழைத்ததும் தன்னுடன் ஆசிரிதமாக வந்த அடியார்களுக்கு அன்னமிட்டதும் முதலான பல அற்புத செயல்களை நாயனார் சரித்திரத்திற் பார்க்கக்காண்க.

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

### சரித்திரச் சுருக்கம்

இவர் சைவசமயாசாரியர் நால்வருள் ஒருவர். இவர் சீர்காழியில் அந்தணர் குலத்தில் கௌணிய கோத்திரத்திலே சிவபாதவிருதயர் என்பவருக்கு அவரது மனைவியார் பகவதியாரிடத்திற் பிறந்தவர். அக்காலத்தில் பிள்ளையார் என்ற பெயரையுடையவர். இவர் மூன்றுவதாண்டில் ஒருநாள் தமது தந்தையார் ஸ்நானஞ் செய்யப்போகையிற் கூட அழுது சென்றார். அவர் என்ன கோபித்துந் தங்காது கூடச் சென்று தந்தையார் புஷ்கரணியில் மூழ்கி ஜெபஞ் செய்கையில் தோணியப்பர் சிகரத்தைப் பார்த்து 'அம்மே, அப்பா' என அழைக்க

எம்பெருமான் கருணைகூர்ந்து, உமாதேவியாரால் பிள்ளையாருக்கு ஞானப்பாலூட்டச் செய்தனர். அன்று முதல் இவர் 'ஆளுடைய பிள்ளையார்' என்றும், 'திருஞான சம்பந்தர்' என்றும் பெயர்பெற்றனர். உடனே தண்ணீரில் மூழ்கியிருந்த சிவபாதவிருதையார் எழுந்து பிள்ளையாரைக்காணாது தீரத்தில் நிற்கக்கண்டு சென்று வெகுளலும், கடைசியாக நீ யாரிடத்தில் பால் சாப்பிட்டனை என்னலும், ஆகாயத்திற் சுட்டிக்காட்டி மகிழ்ந்தனராகி ஆலயத்துட் சென்று சுவாமி தரிசனஞ்செய்து புறப்படுகையில் இச்செய்தியை அறிந்த கிராமத்தார் வாத்தியங்களுடன் எதிர்கொண்டு பிள்ளையாருடன் திருமாளிகைக்குச் சென்றார்கள். இவ்விதம் அங்குச் சிலநாளிருந்து திருக்கோலக்காவை அடைந்து சந்நிதியில் ஒற்றறுத்தாட் பதிகம் பாடுகையிற் 'பொற்றாளம்' கையில் வரப்பெற்றும், பின்னர்ச் சீர்காழிக்கு வருகையில் நடக்க இயலாது வருந்த தந்தையார் தோள்மேல் ஏறிக்கொண்டு சீர்காழி வந்து திருநனிப்பள்ளி முதலான பல தலங்கள் சென்று திருநீலகண்டப் பெரும்பாணரைச் சந்தித்து அவரால் யாழ்வாசிக்கக் கேட்டு மகிழ்ந்து தில்லை முதலான பலதலங்கள் சென்று திருவரத்துறைக்குப் போக விரும்பி தந்தையார் தோளில் நின்று நீங்கி அடிவருந்த நடக்கையில் எம்பெருமான் அந்தணர்களுக்கும் பிள்ளையாருக்கும் கனவிற் சொல்லியபடி காலையில் 'முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம்' முதலியன பெற்றுத் திருவரத்துறையை அடைந்து, தரிசனஞ்செய்து சீர்காழி வந்து வசித்திருக்கும் நாளிலே பிள்ளையாருக்கு 'உபநயனம்' செய்யவேண்டிய காலம் வரலும், வேதியர்களுடைய வேண்டுகோட்கிரங்கி உடன்பட்டு, அங்குவந்த திருநாவுக்கரசு நாயனாரை உபசரித்து தோணியப்பரைத் தரிசித்து தந்தையாருடன் பலதலங்கள் தரிசனஞ் செய்துகொண்டுவருகையில் திருபாச்சிலாச்சிரமத்தில் கொல்லி மழவன் புத்திரியை முயலகமென்னும் நோயிலிருந்து பதிகம்பாடி நிவர்த்தித்து பின்னர் பல திருப்பதிகள் தரிசனஞ்செய்து திருகண்ணு விற்குப் போய்ப் பதிகம்பாடிப் பனியால்வரும் நோயைத் தீர்த்துச் சோழநாட்டை அடைந்து திருச்சத்தி முற்றமிருந்து திருப்பட்டீச்சரம் போகுந்தருவாயில் வெயில் வெப்பத்தைத் தணிக்



கப் பூதங்களால் திருப்பட்டீச்சுரரால் அனுப்பப்பெற்ற முத்துப் பந்தர் நிழற்றப்போய் சுவாமி தரிசனஞ்செய்து பின்னர் திருவாவடுதுறையை அடைந்து ஆங்குத் தந்தையாருக்கு யாகமுடிப்பதற்குப் 'பொன்னுலவாக்கிழி' பெற்றுத் தந்தையாருக்குக் கொடுத்தனுப்பிச் சிலநாள் அங்கிருந்து பெரும்பாணரை யாழை முறிப்பதினின்றுந் தவிர்த்து பல சிவதலங்களைத் தரிசித்துத் திருமருகலுக்குப் போய்த் தரிசனஞ்செய்து ஆங்கு பாம்பினாற் கடிபட்டிறந்த வணிகனைப் பதிகம் பாடி எழுப்பித் திருச்செங்காட்டாங் குடிக்கோலத்தைத் தரிசனஞ் செய்து திருப்புகலூருக்கப்பால் அப்பரைச் சந்தித்து திருவீழிமழலையை அடைந்து அங்குள்ள பஞ்சத்திரப் பொருள்பெற்று வேதாரணியமடைந்து கதவு திறக்கப் பாடி பின்னர் எந்நாளும் அவ்விதமே திறக்கவும் சாத்தவும் பாடி மகிழ்ந்து அப்பரிடத்தில் விடைபெற்றுச் சமணர்களை வாதில் வெல்ல மதுரையை அடைந்து அங்கு சமணர்களாற் செய்யப்பட்ட" தீவைத்தல் முதலிய பல தீங்குகளினின்றும் நீங்கிப் பாண்டிமா தேவியார், குலச்சிறை நாயனார் இவர்களுடைய மனக்கவலையை நிவர்த்தித்து அரசனுக்குச் சமணர்களால் உண்டான தீநோயை விபூதியால் நிவர்த்தித்து சமணர்களை வென்று பின்னர் அவர்களுடைய இஷ்டப்படி பாசுரத்தை எழுதி அக்கினியிலும், வைகையாற்றிலும் இட்டு வேகாமலும் எதிர்த்துச் செல்லும்படியுஞ் செய்து அவர்களைக் கழுவிலிட்டுச் சென்று ஆங்கு தம்மைப் பார்க்கவந்த தந்தையாருடன் சொக்கநாதரைத் தரிசனஞ்செய்து பின் பலதலங்களைத் தரிசனஞ்செய்து போதிமங்கை வருதலும் அங்குள்ள 'புத்தநந்தி'யை வாதில் வென்று அவன் தலை இடியால் அற்று விழும்படி செய்து மீண்டும் வந்த சாரிப்புத்தனை வென்று அவர்களுக்குச் சைவநெறியை உணர்த்தித் திருப்பூந்துருத்தியை அடைந்து அப்பரைச் சந்தித்து நடந்தவைகளைச் சொல்லி பாண்டி நாட்டிற்கு அப்பர் சென்றபின் சீர்காழியை அடைந்து தொண்டநாட்டிற்குச் சென்று பல தலங்களைத் தரிசனஞ்செய்து திருவோத்தூர் வந்து ஆங்கு 'ஆண்பனையை'க் காய்க்கும்படி பாடியருளித் திருமைலாப்பூரை யடைந்து சிவபத்தி அடியாரைக்கண்டு அவர் புத்திரியாகிய சாம்பரா யிருந்த

'பூம்பாவை' யாரை எழுப்பிப் பல தலங்கள் தரிசனஞ்செய்து சீர்காழியை அடைந்தார். இங்ஙனம் இருக்கும் நாளில் அனைவர்களும் விவாகஞ் செய்துகொண்டு இல்லறம் நடத்திக் காட்டவேண்டுமென்று பிரார்த்திக்க மறுக்கமுடியாதிசைந்து* திருநல்லூரிலே நம்பியாண்டார் நம்பியின் புத்திரியை விவாகஞ் செய்துகொள்ளச் சென்று அங்கு செய்யவேண்டிய கிரியைகள் அனைத்தையும் சிவபிரானை உத்தேசித்தே திருமங்கல்யதாரணம் பண்ணிப் பின்னர் ஆலயத்துட்சென்று சிவதரிசனஞ் செய்கையில் 'இதுவல்லவா என்னைச் சேர்த்துக்கொள்ளவேண்டிய காலம்' என்றதும் ஆங்கு திருவருளாற் பெருஞ்சோதி தோன்ற அதனுள் தம்முடன் வந்த பெரும்பாணர் முதலான தொண்டர்களையும் தாய்தந்தையர்களையும் பிரவேசிக்கும்படி செய்து தம்மனைவியாருடன் அச்சோதியுள் பிரவேசித்துச் சிவசாயுச்சியத்தை அடைந்தனர். சுபம்.

## மாணிக்கவாசகப்பெருமான் சரித்திரச்சுருக்கம்

இவர் சைவசமயாசாரியர்களாகிய நால்வர்களுள் ஒருவர். இவர் முன்னம் மதுரையை அரசாண்டு வந்த அரிமர்த்தன பாண்டியன் காலத்தில் பாண்டியநாட்டில் திருவாதவூரிலே [illegible] ஆமாத்தியர் குலத்திலே அவதரித்தவர். இவர் ஆதியிலே அவர் தந்தையாரால் 'வாதவூரர்' என்ற திருப்பெயர் சூட்டப்பெற்றவர். இவர் இளமைப் பருவத்திலேயே தம்மரபிற்குரிய வேத சிவாகம முதலானவற்றையும் பிறநூல்களையும் கற்று நன்குணர்ந்தவராயினர். அவரது குணநலங்களைக் கேட்ட பாண்டியன், அவரை வரவழைத்து நன்கு பரீட்சித்து ஆராய்ந்து பல சிறப்புக்களோடு 'தென்னவன் பிரமராயன்' என்னும் சிறப்புப்பெயரையுங் கொடுத்துத் தன்னிடத்திலேயே முதன் மந்திரியாக்கிக்கொண்டான். இவ்விதம் வாதவூரர் மந்திரியாயிருந்து வரும் நாளில்,—நித்தியா நித்திய வஸ்து விவேகத்தால் ஆராய்ந்து பார்க்கில் இந்த மண்ணுலகும், விண்ணுலகும் [illegible] தன்மையுடைத்தன்று. ஆகவே நாம் நிலையான பதத்தை அடையச் சாதகமான தத்துவஞானத்தைக் கொடுக்கக்கூடிய பரமாசாரியரைத்தேடி அடையவேண்டுமென்று அவாக்கொண்டிருக்கும் நாளில், அரசன் அவரைக் குதிரை வாங்கி



வரும்பொருட்டு, கீழ்கடற்கரைக்கு அனுப்பினான். அவர் அரசனாற் கொடுக்கப்பெற்ற சேனைகளுடனும், திரவியங்களுடனும், தற்காலம் (ஆவிடையார் கோவில்) திருப்பெருந்துறை என்று பெயர் வழங்குகிற காட்டை அடைந்தார். அங்கு சேர்ந்ததும் வாதவூரரது மனத்தில் என்றுமில்லாத ஆனந்தம் உண்டாயது. அதனால் இங்கு ஏதேனும் விசேஷமிருக்கவேண்டுமென்று அவ்விடத்தைச் சுற்றிப்பார்த்தார். ஆங்கு ஓர் குருந்தமரத்தடியில் உபதேசம் பெறுவதற்குத் தகுந்த பக்குவத்துடன் வருகிற வாதவூரருக்கு அருளும்பொருட்டே எம்பெருமான் தமது சிவகணங்களை மாணாக்கர்களாக்கித் தாம் ஞானாசிரியராகிய வடிவத்துடன் வீற்றிருந்தார். வாதவூரர் ஆங்கு வீற்றிருந்த குருநாதனைப் பார்த்து ஆனந்த பரவசராகி அடியேற்கருள்புரிதல் வேண்டுமென்றிரந்து நிற்றலும், எம்பெருமான், அவரது தீவிர பக்குவத்திற்கிரங்கி ஆங்கு சூழ்ந்துகொண்டிருந்த மாணாக்கர்கள் அறியாது மார்கழி மாதத்தில் ஆருத்திரா நட்சத்திரத்தில் உபதேசித்தருளினார். இவ்வுற்சவம் இன்றும் ஆவிடையார் கோவில் நடந்துவருகிறது. அவ்விதம் உபதேசம்பெற்ற வாதவூரர் அன்புமேலீட்டினால் எம்பெருமானை அற்புதமான பாடல்களாற் பாடக்கேட்ட பகவான் அவரது பாட்டிற்கு மெச்சி "மாணிக்கவாசகா" என்று அழைத்தார். அன்று முதல் அவருக்கு மாணிக்கவாசகரெனப் பெயர் வழங்கி வருகிறது. பின்னர் மாணிக்கவாசகர் குருவிற்குக் காணிக்கையாகத் தான் கொணர்ந்த திரவியங்களைக் கொடுத்து அதை அனுமதிப்படி ஆங்கு சிவாலயத்திருப்பணி செய்தலும், இங்கு நடந்தவைகளை எல்லாம் ஒற்றர்களால் அறிந்த பாண்டியன் விடுத்த உத்தரவைப் பார்த்து பயந்து பிரார்த்திக்க "நாம் குதிரையுடன் வருவோம், நீ முன்னே போ" என்ற அசரீரி வாக்கைக் கேட்டு ஆனந்தமுற்று மதுரையை அடைந்து குதிரை வருஞ் செய்தியைக் கூறி மகிழ்ந்திருக்கும் நாளில், குறித்தகாலத்தில்" குதிரைகள் வராது தாமதிக்க பாண்டியனால் பொருளிற்காக பலவித கஷ்டங்களை யடைய அக்காற் புலம்பும் குரற்கேட்டு எம்பெருமான் காட்டிலுள்ள நரிகளைப் பரியாக்கித் தாம் வேதப்பரியில் ஆரோகணித்துக் கொண்டு குதிரைகளுடன் மதுரையை

அடைந்து பாண்டியனிடத்தில் குதிரையை ஒப்புவித்து மறைந்தனர். இரவில் குதிரைகள் முன்போல நரிகளாகிப் பட்டணத்தை அழிக்க மீண்டும் பாண்டியன் மாணிக்கவாசகரைப் பொருள் தரச் சொல்லிப் பலவாக வருத்திக் கடைசியாக வைகையாற்றின் மணலில் வெயிலில் நிறுத்த எம்பெருமான் பெருத்த வெள்ளத்தை ஏவிப் பட்டணத்தை அழிக்கவும் இவையெல்லாம் மாணிக்கவாசகரை வருத்தியதன் பலனென்றறிந்தபாண்டியன், அவரைப் பலவாறாகப் பிரார்த்திக்கவும், எம்பெருமான் பிட்டு வாணிச்சியின் ஆளாக வந்து அடைப்படைத்து மறைந்தனர்.

பின்னர் இவைகளைப் பார்த்த பாண்டியனாற் கொடுக்கப்பெற்ற அரசாட்சியும் வேண்டாமென்று துறையை விட்டு நீங்கித் திருப்பெருந்துறை வந்து அங்கிருந்து சிதம்பரம் வந்து ஊமைப்பெண்ணைப் பேசச் செய்து சமணர்களை வாதில் வென்று பின்னர் நடராஜப் பெருமான் சந்நிதியில் திருக்கோவையார் பாடி, ஈசுவரனது சாருப்யத்தில் சோதி ரூபமாக எழுந்து ஐக்கியமானார்.

பக்திவிளக்கம் முற்றிற்று.




# கும்பகோணம் மங்கள விலாஸ புக் டெப்போ

இந்து தூக்கா சிகிச்சா சாஸ்திரத்துடன்

ஸ்ரீ சுப்பிரமணியர்

ஸர்வரோக நிவாரண மாந்திரீகம்

இப்புத்தகத்தில் இந்து தூக்கச் சிகிச்சா சாஸ்திரத்தைப்பற்றிச் சவிஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் சகலரும் இதை ஒரு புதிய நூலாகவும் மேன்மையாகவும் கொள்ளக்கூடுமென்ற எண்ணத்துடன் இந்நூலாசிரியராகிய ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளின் கிருபா கடாக்ஷம் பெற்ற ஸ்ரீமத் S. இராமஸ்வாமி அய்யர் அவர்களால் இயற்றப்பட்டது.

## OPINIONS.

ஹிந்து ஹிப்னடிசம்

" இந்து தூக்க சிகிச்சா சாஸ்திரமும், ஸ்ரீ சுப்பிரமணியர் ஸர்வ ரோக நிவாரண மாந்திரீகமும் " என்னும் பெயருள்ள புஸ்தகமொன்று கும்பகோணம் மங்களவிலாஸ புத்தகசாலையின் சொந்தக்காரர் ஸ்ரீமான் வி. எஸ். இராதாகிருஷ்ண ஐயரால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இது ஸ்ரீமான் எ. இராமஸ்வாமி ஐயரால் இயற்றப்பட்டதாகும். கும்பகோணம் ஸ்ரீமான் எஸ் பஞ்சாபகேச சர்மா, பி. ஏ., அவர்களால் இதற்கு ஆங்கில பாஷையில் சிறப்புப் பாயிரம் எழுதப்பட்டிருக்கிறது. ஹிப்னடிஸம் என்று ஆங்கில பாஷையில் சொல்லப்படும் யோகநித்திரையைப்பற்றி இந்நூல் மிக விஸ்தாரமாகக் கூறுகின்றது. மேனாட்டாருக்கு இத்தகைய சாஸ்திரம் புதிதேயாயினும், நம்மவர்களுக்குப் புதிதன்று. " திருமால் பாற்கடலில் யோகநித்திரை செய்கின்றார், " என்றும், " அறிதுயில் அமர்ந்தோன் " என்றும் நம்முடைய நூல்கள் கூறுகின்றன. " தூங்காமற்தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம் " என்றார் தாயுமானவர். இவையெல்லாம் ஹிப்னடிஸம் என்னும்

விலாஸம்—மங்களவிலாஸ புக்டெப்போ, கும்பகோணம்.

"விழிப்புமில்லை உறக்கம்" நம் நாட்டில் பூர்வகாலத்திலேயே உண்டென்பதைப் புலப்படுத்துகின்றன. ஸ்ரீசுப்பிரமண்யர் மஹாமந்திரம், ஸ்ரீ பஞ்சாக்ஷர மஹாமந்திரம் இவைகளுடைய மஹிமைகளைப்பற்றியும், வேறுபல மந்திரங்களைப்பற்றியும், இந்நூல் விரிவாக எடுத்துக்கூறுவதோடு, அம்மந்திரங்களை இன்னின்ன முறைப்படி உச்சரித்தால் இன்னின்ன வியாதிகள் நீங்கும் என்ற விவரத்தையும், எடுத்துரைக்கின்றது. அந்தந்த மந்திரங்களுக்குரிய சக்கரங்களும், இதில் போட்டுக் காட்டியிருக்கின்றன. தவிர, ஆத்மா, மனம், நாடிகள் இவைபோன்ற நுட்ப விஷயங்களின் இயல்பைப் பற்றியும் வியாதிகளும் பொதுவாய்ச் செய்யக்கூடிய சிகிச்சைகளைப் பற்றியும், இதில் நன்றாய் இதன் ஆசிரியர் எடுத்து விளக்குகின்றார். ஸ்ரீ ஷண்முகமூர்த்தியின் அழகிய திருவுருவப் படமொன்றும் இதில் காணப்படுகின்றது. மொத்தத்தில் இந்நூலாசிரியர் மிகுந்த பிரயாசையோடு தம்முடைய நீண்ட கால அனுபவத்தை ஒட்டி இ[illegible]த்தை எழுதி முடித்திருக்கின்றார் என்று சொல்வது மிகையாகாது. இப்புத்தகத்தின் விலை ரூ. 1—8—0 மிகக் குறைந்தவிலை என்றே சொல்லலாம். வேண்டுவோர் இராதாகிருஷ்ண ஐயருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.—வைதீகமித்திரன்.

## ஞானமிருதம்

### ஓர் வேதாந்த தமிழ் நாவல்

பேருலகில் பல கல்விமான்கள் தங்கள் தங்கள் பாஷையில் அநேகஞ் சிறந்த நாவல் என்னும் கற்பனைக் கதைகளை சகலரும் படித்து ஆனந்திக்குமாறு எழுதியுள்ளார். அக்கதைகளில் பெரும்பான்மையும் ஸ்திரீகளின் தந்திரத்தையும் புருஷர்களின் சிற்றின்பத்தையும் விளக்கக்கூடியனவாயுள்ளன. அவ்வாறின்றி நாலிற்பொதிந்த விஷயங்களின் அருமையால் ஆனந்தமும், ஆனந்தத்தால் மனனமும், மனனத்தால் ஞானமும், ஞானத்தால் பக்தியும், பக்தியால் மோக்ஷமும், பயக்கக்கூடிய ஞானமிருதம் என்ற இத்தகைய ஸப்தகோடி மஹாமந்திரங்களிற் சிறந்ததாயும் இராஜமந்திரமாயுமுள்ள பஞ்சாக்ஷர மகாமந்திரத்தை அஸ்திவாரமாகக்கொண்டு என் மனதிற் படித்தவண்ணம் வெளியிட்டோம். இது சிறுவர்களும் சிறுமிகளும் படித்து தெளியும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. இதன் விலை அணா 10

**GNANAMIRTAM.**—We are in receipt of a copy of the interesting Tamil Novel "GNANAMIRTAM" By Mr. C. S. RAMASWAMI AIYAR, of Kumbakonam. The names of the characters suggested the work to be an allegory, but whatever its name, it smells as sweet with its easy Tamil and the





quaint humour which underlies the whole work. Copies of the book can be had of Mr. C. S. RADAKRISHNAIER, Editor, Lokanukoolan, of Kumbakonam, and the price of each copy is only 10 As.—(*The Hindu.*)

Your "**GNANAMIRTAM**" is really very humorous and interesting. The author has surely the object of reforming the present day priesthood in view. The latter half infuses piety in the reader's mind.

Yours Sincerely,
**S. PANCHAPAGESA SARMA**, B. A., L. T.
*Assistant, Teacher's College, Saidapet.*

### ஞானமிருதம (முதற்பாகம்.)

சுதேசமித்திரன்.—இப்பெயர்கொண்ட தமிழ்க்கதையை ஸ்ரீமத் சு. இராமஸ்வாமி அய்யர் இயற்றி கும்பகோணம் ஸ்ரீமத் C. S. இராதாகிருஷ்ண அய்யர் வெளியிட்டிருக்கிறார். இக்கதையில் பஞ்சாக்ஷரத்தின் மகிமையை எடுத்துக்கூறியிருப்பதோடு மனிதரின் குணவிசேஷங்களை வேடிக்கையாய்ச் சொல்லியிருக்கிறது. இதன் விலை அணா 10

பிழைக்கும் வழி.—இந்த நாவல் ஸி. எஸ். ராமஸ்வாமி அய்யரால் இயற்றப்பட்டது. இது பக்திமார்க்கத்தை நன்றாய் விளக்கிக் காட்டுகிறது. இதன் நடை சுலபமாயிருக்கிறது. இதை யாவரும் வாசித்துப் பயனடையலாமென்று நினைக்கிறோம். இதன் விலை அணா 10. வேண்டுவோர் ஸி. எஸ். இராதாகிருஷ்ண அய்யர், மங்களவிலாச புக்டிப்போ, கும்பகோணம் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

இந்து சாதனம்.—இது கும்பகோணம் பிரம்மஸ்ரீ சு. இராமஸ்வாமி அய்யர் அவர்களால் இலகுவான தமிழ் வசன நடையில் இயற்றப்பட்ட நவீன கதை. இந்நூலின் இடை இடையே விபூதி, உருத்திராக்கம், பஞ்சாக்ஷரமாகியவற்றின் மகிமைகள் கூறப்பட்டிருத்தலின் இஃது சைவசமயிகள் எவராலும் இனிது படிக்கற்பாலதாகும். இதன் விலை அணா 10. பிரதிகள் கும்பகோணம் மங்களவிலாஸ புக்டெப்போவிற் பெற்றுக்கொள்ளலாம். எமக்கனுப்பிய பிரதியை ஏற்று மகிழ்ந்தோம்.

ஞானபாநு.—இது ஓர் புதிய கதை. இது எட்டு அத்தியாயங்களடங்கிய 179 பக்கங்களுள்ளது. பண்டைகாலத்து பாவனை நிறைந்துள்ளது.

திராவிடாபிமானி.—இப்பெயர்பூண்ட புஸ்தகத்தின் முதற்

பாகம் வரப்பெற்றேரும். இதோர் சிறந்த நாவல். இப்புஸ்தகம் வி. என். இராமஸ்வாமி அய்யரால் எழுதப்பட்டு லோகாநுகூலன் பத்திராதிபர் மிஸ்டர் ஸி. எஸ். இராதாகிருஷ்ணய்யரால் அச்சியற்றப்பட்டது. இப்புஸ்தகம், அதன் பெயருக்கேற்ப பக்திக்குரிய விஷயமாய் வரையப்பட்டுள்ளது. அதனைப் போதிக்கும் நோக்கத்தையே குறியாகக்கொண்டு கதை யெழுதப்பட்டிருப்பினும், நாவல் என்பதற்கு இருக்கவேண்டிய இலக்ஷணங்களெல்லாம் இதில் இனிதமைந்திருப்பது பாராட்டற்பாலது. கதையில் கூறப்படும் முத்தன்னு, கலியன்னு, பள்ளிச்சிறார்கள் இவர்களுடைய செய்கைகள் வாசிப்போருக்கு விடாநகைப்பை உண்டாக்கும். வண்டிக்காரனுகிய வாதாபி வெளித்தோற்றத்தில் வண்டிக்காரனைப்போல காணப்படினும் வாஸ்தவத்தில் பெரிய ஞானியாக விளங்குவதும், அவன் நாயனுவுக்கு நல்லுபதேசம் புரிந்து நல்வழியில் திருப்புவதும் வாசிப்போரின் மனதை விட்டு விலகக்கூடியதல்ல. இக்காலத்தில் நாமோர் தேசங்களும், நீதிபோதனைகளும் நிறைந்து கிடைக்கின்றன. இது யாவருக்கும் பயன்படக்கூடியது. யாவருக்கும் விளங்குமாறு எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. நல்ல லேஸ் காகிதத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 10

லோகாநுகூலன்.—இதை Mr. C. S. ராதாகிருஷ்ணய்யர் அவர்களால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. ஆடவர்களும், பெண்மணிகளும், இதை படித்தானந்திக்கக் கூடியது. இதில் வைதிபசேகரி, இல்லாமை நாயனார், யாசகசேசய்யர் முதலியவர்கள் பஞ்சாக்ஷர சர்மாவாக பாவனை செய்து அரசனை ஏமாற்றப்பார்ப்பது முதலியவைகள் நன்றாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிரார்த்திகநேசன்.—ஓர் நவீன கதை. ஞானம், ஒழுக்கம், பக்தி, இவைகளின் சொரூபம் பயன். இவைகள் தெளிவாய் விளக்கப்பட்டுள்ளது. மறுமை பயனில் கண்ணோக்குள்ளாருக்கு இது இன்றியமையாத சாதனம்.

ஸ்வாமிபாமித்திரன்.—இது பஞ்சாக்ஷர மகிமையை விளக்கும் ஒரு நாவலாகும். இக்காலத்தில் பெரும்பான்மையோருடைய மனம் ஆழ்ந்த தத்துவ நூலாராய்ச்சியிலும், மதவிஷயமான சாஸ்திரப் பயிற்சியிலும் செல்லாமல் இலேசானவையும், படிப்பதற்கு இன்பந்தரத்தக்கவையுமான புஸ்தகங்களை வாசிப்பதில் செல்கின்றதென்பதை இனிதறிந்த இந்நூலாசிரியர் பஞ்சாக்ஷர மகிமையை நாவல் மூலமாக விளக்க முன் வந்தது பெரிதும் பாராட்டற்பாலதே. படிப்பதற்கு இனிமையாய் இந்நாவலிருந்த போதிலும் உலக வழக்கச்சொற்களை அளவுக்கு அதிகமாக ஆங்காங்கு புணர்த்தியிருத்தல் அவ்வளவு சிலாகிக்கத்தக்க தன்





றென்றே கருதுகின்றோம். ஹாஸ்யரஸம் நிரம்பியுள்ள பகுதிகள் படிப்பவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியன. இன்னும் சிறிது உயர்ந்த கடிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டிருக்குமாகில் இப்புத்தகத்தின் தோற்றம் நன்றாக இருந்திருக்கும். இப்புத்தகம் வேண்டுவோர் கும்பகோணம் மங்கள விலாஸ் புத்தகசாலையின் சொந்தக்காரர் ஸ்ரீமான் C. S. இராதாகிருஷ்ணையருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாமென்றறிக.

## "THE SKANDA PURANA".

THE MADRAS MAIL.—The importance of the Hindu Puranas as furnishing materials for the re-construction of the history of India for periods for which there are no authentic histories, has not been adequately realised. Of these Puranas there are eighteen recognised ones, and these have been sought after by people more for their religious and mythological value than for any historical materials they may contain. That these Puranas or ancient records are a store-house of religious and historical traditions has been fully realised by antiquarians, who have made researches into them. It is not possible for all to conduct re-search work in this field, but any educated Hindu can help in securing accurate editions of these ancient works and in the publishing thereof. We are glad to see that Mr. C. S. Radakrishna Iyer, Editor of the LOKANUKULAN, of Kumbakonam, has been instrumental in publishing in Tamil prose the "Skanda Purana" written in readable Tamil by Mr. S. Subramania Sivachariar. This Purana has been long popular amongst Hindus, and deals with the story of Subrahmanya apparently a non-Aryan deity that has been amongst the earliest to be absorbed into the Hindu pantheon. The book is written in literary Tamil. It is to be hoped that the other Puranas will also be similarly published. Mr. Radakrishna Iyer will do well in any abridgment of these works to secure the co-operation of some student of Indian history to examine the manuscripts, so that no material of historical value is omitted in the process of abridgment.

### "KANDAPURANA VACHANA CHURUKKAM"

THE MADRAS STANDARD :—We have received a copy of this book from its publisher Mr. C. S. Rathakrishna Iyer of Kumbakonam. We have gone through the book and are glad to say that the story is written in easy readable Tamil and the

grand truths that lie hidden in this sacred story have been well brought out as a perusal of same will amply testify.

OPINIONS.

I am in receipt of your "Kandapurana Vachanam." The book is written in easy simple style and gives an idea of the sacred work of Kandapuranam, which is at present read in verse by few. I hope the public will be very much benefitted by the work.

Yours sincerely,
S. PANCHAPAGESA SARMA, B. A., L. T.
*Assistant, Teacher's College, Saidapet.*

## கந்தபுராண வசனச்சுருக்கம்

மதுராந்தகம் கடப்பேரி சுப்பிரமணியசிவாசாரியால் இயற்றியது.

சிவபிரான் தன் கைமாறற்ற பெருங்கருணையால் அட்டாதச வித்தைகளைத் தோற்றுவித்தருளி அதற்குக் கர்த்தாவாய் நின்று சூலபாணியென்னும் திருநாமம் பெற்றிலங்கி விலங்குகின்றனர், அவ்வட்டாதச வித்தைகளாவன:—வேதம் நான்கும், அங்கமாறும் மீமாஞ்சை நியாயம்; புராணம், ஸ்மிருதி, ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம், அர்த்தவேதம் ஆக வித்தை பதினெட்டு இவற்றில் பரமசிவன் உலகத்தைப் படைக்குமாறு கூறுவது புராணம், இப்புராணத்தினுள் சைவப்பகுதி பத்தில் காந்தம் எனும் புராணம் ஆறு சங்கிதைகளும் ஓரிலக்கம் கிரந்தங்களுமுடையனவாம். அச்சங்கிதைகளாறனுள் சங்கரசங்கிதையில் முதற்கண்டத்துள்ளாகியது. இது சிவரகசிய கண்டமெனும் பெயர்த்து அது எழு காண்டங்களையுடையதாயிருக்கும். ஸ்ரீசுப்பிரமணியர் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு 8

சுதேசமித்திரன்.—இது மதுராந்தகம் சு. கடப்பேரி சுப்பிரமணிய சிவாசாரியாரால் இயற்றப்பட்டு கும்பகோணம் ஸ்ரீமத் C. S. இராதாகிருஷ்ணய்யரால் வெளியிடப்பட்டது. கந்தபுராணத்தை வசனநடையில் படித்தறிய விரும்புவோர் அனைவரும், இப்புத்தகத்தை வாங்கிப் படிக்கலாம். உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், ஆகிய ஆறு காண்டங்களையும் பற்றி எழுதியிருக்கிறது. புஸ்தக விலை அணு 8

இந்து நேசன்.—சுப்பிரமணியக் கடவுளின் வரப்பிரசாதம் பெற்று விளங்கியவரும், மெய்ச்செவிப் புலவர் உச்சியிற்கொள்ளும் மகிமை வாய்ந்தவருமாகிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் தமிழில் இயற்றியருளிய கந்தபுராணத்தை, தருமபுரவாதீனத்து ஸ்ரீ சம்பந்த





சரணாலய சுவாமிகள் சுருக்கிப்பாடி அந்நூலுக்குக் கந்தபுராணச் சுருக்கமெனப் பெயருந் தந்தனர். அக்கந்தபுராணச் சுருக்கம் கற்றோரன்றி மற்றோரும் எளிதில் கற்றுணருமவண்ணம் மதுராந்தகம் சு. கடப்பேரி சுப்பிரமணிய சிவாசாரியாரவர்களால் இனிய தமிழில் கத்தியரூபமாய் எழுதப்பெற்று லோகாநுகூலன் பத்திராதிபர் பிரம்மஸ்ரீ வி. எஸ். இராதாகிருஷ்ணய்யரவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றிருக்கின்றது. பிரதிகள் பளபளப்பான கடிதத்தில் அழகுபெற அச்சிடப்பெற்று நான்குபக்கத்தில் ஆறுமுகக்கடவுள் திருவுருவப் படமொன்றும் அழகுற அமைத்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. கந்தபுராண சரித்திரத்தைச் சுருக்கமாக அறிய விரும்புவோர்க்கு இந்நூல் பெரிதும் பயன்படும். இதின் விலை அணு 8. பிரதிகள் கும்பகோணம் மங்களவிலாச புத்தகசாலையிற் பெற்றுக்கொள்ளலாம். எமது பார்வைக்கனுப்பிய பிரதியை உவந்தேற்றாம்.

பூர்ணசந்திரோதயம்.—இது மதுராந்தகம் கடப்பேரி சுப்பிரமணிய சிவாசாரியரால் இயற்றப்பெற்ற கும்பகோணம் லோகாநுகூலன் பத்திராதிபர் ம-ள-ள-ஸ்ரீ ராதாகிருஷ்ண ஐயரவர்களால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. விரிவாய்க் கிடக்கும் ஸ்கந்தபுராணம் இக்காலத்தியர்க்குப் பயன்படும்படியாக இலகுவான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. நன்றாக அச்சியற்றியிருக்கிறது. இதன் விலை அணு 8 தான். வேண்டுவோர் ஷை ஐயரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

பிராஞ்சுநேசன்.—இது மதுராந்தகம் கடப்பேரி சுப்பிரமணிய சிவாசாரியாரால் செய்யப்பெற்றது.

கும்பகோணம் லோகாநுகூலன் பத்திராதிபர் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஐயரவர்களால் வெளிப்படுத்தப்பெற்றது. டெமி கிரவுன் 16 பக்கங் கொண்ட 16½ பாரமுள்ளது. 124 பக்கங்களுள்ளது. தமிழ்நடை படிப்பவருக்குப் பொருள் சுலபமாக விளங்கும்படி நன்றாய் எழுதப்பட்டுள்ளன. ஆண்பெண்பாலிருவரும் பள்ளியிடங்களில் கந்தபுராண ஸாரத்தை யுணர்ந்து அம்மூர்த்தியிடம் பக்தியை விளைக்கத்தக்கது. மங்கள விலாச புத்தகசாலையில் கும்பகோணத்தில் பிரதி எட்டணுவுக்குக் கிடைக்கும்.

சென்னை வியாபாரி.—சிங்காரமான செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

வைசியமித்திரன்.—இப்பெயர்கொண்ட புத்தகமொன்று கும்பகோணம் மங்களவிலாச புத்தகசாலையின் சொந்தக்காரர் ஸ்ரீமத் C. S. இராதாகிருஷ்ண ஐயரால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மிக விரிந்து கிடக்கும் கந்தபுராணத்தைச் சுருக்கமாக அழகிய வசன

கடையில் மதுராந்தகம் ஸ்ரீமத் சு. கடம்பேரி சுப்பிரமணிய சிவாசாரியார் எழுதியுள்ளனர், அதனை வை. இராதாகிருஷ்ண ஐயர் பிரசுரஞ் செய்ததும் உலகோபகாரமான செயல்களேயாகும். இப்புத்தகம் கலாசாலை மாணவர்களுக்கும், தமிழ் கற்கும் சிறுவர்களுக்கும் பெரிதும் பயனுடையதாகும். ஸ்ரீ கச்சியப்பசிவாசாரியாரின் கருத்து மாறுபடாமல், வாசகர்களுக்கு இன்பம் பயக்கும்படி இடையிடையே கந்தபுராணச் செய்யுட்களையும் எடுத்துக் காட்டியிருக்கும் ஆசிரியரின் திறம் பாராட்டத்தகுந்தது. இப்புத்தகத்தின் விலை அணா 8 வேண்டுவோர் வை. கும்பகோணம் இராதாகிருஷ்ண ஐயருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

திராவிடாபிமானி — இப்புஸ்தகமும் வரப்பெற்றோம். இது மதுராந்தகம் சு. கடம்பேரி சுப்பிரமணிய சிவாசாரியாரால் இயற்றப்பட்டு, கும்பகோணம் லோகோபகாரி பத்திராதிபர் மிஸ்டர் வி. எஸ். இராதாகிருஷ்ணையரால் பிரசுரிக்கப்பட்டது. இதில் ஸ்ரீ சுப்பிரமணிய மூர்த்தி, ஸ்ரீ ... முருகமூர்த்தி இவைகளின் அழகிய படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்வசனரூபமாக்கப்பட்ட இப்புஸ்தகம் அலங்கரிக்கப்பட்டிருப்பது ஆசிரியரின் திறமையை நன்கு விளக்குகிறது. இப்புஸ்தகம் உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம் என்னும் ஆறு பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. உயர்ந்த காகிதத்தில் முத்துக்கோர்த்தாற்போன்ற எழுத்தில் வெகு சுத்தமாய் அச்சடிக்கப்பட்டிருக்கும். இப்புஸ்தகத்தின் விலை 8 அணா. வேண்டுவோர் கும்பகோணம் மங்களவிலாஸ புக்டிப்போவுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரஜாநுகூலன் — இந்த மதுராந்தகம் கடம்பேரி மிஸ்டர் எஸ். சுப்பிரமணிய சிவாசாரியாரால் எழுதப்பெற்று, கும்பகோணம் 'மங்களவிலாஸ புஸ்தகசாலையிலிருந்து', 'லோகோபகாரி' பத்திராதிபருமாகிய மிஸ்டர் வி. எஸ். ராதாகிருஷ்ணையரால் பிரசுரிக்கப்பட்டது. விலை அணா 8. கந்தபுராணம் பதினெட்டு புராணங்களில் ஒன்று. இந்தப் புராணத்தில் ஸுப்பிரமணிய ஸ்வாமியினுடைய பிறப்பு, வளர்ப்பு, பராக்கிரமங்கள் ஆகிய இவைகள் விரிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. இப்புராணத்தைக் காஞ்சீபுரம் கச்சியப்ப சிவாசாரியர் என்ற புலவர் பாடலாகப் பாடினார். பாடலாயிருப்பதை யாவரும் படிப்புள்ளவர்கள் படித்தறியக்கூடாமலிருக்கின்ற காரணத்தால் எல்லாருக்கும் பயன்படும்படி மிஸ்டர் சுப்பிரமணிய சிவாசாரியாரால் இனிமையும் எளியதுமான வசன நடையில் எழுதியுள்ளது. மிகவும் நன்றாயிருக்கிறது. யாவரும் இந்தப் புஸ்தகத்தை வாசித்துப் பயனடைவார்களாக. வேண்டியோர் கும்பகோணம் மங்களவிலாஸ புக்டிப்போவுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

விலாசம்:— மங்களவிலாஸ புக்டிப்போ, கும்பகோணம்.

117696

# மங்கள விலாச புக் டெப்போ,
## கும்பகோணம்

| | ரூ. | அ. |
|---|---|---|
| கந்தபுராண வசனச்சுருக்கம் ... ... | 0 | 8 |
| ஸ்ரீ [illegible] ... | 1 | 8 |
| ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் தமிழ் வசனம் [illegible] பாலகாண்டம் ... | 1 | 0 |
| [illegible] 3 பாகம் ... ... | 2 | 2 |
| ஆரண்யகாண்டம் ... ... ... | 1 | 2 |
| கிஷ்கிந்தாகாண்டம் ... ... ... | 1 | 0 |
| சுந்தரகாண்டம் ... ... ... | 1 | 2 |
| ராவ C. கோபாலகிருஷ்ணமாசாரியர் [illegible] | 1 | [illegible] |
| பாரதம் சாந்திபர்வம் (2-புக்) ... ... | 3 | 8 |
| [illegible] ... ... | 2 | 8 |
| [illegible] ... ... | 1 | [illegible] |
| [illegible] ... ... | 1 | [illegible] |
| [illegible] ... ... ... | 0 | [illegible] |
| [illegible] ([illegible]) ... ... | 0 | 10 |
| [illegible] ... ... ... | [illegible] | |
| [illegible] ... ... ... | [illegible] | |
| [illegible] ... ... ... | 0 | |
| [illegible] ... ... ... | 0 | |
| [illegible] ... ... ... | 0 | |
| [illegible] ... ... ... | [illegible] | |
| [illegible] ... ... ... | 0 | 8 |
| [illegible] ... ... ... | 0 | 8 |
| [illegible] ... ... ... | 0 | 8 |

Apply to:—

C. S. RADHAKRISHNA AIYAR,
Proprietor,
Mangala Vilasa Book Depot,
KUMBAKONAM.